உ

சிவமயம்

சிவ நெறிக் கட்டுரைகள்



தொண்டை மண்டல ஆதீனம் 229 வது குருமகா சந்நிதானம்

சீலத்திரு. ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

உ

திருச்சிற்றம்பலம்

சிவ நெறிக் கட்டுரைகள்

தொண்டை மண்டல ஆதீனம்
229 ஆவது குருமகா சந்நிதானம்
மெய்கண்டார் மரபு
சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
(முத்து.சு) அருளிய கட்டுரைகளின் தொகுப்பு

15. 2. 2012
திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரம் பவள விழாவில்
வெளியிடப்பட்டது

வெளியிடுபவர்கள்
திருமதி. சாந்தி சிங்காரம் - திரு. சிங்காரம்

வெளியீடு
திருநெறிய தமிழ் மன்றம்
கோவை

நூற் குறிப்பு

நூலின் பெயர்	:	சிவநெறிக் கட்டுரைகள்
பொருள்	:	சைவ சித்தாந்தம்
நூலாசிரியர்	:	சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய ஸ்வாமிகள் (229 வது பட்டம்)
முதல்பதிப்பு	:	1994 மே, அருள் நூல் பதிப்புக்குழு, சேலம்
இரண்டாம் பதிப்பு	:	2012 பிப்ரவரி
படிகள்	:	1000
வெளியிட்டோர் (பதிப்புரிமை)	:	திருநெறிய தமிழ் மன்றம் 507, குருவருள், **D.B.** ரோடு, **R.S.** புரம் கோவை - 641 002 Ph.: 2551545
வெளியிட்ட நாள்	:	15. 2. 2012 (மாசி-3) புதன்கிழமை
மொழி	:	தமிழ்
நூலின் அளவு	:	13.5 x 21
தாள்	:	18.6 கிலோ
எழுத்து அளவு	:	13 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	333
புத்தக வடிவமைப்பு	:	திரு. அரவிந்த் வெங்கடாசலம் B.Com.,F.C.A.,
அச்சிட்டோர்	:	M.M. பிரிண்டர்ஸ், கோவை - 2. Ph. : 0422 - 2543564, 94439 - 33253

விலை : ரூ. 200

இதன் விற்பனைத் தொகை குருமகா சந்நிதானம் அவர்களின் ஏனைய நூல்கள் வெளியிடும் பணிக்கு பயன்படுத்தப் பெறும்.

உ
சிவமயம்

பொருளடக்கம்

தோத்திரப் பகுதி

2-6

உ
சிவமயம்

சிவ நெறிக் கட்டுரைகள்

முன்னுரை

'சிவநெறிக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் என் குருநாதர் மதுரகவி. சித்தாந்த ரத்னாகரம் சீலத்திரு. ஞானப்ரகாச தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள் (229-ம் பட்டம் காஞ்சி தொண்டை மண்டலாதீனம்) அருளிய ஒரு தொகுப்பு 1994ம் ஆண்டு முதற்பதிப்பாக சேலம் அருள்நூல் பதிப்புக் குழுவால் வெளியிடப்பட்டது. மூலகாரணமாக இருந்து செயல் பட்டவர் என் அருமைச்சகோதரர் பேராசிரியர் வே. குருசாமி அவர்கள். பல இதழ்களிலும் அவ்வப்போது வந்த கட்டுரைகளை ஒழுங்கு படுத்தி அரும்பாடுபட்டு வெளியிட்டார். அவை தீர்ந்துவிட்ட நிலையில் இப்போது சாத்திர, தோத்திரம் படிக்கும் அன்பர்கள் இந்நூல் வேண்டும் என்று விரும்பினார்கள். ஆகவே, இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளி வருகின்றது.

இதன் அருமை பெருமைகளை பல பெரியவர்கள் பாராட்டி முன்னுரை அளித்துள்ளனர்.

ஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில், முத்து.சு. மாணிக்கவாசகனார் என்று அழைக்கப்பட்டார். தருமபுரம் தமிழ்க்கல்லூரியின் முதல்வராக இருந்த போது பல சாத்திர, தோத்திர நூல்களை திருத்தமாக வெளியிட்டார். இவருடைய நுண்மாண் நுழைபுலம் அறிஞர்களே வியக்கும்படி உள்ளதை இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளில், நாலாம் திருமுறை உரையில் பார்க்கக் காணலாம். சொற்களுக்கு வேர் கண்டுபிடித்து தக்க இடங்களில் சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி செய்வதை நுணுகிப் பார்த்தால் அனுபவ ஞானம் எப்படிப்பட்டது என்பதைக் காணலாம். சிறந்தநகைச்சுவையுடன் இருக்கும் அவர்தம் தமிழ் நடை திரட்டுப்பால் போன்று அதிமதுரமாக இருக்கும். அதனாலாயே மதுரகவி என்றழைக்கப்பட்டாரோ என்று நான் வியப்பதுண்டு.

பல பிறவிகளில் செய்த சிவபுண்ணியத்தின் பயனாக ஸ்வாமிகளை தீட்சா குருவாகவும் ஞானசாத்திர உபதேச குருவாகவும் பெற்றோம் நானும் என் கணவரும். 1967 முதல் 1977 வரை ஸ்வாமிகள் தாயினும் சாலப்பரிந்து ஞானவாரமுதை ஊட்டினார்கள். கொங்குநாடே ஸ்வாமிகளின் வரவால் சாத்திரப்புலமை பெற்றது. அறிவாற் சிவனே ஒக்கும் என்பது நம்மை ஆளுடை அடிகள் மணிவாசகப் பெருமானுக்குச் சொல்வது நம் ஸ்வாமிகளுக்கும் தகும்.

பொறுப்பரிய பேரன்புடன் அவர் உபதேசம் செய்வது நம்மால் கைம்மாறு செய்ய முடியாத பேருதவியாகும். தற்போதுள்ள மடாதிபதிகள் சைவ சித்தாந்த ஆசிரியர்கள் பலர் நம் ஸ்வாமிகளிடம் பாடம் கேட்டவர்களே. என் வாழ்வில் நான் தரிசித்த மாணிக்க வாசகர் அவரே. அதே போல அப்பர் பெருமானாகக் காட்சியளித்தவர் சிவக்கவிமணி (C.K.S.) சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், செம்மை வேதியர் என்றால் இவர்களைச் சொல்லலாம்.

இவ்வருமைத் திருநூலில் தேவாரங்களுக்கு உண்மைப் பொருளும், பயனும் பல கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. சாத்திரக் கண்ணோட்டத்துடன் திருமுறைகளைப் படிக்கும் போது தான் உண்மைப் பொருள் புரிகிறது. சொல்லிய பாட்டின் பொருளான சிவத்தை உணர்ந்து ஸ்வாமிகள் விளக்கும் போது படிக்கும் நம் கண்களில் நீர்த்திரையாடுகின்றது. வடமொழியிலும் வல்லவர் நம் ஸ்வாமிகள். தாள்தழுவு தடக்கையன் - என்பதை ஆஜானுபாஹு என்பார். திருவைந்தெழுத்து நமக்கு வைத்த பொருள் என்று உணர்த்துவார். உணர்ந்தபிறகு அன்போடு தன்னை அஞ்செழுத்தின் சொற்பதத்துள் வைத்து உள்ளம் அள்ளூறும் தொண்டருக்கு எண்திசைக் கனகம் அனைத்தும் கிடைப்பதில் ஐயம் ஏற்படுமா?

இந்நூல் பூமாரி சொரிதலில் துவங்கி தமிழ்ப் போற்றியில் நிறைவுறுகிறது. இதுவும் திருவருள் வெளிப்பாடுதானே! பால்நினைந்-தூட்டும் என்னும் பாடல் விளக்கங்களும், திருப்பள்ளி எழுச்சிப் பாடலும் ஈடிணையற்றவை. அப்பர் திருவுருவம் நம் உள்ளக்கிழியில் உருவெழுதத் தக்கது. அமுதக் கடலில் எங்கே அதிகச் சுவை என்று எப்படிக் காட்ட முடியும்? அவரவருக்குள்ளபடி ஈசனே காட்டுவான்!

இத்தகைய நூலை வெளியிடும் புண்ணியம் பெற்றோர் எனது அருமை மாணவி திருமதி. சாந்தி சிங்காரம். திரு. சிங்காரம் தம்பதிகள் அடியேனுடைய பவள விழாவில் இந்நூல் வெளிவரத் தம் புண்ணியப் பொருளை சிவ புண்ணியமாகச் செய்திருக்கிறார்கள். ஞானப்ரகாச மரபில் வந்த நம் சாந்தி சிங்காரம், ஸ்வாமிகளைப் பற்றி அடியேன் சொல்லும் போது ஆனந்தக் கண்ணீருடன் பாடம் கேட்பார்.


அவர்தம் மணாளர் தமிழ்க்கடல் திரு. இராய.சொ. இவர்களைத் தம் இல்லத்தில் தங்க வைத்து உபசரித்த திரு.சிங்காரம் செட்டியார் அவர்களின் பேரன், திரு.தியாகராஜன் அவர்களின் திருமகன். பரம்பரையாக வந்த நற்குடிப் பிறப்பே இவர்களுக்கு இந்த புண்ணியத்தைத் தந்தது என்றால் மிகையில்லை. இவர்கள் இருவரும், இவர்தம் மைந்தர் இருவரும் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

நூலை அழகுற வடிவமைத்த என் அருமை மைந்தன் திரு.அரவிந்த் வெங்கடாசலம் வாழ்க. அருமையாக அச்சிட்ட எம்.எம். பிரிண்டர்ஸ் திருமதி. மீனாள், திரு. அசோக்குமார் வாழ்க.

இங்ஙனம்
ஞானப்பிரகாசர் அடிப்பொடி
திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரம்
திருநெறிய தமிழ் மன்றம்,
கோவை - 2
15. 2. 2012.

உ

சிவமயம்



பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்
கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

தோத்திரப்பகுதி

1. பூமாரி சொரிதல்

திருக்கோயில்களுள் வழிபாடு புரிய விரும்பும் அன்பர் பூமாரி சொரிதல் இன்று தோன்றிய புது வழிபாடு அன்று. தொன்று தொட்டு நிகழ்ந்து வந்த வழிபாடே ஆகும். அரும்பும் போதும் பூவும் இலையும் கொண்டு வழிபடுதல் என்றும் உள்ள பெருவழக்கே அன்றி அருகிய (சிறு) வழக்கன்று. விண்மாரி சொரிந்து மண்ணில் வாரி பெருகி ஓடி எங்கும் வெள்ளக்காடாதலும் மழையே இன்றி எங்கும் வறண்ட நிலமாய் வெயிற்காடாதலும் உலகியற்கை. இம்மாறுபாட்டால் அரும்பும் அரும்பாது. போதும் போதும் என்று சொல்லி உள்ளம் நிறைய ஒரு போதும் போதுகூடக் கிடைக்காது. பூவைக் கண்டு களிக்க விரும்பும் கண்கள் அப்பூவைக் காணாது பூத்துப் போய்விடும். இலையோ எங்கும் இலையே என எண்ணி வருந்தும் அன்பகம்.

திங்கள் மும்மாரி சொரிந்துவரின் எங்கள் பெருமான் திருவடி வழிபாடு ஒழிபாடிலாது நடைபெறும். அன்பர் வினையெல்லாம் அழிபாடும் கழிபாடும் உறும். பண்டை நாளிலே திருக்கோயிலிலே அன்பர், அனைவருக்கும் அன்பு நிறைந்த நெஞ்சார நினைந்து தலையாரக் கும்பிட்டு, வாயாரப்பாடி, நாவாரப் புகழ்ந்து சித்தம் ஆரச் சிந்தித்துக் கையாரத் தொழுதனர். அத்தொழுகையில் அவர் கையெல்லாம் மலர்க்கையாகத் திகழும். அகமெல்லாம் அழுகைக்கு நெகிழ்ந்து நிற்கும். உடம்பெல்லாம் கீழே அடியற்ற மரம்போல விழுகைக்குத் தவறாது. இக்கால வழிபாட்டு முறைக்கும் அக்காலத்து அவர் வழிபாட்டு முறைக்கும் வேறுபாடு பெரிது. அக்காலத்து வழிபாடு வேற்றுமைத் தொகையாய் வழியிற்படுதல்; அருள்வழியிற் படுவது என்னும் பொருள் உணர்த்துவது. இக்காலத்து வழிபாடு வினைத் தொகை. இஃது எக்காலத்திலும் விரிக்கப்படும் பொருளுடையது. எனினும் எதிர்காலத்தில் விரிப்பதே சால இனியது. வழிபடும் முன்னரும் வழிபட்ட பின்னரும், உண்டபொருளின் நின்ற நெய்யோ வெண்ணெயோ தைலமோ மற்று யாதோ முழங்கைவரை வழியும் பாடு

எனலும் பொருந்தும். முற்காலத்தில் திருக்கோயிலுக்கு வழிபடச் செல்வார் உண்டு செல்லார். நீர் அருந்தியும் ஏகார். அதனால் இழி செயல் யாதும் இறைவனிடங்களைச் சார்ந்த எவ்விடங்களிலும் செய்யார். இக்காலத்தார் செயலைத் திருக்கோயிலின் உள்ளும் வெளியும் உள்ள இடமே காட்டிவிடுகின்றன.

மலைநாட்டார் திருக்கோயிலைப் போற்றுவது போலத் தமிழகத்தார் போற்ற அறிந்திலர். அவராசாரம் தேவராசாரமாகவும் இம்மக்கள் ஒழுக்கம் விலங்கொழுக்கமாகவும் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே.

திருமுறைகள், திருக்கோயில்களுக்குச் செல்வோர் எல்லோரும் கையில் இலையோ முகையோ போதோ மலரோ எல்லாமோ கொண்டு சென்று வழிபடல் வேண்டும் என்று உணர்த்துகின்றன. அவை கூறுமாறு இப்போது நாம் செய்ய முடியவில்லை. ஏன்? தொல்லைப் பழக்கம் முறைக்கேட்டால் பெருந்தொல்லைப் பழக்கம் ஆகி, வழிபாட்டு முறையில் ஆண்டவனுக்கும் அடியார்க்கும் இடையில் ஆகம ஞானம் இல்லாத தருமகர்த்தர் முதலியோர் ஏற்பட்டனர். அவர்க்கு நாம் தரும் பொருள் கொண்டு, ஆண்டவன் தந்ததாகக் கொள்ளப்படும் அருட்பொருளை அவர் தருவதாக எண்ணி மீளும் பொய்வழியால் மெய்வழிந்து போயிற்று. இதற்கு காரணம் வினைத்தொகை வழிபாடே அன்றி வேற்றுமைத் தொகை வழிபாடன்று.

ஆடவரோ பெண்டிரோ அந்தணரோ பார்ப்பாரோ வேடரோ வேந்தரோ இழிகுலத்தாரோ உயர்குலத்தாரோ அன்புடையராயின், ஒழுக்கம் உடையராயின், முறை வழுவா நெறி விலகாராயின் ஆண்டவனை நேரே வழிபட்டு அருள் பெற்று மீள்வர். இது பண்டைய நன்னெறி. இவ்வுண்மையைத் திருமுறைகள் விளக்குகின்றன . நீராட்டிய நெறியைத்

தடங் கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங் கொண்டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங் கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங் கொண்டிருந்தான் தன் இடைமருது ஈதோ?

எனத் திருஞானசம்பந்தர் கடாவியருளினார். இதில் அடியார் மகாலிங்கப் பெருமானுக்குக் குடநீராட்டும் உண்மை விளங்கும். 'போதொடு நீர்

சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்' இப்போதும் முற்போவார் நேர்வாரேல். ஏன்?

இட்டுக்கொள்வன பூவுள நீருள; கற்றைச் செஞ்சடையான் உளன்நாம் உளோம். எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே? 'நறுமலர்ப் பூவும் நீரும் நாள்தொறும் வணங்குவார்க்கு அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே' இதனை மீண்டும் அருள்வானானால், நொச்சியம் பச்சிலையால் நுரை தீர் புனலால் தொழுவார்; நச்சிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே நயந்துகொள்ளும்படி.

அண்மையில் உள்ள சீகாழியில் கன்னியர் நாள்தோறும் நறுமலர் புனலோடு தூபம் சாந்தமும் ஏந்திய கையினராய்ப் பரவிய உண்மையை அங்குத் திருவவதாரம் புரிந்த பிள்ளையார் மலர்க் கண்ணாற் கண்டார். திருவாயாற் பாடினார். செவியாற் கேட்பார் யார்?

முன்னுயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடியுடை அமரர்கள் அடிபணிந் தேத்திப்
பின்னிய சடைமிசைப் பிறைநிறை வித்த
பேரரு ளாளனார் பேணிய கோயில்
பொன்னியல் நறுமலர்ப் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமலம் நினைவர்தம் வினைகரி சறுமே.

திருக்கோகரணம் வடநாட்டில் மேற்கடற்கரையில் உளது. ஆங்கே சென்று வழிபட அனைவர்க்கும் எண்ணம் தோன்றாது. திருக்கோகரணம் என்பதில் கால் போனால் யாதாம்? அதுவே நம் கரணநிலை. அதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளதாயின் அக் கரணமே அத் தலத்தை அடையும். இச்சுவையறிய இலக்கண ஞானம் உடையாரே வல்லார். தமக்குத் தெரியாதனவற்றை யெல்லாம் கடிய நடை என்று ஒதுக்குவார்க்கும் விளங்கும்படி எழுதக் கடவுளே வல்லவராவார். நாம் வல்லம் அல்லம்.

திருக்கோகரணத்தில் மாதர்களும் ஆடவர்களும் மலர் தூவி வழிபடுவார்கள் என்பர். அது வடநாட்டிற்குத் தகும். தென்னாட்டிற்குத்

தகாது என்று தட்டிக்கழிக்கலாம். சீகாழியில்,திருவிடைமருதூரில் அவ்வழக்கம் இருந்ததால் தட்டவோ, கழிக்கவோ இயலுமோ?

பேதைமட மங்கையொரு பங்கிட
மிகுத்திடப மேறியமரர்
வாதைபட வண்கட லெழுந்த விடமுண்ட
சிவன் வாழுமிடமாம்
மாதரொடும் ஆடவர்கள் வந்தடி
யிறைஞ்சி நிறைமாமலர்கள்
கோதைவரி வண்டிசைகொள்
கீதமுரல் கின்றவளர் தூய் கோகரணமே.

என்பது வடநாட்டு வழக்கம் உணர்த்துவதாகலாம். திருச்செங்காட்டில் உள்ளதும் அவ்வாறாமோ?

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டாங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே

பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்த கணபதீச் சரத்தானே

இத்திருமுறைப் பொருளோடு இப்பொழுது திருக்கோயிற் பூசை புரிவார் நிலைகளை ஒப்புநோக்கியுணரின், வழிபடற்கென்றே தனியாக அமர்த்திவைத்த சைவர் என்பதும் அவர்களைப் பலர் இழிஞராக் கருதிவரும் பழக்கமும், கீழோர் என்பது நீங்க மேலோராக முயலும் அவரது வேட்கையும் இன்னோரன்ன பிறவும் நன்கு புலனாகும். ஆகவே தென்னர் தம்மை வடவரெனத் தோற்றிக்கொள்ள முயல்வது வெளிப்படுகின்றது.

திருவையாற்றிலே திருநாவுக்கரசுநாயனார் அருளியவற்றுள்

பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம் பன்மலர் தூவித்தோளைக் குளிரத்
தொழுவேன்

என்பதும் ஒன்று.

மலர் தூவித் தொழுதேன் என்று அவர்களே செய்த வழிபாட்டைத் தெரிவித்தருள்கின்றார்கள். நம்பிக்கைக்கு அப் பயன் வேண்டும் என்று உணர்த்தத் திருவுளங்கொண்டு, எதிர்மறைப் பொருளில் வற்புறுத்தும் முறையில்,

ஆக்கையாற் பயன் என்? அரன்கோயில் வலம் வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
வாக்கையாற் பயன் என்?

என்று பாடினார்கள்.

இச்சையால் மலர்கள்தூவி இரவோடு பகலும் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவ னாரே.

என்று மலர்தூவுதலில் இச்சை இன்றியமையாதது என்றும் அடியார் இச்சையிற் குறையினும் ஈசன் கொள்வதிற் குறைவில்லை; பாங்கு அறியா என் போலிகள் பறித்து இட்ட இலையும் முகையும் எல்லாம் அம் போது எனக்கொள்ளும் ஐயன் ஐயாறன் அடித்தலமே... தலைப்பன... என்றும். தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்...எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே என்றும், தொண்டு பாடியும் தூமலர் தூவியும் இண்டைகட்டி இணையடி ஏத்தியும் பண்டரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக் கண்டு கொண்டு அடியேன் உய்ந்து போவனே என்றும் படர்க்கையிலும் தன்மையிலும் வைத்துப்பாடிய அப்பர் சுவாமிகள் முன்னிலையில் அன்பர்களை எண்ணி,

அரும்பு அற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பு அற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பு அற்றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம்பிரானையே,

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டநாயகன் தன் அடி சூழ்மின்கள்.

பூமாலை புனைந்துஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி அலறாநில்.

என்று இரக்கத்தால் ஏவியருளிய வண்ணம் நின்று நாமும் மலர்தூவி வழிபடுவோம்.

மலர்தூவி வழிபடுதல் பலவகைப்படும். அவற்றுள் அரும்புகளோ (முகையோ) போதுகளோ மலர்களோ கை நிறையக் கொண்டு ஒருமுறை திருவடியில் விழத் தூவிவிட்டு வணங்கி வழிபடுதல் எளிது. மாலை கட்டிச் சார்த்தி வழி படுதல் அதனின் அரிது. இண்டை முதலியன கட்டிச் சார்த்திக்கண்டு இன்புறும் வழிபாடு அதனினும் அரிது. இத்திருமுறைப் பகுதிகளில் அரும்பு, போது, மலர் (பூ நாண் மலர், விண்டமலர்) இண்டை முதலாகப் புனையும் பூமாலை எல்லாம் கூறப்பட்டன.

மலைநாட்டில் மலர்தூவும் வழிபாடு தொன்று தொட்டு உண்டு. அது மிகச் சிறந்தது. செய்வதற்கு அரியது; செய்கையிற் பெரியது. செலவிலும் விரிவது. தருமையாதீனம் 25 - ஆம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தாம் முதல் முதலாக தமிழகத்தில் அதைப் புது நெறியில், இதன் முன் எங்கும் எவரும் செய்துமட்டும் அன்று; எண்ணியும் அறியாத அற்புதமும் அதிசயமும் நிறைந்து கண்டோர் களிக்க, கேட்டோர் காணாமைக்கு நாணி முகஞ்சுளிக்கவும் வாய் இளிக்கவும், தருமைக் கொற்றவைக்கும் திருக்கடையூர் அபிராமவல்லிக்கும் மயிலாடுதுறை அஞ்சொலாட்கும் நிகழ்த்துவித்தருளினார்கள். அது தொல் வழக்கில் இருந்த நன்னெறியே ஆகும். அதற்குச் சான்றாகப் பதினொன்றாந் திருமுறையில் மலைநாட்டார் ஆகிய சேரமான் பெருமாள் (கழறிற்றறிவார்) நாயனார்தாம் அருளிய திருக்கயிலாய ஞானவுலாவில் பூமாரி சொரியும் பண்டைய முறைமையை எழுத்தோவியத்தில் அமைத்தருளினார். அதனை ஒட்டித் திருக்கோயில் தோறும் இப்பூமாரி சொரியும் வழிபாடு புரிவது காமாரி அருளைப் பெறும் சிவநெறி வழிபாடுஆகும். கைகள் நிறைய மலர்களை எடுத்துக்கொள்ளல், சிவகீர்த்தனங்களை யெல்லாம் போற்றி என்று ஈற்றில் அமைத்துப்

புகழ்ந்து ஓதுதல், ஓதுகின்ற ஒவ்வொரு முறையிலும் இருகையிலும் நிறையக்கொண்ட மலர்களைச் சொரிதல். இம்மூன்றும் ஒரு சேர உடன் நிகழ்தல். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு இது:-

1. மேலையிமையோர் பெருமானே போற்றி
2 எழில்சேர் உமையாள் மணவாளா போற்றி
3. எமை ஆளும் தீயாடீ போற்றி
4. சிவனே அடி போற்றி
5. ஈசனே எந்தாய் இறை போற்றி
6. தூயசீர்ச் சங்கரனே போற்றி
7. சடா மகுடத்தாய் போற்றி
8. பொங்கரவா பொன்னங்கழல் போற்றி
9. அருச்சுனற்குப் பாசுபதம் ஈந்த பதம் போற்றி
10. தூய (கயிலை) மலைமேலாய் போற்றி
11. மயானத்தாய் போற்றி
12. வானோர் தலைமேலாய் போற்றி
13. தாள் போற்றி
14. நிலை போற்றி
15. போற்றி - திருக்கயிலாய ஞானவுலா. (கண்ணி 51-56)

எனப் பூமாரி பெய்து என்று பாடியருளினார் மலையாளப் போற்றியார். இதனால், பூமாரி சொரிதல் பண்டைய நன்னெறியே என்பது இனிது விளக்கப்பட்டது. வாழ்க சிவநெறி. வாழ்க கயிலாயக் குருமணியின் திருவடிமலர்கள். அந்நாட்டிற் போற்றிகள் என்பார் இக்காரணத்தாற் பெயர்பெற்றவர்களே. மாரி சொரிதல் என்பதே பிழையிலாத பெருவழக்கு. பெய்தல் வேறு. சொரிதல் வேறு. அதன் ஆராய்ச்சி ஈண்டில்லை. நாம் பூமாரி சொரிந்து இன்பக் கடலில் திளைப்போம்.

திருச்சிற்றம்பலம்

உ. பராவுசிவர்

பராவுசிவர் என்னும் ஒரு தொடர் சைவ சித்தாந்த சாத்திரம் பயில்வார் அறியத்தக்க சிறப்புடையது. அதன் முதற் சொல்லின் நிலையை முதலில் அறிதல் வேண்டும். விரவுதல் - விராவுதல், அரவுதல் - அராவுதல், பரவுதல் - பராவுதல் என்பனவற்றின் ஒற்றுமையை உணர்வார்க்கு அச்சொல்லின் நிலைமை தெளிவுறும்.

பரவுவார் இமையோர்கள்! பாடுவன நால்வேதம்!
குரவுவார்குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம்!
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்! மேல்மேல் உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ? அரியானே!

என்னும் திருவாசகத்துள் அம்மூன்று சொற்களின் அடியும் உள்ளன. இரண்டன் அடியாகத் தோன்றிய பலர்பாற் படர்க்கை வினைப்பெயர் 'பரவுவார்' 'விரவுவார்' என்பன ஆகும்.

பரவுதல் பலவற்றிற்கும் உண்டு. நிலப்பரப்பு, நீர்ப்பரப்பு, தீப்பரப்பு, காற்றுப் பரப்பு, விண்பரப்பு, உள்ளப் பரப்பு, உணர்வின் பரப்பு எல்லாம் பரவுதலின்றி இல்லை. ஒலிப்பரப்புக்கும், ஒலியுடன் பொருள் கூடிய உரைப் பரப்புக்கும், பரவுதல் உரியதாம். ஆதலின், பரவுதல் வாழ்த்துக்கும் உரித்து என்க.

பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும் உன்னைப்
பரவுவனே
பரவுவார் அவர்பாடுசென்று அணைகிலேன்
பல்மலர்பறித்து ஏத்தேன்
கட்டில் ஏற்றிக் கை தொழூஉப் பரவி

என்பவற்றால், வாழ்த்தற் பொருளில் அச்சொல் ஆளப்படுதலை அறியலாம்.

பரபரக்க வேண்டாம்! பலகாலும் சொன்னேன்!
வரவரக்கண் டாராய் மனமே! ஒருவருக்கும்
தீங்கு நினையாதே! செய்ந்நன்றி குன்றாதே!
ஏங்கி இளையா திரு

என்னும் தருமைக் குருஞானசம்பந்தர் அருளிய திருப்பாடலில், உள்ளப்பரப்பும் உணர்வின்பரப்பும் குறித்த முதற்றொடரைக் காண்க. பரவுதல், பராவுதல் ஆகிய தன் வினைக்கும் பரப்புதல் என்னும் பிறவினைக்கும் ஏற்பப் பொருள் கொள்ளல் வேண்டும். சொல்லும் பொருளும் பரவுதலில் கருத்திற்குத் தக்கவாறு விளக்கம் வேண்டி -யிருக்கிறது. வாழ்த்தல் - துதித்தல், என்னும் பொருள் தருங்கால், சொற்பரவுதலும் உலாவுதல் - சஞ்சரித்தல், என்னும் பொருள் தருங்கால், பொருட்பரவுதலும் ஆகும்

சொல்லுணர்ச்சி இன்றிப் பொருளுணர்ச்சி அமையாது, அதனால் இதுவரையில், சொல்லாராய்ச்சியிற் சிறிது நிகழ்த்தலாயிற்று. இனி பொருளாராய்ச்சியிற் புகலாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருநெறிய தமிழுள் (சமாசப் பதிப்பு - 3,51,9. 3, 67, 6.)

நிராமய பராபர புராதன
பராவுசிவர் ஆகஅருள்என்று
இராவும் எதிர்ஆயது பராநினை
புராணன் அமராதிபதியாம்
அராமிசை யிராதெழில் தராய்அர
பராயண வராகவுருவா
தராயனை விராய்எரி பராய்மிகு
தராய்மொழி விராயபதியே

என்னும் வழியெதுகைத் திருப்பாடலில், 'பராவுசிவர்' என்னும் தொடர் வந்துள்ளது. அது பராவுசிவராக என்று பிரிவின்றி நிற்றல் பற்றி எவரும் துதிக்கின்ற சிவனே விரும்பத்தக்கவனே எனப் பொருள் எழுதப்பட்டிருப்பதும் காணலாம். பராவு+சிவ+ராக எனப் பிரித்துக் கொண்ட பொருளே அது. சைவ மரபு தெரிந்து எழுதப்பட்ட பொருள் அன்று அது. அம்மரபினைத் தெரிந்து கொள்ளல் இங்கு மிக்க பயனாகும். இதில், அமர்ஆதிபதி எனக்கொண்டு, வாழ்கின்ற முதலூர் எனப் பொருளுரைத்தல் வேண்டும்.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்

பாக்கியத்தைப் பகர்வதுஎன் இம்மையிலே உயிரின்
பற்றுஅறுத்துப் பரத்தைஅடை பராவுசிவ ரன்றோ
ஆக்கும்முடி கவித்தரசாண் டவர்களரி வையரோ(டு)
அனுபவித்தங் கிருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றாலும்
நுழைவர்பிறப் பினின்வினைகள் நுங்கி டாவே.

என்னும் சிவஞான சித்தியாரில் - 287, பராவுசிவர் என்னுந் தொடர் அமைந்துள்ளதையும், அதன் பொருளையும் பண்டிருந்த சைவ மரபுடன் உணர்ந்த ஆசிரியர் அத்தொடரைப் பொருத்தமான இடத்தில் வைத்து விளக்கி இருப்பதையும், பராவுசிவர் ஆவார் இன்னர் என்பதையும், அவர் இயல்பையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

பசுகரணம் சிவகரணம் ஆகத் துன்னிய சாக்கிரத்தின் நின்று கொண்டுதானே கரணம் கடந்த அதீதத்தைப் புரிந்தார். கருவிகளின் நீங்கி நிட்டை மேவினாரோடு ஒப்பச் சிறந்தாரே ஆவர். அவ்வுண்மை அறிந்தார் உண்டு உடுத்துப் பூசி முடித்துச் செய்யும் தொழிலொப்புமையே பற்றி அவரை உலகத்தாரோடு வைத்து எண்ணற்க.

பராவுதல் - சஞ்சரித்தல், என்பது மாதவச் சிவஞான யோகிகள் உரை. இவற்றால், பராவுசிவர் என்பது வினைத்தொகை நிலைத் தொடராய்ச், சஞ்சாரஞ் செய்யும் சிவனார் என்னும் பொருள் பயத்தல் விளங்கிற்று. அத்தகையோர் சகலாவத்தையின் சாக்கிரத்தே, சுத்தாவத்தையின் அதீதத்தைச் செய்திருப்பவர்கள், எல்லாப் பற்றும் விட்டகன்றவர்கள், தவச்செல்வர்கள். அவர்களது ஒப்புயர்வில்லாத பாக்கியம் சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத பெருமையுடையது. இப் பிறவியிலேயே உயிர்ப்பற்று ஒழிந்து சிவத்தை அடைந்து சிவமானவர்கள், அடையப் பெற்ற சிவம் எங்கும் நிறைந்தது; சஞ்சாரம் இல்லாதது. அடைந்தவர்கள் ஆகிய சிவர் எல்லாரும், தம் தம் உடம்புள் விளங்கி, அவ்வுடம்புள்ள வரையில் உலகில் சஞ்சாரம் புரிபவர்கள். அதனால், பரமசிவத்தைப் பரம் என்றும், அச்சிவத்தை அடைந்து சஞ்சார சிவர்களாய் விளங்கும் சீவன் முத்தர்களை, பரத்தை அடை பராவுசிவர் என்றும் வேறுபாடு விளங்க உணர்த்தி அருளினார் ஆசிரியர் அருணந்தி தேவநாயனார். சிவன் - ஒருமை. சிவர் - பன்மை. நடமாடும் சிவமாயிருப்பவர் பலர் ஆதலின், சிவர் எனலானார்.

சமாசப் பதிப்பாகிய சிவப்பிரகாசச் சிந்தனையுரை - பக்கம் 860 முடிவில், ஐவகை முத்தியை விளக்கும் இடத்தில், சீவன் முத்தியாவது பரமே பார்த்திருந்து சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் பராவுசிவர் ஆதல் என்றெழுதப்பட்டிருத்தலை இங்கு நோக்குதல் வேண்டும். இவர்க்கு இடமான உடம்பே கோயில். இவரே சிவர். இவர் உடம்பு கோயில் என்றதால், அதில் சிவம் இருத்தல் வேண்டும். உயிர் சிவமாகாமல் இருப்பின், அவ்வுயிர் இருக்கும் உடம்பு கோயில் ஆதல் எவ்வாறு கூடும்? இச்சீவன் முத்தனுக்கு - நடமாடும் சிவனுக்கு இடமான உடம்பையே நடமாடக் கோயில் என்று கொண்டு முன்னோர் வழிபட்டனர். திருமூலர் எங்கு எவரை எத்தலைப்பில் நடமாடக்கோயில் என்றருளினார்? இவ்வாராய்ச்சி அத் திருமந்திரத்தை நோக்கி முடிவுறத் தக்கது. அஃது அரியதும் ஒன்று. அதனைப் பின்னர் வரும் கட்டுரையால் அறியலாம்.

பராவுசிவர் - நடமாடுஞ் சிவர், சஞ்சார சிவர் எல்லாம் சீவன் முத்தர்களையே குறிப்பன. அத்தகைய முத்தர்களை இப்பொழுதும் அதற்குரிய நோக்கம் உடையோர் காண்டல் எளிது. அந்நோக்கம் இல்லார்க்கு, அச்சீவன் முத்தர் தோன்றுவது அரிது. இக்காலச் சீவன் முத்தர் பொருட்டே இஃது எழுந்தது.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

2.106.1

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே. 5.9.17

திருச்சிற்றம்பலம்

3. அண்ணாமலையார் அடிநீழல்

அண்ணாமலை என்னும் பெயர்க்குப் பொருள் பழங் காலத்தில் எட்டாத மலை என்பது. திருமாலுக்கும் நான்முகனுக்கும் முறையே அடியும் முடியும் எட்டாதபடி சிவலிங்கத் திருமேனி ஒளி யுருவாய்த் தோன்றி விளங்கிய உண்மையைக் குறித்து வழங்கிய திருப்பெயர். 'அண்ணாமலை அண்ணல் நீழல் ஆரழல்போல உருவம்' என்று திருஞானசம்பந்தர் அருளிய திருவாக்காலும் அஃது உறுதிப்படும். சிவபிரானுக்குச் சிறப்புப் பெயராக வழங்கும் பெயர் அண்ணல் என்பது. அவ்வண்ணல் கொண்ட ஒளிப் பேருருவே இம்மலையாயிற்று. ஆகவே இதனை முன்னோர் 'அண்ணல் மலை' என்று வழங்கினர். அது மருவி அண்ணா மலை ஆயிற்று. இதற்குச் சான்று நிறைய உண்டு. அப்பன் சாமி, அப்பாசாமி, ஐயன்சாமி, ஐயாசாமி என மருவியது போல அண்ணல்மலை, அண்ணாமலை என மருவுதலில் வியப்பில்லை. மண்ணங்கட்டி மண்ணாங்கட்டி, புளியம்பழம் புளியாம்பழம், தனியம்பூண்டி தனியாம்பூண்டி என அகரம் ஆகார மாத்திரிதல் பெரு வழக்கு. கண்ணம்மாள் செந்திலதிபன் இரண்டும், கண்ணாம்மா செந்திலாதிபன் என வழங்குவது அறிக.

ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல் ஊனத் திரளை ஒழிக்கும் உண்மைப் பொருளை உணர்தல் அரிதே. ஒளி வண்ணம் செவ்வண்ணம் ஆதலின் வட மொழியில் அருணாசலம் - செம்மலை, அருணகிரி என்பன போன்ற பெயர்கள் வழங்கலாயின. அருணா என்பது அண்ணா என மருவிற்று என்று ஒருவர் எழுதினார். அண்ணாமலை என்பது அண்ணாசலம் என இல்லை. அதனால் அது எப்படி அமையும்?

முன், ஞானத் திரளாய் நின்ற பெருமான், என்றுணர்ந் தோம். பெருமான் சிவன். அவன்தான் ஞானத் திரளாய் நின்றான். நிற்றல் பெருமான் வினை, நின்றவன் பெருமான். நின்றது திரள். அத்திரள் ஞானம். கல்லுருவிய மலை ஊனக் கண்ணுக்குத் தெரிகின்றது. திருஞான சம்பந்தர் திருக்கண் ஞானக்கண். அந்த ஞானக் கண்ணுக்கு அது ஞானத் திரளாய்த் தெரிந்தது. அந்த ஞானத்திரள் யாது? அதுதான் திருவைந்தெழுத்துள் இரண்டா வதாக நிற்பது 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்' என்றதிலுள்ள

நுண்ணைந்தெழுத்துக் காண்க. சிகாரம் அடி, வகாரம் நிழல், சிவா என்பது முறையே அடியும் நிழலும் ஆகும். விரித்தெழுத இப்போது இயலவில்லை. அதனை உளங்கொண்டு நாடொறும் தியானம் பண்ணிக் கொண்டிருப்பின் தானே விரிந்து பொருள் விளக்கும். திருவடி என்பது சிவாநந்தம். சிவாநந்தாநுபூதி சிவஞான போதமாபாடியத்துள் திருவடியாகிய சிவாநந்தாநுபூதி திருவடியாகிய சிவாநந்தம் என்று இருமுறை இருவேறிடத்தில் எழுதினார் சிவஞான முனிவர். (சமாஜப் பதிப்பு பக்கம் 523, 539 சூ. 10 அதி. 1 சூ. 11 உரை) திருவடி, சிவம் முதலிய பலவும் ஒரு பொருளன.

திருவடியின் நிழல், அருள், பரை, கருணை, ஞானம், அன்பு, திரோதையருள் ஆதல் முதலிய பலவும் ஒன்றே, அவசர பேதத்தால் வேறுபாடு பலப்பட வழங்கப்படும். பட்டாலும் பொருள் வேறுபடாது.

திருவிளையாடற் புராணத் திருமூலர் பரஞ்சோதி முனிவர், 'மாறியாடுந் தலைவன் அடி நிழல் பிரியாப் பேரின்பத்தி' என்று பாடினார். அடியும் அடிநிழலும் ஒன்றாகா. நிழலுக்கு அடி உறையுள். அடியில் உறைவது நிழல். அடியது உடையது. நிழல் உடைமை. அடிநிழல் ஆறனுருபு. உடையது உண்மைப் பொருளில் தொக்க தொகை நிலைத் தொடர். இவ்வுணர்வோடு அப்பர் அருளிய திருவாக்கை நோக்குதல் வேண்டும்.

மருளவா மனத்தனாகி
மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறுக்கும் எந்தை
யிணையடி நீழல்என்னும்
அருளவாப் பெறுதல் இன்றி
அஞ்சிநான் அலமந்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே
போதுபோய்ப் புலர்ந்ததன்றே 4.76.1

இத் தேவாரம் எந்தையிணையடி (சி) என்றதும் நீழல் (வா) என்றதும் முறையே இரவு பகலில்லாத இன்ப வெளியையும் (ஆனந்தபூர்த்தி) அங்கு இங்கு எனாதபடி ஆனந்த பூர்த்தியாகி எங்கும் பிரகாசமாய் நிறைந்த அருளையும் குறித்தவையாகும்.

கைவல்ய நவநீதம் சந்தேகந் தெளிதற் படலம் பாடல் 11 பார்க்க

நின்மலவித்தி அந்த நிழல்வழியாய் உலாவும்
மன்நன்மகனே அற்றைத்தாள் அன்றோ ஞானம் என்பர்

என்று, சின்மய வடிவின் சாயை (நிழல்) கூறப்படுதல் காண்க.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே

என்னுந் திருக்குறுந் தொகையுளும் எந்தையிணையடி நீழலையுற்றுப் பேரின்பம் எய்துக.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே

திருச்சிற்றம்பலம்

4. திருமுறையின் சிறப்பு

சைவத்திருமுறை பன்னிரெண்டென்பது இப்பொழுது வழங்கும் உண்மையே ஆயினும் ஏனையதோன்றுமுன் மூவரும் அருளிய ஏழு திருமுறைகளையே முற்காலத்தில் ஆன்றோர் போற்றினர். திருவெண்காட்டுப் புராணம் இயற்றிய எல்லப்ப நாவலர் முதலோர் இக்கருத்தினர். இதனால் ஏனைய திருமுறைகளைக் கொள்ளலாகாது என்று எண்ணலாகாது. முதல் ஏழு திருமுறைகளின் உயர்வை அறிதற்கே இதனைக் குறித்தேன்.

மூவர் அருளிய எல்லாவற்றையும் தேவாரம் என வழங்கு -கின்றோம். அவற்றுள் அப்பர் அருளியனவே தேவாரம் ஆகும். அத்தேவாரத்துள் தாளத்தோடு பாடற்குரிய பண்ணமைந்த திருப் பதிகங்கள் சிற்சிலவே. திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பவை அத்தேவாரத்தின்கண் அடக்கம்.

திருஞானசம்பந்தர் அருளியவை திருக்கடைக் காப்பு என்று வழங்கப்பட்டன.

தம்பிரான் தோழர் - சுந்தரர் அருளியவை திருப்பாட்டு என வழங்கப்பட்டன.

இவ்வுண்மையை உணர்த்தும் சான்றுகள்சிலஉள. வைராக்கிய தீபம் முதலியனவற்றின் உரையாசிரியர், மூவர் அருளிச் செயல்-களையும் உணர்த்தும் போதெல்லாம் இப்பெயர் வேறுபாட்டினை மேற்கொண்டதை அவற்றை நோக்குவார் அறிவர். 'சிறப்புப் பெயரகராதி' யிலும் இதைக்குறித்த ஒரு பாடல் உளது.

திருமுறைப் பெருமை என ஒரு நூலைப் புகழுடல் எய்திய சுவாமிநாத பண்டிதர் எழுதினார். அது திருவாவடுதுறையாதீன வெளியீடாகவும் அண்மையில் வழங்கப் பட்டது. அவர் பதிப்பாகிய அடங்கன்முறையிலும் அஃது உளது. இக்காலத்திலும் பலர் திருமுறைச் சிறப்பைக் குறித்துக் கட்டுரை எழுதினர். அதனால், மிக்க சுருக்கம் எனினும், இதில் எழுதும் திருமுறைப்பெருமை, சமயாசாரியார் திருவாக்கையே ஆதாரம் ஆகக்கொண்டது ஆதலின், மதிப்பிற் பெருக்கம் உற்றதாகும்.

அன்னம் மன்னும் வயல்சூழ்கச்சூர்
ஆலக்கோயில் அம்மானை
உன்ன முன்னும் மனத்தாரூரன்
ஆரூரன் பேர் முடிவைத்த
மன்னு புலவன் வயல்நா வலர்கோன்
செஞ்சொல் நாவன் வன்றொண்டன்
பன்னு தமிழ்நூல் மாலைவல்லார்
அவர் எம்தலைமேற் பயில்வாரே

என்று ஆளுடைய நம்பி அருளினார்,

இதில், திருநாவலூராளியார் தம் திருத்தலைமேற் பயில்வார் என்று அவர் தாமே சிறப்பிக்கப் பெறுவார் யார்? அவர் திருவாயில் வந்த திருப்பாடல் வல்லாரையே அவ்வாறு புகழ்ந்தார். இதனால் நாம் என்ன நினைத்தல் வேண்டும்? சமயாசாரியர் நால்வருள் ஒருவராய அப் பெருந்தகையின் தலைமேற் பயில்வாரும் உளரோ? என் பாட்டைப் பாட வல்லார் என் தலைமேற் பயில்வார் என்று யான் சொல்லின், இக்காலத்துப் புலவர் வக்காலத்து வாங்கி வழக்காட மாட்டாரோ? என்னை இகழாரோ? அந்நிலையில், நம் பெருமானார் நவிற்சியை நாடல் கூடுமோ? தமக்கும் மேலானவர் என்றதொடும் அமையாமல்,

ஆரூரன் அடித் தொண்டன்
அடியன்சொல் அகலிடத்தில்
ஊரூரன் இவைவல்லார்
உலகவர்க்கும் மேலாரே!

என்பதில் உலகோர் எல்லார்க்கும் மேலானவர் என்றருளியது காண்க.

'வன்றொண்டன் சிறந்த மாலைகள் அஞ்சினோடஞ்சும் சிந்தையுள் உருகிச் செப்பவல்லார்க்கு இறந்து போக்கில்லை வரவில்லையாகி இன்ப வெள்ளத்துள் இருப்பார்கள் இனிதே' என்னும் உண்மையை உளங்கொண்டால், அம்மேன்மை அவர்க்கு அன்றி வேறு எவர்க்கு எய்தும்? அவரே அம்மேன்மைக்கு உரியர் ஆதலின்,

ஆழியார்க்கு அருள் ஆனைக்கா
உடைஆதி பொன்னடியின்

நீழலே சரண் ஆக நின்று
அருள்கூர நினைந்து
வாழவல்ல வன்றொண்டன் வண்டமிழ்
மாலைவல் லார்போய்
ஏழுமா பிறப்பு (ம்) அற்று
எம்மையும் ஆளுடையாரே

என்று பாடியதில் என்ன வியப்பு உளது?

கன்னலை இன்னமுதை ... ...
ஒண்பொழில் நாவலர்கோன் ஆகிய ஆருரன்
பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ
மன்னியிருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே

என்று பாடியருளியதன் உண்மையை உணர்வார்க்குத் திரு முறைப் பெருமையை ஒரு முறையும் கூறல் வேண்டா.

'எல்லாம் சிவன் செயல்' என்னும் உண்மையில் ஒருசிறிதும் குறைவின்றி வாழ்ந்த ஆசிரியர் அனைவரும் எதையும் தம் செயலாகக் கொள்வரோ? பாடுதற்றொழில் பரமனுடையதே; தமது அன்று என்று தெளிந்த அன்னோர் அப்பாடலெல்லாம் சிவன் பாடல்களே என்று கொண்டதிலும், அவற்றைப் பாடவல்லார் தம்மினும் மேலோர் என்பதிலும், அவர் திருவடி தம் தலைமேலன என்பதிலும் சற்றேனும் தயக்கம் கொள்வரோ?

சுந்தரப் பெருமான், சொல்லி அருளிய எல்லாம் முன்னைய இருவரும் சொல்லியருளியனவே ஆம். புதியன அல்ல என்றும் கருத வைத்தார்.

'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லியேத் துகப்பான்' என்று சிவபெருமானைக் குறித்ததில், அக்கருத்தும் உண்டு. சொல்லிய என்பது வினையாலணையும் பெயராய் அப்பரும் சம்பந்தரும் அருளிய நற்றமிழ் மாலைகளின் தொகுப்பாகிய திருமுறைகளைக் குறித்தல் அறிக.

அறியவே இதுகாறும் இதிற் குறித்த திருமுறைப் பெருமை மூவர் தேவாரத்திற்கும் உரித்தாயினமை இனிது விளங்கும்.

முன்னிருவர் திருமுறைகளுள் இவ்வாறு உணர்த்தும் இடம் காட்டவில்லையே எனலாம்.

திருஞானசம்பந்தர் திருவிலம்பையங் கோட்டூர்த் திருப்பதிகம் பத்திலும் இரண்டாவதடியில் எல்லாம், 'எனதுரை தனதுரை' யாதல் கூறப்பட்டது. அதனால் காழிவேந்தர் உரைத்தன எல்லாம் ஊழிவேந்தன் - முதல்வன், உரைத்தனவே என்னும் வாய்மை தெற்றென விளங்கிற்று. விளங்கவே அவை எல்லாம் சிவவாக்கியமே என்பதில் ஐயம் சிறிதும் இல்லையாயிற்று. திருவலஞ்சுழித் திருப்பதிகத்தின் முடிவில், காழிநாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை, ஆதரித்து, இசைகற்று வல்லார் சொலக்கேட்டு உகந்தவர் தம்மை வாதியாவினை, மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே என்றுளது. அதில் திருமுறைப் பாராயணப் பயன் விளங்குதலைக் குறித்தலும் வேண்டுமோ தானே விளங்கு மன்றோ? வாய் நவிற்றிய தமிழ் மாலை என்றதே குறிக்க நின்றது. வாய் நவின்ற தமிழ்மாலை என்றன்றோ கூறுதல் வேண்டும்? பிறவினையில் ஏன் கூறியருளினார் நவின்றது வாய். நவிற்றியது திருவருள். திருவருள் நவிலச் செய்ய வாய் நவின்றது என்னும் உண்மையை உணர்த்தவே.

நல்லமட மாதர் அரன் நாமமும்
நவிற்றிய திருத்தம் முழுகக்
கொல்லவிட நோயகல் தரப்புகல்
கொடுத்தருளு கோகரணமே

என்பதில் உள்ள நவிற்றிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நவிற்ற என்னும் பொருளது. நவிற்றவும் முழுகவும் அகலவும் புகல் கொடுத்தருளும் கோகரணம் என்க.

இத்திருமுறையெல்லாம் திருவருள் மொழியே அன்றி மானிட வார்த்தையல்ல என்பது இதனால் புலப்பட்டது.

திருஞானசம்பந்தப் பெருமானார், திருவையாற்றுப் பதிகத்தில்,

எங்கும் ஆகிநின்றானும் இயல்பறியப்படா
மங்கை பாகம் கொண்டானும் மதி சூடும் மைந்தனும்
பங்கம்இல் பதினெட்டொடு நான்குக்கு உணர்வும் ஆய்
அங்கம் ஆறும் சொன்னானும் ஐயாறுடை ஐயனே

என்று பதினெண் புராணங்களுக்கும் நான் மறைகட்கும் ஆறங்கங்கட்கும் நம் ஐயனுக்கும் உள்ள தொடர்பு உணர்த்தப்பட்டது. முன்னிரண்டு தொகுப்புக்கும் உணர்வும் மூன்றாவது தொகுப்புக்குச் செய்யுட்கிழமையுமே அத்தொடர்பாயிற்று. நான்மறைக்குணர்வாகிய பரமசிவம் இத்தமிழ்மறைக்கும் உணர்வாதலில் தடை உளதோ? உணர்வாதலால்தான் திருமுறை திருவருளுருவாயிற்று. ஆகவே அம்முறை - நூல், ஏனைய முறைகளைப்போல் வெறுமுறை எனப் -படாது திருமுறை என வழங்கப்படும் உண்மைப் பெருமையை உற்றுணர்க.

சுந்தரர் திருக்கயிலையினின்று இம்மண்ணுலகிற்கு எழுந்தருளும்போது, ஆண்டிருந்த திருமேனியும் சிவத்துவமும் இவ்வுலகிற்கேற்பச் சிறிதேனும் வேறுபடாதிருக்குமோ? அவ்வாறே இம்மண்ணுலகின் நின்று திருக்கயிலைக்குச் செல்லுங்கால், ஊனுயிர் வேறு செய்தல் நேர்ந்தது. அதனை ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலையுத்தமனே என்னும் அருண் மொழியால் அனைவரும் அறிவர் ‘முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப் பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின்மீது’ என்றருளினார் சேக்கிழார். இதனால் மண்ணுலகிற்கு ஏற்ற ஊனுயிர் வேறுபாடு உற்ற உண்மை புலப்படும். அக்காலத்துப் பாடியருளப்பெற்ற திருப்பதிகம் எத்தகைய பெருமையது? யாவரால் மதிப்பிடப் பெறும் அதன் பெருமையை அளவிடவல்லார் உளரோ! திருமுறைகளைப் பாராயணம் புரிவோர் அவற்றால் ஆம் பயனை இன்றும் அடையப் பெறுதல் பலருக்கு அநுபவமாக இருக்கின்ற தொன்றே சான்றாகும். வன்பார்த்தான் பனங்காட்டூரில் வாழும் ஓர் அன்பார்ந்த நெஞ்சினார்க்கன்றோ திருமுறைப்பயன் தெற்றென விளங்கிற்று?

என்னில் ஆரும் எனக்கினியார் இல்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்

என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போ ந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே
தேடித்தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

என்னுந் தேவாரத்தால் உள்ளிருந்து பாடுவித்தவன் சிவ பெருமானே என்பது விளங்காதோ? வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானைக் கருத்து அறிந்து முடிப்பான்றன்னை, மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான், ஊனாகி, உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய் நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய், நாவாகி நாவுக்கு ஓர் உரையும் ஆகி நாதனாய் வேதத்தின் உள்ளோன் ஆகி, சொல்லாகிச் சொல்லுக்கு ஓர் பொருளும் ஆகி, கலையாகிக் கலைஞானம் தானேயாகி என்னும் தேவாரத்தால் அப்பர் சுவாமிகள் நமக்கு உணர்த்திய உண்மை என்ன என்று ஆராய்தல் அறிஞர் கடனாகும். எல்லாம் சிவன் செயலே.

மாணிக்கவாசகர், மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே என்று திருமுறை சிவபிரானுக்கு ஞானரூபமாதலை உணர்த்தி யருளினார்.

சமயாசாரியர்கள் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்றது முதல் சிவமாக விளங்குபவர்கள். ஜீவசுபாவம் முற்றும் ஒழிந்து சிவத்தியல்பு முற்றும் உற்றவர்கள். பசுத்துவம் தீர்ந்து சிவத்துவம் பெற்றவர்கள் பசுகரணம் சிவகரணம் ஆதலே சிவத்துவப் பேற்றுக்கு அடி. சிவத்துவம்-குணம், சிவம் – குணி, குணியாகிய சிவமானவர்கள் திருவாக்கிலிருந்து வரும் பாடல்களும் பிறவும் சிவ வாக்கியமே அன்றி ஜீவவாக்கியமாகா. திருமுறைகள் சிவ வாக்கியங்களாகிய காரணத்தால்தான் சொல்லிய எல்லாம் சொல்லியவாறே நிகழ்ந்தன. அற்புதப் பதிகங்கள் என்ற சிறப்பிற்கு அதுவே காரணமாகும். செத்தாரையெழுப்புவேன் என்று எழுந்த ஜீவபோதம் முனைத்து நிற்க வெளிவந்த பாடல்களை அருட்பா எனலாகாதென்று பொருத உண்மையைச் சைவருலகு மறந்திடா-என்றெண்ணுகிறேன்.

திருமுறைகளை அன்றாடம் பாராயணம் புரிவோர்க்குச் சில தினங்களில் திருவருள் உண்டாதலை இன்றும் அனுபவத்திற் காணலாம். பின்னர் நிகழ்வது முன்னரே புலப்படுகின்ற நலம் பலர்க்கு உண்டாதலைக் கேட்டுள்ளேன். அடியேனும் அநுபவத்தில் உணர்ந்து வருகிறேன்.

திருஞானசம்பந்தர் முதற்றிருப்பதிகத்தில் பெம்மான் இவன் எனச்சுட்டியருளினார் அச்சுட்டின் விளக்கமே தோடுடைய செவி முதலிய திருவடையாளங்களும் அவை உருவத் திருமேனிக்கு உரியன என்றுகொள்வர் பலர். அவை உருவம் மூன்றும் கடந்த தனி-ஞானத்திருமேனிக்கும் உரியவையே ஆம். கரசரணாதிசாங்கம் தரும் அருள் (சித்தியார்) என்னும் சிவாகமவசனம் அறிவார் இவ்-வுண்மையை நன்குணர்வர். சிவபெருமானுக்குரிய அங்கம், ப்ரத்யங்கம், சாங்கம், உபாங்கம் அனைத்தும் எவை என்னும் உண்மையை ஒருங்கே காண்டல் அரிதாயினும், ஆங்காங்குச் சிற்சிலவற்றைப் பலர் விளக்கியெழுதினர்; பதினொன்றாந் திருமுறையில் உள்ள (பட்டினத்தார் அருளிய) ஒருபாவொரு பஃது என்பதிலும் சில உணர்த்தப்பட்டன. அன்னோரன்ன தாற்பரியங்களை உணர்ந்தவர்க்கு அத்திருவடையாளங்கள் தெளிவுறும்.

ஆசிரியர் பெம்மான் இவன் என்று சுட்டிக்காட்டியும் அவனைக் கண்டிலர் அங்கிருந்தார் அனைவரும். கண்ட சிலர் தாமும் யாரோ அறியேன். முதலிற் சுட்டிக்காட்டியும் திருஞானசம்பந்தப் பெருமான், முடிவில், திருப்பெருமண நல்லூரில், எல்லாரையும் பேரொளிக் காட்சிக்கும் அதனுள் முழுகிப் பேரின்பம் துய்க்கும் பேற்றிற்கும் உரியவராக்கி யருளினார். அப்பேற்றை நல்கும் பெரும்புகழ் இன்றும் திருமுறைக்கு உண்டு.

திருமுறையால் உணர்த்தப்பெறும் மெய்ப்பொருள் பரமசிவம். அப்பொருளை நன்குணர வேண்டின் சைவசித்தாந்த ஞானநூல்-களைக் கற்றுணர்தல் வேண்டும். நான்முகனையும், மாயனையும், உருத்திரனையும் மட்டும் பிற சமயத்தார் கடவுளர் எனக்கொண்டு, அம்மூவருள் ஒருவனைப் பரத்துவக்கடவுள் என்று கூறிக்களிக்கின்றனர்.

சைவசித்தாந்தச் செம்பொருளை அன்னோர் அறிய வாய்ப்பில்லை. சிவபுராணங்களைக் கற்றாரும் உணர்ந்த ஓர் உண்மையை அன்னோர்

அறிந்திலர். பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத வின்பம் ஆவண்ணம் மெய்க்கொண்டவன் என்றருளினார் பரஞ்சோதி முனிவர் தாம் பாடிய புராணத்தின் காப்புச் செய்யுளில். அதில், பூ, பூவின் வண்ணம், பூவின் மணம் என்று மூன்று கூறினார். பூவின் என்றது இடை நிலை விளக்கு. அம்மூன்றையும் மெய் - சத்து போதம் - சித்து இன்பம் - ஆநந்தம் என்னும் மூன்றிற்கும் உவமையாக்கினார். பூவும் அதன் வண்ணமும் மணமும் பிரித்தற்கு இயலாதவை. அவ்வாறே சத்தும் சித்தும் ஆநந்தமும் பிரித்தற்கு இயலாதவை.

சச்சிதாநந்தம் ஒன்றே சைவசித்தாந்தச் செம்பொருள். அப்பொருளே வீடு பேற்றில் அநுபவிக்கப் பெறும் உண்மைப் பொருள். அதுவே, படைத்தற்றொழிலைச் செய்விக்கின்றது. மாயன் மனத்தில் இருந்து காத்தற்றொழிலைப் புரிவிக்கின்றது. உருத்திரனது உள்ளத்தில் இருந்து அழித்தற்றொழிலை ஆற்றுவிக்கின்றது. மகேசுவரராகி நின்று மறைத்தற்றொழிலை இயற்றுகின்றது. சதாசிவராகி நின்று அருள்கின்றது. இவ்வுண்மையை முதற்றிரு முறையில் 21-ஆவது திருப்பதிகத்தில் உள்ள முதல் 5 திருப்பாடல்களும் இனிதுணர்த்து -கின்றன. அவற்றை அறிந்து கொண்டு பாராயணம் புரிதல் சாலச் சிறந்ததாகும். மெய்ப் பொருளை நன்குணர்ந்து செய்யும் வழிபாடே மெய்ப்பயனை நல்கும் என்பது திண்ணம். எவ்வழிபாடும் அவ்வழி பாட்டிற்குரிய பொருளையுணராமல் நிகழ்ந்தால், பயன் சிறிதும் விளையாது. விபரீத பலன் தரலும் கூடும். ஏமாந்தும் போக நேரும்.

1. பரமசிவனே உலகங்களின் படைப்புக்கும் முதல்வன்

புவம்வளிகனல் புனல்புவிகலை
உரைமறைதிரி குணம் அமர்நெறி
திவமலிதரு சுரர்முதலியர்
திகழ்தரும் உயிர் அவை அவைதம்
பவமலிதொழி லதுநினைவொடு
பதுமன்நன்மல ரதுமருவிய
சிவனது சிவ புரம்நினைபவர்
செழுநிலனினில் நிலைபெறுவரே!

என்பது, சச்சிதாநந்தசிவம் நான்முகனது இருதய கமலத்தில் வீற்றிருந்து, அவன் ஆட்சிக்கு உட்பட்ட உலகத்துயிர்களைப் படைப்பிக்கின்றது என்னும் உண்மையை உணர்த்திற்று.

பொருள்:- புவம்-ஆகாயம்; வளி-காற்று; கனல்-நெருப்பு; புனல்-நீர்; புவி-நிலம்; கலை-கலைகள்; உரை-சொல்(லுலகு). மறை-வேதம்; திரிகுணம்-முக்குணம் (சத்துவம், இராசதம், தாமதம்); திவம்-வான்; மலிதருசுரர்-மல்கிய தேவர்; முதலியர்-தேவகணம் அல்லாத எல்லாக் கணங்களும்; திகழ்தரும் உயிர்- உயிர் (உயர்திணை அஃறிணை இரண்டிலும் உள்ள உயிர் எல்லாம்) அவை அவை - அவ்வவை; தம்-தம்முடைய; பவம்-பிறப்பு; மலிதொழிலது-மல்கிய தொழில் நினைவொடு- (அப்படைத்தற்றொழிற்) கருத்தொடு. பதுமன் நல்மலரது-தாமரைப் பூவிலுறையும்; நான்முகனது அழகிய இதய கமலத்தை. மருவிய-பொருந்திய, சிவனது - பரமசிவத்தினது, சிவபுரம் - சிவபுரம் எனப்பெயரிய திருத்தலத்தை, நினைபவர்-நினைந்து (மூர்த்தி தலந் தீர்த்தம், மூன்றையும் முறையாத் தொடங்கி வழிபட்டு) வருபவர், செழுநிலனினில்-பேரின்பச் செல்வம் செழித்தோங்கும் சிவனுலகில். நிலை பெறுவர்- அழிவின்றி நிற்றலைப் பெறுவர். நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறுவாரே என்பதிற் குறித்த உலகே இங்குச் செழுநிலன் எனவும் நிலைபெறுமாறு எண்ணுதியேல் என்னும் (நாவுக்கரசர்) அருள் மொழியில் உள்ள நிலையே இங்கும் 'நிலை' எனவும் கூறப்பட்டன.

இத்திருப்பாடலில், நான்முகன் நல்லிதய கமலத்தில் இருந்து படைத்தற்றொழிலைச் செய்யும் செம்பொருள் சிவ பரஞ்சுடரே என்பது உணர்த்தப்பட்டதறிக.

2. கங்கைச் சடையானே காத்தற்றொழிலுக்கும் முதல்வன்

மலைபலவளர் தருபுவியிடை
மறைதருவழி மலிமனிதர்கள்
நிலைமலிசுரர் முதல் உலகுகள்
நிலைபெறுவகை நினைவொடுமிகும்
அலைகடல்நடு வறிதுயில் அமர்
அரிஉருஇயல் பரன்உறைபதி

சிலைமலிமதிள் சிவபுரம்நினை
பவர்திருமக ளொடுதிகழ்வரே!

என்பதில், திருமால் உருவில் இருந்து காத்தற்றொழிலைச் செய்விக்கின்ற தனிமுதற் செம்பொருள் சிவபிரானே என்னும் உண்மை உணர்த்தப் பட்டது.

பொருள் :- மலைபலவளர் தருபுவிஇடை-பலமலைகள் வளர்ந்தோங்கும் நிலத்தில், மறைதரு வழிமலி மனிதர்கள்- வேதம் விதித்த மார்க்கத்தில் ஒழுகும் மாந்தர்கள் (வைதிகர்கள்), நிலைமலிசுரர்- உயர்ந்த வானுலகில் நிற்றல் மல்கிய தேவர்கள், (மனிதர்சுரர்) முதல் உலகுகள்-மக்களுலகும் தேவருலகும் (பிறவுலகும்), நிலைபெறும் வகை -நிற்றலைப்பெறும் வகையில் (தோன்றியபோதே அழியாமல் உரிய காலம் வரையில்) , நினைவொடு-கருத்தொடு, மிகும் அலைகடல் நடுவு-அலைமிகும் கடல் நடுவில், அறிதுயில் அமர் அரி-யோகநித்திரை செய்கின்ற திருமாலின், உரு-வடிவில், இயல்-இயன்று (உயிர்க்கு உயிராய்) நடத்துகின்ற, பரன்-பரமசிவன். உறைபதி-திருக்கோயில் கொண்டிருக்கும் திருத்தலம், சிவபுரம் என்னும் திருப்பெயருடையது. அது சிலைமலிமதிள் (கற்கள் மலிந்த திருமதில்) உடையது. அத்திருத்தலத்தை நினைந்து வழிபடுவோர் திருமகளொடு விளங்குவர். (திருமாலாகி நெடிது வாழ்வர்). அத்திருப்பாடலில், திருமாலுருவில், சிவபெருமானே வீற்றிருந்து காத்தற்றொழிலைச் செய்து எல்லா வுலகங்களுக்கும் வாழ்வை அருள்கின்றான் என்பது உணர்த்தப்பட்டது.

3. சங்கரனே சங்காரகாரணன்

பழுதிலகடல் புடைதழுவிய படி
முதலிய உலகுகள்மலி
குழுவிய சுரர் பிறர் மனிதர்கள்
குலம்மலிதரும் உயிரவையவை
முழுவதும் அழி வகைநினைவொடு
முதல் உருஇயல் பரன் உறைபதி
செழுமணியணி சிவபுரநகர் தொழுமவர்
புகழ் மிகும் உலகிலே

என்பதில், சிவபரஞ்சுடரே, உருத்திரராக நின்று அழித்தற்றொழிலைச்

செய்வித்து, எல்லாவுயிர்களையும் இளைப் பாற்றுவிக்கும் அருளைப் புரிகின்றது என்று கூறப்படுகிறது.

பொருள்:- பழுது இலகடல்புடை தழுவிய படி முதலிய உலகுகள்-குற்றம் இல்லாதனவாகிய கடலைப் பக்கத்தே தழுவிய மண்முதலிய உலகங்களையும், மலிகுழுவியசுரர் மனிதர்கள் குலம்-நிறைந்து கூடிய தேவர் குலமும் மக்கள் குலமும், மலிதரும் உயிர்-நிறைந்த ஏனைய உயிர்களும், அவை அவை-(ஆகிய) அவ்வவை. முழுவதும்-சர்வமும். அழிவகை நினைவொடு-அழியும் வகைக் கருத்தொடு. முதல் உருத்திரனது. உரு-மேனியில். இயல் பரன்-இயன்று நடாத்துகின்ற சிவபரஞ்சுடர். உறைபதி-திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம். சிவபுரநகர். அது செழுமணியணி சிவபுரநகர். செழுமை -யுடைய மணிகளால் அணி செயப்பெற்றது. அச்சிவபுரநகரைத் தொழுவோரது புகழும் உலகில் மிகுந்து நிற்கும். புகழ் மடந்தைக்குத் தலைவர் ஆவர் என்றதாம்.

இத்திருப்பாடலில், சிவபிரானே உருத்திரரூபத்தில், உலகங்கள் முழுவதும் அழிவகை நினைவொடு நின்று, இளைப்பாற்றுந் திருவருளைச் செய்விக்கின்றனன் என்பது உணர்த்தப்பட்டது. திருமகள், கலைமகள், செயமகள் என்றதற்கேற்பப் புகழ் மடந்தை எனக்கொள்வது இங்கு பொருந்தும்.

4 மங்கை பங்கனே மறைக்கும் முதல்வன்

நறைமலிதரும் அளறொடு முகை நகுமலர்
புகை மிகுவளர் ஒளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு
நியதமும்வழி படும் அடியவர்
குறைவிலபதம் அணைதர அருள் குணம்
உடைஇறை உறைவனபதி
சிறைபுனல் அமர் சிவபுரம் அது
நினைபவர் செய மகள் தலைவரே

என்பதில், சிவபெருமானே மகேசுரனாகி நின்று, எவ்வுயுர்க்கும் சுகதுக்கபோகம் துய்ப்பிக்கும் வகையில் மறைத்தற்றொழிலைப் புரிகின்ற உண்மை உணர்த்தப்பட்டது.

பொருள்:- நறைமலிதரும் அளறு-வாசனை மிக்க சந்தனம், அளறு-சந்தனம், முகை-மொட்டு, அரும்பு, போது, 'மொட்டறா மலர் பறித்திறைஞ்சி, போதொடு நீர் சுமந்தேத்தி, அப்போது மலர் தூவி அரும்பொடு மலர்கள் கொண்டு, அரும்பொடு மலர் பறித்திட்டுண்ணா ஊரும்' நகு மலர்-மலர்ந்தபூ. புகை-நறும் புகை தூபம். மிகுவளர் ஒளி-தீபம், நிறைபுனல்-அபிடேக பாத்திரத்திற் பூரித்த தீர்த்தம், கொடு-கொண்டு. தனை-சிவபரம் பொருளாகிய தன்னை நினைவொடு - கருத்தொடு. நியதமும் - நியதியாக நாடோறும் வழிபடும் அடியவர் - பூஜை செய்யும் அடியார்கள். குறைவு இலபதம் அணைதர - குறைவில்லா இன்பம் விளைக்கும் பத முத்தியை அடைய; அருள் குணம் உடைய இறை-அருள் செய்யும் பண்புடைய முழு முதல்வன்; உறை-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; வனம்-அழகிய பதி திருத்தலம் சிவபுரம். அது சிறைபுனல் அமர் சிவபுரம். நீரை வாய்க்கால் வழியாகச் செலுத்தி வயல் முதலியவற்றிற்சிறைப்படுத்தலின் சிறைபுனல் எனப்பட்டது. புனல் அமர் புரம்-நீர்வளம் மிக்க தலம். அது முன்மொழிப் பொருளது. சுட்டுப் பொருளது அன்று. இங்கு அகரம் சுட்டுப் பொருளைத் தாராது. முதற்பாட்டில் மலரது என்றதும் அத்தகையதே. அதைத் தியாநம் செய்து தொழுவோர் வெற்றிமடந்தைக்குத் தலைவராய் வீற்றிருப்பார்.

இத்திருப்பாடலில், சிவபிரானே மகேசனாகி நின்று மறைத்தற்றொழிலைப் புரிந்து எவ்வுயிர்க்கும் போகமும் வீடும் தரும் முதல்வன் என்பது உணர்த்தப்பட்டது. மகேசுர மூர்த்தம் இருபத்தைந்தும் வெவ்வேறு போகங்களில் நோக்கம் உடையார் பூஜை செய்யற்கு உரிய சிவனுருவங்கள். அதனை முன் ஈரடியும் விளக்கின. பேரூர்ப் புராணத்தில் இவற்றின் பயனை அறிந்து கொள்ளலாம்.

5. சச்சிதாநந்தமே சதாசிவமூர்த்தியாகிய அநுக்கிரக கர்த்தா.

சினமலி அறு பகைமிகுபொறி சிதை
தருவகை வளிநிறுவிய
மனனுணர்வொடு மலர் மிசையெழு
தருபொருள்நிய தமும் உணர்பவர்
தனதெழில் உருவதுகொடு அடை
தகுபரன் உறைவது நகர்மதின்

கனமருவிய சிவபுரம்நினை பவர்கலைமகள்
தர நிகழ்வரே

என்பதில், சதாசிவமூர்த்தியாகி நின்று, ஐந்தொழிற்படும் உயிர்களுள் அநுக்கிரகத்திற்கு உரிய பக்குவர்க்குத் திருவருள் செய்யும் முழுமுதல் சிவபரம் பொருளே என்பது உணர்த்தப் பட்டது.

பொருள்:- சினம் மலி அறுபகை-காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் (அர்ஷட்வர்க்கம்) என்னும் தீய பண்புகள். அப்பகை மிக்கவை பொறிகள். அப்பொறிகள் (இந்திரியங்கள், மெய் வாய் கண் மூக்குச் செவி) சிதையும் வகையில்; வளி நிறுவிய-பிராணாயாமம் செய்து அடக்கி நிறுத்திய; மனன்-மனம். வாயுநிற்ப மனம் நிற்கும். மனத்தை அடக்கப் பொறிகளைப் புலன் வழிச் செல்லாதவாறு தடுத்தல் ஒன்றே போதாது. பிராணனை ஆயாமம் செய்துதான் மனத்தை அடக்குதலே இன்றியமையாதது. மனம் எங்கும் உண்டு. வாயுவை அடக்கின் மனம் தானே அடங்கும். பிராணாயாமம் பிரத்தியாகாரம் இரண்டும் ஒன்றன்பின் ஒன்றா நிற்றல் அறியத்தக்கது. உணர்வு ஈண்டுப் பதிஞானம், பதிஞானத்தால், கருதுவார் இதயத்துக் கமலம் என்னும் மலர்மிசை எழுகின்ற மெய்ப் பொருளை நியதியாக எப்பொழுதும் உணர்கின்ற இடையறா அன்பர்களை, அப்பொருள் தனது அழகிய சதாசிவத்திருமேனி கொண்டு, ஆளாக்கி, அவர்க்கு உயிராய் நின்று அநுக்கிரகம் புரியும். அச்சதாசிவ மூர்த்தி திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நகர் சிவபுரம். அது மதில் உடையது. மேன்மை மிக்கது. அச்சிவபுரத்தை வழிபடுவோர்க்குக் கலைமகள் தன் அருட்பெருக்கைத் தருவாள். அவளது அருளைப் பெற்றோர் உலகில் மிக்க ப்ரசித்தி உற்று விளங்குவார்கள். நிகழ்வு-ப்ரசித்தி.

இதனால், சதாசிவ மூர்த்தியாகி, அநுக்கிரகம் புரியும் தனி முதற்பொருள் சிவபரஞ் சுடரே என்பது உணர்த்தப்பட்டது

இவர்க்கெல்லாம் மேலாய்ச், சைவ சித்தாந்தச் செம் பொருளாய்ச் சச்சிதாநந்தமாய் விளங்கும் தனி முழுமுதலை உணர்த்துகின்ற திருப்பாடலையும் பிறவற்றையும் அடுத்து அறிவோம்.

முன்னர்த் திருமுறைகளுள் உணர்த்தப்பெறும் முழு முதற் பொருள் இன்னதென்பது விளங்கிற்று. அப்பொருளே தமிழ்வேதப் பிரதிபாத்தியம்.

இவ்வுண்மையை அறியாதவர் மூவருள் ஒருவனாகக் கருதித்தாம் அறிந்தவற்றை வெளியிட்டு வருதல் எத்துணையும் உண்மைக் கூற்றாகாது. நம்மாழ்வார் திருவாய்மொழியுள் 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' என்றது மூவருள் ஒருவனாகிய உருத்திரனையே. சிவபரஞ் சுடரை அன்று. அதற்குப் பின்னரும் மேவித் தொழும் பிரமன் சிவன் இந்திரன் ஆதிக்கெல்லாம் காவிக் கமல முதற்கிழங்கே என்றுள்ளது. இங்குப் பிரமனுக்கும் இந்திரனுக்கும் இடையில், சிவன் என்றது உருத்திரனையே. பரமசிவத்தை அன்று. நம்மாழ்வார் திருவாய்-மொழியின் முடிவில் உள்ளதான சூழ்ந்த கன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ... சூழ்ந்தாயே என்னும் திருப்பாசுரத்தைச், சைவர், சமயாதீதப் பழம் பொருளாகிய சிவபரம்பொருளுக்கும் உரியதாகக் கொள்ளினும் குற்றமில்லை. சைவ சித்தாந்தச் செம்பொருள் நிலை உணர்வார்க்கு அது.

அப்பரம்பொருளை வழிபடுவதே ஞானத் தெளிவு பெறுவதற்-குரியதாகும். பேரின்பப் பேற்றிற்கு ஞானமும், ஞானத்தெளிவும், அத்தெளிவிற்கேற்ற நிலையும் அன்றி வேறு வழி இல்லை. இதனைத் 'தேன் இயன்ற நறு மாமலர்கொண்டு நின்று ஏத்தத்தெளிவு ஆமே' 'உள் நிறைந்த பெருமான் கழல் ஏத்த நம் உண்மைக்கதி ஆமே' என வரும் திருவடிகள் உணர்த்துகின்றன.

சிவபரஞ்சுடர் தூயவுயிருடன் இரண்டறக் கலந்திருக்கிறது. இதை அத்துவிதம் என்பர். இதை விரித்து விளக்குகின்றேன். சிவஞானபோதத்தில்.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம் சேட்டித்த
தென்னும் மறையின் இயல்மறந்தாய் சொன்ன சிவன்
கண்ணா உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணான் சிவன் அசத்தை இன்று

என்னும் திருவெண்பா மும் முறை சிவ நாமத்தை முழக்குகின்றது. அம் மூன்றிடத்தும், ஆசிரியர் மாதவச் சிவஞான மாமுனிவர் அருளிய 1.பேரின்பத்துக்குக்காரணன் 2. முற்றுணர்வினன் 3. தூயதன்மையன் என்பது இப்பொருள் மூன்றனுள் ஒன்றான தூயதன்மையை அடையாத உயிர்க்கு எத்தனை பிறவி எடுக்கினும் பேரின்ப வீடு கிட்டாது. அதனால் உயிர்கள் தூய்மைத் தன்மையை அடைதல் வேண்டும். அதுவே

உயிர்களுக்கு மேலாய செயல். தூய்மைத் தன்மையை, நீதிநூல், தூஉய்மை என்ப தவா இன்மை என்றும், அது வருவதற்கு உரிய வழியை மற்று அது வாஅய்மை வேண்ட வரும் என்றும் கூறிற்று. அவா இல்லார்க்கு ஒரு துன்பமும் இல்லை. அவா உடையார்க்கு எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடை விடாமல் வரும்.

அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் குறள். 368

உயிர்க்கு அவா முற்றும் இல்லாதொழியும் நிலையும் முற்றுணர்வு பெற்றொளிரும் நிலையும் ஒரே காலத்தில் அமைவன, அவாவும் சிறிது சிறிதாக நீங்கும். உணர்வும் சிறிது சிறிதாக ஓங்கும். அறிவு நுணுகி வரவர அறியாமை யாகிய மலமும் அம்முறையே தேய்ந்து தேய்ந்து வருதல் இங்கும் கொள்ளற்பாலதே. அவா இன்மை மும்மல நீக்கத்தின் ஒரு கூறு. அவா முற்றும் நீங்குதல் மும்மலம் முற்றும் நீங்குதலின் பாற்படும். மும்மல நீக்கம் வியாபகம், அவா நீக்கம் வியாப்பியம். அது கன்மமல நீக்கத்தில் அடங்குவது.

அவாவும் சிறிது சிறிதாகத்தான் நீங்கும். அறிவும் சிறிது சிறிதாகத்தான் ஓங்கும். ஆன்மாக்களின் அறிவு தூல அறிவு ஆகலின், முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும், அவ்வாறு விளங்கமாட்டாது தத்தமக்கு ஏற்ற சோபான (படி) முறையே சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கி விளங்கி மேம்பட்டு வந்ததே வியாபகமாய் விளங்குவது (ஆகிய) ஓர் இயல்பிற்று. (சிவஞான போதமாபாடியும், சூ.8, அதி.1)

ஆன்மாக்களின் அறிவு அங்ஙனம் விளங்காத வழி நிகழும் அறியாமையாகிய மலமும் அதற்கு ஏற்ற பல பல சக்திகளுடையதாய் அம்முறையே சிறிது சிறிதாக முற்பக்கத்து இருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கண் பற்று அறக் கழியும். அது தேயத்தேய அதற்கு ஏற்பத் திரோதான சத்தியும் அம்முறையே சிறிது சிறிது ஆகத்தன் தன்மை நீங்கிச் சிற்சத்தி ரூபமாய் பதிந்து பதிந்து முடிவின்கண் அதி தீவிர சத்தியாய்ப்பதியும். அது பதியப் பதிய அம்முறையே விடயவெறுப்பு உண்டாம். அஃது உண்டாக உண்டாக, அம்முறையே வீட்டின்கண் விருப்பம் நிகழும். அது நிகழ நிகழ அதற்கு ஏற்ப ஆண்டு ஆண்டுப்

பலவேறு வகைப்பட உபதேசங்கள் சோபான முறையால் மேற்பட்டு உளவாம். அதற்கு ஏற்ப ஆன்மாவின்கண் அநுபவ ஞானங்களும் அவ்வாறே மேற்படும். சத்தி நிபாதமும், மலபரிபாகமும், இருவினை யொப்பும், சிவபுண்ணியமும் ஆகிய நான்கும் சிறிது சிறிது ஆக விளைவனவே ஆகும். ஒரே காலத்தில் முற்றும் விளைதலும், ஒன்றன்பின் ஒன்றாக விளைதலும் இல்லை. சிவபுண்ணியம் எவ்வளவு உண்டாயிற்று அவ்வளவு இருவினை யொப்பும். அவ்வளவு மலபரிபாகமும், அவ்வளவு சத்தி நிபாதமும் உளவாகும். அவா நீக்கம் இருவினைபொப்பு மலபரிபாகத்துள் அடங்கும். அவா முற்றும் நீங்கிய காலத்தில், இந்நான்கும் ஒருசேர முற்றுப்பெற்ற அளவினவாகும். அதனால்தான், திருவள்ளுவர்,

ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்

என்றருளினார். இங்கு ஆராமை-நிரம்பாமை. அஃதாவது தாமே அன்றித் தம் பயனும் நிலையாமையின், வேண்டாதன ஆய பொருள்களை வேண்டி மேன் மேல் வளர்தல். அவ் வளர்ச்சிக்கு அளவு இன்மையின் நீத்தலே தக்கது என்பது கருத்து. ஆராவியற்கையவா-ஒரு காலும் நிரம்பாத இயல்பினை உடைய அவா. பேராவியற்கை-களிப்பும் கவலையும் பிறப்பும் பிணியும் மூப்பும் இறப்பும் முதலியவை இல்லாமல், உயிர் எல்லையில்லாத பேரின்பத்தையுடையதாய் நிற்றல்.

1. தூயதன்மையும் 2. முற்றுணர்வும் 3. பேரின்பமும் ஆகிய மூன்றும் ஒரு சேரக்கூடிய முழு நிலையே சிவநிலை. அதைப் பெறுதலே வீடுபேறு என்பதில் உள்ள பேறு என்றதன் உட்கருத்து. 'நிலை பெறுமாறு எண்ணுதியேல்... நில்' என்னும் தேவாரம் அந்நிலையைத்தான் உணர்த்திற்று. தூயது அன்மையும் சிற்றுணர்வும் சிற்றின்பமும் முற்றும் விடுதலே வீடு. இவ்விரண்டும் பாச வீடு சிவப்பேறு என்னும் தொடரால் அறியப்படும். வீடுபேறு உம்மைத் தொகை. இரண்டன் வேற்றுமைத் தொகையன்று. வீடு பெற்றான் என்பது போலும் தொடர்கள் இரண்டன் வேற்றுமைத் தொகைப்பாற்படும். ஆண்டும் அவை தொகையாகா. 'எல்லாத் தொகையும் ஒரு சொன்னடைய' என்பது தொல்காப்பியம். விட்டிசைக்கப்படும் எல்லாத்தொடரும் தொகையாகா. அதனால் தான் தொல்காப்பியர் கபிலபரணர் சேர சோழ பாண்டியர் முதலிய

தொடர்களைக் குறித்து, (ஒரு சொல் நடை அல்ல) பல சொல் நடைய என்றார். அதனை,

> உயர்திணைத் தொகையின் உம்மைத் தொகையே
> பலசொல் நடைத்தென மொழிமனார் புலவர்

என்றதாலறிக. அந்நூற்பாவில் பல சொல் நடை என்றது அதன் முன்னூற்பாவில் ஒரு சொல் நடை என்றதற்கு மறு தலையாதலை உணராமல் பலர் சொல் நடை எனப் பிழை படக்கொண்டு உரைத்தது நூலாசிரியர் கருத்திற்கு முரணாயிற்று. நிலங்கடந்தான் குன்றத்-திருந்தான், எனப் பெயரும் வினையும் தொக்கன ஒரு சொன்னீர்மையில ஆகலின் தொகையெனப்படா என்னும் உண்மை சேனாவரையர்க்குத் தெரிந்ததே (சூ.420. உரை) உரையாசிரியர் முதலிய பலரும் அதில் வேறுபட்டிலர்.

இதுகாறும் எழுதியவற்றால் சிவம் என்னும் சொற் பொருளும் அச்சிவம் தூய்மைத் தன்மையில் முழுமையுடையது என்பதும், அதனோடு முற்றுணர்வும் பேரின்பமும் உடையது என்பதும் விளக்கப்பட்டன. அத்தூய்மைத் தன்மை சத்து என்றும், முற்றுணர்வு சித்து என்றும், பேரின்பம் ஆனந்தம் என்றும் நினைவிற் கொள்ளல் வேண்டும். வேண்டவே சச்சிதாநந்தமே சிவம் என்னும் மெய்ப் பொருள் என்பது தெளிவுறும். சிவம் என்பதற்குச் சிவஞான மாமுனிவர் உரைத்தருளிய முப்பொருளும் சச்சிதாநந்தம் என்னும் உண்மையை விளக்குதல் இதனால் அறியப்படும். உயிர் சச்சிதாநந்தம் ஆதலே இரண்டறக் கலத்தலாகும். இக்கலப்பே அத்துவிதம். சிவஞானபோதம் கூறுவது,-பண்ணையும் ஓசை(யை)யும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும் போல் எங்கும் ஆம்-அண்ணல்தாள் அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்றென்னா தத்துவிதம் என்றறையும் ஆங்கு என்பது அத்துவிதக் கலப்பினைத் திருஞானசம்பந்தர் அருளிய திருமுறையில்,

> பூவினில்வாசம் புனலிற் பொற்புப்
> புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
> நாவினிற் பாடல் நள்ளா றுடைய
> நம்பெருமான்இது என்கொல் சொல்லாய்
> தேவர்கள் தானவர்சித்தர் விச்சா
> தரர்கணத் தோடுஞ் சிறந்து பொங்கி

ஆவினில் ஐந்துகந் தாட்டும்கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்த வாறே

என்பதிற்காண்கிறோம். இதிலே மலரும் மணமும் புனலும் பொலிவும் சாந்தமும் நாற்றமும் அத்துவிதத்திற்கு உவமைகளாகி நின்றன. நாவினிற் பாடலும் பண்ணிசை என்னும் பொருட்டாகும்.

சச்சிதாநந்த சொருபத்திற்கு ஒப்பாகப் பூவும் பூவின் வண்ணமும் பூவின் மணமும் கூறுதல் மரபு. பரஞ்சோதி முனிவர்,

பூவண்ணம் பூவின் மணம்போல் மெய்ப்போதவின்பம்
ஆவண்ணம் மெய்கொண்டவன்

என்றது உணர்க.

பூவினின்று மணத்தையும் நிறத்தையும் பிரித்தல் இயலாது. மணத்தினின்றும் நிறத்தினின்றும் பூவைப்பிரித்தலும் இயலாது. ஏனையதும் அன்னதே. அவ்வாறே சத்தும் சித்தும் ஆநந்தமும் பிரித்தற்கியலாத ஒருமை உடைய முழுப் பொருள். அச்சிவமாம் சச்சிதாநந்தத்தை ஏதேனும் ஒரு சத்திலிருந்துதான் காண்டல் வேண்டும். சத்து முத்திறம் உடையது. அத்திறமே பதி பசு பாசம். பதியாகிய சத்தும், பசுவாகிய சத்தும், பாசமாகிய சத்தும் சத்தாந்தன்மையில் வேறுபடா. பதியும் பசுவும் சித்தாதலின், சத்தாகித் சித்தாகாத பாசத்தின் வேறாயின. சித்தாம் தன்மையில் பதியும் பசுவும் வேறுபடும். பதியாகிய சித்துக்கும் பசுவாகிய சித்துக்கும் வேறுபாடு பெரிது. இதைச் சிவஞான சித்தியாரில், விளக்கியருளினார் ஆசிரியர். மெய் போகம் இன்பம் என்னும் பாடமும் பொருந்தும்.

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து,
ஒன்று ஆம் என்னின்
சிவன் அருட்சித்து, இவன் அருளைச்
சேரும்சித்து, அவன்தான்
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும் சித்து,
அவற்றில்
படியும்சித்து அறிவிக்கப்படும்
சித்தும் இவன்தான்.

அவன்தானே அறியும் சித்து.
ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்று ஆகாது.
அநந்நியமாயிருக்கும்.
இவன்தானும் புத்தியும் சித்து.
இவன் ஆமோ புத்தி
இது அசித்து என்றிடில், அவனுக்கு
இவனும் அசித்து ஆமே

சித். சுப. 320

என்பது அது. இத்திருவிருத்தத்தில், இவன் என்றது உயிரை. அவன் என்றது சிவனை. புத்தி முத்தி-போக மோட்சம் (புத்தியும் முத்தியும்) சிவன் தானும் புத்தியும். ஆன்மாவும் புத்தி தத்துவமும் சிவன் ஆமோ புத்தி. புத்தி தத்துவமாகிய சடம் ஆன்மாவாகிய சித்து ஆகுமோ என்று பொருள் கொள்க.

பதியாகிய சித்துக்கும் பசுவாகிய சித்துக்கும் வேறுபாடு பெரிது என்னும் உண்மையை இத்திருவிருத்தத்தால் அறியலாம். பதியாகிய சித்து, தனியாய்த் தூயதாய் நிற்பது. பசுவாகிய சித்து பதியுடனாவது பாசத்துடனாவது அறியலாவது. தனியாய் நில்லாது.

... ... அருவுருவாய்த்
தோன்றி உடன்நில்லாது தோன்றாதும் நில்லாது
தோன்றல் மலர்மணம் போல் தொக்கு.

சிவ.ஞா.வெ.42

பூவின்கண் மணம் விளங்கித்தோன்றி ஒப்ப நிற்பதும் அன்று. விளங்காது சூனியமாய் நிற்பதும் அன்று. அதுபோல, உயிரும், பதியாகிய சத்திலும் பாசமாகிய அசத்திலும் சார்ந்ததன் வண்ணமாய்த் தோன்றும் இயல்புடையது அன்று. மலரும் மணமும் இதற்கு உவமையாய் நின்றவாறும் சச்சிதாநந்தத்திற்கு உவமையாய் நின்றவாறும் கருத்தால் வேறுபடுதல் அறிக. பல திருப்பதிகங்களில் திருஞானசம்பந்தர் இவ்வுண்மையைக் குறித்தருளியவாறு ஊன்றி உணர்வார்க்குப் புலப்படும்.

இது **'ஞானநெறி'**யாகும். இனி யோகநெறியும் திருஞான சம்பந்தர் திருமுறையுள் உணர்த்தப்பட்டுள்ளது.

ஒளி நெறி என்பது அறிவின் ஒளியைக் குறித்ததாய் ஞானநெறிக்கும் உரியதாகும். ஆயினும் ஒளி என்றது 1. காண்பான், 2.காட்சி, 3. காணப்படும் பொருள் ஆகிய மூன்றும் நீங்காத காட்சி நிலைக்கு உரியது. ஞானநெறி அம்மூன்றும் நீங்காது நீங்கியது.

கல்லாலின் நிழலில் நால்வர்க்கு இறைவன் உணர்த்திய பொருள்களாகப் பல குறிப்பிடப்படுகின்றன திருமுறைகளில். அவற்றுள் ஒன்று ஒளிநெறியும் ஆம்.

ஓர் ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு
ஒளிநெறி காட்டினை

எனத் திருவெழு கூற்றிருக்கையுள் உள்ளது. இங்கே நால்வர்க்கு உபதேசித்தருளிய உண்மை தெரிகிறது. இவ்வாறே திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில்,

ஏரிசை வடவாலின் கீழ்இருந்தங்
கீரிருவர்க்கு இரங்கி நின்று
நேரியல்நான் மறைப்பொருளை யுரைத்து ஒளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில் 1. 132. 1

என்று அருளினார். ஒளிசேர் நெறி-ஒளியை இடைவிடாது நினைக்கும் வழி. அத்திருவீழிமிழலைக்கே உரிய பிறிதொரு திருப்பதிகத்தில்,

அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடும் அடியினை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும்
அருளிய பரன் உறைவிடம்ஒளி
மணிபொருவரு மரக தநிலம்
மலிபுனல் அணைதரு வயல்அணி
திணிபொழில்தரு மணமது நுகர்
அறுபதம்முரல் திருமிழலையே

என்னுந் திருப்பாடலில், இருவர்க்கு அறநெறியும் மறைப் பொருளும் உபதேசித்தருளிய உண்மை தெரிகிறது. நால்வர், இருவர் என்னும்

வேறுபாடு சிற்சில தலங்களில் தென்முகக் கடவுள் சந்நிதியில் காணக்கிடக்கின்றது.

இவ்வுண்மைகளை உணர்ந்த திரிகூட ராசப்பக் கவிராயர் தமது திருக்குற்றாலப் புராணத்தின் தென்முகக் கடவுள் வணக்கம் ஆகிய பாடலில்,

ஆல்வருக்கந் தனில் உயர்ந்த வடநிழற்கே
தென்முகம் கொண்டு அறவோர் ஆய
நால்வருக்குள் இருவருக்கும் ஒருவருக்கும்
நவின்றருளி நவிலொணுத
நூல்வருக்கம் ஒருவருக்கு
நுவலாமல் நுவன்றான்

என்று குறித்தார்.

ஒருவர்-திருநந்திதேவர்.

இருவர்-திருமால், நான்முகன் என்றலும் அகத்தியர், புலத்தியர் என்றலும் உள. பழைய (சிவஞானபோத) உரையிற் காண்க. உமாபதிசிவம் அருளிய ஞானபூசா விதியில் உணர்த்தும் நால்வர் அகத்தியர் முதலியோர் ஆவர். எல்லாரும் சொல்லாநிற்கும் நால்வர் சநகாதி முனிவரே.

1. ஆலின்கீழ் அறம்ஓர் நால்வருக்கு அருளி
அனலது ஆடும்எம் அடிகள்
-திருப்பாம்புரப்பதிகம்

2. மால்அடைந்த நால்வர் கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆல் அடைந்த நீழல்மேவி
அருமறை சொன்னது என்னே
-திருச்சேய்ஞலூர்ப் பதிகம்

3. ஆலதன்கீழ் இருந்து நால்வர்க்கு
அறம்பொருள் வீடுஇன்பம் ஆறங்கம் வேதம்
தெரிந்தான்
-திருநாகேச்சுவரம்-உ

4. அறங்கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்தருளி அமரர் வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரம் ஐந்தில்
ஒன்றறுத்த நிமலர் கோயில்

எனத் திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில், நான்மறையுபதேசம் உணர்த்தப்பட்டது.

(1) மறைப்பொருளையும் ஆறங்கத்தையும் உரைத்ததும் (2) ஒளிசேர்நெறி, அளித்ததும் (3) அறநெறி (சிவதன்மம்) அருளியதும், (4) நான்குறுதிப்பொருள்கள் அருளியதும் ஒன்றாகுமோ திருமுறைகளில் வெவ்வேறு உணர்த்தப்படுதல் ஆங்காங்குக் கண்டு கொள்க. அறம் பொருள் இன்பம் வீடு நான்மறை ஆறங்கம் எல்லாம் உபதேசித்த உண்மையைத் திருமுறையின் பிற இடங்களிலும் காணலாம்.

அவற்றுள் 'ஒளிநெறி' என்றது சிவயோக பேதங்களுள் ஒன்றான பிராசாத யோகத்தைக் குறிக்கின்றது. பிராசாத யோகத்தின் கலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம் உடையது.

பிராசாத யோகம் கலைகளின் பெயர்	நிறவேறுபாடு
கோஷகலை	மின்னல்ஒளி
1. மேதாகலை	1. தீயினொளிக்கொழுந்து
2. அர்க்கீசகலை (படிகம் பொன் ஒளிக் கலப்பு)	2. சந்திரனொளியும் சூரியனொளியும் கலந்த ஒளி
3. விஷகலை	3. மின்னல் ஒளி
4. விந்துகலை	4. விளக்கொளி
5. அர்த்தசந்திர கலை	5. உச்சிவேளையில் கதிரவனெதிரே காட்டிய மாசில்லாத வாளின் ஒளி
6. நிரோதி(னி) கலை	6. புகையின் நிறம்
7. நாதகலை	7. மாணிக்கத்தொளி
8. நாதாந்தகலை	8. இருமின்னலொளி
9. சத்திகலை	9. நூறு கதிரோன் ஒளி

10.	வியாபினிலை	10.	ஆயிரம் கதிரோன் ஒளி
11.	வியோமரூபாகலை	11.	ஞானவெளியொளி
12.	அநந்தா கலை	12.	ஞானக்கடலொளி
13.	அநாதா கலை	13.	ஞானக்கண்ணாடியொளி
14.	அநாகிருதா கலை	14.	லக்ஷம் கோடி சரற்கால நிலவொளி
15.	சமனாகலை	15.	ஷ அளவு கதிரொளி
16.	உன்மனா கலை	16.	அளவிலாக் கதிரொளி
17.	பராகலை		என்னும் நான்கும் உன்மனாகலைக்கும் அதீத கலைகள் ஆதலின் சிவ ஞான சொரூபம் ஆகும்.
18.	சிவம்		
19.	சிவாநந்தம்		
20.	சரணம்		

சிவாகமத்தில் உபதேசிக்கப்படும் பிரசாத யோகத்தைத் தமிழில் 'ஒளிநெறி' என்று திருமுறை உணர்த்திற்று. இது முழு விளக்கம் ஆகாது. பிராசாதத்தின் பேதம், நாமம், உத்தாரம், பிரஸ்தாரம், பிரகாசம், இடம், எல்லை (யளவு), மாத்திரை, காரணேசுரர், வியாப்தி, சூன்யம், மலங்கள் நிற்கும் நிலை, சோதிக்கப்படும் மலமும் யோனியும், மூலாதார நாடிகளின் தோற்றம், நிவர்த்தி முதலிய கலை ஐந்தும் நிற்கும் நிலை, பிரணவ மந்திரத்தின் கலைகள் நிற்கும் முறை, திருவைந்தெழுத்து நிற்கும் நிலை, அத்துவாக்கள் ஆறன் தோற்றம், திருவைந்தெழுத்தில் தீட்சை நிற்கும் நிலை, பிரசாத கலைகளில் பரசாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தி பரதுரியம், பரதுரியாதீதம் என்னும் ஞான அவஸ்தாஸ்தாநம் ஐந்தும் ஆகிய எல்லாவற்றையும் விரித்து விளக்கப் பெற்றதால்தான், சைவசித்தாந்தச் செந்நெறிக்கே உரிய இவ்வொளி நெறியை நன்குணர்ந்து கொள்ளல் கூடும். இந்நெறிநலம் யார்க்குக் கிடைக்கும் யாரால் கிடைக்கும் எத்தகைமை உடையவரானால் இதைப்பெறலாம் இதைக் கல்லால் நிழல் மலைவில்லார் அருளினார் ஆயின், இதன் பெருமை என்ன இதை உபதேசிக்கப்பெற்றவர் நால்வர் முதலோர் ஆயின், இதை உணர்தற்கு உரியார் எத்தகைமை உடையார் ஆதல் வேண்டும் இப்பிரசாத யோகம் எவ்வளவு பெருமை யுடையதா யிருந்தால், திருஞானசம்பந்தப் பெருமானார், தம் திருப்பாடற்கண்,

சிவமகிமையுள் ஒன்றாக, ஒளிநெறி காட்டினை, ஒளிசேர்நெறி அளித்தோன் என்றும், சிவயோகியர் மகிமையுள் ஒன்றாக ஒருக்கியவுணர்வினோடு ஒளிநெறி செலுமவர் என்றும் ஓதத் திருவுளங்கொள்வார்.

திருவீழிமிழலையை நாமும் நினைக்கின்றோம். ஏனையோரும் நினைக்கலாம். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் உணர்த்தும் நிலையில் நம் நினைப்பு இருந்தால், நாம் திருவருளைப் பெறுதலில் என்ன அருமை கிடைக்கும் திருவீழிமிழலையை நினையத்தக்க வல்லமை ஒளிநெறி செல்லும் உத்தமர்க்கே உண்டு என்றால், அதைப் பெறுவதே நமக்கு முதலாய கடனாகும். சிவதலங்களை நினைவதற்குரிய வல்லமையும், அவற்றில் வாழ்ந்து சிவதரிசனம் புரியும் ஆற்றலும், திருவருள் பெறும் நெறியும், ஒளிசேர் நெறி யில் தான் உண்மையும் ஒழுங்கும் உறுதியும் உடைய நலமாக அமையும். இதனை அத்திருவீழிமிழலைத் திருப்பதிகப் பாடல் குறிக்கின்றது.

ஒருக்கிய உணர்வினொடு ஒளிநெறி செலுமவர்
(அரக்கன்நன் மணி முடி ஒருபதும் இருபது
கரக்கனம் நெறிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினைய வலவரே.

இதில் ஒளிநெறி செலவுக்கு உணர்வு ஒருங்குதல் இன்றி யமையாதது என்னும் உண்மை உணர்த்தப்பட்டது. திருவீழி-மிழலையிற் சென்று நினைந்து சிவதரிசனம் புரியும் வல்லமை வேண்டின் ஒளிநெறிச் செலவுடையாராதல் முக்கியம் என்றும் அறிவித்தருளினார் ஞானமாமுனிவர் ஆகிய நம் சமயாசாரியர்.

இவ்வொளிநெறியைக் குறித்துத் தமிழ்ப் புராணங்கள் சிலவற்றுள் நல்ல பாக்கள் உள்ளன. அவற்றால் அவற்றை இயற்றிய பாவலர்க்கு ஒளிநெறிப் பயிற்சியோ உணர்ச்சியோ ஆர்வமோ உண்டு எனக் கொள்ள இடன் உண்டு. செவ்வந்திப் புராணத்திலும் அதன் ஆசிரியர் நன்கு தெரிவித்தார். கச்சியப்ப முனிவர் பல இடங்களில் உணர்த்தியருளினார். நிரம்ப அழகிய தேசிகர் சேதுபுராணத்தில், காயத்திரி சரஸ்வதி தீர்த்தச் சருக்கத்தில் (பா. 23), சந்த விருத்தம் ஒன்றில்,

யான்ஆர் எனது ஆர்உன் அருள்
எல்லாம் எனும் நல்லோர்
ஆனார் அவர் உள்ளத்து எழும்
அறிவின்சுடர் ஒளியே
மீன்ஆர் ஒளி முதல்மேல் நிலை
விண்டுன்மனை விரவா
வான்ஆர் தினகரனே மழுமான்
ஏந்தின கரனே

என்று இவ்வொளிநெறியைச் சுருக்கமாகக் குறித்து விளக்கம் உறநிறுத்திய பாத்திறத்தால், அச்சைவாசாரியார் நம்மால் வணங்கப் பெறும் மாண்புடையோர் ஆகும் சற்பாத்திரர் அல்லரோ?

நிலைமை சொல்லு நெஞ்சே தவம்என் செய்தாய்
கலைகள் ஆயவல்லான் கயிலாயநன்
மலையன் மாமயிலாடு துறையன் நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே.

எந்தமாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம்வீடவை ஆய பராபரன்
அந்தம்இல்புகழ் ஆரூர் அரனெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே.

என்னும் திருக்குறுந்தொகை இரண்டிலும் பிராசாத நெறி குறிக்கப்பட்டுள்ளது என்பது பெரியோர்கருத்து. யாழ்ப்பாணம் சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் ஐயா அவர்கள், இவற்றுள், ஒன்றனை எடுத்தாண்டு இக்கருத்தை விளக்கினார்கள். (பிரசாதஷட்சுலோகி வியாக்யானம் பக்கம் 19-பார்க்க).

ஐயிரண்டும் ஆறொன்றும் ஆனார்போலும்
அறுமூன்றும் நான்மூன்றும் ஆனார்போலும்

என்னும் தேவாரப் பகுதியின் முதலடிக்கும் சோடசகலா ப்ராசாதம் எனப் பொருள் கொண்டாரும் உளர். பத்துத்திக்கும் ஏழுலோகமும் பதினெண் தேவகணமும் பன்னிரு சூரியரும் ஆனார் என்னும் பொருள் அடியேன் கொண்டது.

சித்தம் ஆர நினைந்துள்கி யெழுதல், நெஞ்சு ஒன்றி நினைந்தெழுதல் ஒன்றியிருந்து நினைதல் முதலிய தொடர்க்குப் பொருள் ஒளிநெறியே ஆகும். இத்திருமுறையிற் குறித்த ஒளிநெறி பத்தாவது திருமுறையாகிய திருமந்திர மாலையிலே மிக்க விளக்கம் உறத் திருமூலதேவ நாயனார் உபதேசித்தருளினார்.

ஆதார யோகத்து அதிதே வொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி ஈரெண் கலைசெல்ல மீதுஒளி
ஓதா அசிந்தம் ஈதானந்த யோகமே 709

மீதானந்த யோகம் என்றாருமுளர். இதன் முந்திய திருமந்திரம் மூலாதாரம் முதல் நிற்கும் அதிதேவதைகளை விளக்கிற்று. 'ஈரெட்டொடு ஆறிரண்டு ஈரைந்துள் ஏகின்ற அக்கலையெல்லாம்' அது கூறுகின்றது.

மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்
....
நாதாதி நாதத்து நல்லருளாளே 1070

என்றும்,

ஏன்றுள ஈரா றெழுகலை யுச்சியில்
தோன்றும் இலக்கு 1187

என்றும்,

ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசக்தி 1705

என்றும்,

ஆதார சோதனை யான்நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி 1707

என்றும்,

மேதாதி யாலேவிடாது ஓம்எனத் தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதாரம் ஆகவே தான்எழச் சாதித்தால்
ஆதாரம் செல்போகம் ஆவது காயமே. 1708

என்றும்,

திருமந்திரம் ஒளிநெறியை விளக்கியதுணர்க. ஆறும்பதினாலும் என்று இருபது கலைப் பிரசாதத்தையும் அது குறித்தது.

திருக்களிற்றுப்படியாரிலும் அதன் முதன் நூலான திரு வுந்தியாரிலும் ஆதாரயோகம் நிராதார யோகம் மீதானம் என்னும் மூன்று நிலையும் கூறும் உண்மையைத் தெளிவாக உணர்தல் வேண்டின், இவ்வொளி நெறியைப் பயில்வது இன்றியமையாதது.

ஆதாரத் தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல்க உந்தீபற
நிமலற்கு இடம்அது என்றுஉ ந்தீபற

இதில் ஆதாரம், நிராதாரம், மீதானம் என்னும் மூன்றையும் நன்கு உணரவேண்டின், திருஞானசம்பந்த சுவாமிகள் கூறியருளிய ஒளிநெறிச் செலவு இன்றியமையாத சிவயோகப் பயிற்சியாகும்.

1. சிவபுண்ணியம் கருவி கரணங்கள் எல்லாம் கொண்டு செய்யத் தகுவன.

2. ஆதாரயோகம் கருவிகளை விட்டு நீங்கிக் கரணங்களோடு கூடிச் செய்யத் தகுவது.

3. நிராதார யோகம் கரணங்களையும் விட்டு நீங்கி ஞானம் ஆகிய அருட்குணத்தால் செய்யலாவது. ஆதலால்தான் அவற்றின் ஒளியை ஞானச் சார்புடையவனாக விளக்கியருளின சிவாகமங்கள். அவ்வுண்மை நாதாந்தகலை முதலியவற்றின் நிலைமை நோக்கியுணர்தற்பாலது.

4. மீதானம் அவ்விரண்டும் இன்றி அவற்றின் துணையால் மேலொங்கிச் சிவானுபூதிமானாகும் இடம். மீ-மிசை, தானம்-நிலம், மிசை நிலம், நிலமிசை. மலர்மிசை ஏகினான் மாணடி, சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வர். வரன் என்னும் வைப்பும் அதுவே நிலையுடை பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறுவாரே என்று காழி வேந்தர் குறித்தருளிய நீடுலகும் அதுவே. நிலையுடைய பெருஞ்செல்வம் பேரின்பச் செல்வம். அதுவே நிலையுடையது.

இங்கு இக்காலத்துச் சைவருலகம் உள்ள நிலைக்கு எடுத்துக்-காட்டாக ஒன்றைக் குறிக்க உள்ளம் துணிந்தது. அதனால் உண்மைச் சைவத்தில் நாட்டம் உண்டாகலாம் என்பது அடியேன் வேட்டம்.

ஆதார யோகத்தாலேனும் நிராதார யோகத்தாலேனும் மீதானத்தை யெய்தலுறுவார்க்கு வழியாயிருப்பது இச் சுழிமுனைநாடி. மீதானம் பிரமரந்திரம். (திருவிளையாடற் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலம் 35. வரை) என்று ஒருவரால் எழுதப்பட்டுள்ளது.

இதில், மீதானத்தை எய்த ஆதாரயோகமோ, நிராதார யோகமோ போதும். இரண்டும் வேண்டா. ஒன்றே அமையும் என்றும் மீதானம் பிரமரந்திரம் என்றும் உள்ளது சைவருக்கு மிக்க வருத்தம் தரும் ஒரு பெரும் பிழையாகும்.

நிராதார யோகம் ஆதார யோகத்தால் ஆவது. நிராதார யோகத்தால்தான் மீதானத்தை எய்தல் கூடும். ஆதாரம், நிராதாரத்திற்கு அடியும், நிராதாரம் மீதானத்திற்கு அடியும், ஆகி ஒன்றன்பின் ஒன்று எய்தற்பாலன. மீதானம் பிரமரந்திரம் ஆனால், அதன்மேலும் பல நிராதாரயோகத்தின் பாற்பட்ட கலைகள் உள்ளமையால், பிரமரந்திரம் மீதானம் ஆகுமோ? இரண்டற்கும் மேலான முடிவை இடைப்பட்ட தாக்கியது இத்தடுமாற்றம். விமலற்கு இடம் மீதானம் என்று வெளிப்படக்கிளந்து கூறியும், இவ் விபரீத ஞானம் விளைகின்றது. உண்மைச் சைவம் உலகில் விளங்க திருஞான சம்பந்தர் திருவடி **'ஒளிநெறி'** அருள்வதாகுக.

திருச்சிற்றம்பலம்

5. திருமுறையில் சீலம், நோன்பு, செறிவு, அறிவு.

சிவபிரானை வழிபட்டு, அவன் திருவருளைப் பெற்றுப் பேரின்பம் உற்றுச் சிவமாந்திரு எய்த விரும்புவோர்க்கு உரிய தவம் 1. சரியை, 2.கிரியை, 3. யோகம் என்று முத்திறம் ஆம். அத்தவம் மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக மேற்கொள்ளத் தக்கது. அதுவே நெறி. அந்நெறியின் நீங்கினும் பயன் இல்லை. மாறினும் பயன் இல்லை. முறை பிறழ்தல் இன்றி அமைதல் வேண்டும். அரும்பும், மலரும், காயும், கனியும் சரியை முதலிய நான்கற்கும் உவமம் ஆக்கித் தெளிவித்தனர் நம் முன்னோர். அரும்பு போல்வது சரியை. மலர் போல்வது கிரியை காய் போல்வது யோகம். காயின் முன்னிலை மலர், யோகத்தின் முன்னிலை கிரியை, மலரின் முன்னிலை அரும்பு கிரியையின் முன்னிலை சரியை. அரும்பு முதலிய இம்மூன்றன் முடிவாய் விளங்கும் பயன் கனி. அச்சரியை முதலிய மூன்றன் முடிவாய் விளங்கும் பயன் ஞானம்.

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே

என்று தாயுமானவர் அருளியதும்

அறிதல் ஒப்புமையால், சரியை முதலிய நான்கு ஞானமேயாம். ஆயினும், அரும்புமலர் காய்கனி யாதல் போலச் சோபான முறையாகிய தம்முள் வேறுபாட்டால் முறையே ஒன்றற்கு ஒன்று அதிகமாய் நான்காம் எண்ணு முறைமைக்கண் நின்ற ஞானமே முடிவாகிய ஞானம் ஆம் என்னும் சிவஞான பாடிய வசனமும் இங்கு அறியத்தகுவன. முன் இரு கட்டுரையுள் வழிபடற்குரிய மெய்ப்பொருளும் வழிபாட்டு நெறிவகையுள் ஞானமும் யோகமும் திருமுறையினின்று விளக்கப்பட்டன. இதிற் கிரியை உணர்த்தப்படும்.

சிவஞானபோத வார்த்திகத்தில், ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான் என்றுளது. இதில், முற்செய்தவம்

என்றது சரியை முதலிய மூன்றன் தொகுதியும் **நன்னெறி** என்றது ஞானமும் ஆதல் வெளிப்படை. இங்குச் சிவஞானபாடியம் கூறியதாக, மேற்காட்டிய பகுதியால் உணர்ந்ததனை மறத்தலாகாது. ஞானமே நன்னெறி ஏனைய மூன்றும் நன்னெறியும் அல்ல ஞானமும் ஆகா என்று எண்ணலாகாது. நன்மை எனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை எனப்படுவது வீடுபேறு என்ப. அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறி ஆகலின், **ஞானம் நன்னெறி**. எனப்பட்டது. வீட்டிற்கு நெறி என அச்சமயத்தாரால் கூறப்படுவன அனைத்தும் தன்கண்ணே வந்து கூட நின்ற பெருநெறி ஆகலானும் அது நன்னெறி எனப்பட்டது. நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒருபொருட்கிளவி. இவை சிவஞான முனிவர் எழுதியருளிய விளக்கம்.

சைவசித்தாந்த ஞான நூல்களிலும் திருமுறைகளிலும் தவம் என்று உள்ள இடங்களில், இக் கருத்து நினைவில் வருதல் வேண்டும். திருக்குறளில், **உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு** என்று உள்ளதைக் கொண்டுரைத்தல் வழக்கமாயிருக்கின்றது. அது தவத்தை விளக்கி நின்ற குறள் அன்று. தவத்தின் அடையாளமாகிய தவம்புரிவோரது தன்மையை விளக்கி நிற்கும் பொருள் குறித்தது. தவஞ் செய்வோன், தனக்கு உற்ற நோயைப் பொறுத்தலும் தான்பிறவுயிர்க்குத் துன்பம் செய்யா தொழிதலும் ஆகிய இருவேறு தொழிலும் உடைமை தவத்தின் அடையாளம் ஆகக்கொள்ளல் வேண்டும். தவத்திற்கு உரு வேறு, தவம் வேறு. தவம் என்னும் இடங்களில் எல்லாம் அக்குறட்பாவை எடுத்துக்காட்டும் வழக்கம் பொருந்தாது.

திருஞான சம்பந்தர் தவநெறியை வேண்டுகின்ற உண்மை திருமுறைகளில் சில இடங்களில் உண்டு. அங்கெல்லாம் கொள்ளத்தக்க கருத்து, இதுகாறும் எழுதிய சைவத்தவமே ஆகும். ஆயினும் அவரது சிவஞான நிலையில் எத்தகைய அளவு அத் தவம் என்னும் சொல்லாற் குறிக்கப்படுகின்றது என்னும் ஓர் ஆராய்ச்சியும் அங்கு இன்றி-யமையாதது.

பாடினை அருமறை வரல்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்தில்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்

நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையே அடியார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையே இடம்மேவினை தவநெறி அருள்எமக்கே.

புண்ணியர் தொழுதுஎழு புகலிந்நகர்
விண்ணவர் அடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம்பந்நன் வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித் தாம்எய்துவர் தவநெறியே.

என்னும், இவ்விரண்டு திருப்பாடலிலும், தவநெறி குறிக்கப் பட்டுள்ளது. முதலில் தவநெறி என்றது திருஞான சம்பந்தரால் எமக்கு அருள் எனப்புகலிஇறைவனை வேண்டியதாகும். இரண்டாவதில் தவநெறி என்றது அத்திருப்பதிகத்தை ஓதவல்ல வர்க்கு எய்துவதாகும். நடலை இன்றிப் போய்ச் சிவனுலகம் நண்ணுவர் (மறுமையில்). இடர்இன்றித் தவநெறி எய்துவர். (இம்மையில்) சிவனுலகம் நண்ணும் பக்குவத்-திற்குத் தவநெறி அமையும் அவ்வோதுவார்க்கு. அவ்வளவு தவமோ திருஞானசம்பந்தர் வேண்டுவது? புகலிஇறைவர் திருவருள் பெற்ற புகலிவேந்தர் வேண்டும் தவநெறியின் அளவு நம்மனோர் கணிக்கவல்ல பான்மையதன்று. அப்பெருமானார் திருவுள்ளமே அதனளவை அறிவதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பாட்டில், தவநெறி வேண்டிய ஒரு திருப்பதிகம் உண்டு. அதில், அச்சுவாமிகள் வேண்டிக்கொண்ட தவநெறியும் அத்திருப்பதிகத்தை ஓதவல்லார் பெறும் தவநெறியும் தன்மையாலும் அளவாலும் வேறுபடுதல் போல இங்கும் அவற்றின் பெரிய வேற்றுமையை நம் உளத்திற் கொளல் வேண்டும்.

பல தவங்களுள், உயிர்க்கு இன்பதுன்பங்களாகிய போகம் ஊட்டு-வனவும், செய்தற்கு எளியனவும், அரியனவும், அவ்வச்சமயத்தவரால் தத்தம் ஆட்சியிற் கொள்ளப்பட்டனவும், சைவத்திறத்தனவும் என வெவ்வேறாய் நிற்கின்றன. சிவஞானசித்தியாருள், ஊனம் இலாக் கன்மங்கள் **தபம்** செபங்கள் தியானம் ஒன்றுக்கு ஒன்று உயரும். இவை ஊட்டுவது போகம். ஆனமையால், மேலான ஞானத்தால் அரனை அருச்சிப்பர் வீடுஎய்த அறிந்தோர் எல்லாம். என்றதில் வேள்வி

(யாகம்,வழிபாடு, பூஜை) ஐந்தனுள், ஞானவேள்வி அல்லாத நான்கும் போகம் ஊட்டும் என்று குறிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று **தவவேள்வி.** ஊனம் இல்லாத்தவமே ஆயினும் அதில் ஒழுங்குற்றால் இன்பமும் ஒழுங்கற்றால் துன்பமும் ஆகிய போகம் தருவது அஃது என்றார். அத்தவத்தினும் முன்னிலையாயுள்ள தவங்கள் பல உள்ளன. அவற்றையே, சித்தியாருள் புறச்சமயநெறி நின்றும் என்னும் தொடக்கத்துத் திருவிருத்தத்திலே, அறத்துறையடைவுக்கும் அருங்கலைத் தெரிவுக்கும் இடையே அருந்தவங்கள் என்றார் அருணந்தி தேவநாயனார். எல்லாத் தவங்களினும் மேலான சித்தாந்த சைவதவத்தை, அத்திருவிருத்தத்திலே சைவத்திறத்து அடைவர், இதில், சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர், என்று விளக்கியருளினார். இங்கு **அறத்துறை** என்றது பிரமசரியம் முதலிய நான்காசிரமபேதத்தை. அவற்றைச் சார்த்துச் சொல்லிய **தவம்** அருந்தவம் எனப்படினும். அத்தவம் பெரும்பயனுடையன அல்ல. அவ்வுண்மையைத் தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் **தவங்கள்** சாந்திவிரதம் கன்மயோகங்கள் சரித்தோர் ஈனம்இலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர் என்றதால் அறியலாம். இத்தவமும் தவவேள்வியும் சரியையாதிய தவத்திறமும் வெவ்வேறாகும்.

சைவத்தவம் ஆகிய இறப்பில் தவம் பெரும்பயன் உதவுவன. இறப்பில்லாத அத்தவத்துள்ளும் சரியை முதலிய மூன்றும் ஊனம் இலாப்பத முத்திபயப்பன. ஞானநெறியே பரமுத்தி நல்குவது, இவ்வுண்மையை அதன் பிற்பகுதியில்

ஈசன்யோகக் கிரியாசரியையினில் நின்றோர்
ஊனம் இலாமுத்திபதம்பெற்று, உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது அரன்முன் நிலாதுஒழியின் உற்பவித்து
ஞானநெறி அடைந்து அடைவர் சிவனை அங்கு
நாதனே முன்நிற்கில் நணுகுவர் நற்றாளே

சித்தி.சுப.277

என்று விளக்கியவற்றால் உணரலாம். சிவஞானபோத வெண்பாவில், சரியை முதலியன இறப்பில்லாதன எனவே, ஏனைய இறப்புள்ள தவங்கள் எனல்தானே விளங்கும்.

ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலம்இலை தவம் இல்லை

என்றதிற் குறித்த தவம் சரியை முதலிய மூன்றும் ஆம். அவையே அவர்க்கு இல்லை எனின், ஏனைய தவம் எவ்வாறு வேண்டப்படும்? இங்கு இந்நிலையில், **திருஞானசம்பந்தர் வேண்டிய தவம் ஞானநெறியில் அடங்கும் உயரிய தனிப்பெருந் தவமே ஆகும்.** ஆயினும் அதன் அளவை மதிப்பிட வல்லார் எவரும் இலர். திருமுறைகளில் வரும் வேண்டுகோள் முதலியவற்றை அவரவர் தகுதிக்குத் தக்கப் பொருள் கொள்ளல் இக்காலத்தில் சைவர்க்கும் ஏனையோர்க்கும் **சர்வசாதாரணம்** என்னும் ஓர் இழிந்த கருத்துடைய வழக்கில் அடங்குகின்றது. அதனதன் உயர்வறியும் உண்மை நிலையில் இல்லை,

சிறிய பிள்ளையாயிருந்ததால், அவர் பாட்டில் உலகியற் பொருட்காட்சியைக் குறித்த பாடல்கள் நிறைந்துள்ளன என்று எழுதுகின்றவரும் பேசுகின்றவரும் பலர். காரணம் இயற்கைக் காட்சி வருணனை மிகையாம்.

இதுகாறும், திருஞானசம்பந்தர் திருப்பாசுரத்தில் வந்த தவநெறி என்பதன் உட்கோள் வேறு மக்கள் கருத்து வேறு என்பது சிறிது விளக்கப்பட்டது. இவ்வாறே எண்ணிலாத உண்மைகள் உள்ளன.

இன்றைக்கும் சில இடங்களில், இத்தகைய பிழையுணர்ச்சி குடிகொண்டிருத்தல் அறியப்படும். தங்கள் செல்வம் நிலையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற்பெறலாமே என்று முடியும் திருப்பாசுரத்தைப் பாடி இன்புறு-கின்றனர். தாம் அடையும் அழியும் இன்பத்தை உளத்திற்கொண்டு, அதை மேலும் மேலும் தொடர்ந்து பெற வேண்டும் என்ற ஆர்வத்தோடு, தன்னடைந்தார்க்கின்பங்கள் தருவானை என முதலும் பேரின்பப் பாடலைப் பாடிக் களிப்பிக்கின்றனர் அவற்றை ஓதுவோர். திருமுறைகளின் மெய்ப்பொருளுணர்ச்சியைப் பெறச் சைவசித்தாந்த சாத்திரப் பொருளுணர்ச்சி இன்றியமையாது வேண்டுவதாகும். ஆதலின் சைவத்தின் வளர்ச்சியை விரும்பும் நல்லோர், உரிய இடங்களில்

(திருக்கோயில் திருமடங்கள்) சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் போதிக்கும் ஞானநிலையங்களை அமைத்தல் அத்தியாவசியம் ஆகும்.

திருமுறைகளில், ஆண்டாண்டு ஞானமும் யோகமும் குறித்துப் பாடியிருப்பினும், யாண்டும் வெளியிடப் பொலிவன கிரியையையும் சரியையும் குறித்த திருப்பாடல்களே (நிறைந்துள்ளன) ஆகும். அவற்றுள், கிரியைக்குரிய குறிப்புக்கள் சிவபூஜை செய்யும் பெற்றியர் உள்ளத்திற்குத் தெளிவாதல் போல ஏனையர்க்குத் தெளிவாகா. திருஞானசம்பந்தரும் மற்றை நாயன்மாருட் பலரும் இங்குத் திருமேனிதாங்கியிருந்தருளிய கால முழுதும் சிவபூசையை விடாமற் செய்தவராவர். அவர் சிவபூஜையைச் செய்யுங்கால் கொன்றை மலர்களைக் கொண்ட குறிப்பு அவர் திருமுறையிற் பலபல இடங்களில் அம்மலரைக் கூறியவற்றால் விளங்குகின்றது என்பர் சான்றோர்.

திருஞானசம்பந்தர் திருப்பாடல் ஒன்று கொன்றை சூடி நின்றதேவை அன்றி ஒன்றும் நன்று இலோமே என்று உணர்த்து-கின்றது. திருவச்சிறுபாக்கத் திருப்பதிகத்திறுதியில், கைச்சிறுமறியவன் கழல் அலால் பேணாக்கருத்துடை ஞான சம்பந்தன் தமிழ்கொண்டு அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும் அன்புடை அடியவர் அருவினை இலரே என்றுளது. இவற்றால், சிவபிரானடியை அன்றி வேறு யாதும் அவரது சிந்தனைக்கு உரியது அன்று என்பது தெளிவாயிற்று. இவ்விடங்களில், நம் திருநாவலூர்க்கோவின், திருவுள்ளம் தடைப்பட்டு நின்று ஆழ்ந்தது. அதனால், தாம் அருளிய திருத்தொண்டத் தொகையில், வம்பு அறாவரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடி அலால் பேணா எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் என்று திருவாய் மலர்ந்தருளலாயிற்று. ஆயினும், அத்திருத்தொண்டத் தொகைப்பகுதி யுண்மைக்கு ஆதாரமாகத் திருஞானசம்பந்தர் திருவாக்கில் எண்ணிலாதனவாய்த் தோன்றியுள்ளன. அவற்றை யெல்லாம் உணர்ந்தே நம்பியாரூரர். இங்ஙனம் பாடியருளினார்.

திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில், போதகந்தனை உரிசெய்-தோன்புயல் நேர்வரும் பொழில்மிழலை மாநகர் ஆதரஞ்செய்த **அடிகள் பாதம் அல்லால் ஒர்பற்று இலமே** என்பதும் கோயிற்றிருப்பதிகத்தில்,

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலம்மேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழல் அல்லாற் பேணா துள்ளமே.

என்பதும் அக் கொன்றையான் அடி அலால் பேணா எம்பிரான் சம்பந்தன் என்னும் தொகைக்கு விரி (மூலம்) ஆவனவே. இங்கு இவற்றை குறித்ததன் நோக்கம் ஈது-திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய ஆசிரியப் பெருமக்கள், சைவாசார சீடர்க்குத்தம் அருளொழுக்கத்தையும் காட்டி யாட் கொண்டவர்கள் என்பதும், திருமேனி நீங்குங்காறும் சிவபூஜை செய்து வந்தவர்கள் என்பதும், நாள் தோறும் சிவபூஜைக்குக் கொன்றைப்பூவைக் கைக்கொண்டவர்கள் என்பதும் நம் பெரியோர்கள் கொண்டிருந்த உண்மைகளாகும் என்பது.

கொய்யாடு கூவிளங் **கொன்றைமாலை கொண்டு** அடியேன் நான் **இட்டுக்கூறி நின்று** பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே என்னுந் தேவாரத்தால், திருநாவுக்கரசுநாயனார் தம் திருமேனியைத் துறக்கும் திருநாளிலும் கொன்றைமாலை கொண்டு இட்டு வழி பட்டமையும் கூறி - ஸ்தோத்ரம் செய்து,நின்றமையும் வெளிப்படுகின்றன. அவ்வாறே, திருஞான சம்பந்தப் பெருமானாரும், ஏறுகந்தீர் இடுகாட்டெரியாடி வெண்ணீறு கந்தீர், விரித்தேன்கொன்றை நாறுகந்தீர், திருநல்லூர்ப் பெருமணம் வேறுகந்தீர் உமைகூறுகந்தீரே என்னுந்திருப்பாடலால், கொன்றை மலரால் வழிபாடு செய்தமை அறியப்படும்.

அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்துமேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்

என்னும் நிலைமை நம் ஆசாரியப் பெருமக்கள் நால்வர்க்கும் உரியதேயாதலின், தத்தம் செய்பணியின் தலைநின்ற அவர்களது உண்மையில் எவரும் எட்டுணையும் ஐயுறார்.

நம் பெருமக்கள் சிவஞான ரூபவான்களாய்ச் சிவாநந்தமே நுகரும் பெற்றியராய் விளங்கியிருந்தும், சிவபூஜையைத் தலைமையாகக் கொண்ட கிரியையும், சரியையும், யோக ஞானங்களைப்போல அதி

முக்கியமாகக் கொண்டு வற்புறுத்திப் பாடியருளும் உண்மையைத் திருமுறையில் எங்கும் காணலாம்,

முதற்கட்டுரையில் வழிபடற்குரிய மெய்ப்பொருளையும், இதிற்கிரியையையும் குறித்தற்கு எண்ணியே முதலில் சித்தாந்த சைவத்திற் கூறப்பெறும் சிவபரம்பொருளை முதற்றிரு முறையினின்றும் விளக்கினேன். சென்ற திங்கட் கட்டுரையில் ஞானநெறியைச் சுருக்கி, யோக (ஔி) நெறியை விரித்தெழுதினேன். இதில் பலர்க்குப் பயனாக நிலவும் கிரியைக் குறித்து எழுதவேண்டி, அதற்குரிய தக்க அடிப்படையுணர்வு இது காறும் தோற்றலானேன்.

சைவர்கள் சிவபூஜையைச் செய்து வருதல் ஆக்கூர்ப் பெருமான் (சுயம்பு) அருளிய ஆகமநெறியை அணுவளவும் கடவாததாகும். அவன் திருப்பெயர் அளவில் நின்று ஆகம நெறியை உணராமல், சிவபூஜை செய்வது சிவஞானத்தை விளைக்காது. தன்னைத்தான் வழிபட்டுக் காட்டிய முழு முதல்வனும் அம்முதல்வனை வழிபட்டுத் தம் மக்களை வாழ்வித்தருளும் உலகன்னையும் அச்சிவபூஜா மார்க்கம் ஆகம மார்க்கம் என்று காட்டிய உண்மையைத் திருவையாறு முதலிய திருத்தலங்களிலும் திருக்கச்சியேகம்பத்திலும் நிகழும் திருவிழாக்களைக் கண்டு தெளிந்து கொள்ளக் கடவர் நன்மக்கள்.

பெரியபுராணத்தில், திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தில், பின்வருமாறு உளது. காஞ்சிமா நகரத்தில் அம்பிகை. பெருமானை, அருச்சனையால் வழிபட்டு அறம் பலவும் உலகு உய்யவைத்த மேன்மை பூண்ட அப் பெருமையை விளம்பிய பகுதி அது. உலகை ஆளுடையவள், சிவபெருமான், வெள்ளிமால்வரைக் கயிலையில் வீற்றிருந்தருளி அருள் செய்யத் தொழுது, தெளிந்த உண்மைகளை உடைய சிவாகமத்திறன் எல்லாம் உள்ளவாறு தெரியக் கேட்டருளினாள். எண்ணில்லாத ஆகமங்களையும் அருளிய அக்கடவுள் விரும்பும் உண்மையாவது வழிபாடு ஒன்றே என்று உபதேசிக்கக் கேட்டாள் உலகன்னை. கேட்டதை நினைத்ததை தெளிந்து அண்ணலாரை அருச்சனைபுரிய ஆதரித்து நின்றாள், பெருந்தவக் கொழுந்தாகிய பெண்ணின் நல்லாள். அந் நங்கையின் உள் நிறைந்த காதலை நோக்கினான் முந்நோக்கு நாயகன். திருவுள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்தான். திருப்புன்முறுவல் தோன்றப் போகம் ஆர்த்த

பூணணியுறுப்பினாளை நோக்கி, நின்பால் அடுத்தது என்ன என்று வினவினான். அவ்வினாவிற்கு விடையாகக் கூறியது யாது? அதுதான் இக்காலச் சைவர் உள்ளத்தில் ஊன்றி நிற்கத்தக்க மெய்ப்பேருண்மை.

'இங்கு நாத **நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அருச்சனைபுரியப் பொங்குகின்றது என் ஆசை** என்று இறைஞ்சிப்போற்' றற்குரியள் எம்பெருமாட்டியும் எனில், ஏனையோர் சிவபூஜையை சிவாகமவிதிக்கு விரோதமாகச் செய்யத் துணியலாமோ? சிவாகமக்கிரியை எல்லாம் சிவஞானம் கிடைக்கச் செய்வன. 'கிரியை எனமருவும் அவை யாவும் ஞானம் கிடைத்ததற்கு நிமித்தம்' என்பது சிவப்பிரகாசம். கிரியாவிதிப்படி தீட்சை செய்து கொண்டு உபாயச்சரியை முதலிய நான்கும் அநுட்டித்து முடிந்தால் ஞானவிதிப்படி அநுட்டிக்கும் பேற்றை அது கூட்டுவிக்கும் என்பது கருத்து. 'கருணைப்பிரான் மொழிந்த ஆகமவழி பேணிப் போதுநீர்மையில் தொழுதனன் உம்பர்நாயகர் பூசனைக்கு' அவர் தமை உரைத்த 'ஆகமத்து உண்மையே தலைநின்று எம்பிராட்டி அர்ச்சனைபுரிவது மெய்ப்பூசை எய்த ஆகம விதியெலாம் செய்தாள் உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி' என்னும் திருத்தொண்டர் புராணச் செம்மொழிகளை நோக்கின், ஆகமவிதி வழிபாடே ஆண்டவனுக்கு உகப்பாதல் புலப்படும். இதுகாறும் குறித்த உண்மையை உணர்ந்து, அவ்வுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இத்திருப்பாடலை உணர்ந்தால்தான் இதன் உண்மை யுணர்ச்சி உண்டாகும். இன்றேல், தத்தமக்குத் தோன்றியதே மெய்ப்பொருள் எனக் கொள்ளல் நேர்ந்திடும்.

திருஞானசம்பந்தர் திருமுதுகுன்றத்தில் அருளிய திருப்பதிகத்திலே,

எந்தை இவன்என்று இரவிமுதலா இறைஞ்சுவார்
சிந்தையுள்ளே கோயில் ஆகத் திகழ்வானை
மந்திஏறி இனமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே

எனப் போற்றியருளிய உண்மையை இங்கு நோக்குதல் நன்றாகும்.

1. இதில், எந்தை இவன் என்று என்றது எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும், எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்னும் அறிவும், இவரே யாவருக்கும் தந்தைதாய் என்னும் உண்மையும்

உணர்த்திற்று. 2. இரவி முதலா இறைஞ்சுவார் என்றது சூரிய பூஜை முதல் சண்டேசுர பூஜை முடிவாக உள்ள சிவபூஜாக்கிரமத்தை உணர்த்திற்று. இங்கு இரவி என்பது ஆகுபெயராய்ச் சூரிய பூஜையைக் குறித்தது. இறைஞ்சுவார் என்றதாலும் அது பெறப்படும். இரவி முதலா என்றதால் சண்டேசுரர் (பூஜை) முடிவாக என்பது கொள்ளப்படும். சூரிய பூஜாதி சண்டேசுர பூஜாந்தம் ஆகிய சிவபூஜையைக் குறிப்பதே இங்குக் காழிவேந்தர் திருவுள்ளத்தது. 3.இறைஞ்சுவார் சிந்தையுள்ளே கோயிலாகத் திகழ்வான் என்றது சிவஞானமும் சிவமும் சிறந்து பிரகாசம் புரியும் உண்மையை உணர்த்திற்று. சிவசூரிய பூஜை புரிவாரது சிந்தையே சிவஞானத்தை அடையத்தகும். அச்சிவ ஞானம் அடையாமல் சிவத்தை அடைய முடியாது. சிவப்பிரகாசமும் சிவஞானப்பிரகாசமும் உள்ள இடமே திருக்கோயில்.

திருக்கோயில் என்னும் பெயர் வாய்ந்த இத்திங்கள் வெளியீடும் அப்பெருமைக்கு ஓரளவு உரியதாக நிலவுகின்றதை நினைவிற் கொள்க. (இக்கட்டுரை திருக்கோயில் இதழிலிருந்து எடுக்கப்பட்டது.)

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், சிந்தையே கோயில் காயமே கோயில், ஓங்குடலம் திருக்கோயில் அகம் அலாற்கோயில் இல்லை. எல்லாருடைய சிந்தையும் கோயிலாகாது. இறைவனை இமைப்பளவும் எண்ணாதார் சிந்தை எவ்வாறு கோயில் எனப்படும்? படாதன்றோ? அதனால், இறைஞ்சுவார் சிந்தையே கோயில் ஆகக் கொள்ளப்பெற்றது. வஞ்சகர் சிந்தையுட் சேர்விலாதார் ஆதலின்,

நகமெலாம் தேயக்கையால் நாள்மலர் தொழுதுதூவி
முகமெலாம் கண்ணீர்மல்க முன் பணிந்தேத்தும்
தொண்டர்
அகம் அலாற் கோயில் இல்லை

என்று கிளந்து கூறலாயிற்று. கிளவியாவது குறித்தோன் தன் கூற்றம் தெரிந்து மொழிதல் ஆதல் நாயனார்க்கு நன்கு தெரியும். அதனால், கோயில் ஆதற்குரிய சிந்தையை நம் அப்பர் இரண்டரையடியில் அமைத்து விளக்கியருளினார். சிந்தையுள்ளே திகழ்வான் என்றும், சிந்தையே கோயிலாகத் திகழ்வான் என்றும் அந்நுவயம் செய்து கொள்ளல் வேண்டும், 4.திகழ்தல் என்பது தொடர்ச்சியாயிராமல் விட்டுவிட்டு விளங்குதலாகும். சூரியன் முதலிய கோள்களின் ஒளி

நெடுங்காலம் தொடர்ந்திலங்கு சோதி, நட்சத்திரங்கள் காட்சியில் விட்டு விட்டிலங்குவன. திருக்கோவையாரில், உணர்ந்தார்க்குக்குணர்-வரியோன் தில்லைச்சிற்றம்பலத் தொருத்தன் என்றதன் உரையில், ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்குப் பின் உணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன் என்றும் தவத்தானும் தியானத்தானும் எல்லா பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் (தன் இயல்பை) உணர்வரியோன் எனினும் அமையும் என்று உரைத்த பேராசிரிய வசனத்தை அறிந்தால் திகழ்தல் என்றதன் உண்மை இனிது விளங்கும். இறைஞ்சுவார் சிந்தைக்கு இறைவன் குணம் வெளிப்படும். ஆதலின் அதற்கேற்ற பொருளும் அப்பேராசிரிய வசனத்தில் உளது. அஃதாவது - உணர்ந்தார்க்குக் குணந்தான் வெளிப்பட்ட என இயைத்துரைப்பினும் அமையும் என்பது.

மக்கள் சிவபூஜை திருவருள் பெறுவதே அரியதாயிருக்க, அப்பழமலையில் மந்திகளும் சிவபூஜை செய்த உண்மையை இத் திருப்பாடல் உணர்த்திற்று.

திருச்சிற்றம்பலம்

6. சிவகிரியைப் பொருள் விளக்கம்

தமிழில் வினை, தொழில், செயல் மூன்றும் ஒரு பொருளனவாக ஆளப்படுகின்றன. உண்மையில் அவை ஒரு பொருளன அல்ல. அவற்றுள் தொழில் என்பது குறில், நெடில், எச்சில், மிச்சில், வெய்யில் முதலிய வினை முதலுணர்த்துவனவும், தொய்யில், அட்டில், துச்சில் முன்றில் முதலிய நிலமுணர்த்துவனவும், கட்டில் முதலிய செயற்படு பொருளுணர்த்துவனவும் போலாது, எழில் முதலாயினபோலச் செயலுணர்த்துவதாகும். எழில்-எழுதல், தொழில்-தொழுதல் தொழல் என்பதில் அல் ஈறு சார்ந்தது. தொழில் என்பதில் இல் ஈறுசார்ந்தது, இரண்டற்கும் முதல்நிலை ஒன்றே. தொழிலி என்பது இல் ஈற்றிற்குப் பின்னும் இகர வீறு சார்ந்தது. அவர்கள் என்பதில் இரண்டீறு (அர்+கள்) சார்ந்தவாறு காண்க. இன்னோரன்ன பற்பல உள. தொழிலீஇி காற்றுப்போல் வந்த கதழ்விடைக்காரியை (கலித்தொகை. 103) என்றதன் பொருளை ஓர்க. தொழிலை யுடையவள் தொழிலி. இகர வீறு பெண்பாலையுணர்த்திற்று பொன்னி, வள்ளி முதலியன போல. வில்லி, அறிவிலி, தப்பிலி முதலியன ஆண்பாற்கும் உரித்ததாய் வந்த அவ்வீற்றுச் சொற்கள் தொழிலாளி, அறிவாளி என வழக்கில் உள்ளவாறு அறிக. தொழில், செயல், வரல், தரல், செல்லல் முதலியன அல்லீற்றுச் சொற்கள். தொழில் செயல் இரண்டும் ஈற்றால் வேறுபடுவன. தொழல் செயல் அதனால் ஒன்று படுவன. படவே தொழு, செய் என்னும் அவ்விரு முதனிலை வினை என்பது முதனிலையாய் நின்று வினைதல், வினை கை முதலிய சொற்கள் தோன்றுதல் இல்லை. அதனால் தொழில், செயல் போல்வது அன்று. **வினை** என்னுஞ் சொல் எழில், எழல், எழுதல், எழுகை, என்பவை போலத் தொழில், தொழல், தொழுகை செயல் செய்தல் செய்கை என வரல் காண்க. செயில் என்று இல்லை. இலக்கண உணர்விற்றலை சிறந்து விளங்கிப் புகழுடல் பெற்ற அரசஞ் சண்முகனார் தாம் எழுதிய தொல்காப்பியப்பாயிர விருத்தியுள், எழில் முதலியன செயல் உணர்த்தியவற்றை விளக்கினார்.

தோழி என்னும் சொல், தொழுதல் அடியாகத் தோன்றிய பெயரே. தலைவிக்கு மேலானவள் தோழியாக எண்ணப்படாள். தொழில் என்பதன் மருஉவே தோழி. ஒழி என்னும் முதனிலை நீண்டு வழங்கலும் ஈண்டுக்கருதற்பாலது. ஆண்டு அதற்கு விருப்பம்

செயப்படுபொருள். பழமை என்பதன் முதனிலையான பழ் என்பதொடு து சேர்ந்து (பழ்+து=) பண்டு என்று அமைந்தது. அது போலத் தொழ்+து= தொண்டு என்று அமைந்ததும் ஈண்டு எண்ணத்தக்கது. பழ (பழ்) தொழு- (தொழ்) என்று பழைய முதனிலையொடு உகரம் சேர்ந்த வாறும் உணர்க. தொழும்பர் என்பதும் இம் முதனிலையுடையதே. பொதுள்+பு=பொதும்பு. பொதும்பர். தொழ்+உள்+பு = தொழும்பு, தொழும்பர். தொழும்பர் உளக் கோயில்.

தமிழில் வினைச்சொற்களைத் தொழிற் சொற்கள் என்பர். செயற்சொற்கள் என்னார். தொழிலும், வினையும் ஒன்றாயின், வினைமுற்று, தொழின்முற்று, வினையெச்சம், தொழிலெச்சம், என வழங்குதல் இல்லை. வழங்கினும் குற்றமே. ஆசிரியர் தொல்காப்பியர் தொழில் முதனிலை யெட்டும் கூறுஞ் சூத்திரத்தில், வினைவேறு தொழில் வேறு என்று உணர்த்தினார். அவரே தொழினிலை யொட்டும் ஒன்று என்புழி இரண்டனையும் ஒன்றாக் கொண்டார். இது காறும் சுருக்கி யுணர்த்தியவற்றால், அம்மூன்று சொற்களும் ஒன்றல்ல எனல் உறுதியாயிற்று. ஆகவே, அம்மூன்றுள் **கிரியை** என்பது அடங்கும் தமிழ்ச்சொல் யாது என ஆராய்ந் தடக்கப்படும்.

சிவஞானபோத மாபாடியத்தில், காரியங்கள் எல்லாம் ஒருங்கே தோன்றுதற்குக் காரணம் வினையே. வினையே அன்றிப் பிறிதின்மை -யானும் வினையுண்மை துணியப்படும் என்னும் வாக்கியம் உளது.

அவ்வாக்கியத்தில், காரியங்கள் வேறு, அவற்றின்காரணம் ஆகிய வினை வேறு என்பதை விளக்கினார் ஆசிரியர். காரியம் தொழிலும் செயலும். காரணம் வினை. காரண வினை அருவம். காரியம் (தொழில், செயல்) உருவம், உருவமான காரியம் ஆகாயமித்துள்ளும் பிராரத்தத்துள்ளும் அடங்கும். காரணமானவினை சஞ்சிதத்துள் அடங்கும்.

செயலாவன தூலகன்மமான ஆகாமியம். தொழிலாவன சூக்குமகன்மமான பிராரத்தம். ஆகாமியம் மனம் வாக்குக் காயம் மூன்றானும் ஈட்டப்படும். பிராரத்தம் அம் மூன்றானும் நுகரப்படும். ஆகாமியம் பிராரத்தம் இரண்டும் ஐம்புலக் காட்சிக்கும் அதற்கு ஏற்றவாறு புலப்படும் சஞ்சிதம் அந்தக்கரணத்தான் அறியப்படும். அதுதான் வினை என்னும் சொல்லால் சிறப்பாக உணர்த்தப்படும்.

ஏனைய யிரண்டற்கும் வினை என்பது பொதுமையின் உரியதே அன்றிச் சிறப்பின் உரித்தன்று. புத்தி தத்துவத்தின் இடமாக மாயையிற் கிடந்து, சாதி, ஆயுள், போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாகி, முறையே ஜநகம், தாரகம், போக்கியம் என மூவகைத்தாய் அபூர்வம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப்பெயர் உடையது. வினை எனப்படும். அதுவே அருவமாம். ஏனைய பிராரத்தம் ஆவது, ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாலே பலதிறப்பட்டு அநுபவத்தில் உருவாய் விளங்கும். ஆகாமியம் மனத்தால் வாக்கால் ஈட்டப்படுங்கால் வடிவாய் விளங்காது, உருவாய்த் தோன்றும். காயத்தால் ஈட்டப்படுங்கால் மட்டும் வடிவாய்த் தோன்றும்.

வினை - 1.உலகம், 2.வைதிகம். 3. அத்தியான்மிகம். 4.அதிமார்க்கம். 5. மாந்திரம் என ஐவகைப்படும்

1. உலகவினை- கிணறு தோண்டல், குளம் வெட்டல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய **செயல்கள்** பற்றிய **வினை.** நிவிர்த்தி கலை புவன போகங்களை பயப்பிப்பது.

2.வைதிகம்- வேதவேள்வி முதலியவற்றால் உண்டாவதாய்ப் பிரதிட்டாகலையில் அடங்கிய புவன போகங்களைப் பயப்பிப்பது.

3. அத்தியான்மிகம்- வேதமார்க்கத்தாற் செய்யும் பூசை, துறவு முதலியவற்றால் உண்டாவதாய் வித்தியாகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

4. அதிமார்க்கம்- இயமம், நியமம் முதலிய யோகப் பயிற்சியால் உண்டாவதாய்ச் சாந்திகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

5. மாந்திரம்- சுத்தமந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானப்பயிற்சி விசேடங்களால் உண்டாவதாய்ச் சாந்தியதீதகலையில் அடங்கிய புவனபோகங்களைப் பயப்பிப்பது.

இவ்வைந்திலும் **செயல்வேறு வினைவேறு** ஆதலை விளங்க உணர்தல் இதைக் கற்போர் கடனாகும். இவற்றுள் முதல் இரண்டும் அசுத்தபோகம் பயப்பிக்கும் அசுத்த கன்மம். முடிவாம் இரண்டும் சுத்தபோகங்களைப் பயப்பிக்கும் சுத்த கன்மம். இடையது சுத்தாசுத்தபோகம் பயப்பிக்கும் சுத்தா சுத்தகன்மம்.

தொழில் - முயற்சி, செயல் - காரியகன்மம், வினை - மூலகாரணம் என்று கொண்டுரைத்தலும் உண்டு.

சைவசித்தாந்தத்திற் கூறப்படும் சரியை, கிரியை. யோகம், ஞானம் நான்கனுள் அமையும் நால்வேறு கிரியைகளும் சிவவழிபாட்டுட்படுவனவே யாகும். இவை மேற்கூறிய உலகவினை முதலியவற்றுட்படும் சாதாரண காரியங்கள் அல்ல. அவை புண்ணியத்துட் சேர்வன. இவை சிவ புண்ணியத்தனவாம்.

பசுக்களை நோக்கிச் செய்யப்படும் நல்வினைகள் பசு புண்ணியம் ஆம். சிவனையே நோக்கிச் செய்யப்படும் நல்வினைகள் சிவபுண்ணியமாம். வேள்வி முதலிய வைதிக வினை சிவனை நோக்கிய புண்ணியம் சில உடையன எனினும் ஏனையக் கடவுளரோடு ஒப்பவைத்துச் செய்தலால், கருத்து வகையாற் பசுபுண்ணியமேயாம். பசுபதி என்னும் கருத்தாற் செய்தால் சிவபுண்ணியமாகும். அவ்வேள்வி முதலியவற்றையும் சிவபிரானை நோக்கிப் பொது நீக்கிச் செய்தால் பொதுச் சிவபுண்ணியமாகும்.

சிவபுண்ணியம் அபுத்திபூர்வம் புத்தி பூர்வம் என இரு வகைப்படும். அபுத்திபூர்வமும் இருவகைப்படும். 1. வேள்வி முதலியவற்றுட் போலப்பொது நீக்கி அறியுமாறு இன்றிச் சிவபிரானை நோக்கிச் செய்யும் சிவபுண்ணியம். 2. அந் நோக்கமும் இன்றி, மாவலி பழம் பிறப்பிற் செய்ததுபோலச் செய்தவினை யாதானும் ஒருவகையால் சிவபிரானுக்குரிய பணியாய் முடியும் சிவபுண்ணியம்.

பொதுநீக்கிச் செய்யப்படுவதாய சிவபுண்ணியமும் பொது சிறப்பு என்று இரு வகைத்து, 1. பொது- சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆன சிவதீட்சை இன்றி அவ்வாறு செய்வது. 2. சிறப்பு- சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆன சிவதீட்சை உடையராய் அவ்வாறு செய்வது.

இங்குத் திருநாவுக்கரசு நாயனார் பொது நீக்கித் தன்னை நினையவல்லார்க்கு என்றும் பெருந்துணை என்ற உண்மையை உளங் கொள்ளல் வேண்டும்.

இவ்விரு புண்ணியமும் 1. பக்திக் காரணமாக உண்மையாற் செய்வது, 2. புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்வது என்று இருவகைப்படும்.

அச்சிறப்புச் சிவபுண்ணியம் இரண்டும் தனித்தனி 1. சரியை 2.கிரியை 3. யோகம் என மூன்றும், அம்மூன்றால் நிகழும் 4. ஞானம் ஆகிய ஒன்றும் ஆக நந்நான்காகும். அந் நான்கினுள்ளும்

சரியை

1. சரியையிற் சரியை - திருக்கோயில் அலகிடல் முதலாயின
2. சரியையிற் கிரியை - மகேசுரமூர்த்தம் இருபத்தைந்து விநாயகர் முதலோரைப் பூஜித்தல்
3. சரியையில் யோகம் - உருத்திர மூர்த்தியாநம்
4. சரியையில் ஞானம் - அத்தியாநபாவனையில் நிகழும் அநுபவ ஞானம்

கிரியை

1. கிரியையிற் சரியை- பூஜைக்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்ளல்
2. கிரியையிற் கிரியை -புறவழிபாடு ஆகிய ஐவகைத் தூய்மை முதலாச் செய்யும் சிவபூஜை
3. கிரியையில் யோகம் - அகவழிபாடு
4. கிரியையில் ஞானம் - அவ்வழிபாட்டில் நிகழும் அநுபவ ஞானம்

யோகம்

1. யோகத்திற் சரியை - இயமநியமம் முதலிய நான்கு
2. யோகத்திற் கிரியை - ப்ரத்யாகாரம் தாரணை
3. யோகத்தில் யோகம் - தியாநம்
4. யோகத்தில் ஞானம் - சமாதி

ஞானம்

1. ஞானத்தில் சரியை - கேட்டல்
2. ஞானத்தில் கிரியை - சிந்தித்தல்

3. ஞானத்தில் யோகம் - தெளிதல்
4. ஞானத்தில் ஞானம் - நிட்டைகூடல்

இப்பதினாறும் பத்திகாரணமாக நிகழ்வன ஆயின் உண்மைச் சரியை முதலியன ஆம். புகழ் முதலிய உலகப்பயன் காரணமாக நிகழ்வன ஆயின் உபாயச்சரியை முதலியன ஆம்.

இதுகாறும் எழுதியவற்றால், திருஞானசம்பந்தர் முதலிய சைவசமயாச்சாரியர்களால் உணர்த்தப்பட்ட கிரியையின் உண்மைக் கருத்தையும் அக்கிரியைகளின் உயர்வையும் உள்ளவாறு அறிதற்பயன் எய்தும்.

திருஞானசம்பந்தர் சிவபுண்ணியத்தையும் சிவபூஜை முதலிய -வற்றையும் உள்ளடக்கிச் **சிவதன்மம்** என்று அருளினார். அதனை உள்ளவாறு உணர இவ்விளக்கம் இன்றியமையாத ஒன்று. விளக்கம் பெறாமல், அவரவர்க்குத் தோன்றியவாறு திருமுறைத் தொடர்களுக்கும் சொற்களுக்கும் பொருள் கொள்ளல் நலம் பயவாது.

திறங்கொண்ட அடியார்மேல்தீவினைநோய் வாராமே
அறங்கொண்ட சிவதன்மம் உரைத்தபிரான்
அமரும்இடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கொண்ட சடாயென்பான் புள்ளிருக்குவே ளூரே.

இதில் **அறங்கொண்ட சிவதன்மம்** என்பது இதுகாறும் எழுதியவற்றை உணர்ந்தால் தான் இனிது விளங்கும்.

அறமும் தன்மமும் முறையே தமிழ்ச் சொல்லும் வட சொல்லுமாம். இரண்டற்கும் பொருள் வேறுபாடு கூறிற்றிலர் பண்டைப் புலவோர். திருஞானசம்பந்தர் அறங் கொண்ட சிவதன்மம் என்று பாடியருளினார். அவர் திருவுள்ளம் அத் தொடர்ப் பொருளால் விளங்குதல் வேண்டும்.

வந்தமணலால் இலிங்கம்
மண்ணியின்கண் பால் ஆட்டுஞ்
சிந்தைசெய் வோன்தன் கருமம்
தேர்ந்து சிதைப்பான் வரும்அத்

தந்தைதனைச் சாடுதலும்
சண்டீசன் என்றருளிக்
கொந்தணவும் மலர் கொடுத்தான்
கோளிலியெம் பெருமானே

என்பதில், வந்த......கருமம் என்றதும் இவ் விளக்கம் பெற்றால் அன்றி விளங்காது.

அவ்வினைக்கு இவ்வினையாம் என்றதும் உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே என்றதும் ஒரே வினையாகலாம். உய்வினை என்றது உய்யும் வினை என வினைத்தொகையுமாம். உய்வை என்றலும் பொருந்தும். கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் என்றதில் வினை என்பது எதைக் குறிக்கின்றது? சிறப்புச் சிவபுண்ணியத்தை அன்றோ? சிறப்புச் சிவபுண்ணியத்துள் ஒன்றாய்த் திருஞானசம்பந்தர் திருவாயில் வந்த **சிவதன்மம்** என்பது திருக்களிற்றுப் படியாரில்,

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான் அழியும் வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன் -15

என்னும் திருவெண்பாவில் அதன் உயர்ச்சியை உணர்ந்து நல்ல அடையுடன் அமைத் தருளினார் நாம் உய்யவந்ததேவ நாயனார்.

சிவதன்மம் என்றது இங்கே சரியை கிரியை இரண்டனையும் குறித்து நின்றது. இச் சிவதன்மம் மெல்வினை என்றும் வல்வினை என்றும் இருதிறப்படும். சிறுத்தொண்ட நாயனார், சண்டேசுர நாயனார், அரிவாட்டாய நாயனார் முதலிய அரும்பெருந் தொண்டர்க்கு வாய்த்தவை வல்வினை யாகிய சிவதன்மம். சைவாசார சீலரான மெய்த்தொண்டர்க்கு இயல்பவை மெல்வினையாகிய சிவதன்மம் ஏனையோர்க்கு எல்லாம் எல்லா வேளையினும் எங்கும் அறுசுவையனவாகக் கொண்டு மெல்வினையே எய்தும். மெல்வினையை மெல்லும் வினைத் தொகையாகக் கொண்டும் நாம் உய்யவந்த தேவ நாயனார் ஆதலின், நம் வினைத்தொகையை ஒழிக்கத் திருவுளங்கொண்டும் அளவில்லாத ஆன்மாக்களுள் சிற்சிலர் பெறுதற்கு அரிய மானிடப் பிறவி (யுடம்பைப்)

பெற்றும் சரியையோ கிரியையோ வல்வினையோ ஆதாரயோகமோ ஒன்றைச் செய்யாமல், நிராதார யோகத்தையோ செய்யாமல் பெறுதற்கு அரிய சிவப்பேற்றை எய்தாமல் வயிறு புடைக்க உண்டு பூமிக்குச் சுமையாக இருத்தல் என்ன காரணத்தாலோ என்று வினாவியருளினார்.

இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்று செய்தல்
எப்பொருளும் செய்யா தொழிந்திருத்தல் - மெய்ப் பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலாம்
உண்டிருப்பி தென்னோ உரை

உண்டிருத்தல் - மெல்வினை

திருச்சிற்றம்பலம்

7. எப்போதும் திருமேனி தீண்டுவார்

திருஞானசம்பந்தர், சிவகிரியையின் சிறப்பைப் பற்பல திருப்பதிகங்களிற் பலபடியாக வற்புறுத்தி யருள்வதைத் திருமுறைப் பாராயணம் புரிவோர் நன்குணர்வர். திருவாளொளிப்புத்தூர்த் திருப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாடலும் முடிவில், மாமலர் தூவி வழிபடுதல் வேண்டும் என்று குறிக்கின்றது. கிரியைகளுட் சாலச் சிறந்தது மலர் தூவி வழிபடுவதாகும். அதுவே திருவடியைச் சேர்விப்பது என்னும் உண்மையை நாயன்மார் எல்லாரும் தத்தம் வாழ்க்கையிற் காட்டியருளினர்.

1. கடிகமழ் மாமலர் இட்டுக் கறை மிடற்றான் அடி காண்போம்.
2. விரைகமழ் மாமலர் தூவி விரி சடையான் அடி சேர்வோம்.
3. தாள்நெடு மாமலர் இட்டுத் தலைவனதாள் நிழல் சார்வோம்.
4. கார்இடு மாமலர் தூவிக் கறை மிடற்றான் அடி காண்போம்.
5. இனமலர் ஏய்ந்தன தூவி எம்பெருமான் அடி சேர்வோம்.
6. தளை அவிழ் மாமலர் தூவித் தலைவனதாளினை சார்வோம்.
7. தடமலர் ஆயின தூவித் தலைவனதாள் நிழல் சார்வோம்.
8. சயவிரி மாமலர் தூவித் தாழ் சடையான் அடி காண்போம்.
9. விரிமலராயின தூவி விகிர்தன சேவடி சேர்வோம்.
10. தொண்டர்கள் மாமலர் தூவித் தோன்றி நின்றானடி சேர்வோம்

என இவ்வாறு ஒருமுறைக்குப் பத்து முறையாக வற்புறுத்தும் அளவு இன்றியமையாததும், உயரியதும் ஆன சிவகிரியை இச் சிவபூஜையே என்று இத்திருப்பதிகத்தால் அறியலாம்.

இங்குக் காட்டிய திருவடி பத்திலும் மலரிடுதல், மலர் தூவுதல், அம்மலர்கள் ஏய்ந்தனவாதல், இனமாதல், மணம் கமழ்தல், நெடுந்தாள் உடைமை தளை அவிழ்தல், அவற்றை இட்டும் தூவியும் வழிபடுவோர் தொண்டர் ஆதல், அத்தொண்டர்க்கு அவ்வழிபாட்டின் பயனாக வாய்ப்பது திருவடி சேர்தல் ஆகிய பேரின்பப் பேறு, அதுவே பூவார் மலர்கொண்டு அடியார் தொழும் சிவகிரியைக்கு முடிந்த பெரும்பயனாதல் முதலிய பல

உண்மைகள் உணர்த்தப்பட்டன. திருவடிக் காட்சியும், சேர்வும், சார்வும் ஆகிய பயனுக்கு மாமலர் இடுதலும் தூவுதலும் ஆகிய சிவகிரியை ஏதுவாதலை இத்திருப்பதிகம் வற்புறுத்திற்று. இதனை உணர்வோர் சிவ பூஜையை மேற்கொண்டு செய்து இம்மை நலன்களையும், மறுமைப் பயன்களையும், வீட்டின்பத்தையும் பெறக்கடவர். புற வழிபாடு செய்ய இயலாதவர் அகவழிபாடு செய்யப் பழகி இப்பயனை எய்துவதும் ஆகமவிதியில் அடங்குவதாதலின், அவ்வக வழிபாட்டைச் செய்து வருதல் சைவர்க்குத் தலையாய கடனாகும்.

திருவாடானைத் திருப்பதிகத்தில் நம் காழிவேந்தர், போதினார் புனைந்து ஏத்து வார்தமை வாதியாவினை மாயுமே, தோடுலா மலர் தூவிக் கைதொழ வீடும் நுங்கள் வினைகளே தம்கையால் தொழுது ஏத்த வல்லவர் மங்கும் நோய் பிணிமாயுமே, வண்ணமாமலர் தூவிக் கைதொழ எண்ணுவார் இடர் ஏகுமே, கையணி(ம்) மலரால் வணங்கிட வெய்ய வல்வினை வீடுமே, தேன் அணி(ம்) மலரால் வணங்கிட ஊனம் உள்ள ஒழியுமே, நலங்கொள்மாமலர் தூவி நாள்தொறும் வலங்கொள்வார் வினை மாயுமே, கந்த மாமலர் தூவிக் கைதொழும் சிந்தையார் வினை தேயுமே, ஆடானை உறையும் ஈசனை ஏத்தத் தீவினை பறையும் நல்வினை பற்றுமே, தூய மாமலர் தூவிக் கைதொழத் தீய வல்வினை தீருமே என்று சிவ பூஜையால் எய்தும் நலங்களுள் முதன்மையுற்ற வினை நீக்கம் உறுதியாக உணர்த்தப்பட்டது. வினைத்தீர்வே உயிர்கட்கு முதலாகக் கொள்ளத்தக்க குறிக்கோள்.

சிவபூஜையை எப்பொழுதும் செய்யலாம். 'அந்தி அமர் சந்தி பல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்', மறைக்காட்டு இரவும் எல்லியும் பகலும் ஏத்துதல் குணம் எனலாமே இலையார் மலர் கொண்டு எல்லி நண்பகல் நிலையாய் வணங்க நில்லாவினைகளே காலம் பெற மலர் நீரவை தூவித் தொழுது ஏத்தும் ஞாலம்புகழ் அடியார் உடல்உறுநோய் நலியாவே காலை நன்மாமலர் கொண்டடி பரவிக் கைதொழு மாணியைக் கறுத்த வெங்காலன் ஓலமிட முன் உயிரொடுமாள உதைத்தவன் உமையவள் விருப்பன் எம்பெருமான் கையின் மலர்கொண்டு நல காலையொடு மாலை கருதிப் பலவிதம் வையகமெலாம் மருவி நின்று தொழுது ஏத்தும் எழில் வைகாவிலே, இவற்றால் எப்பொழுதும் சிவபூஜை செய்யலாம் எனல் விளங்கிற்று.

துஞ்சலும் துஞ்சல் இலாதபோழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

என்றதால் திருவைந்தெழுத்து வழிபாட்டிற்குக் காலவரையறையே இல்லை என்பது தெளிவாயிற்று.

'நனவினும் கனவினும், நம்பா, உன்னை மனவிலும் வழிபடல் மறவேன்' 'உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின் ஒண்மலரடி-யலால் உரையாது என் நா'.

'நனவிலும் கனவிலும் நாளும் தன் ஒளி நினைவிலும் எனக்குவந்து எய்தும் நின்மலன்' என்பவற்றை எண்ணிப் பார்த்தால், கடவுள் வழிபாட்டிற்குக் காலவரையறையே இல்லை என்பது வெள்ளிடைமலையாம். எப்பொழுதும் வணங்கும் இயல்பு எல்லார்க்கும் வாய்த்தல் அரிது. அதனால், நாற்போது, முப்போது, இருபோது, ஒருபோது என்னும் கால வரையறை கொள்ளலாயினர். நாற்போது ஞானிகளுக்குரிய தாயிற்று. முளையார் மதியம்சூடி என்று 'முப்போது இளையாது ஏத்த இருந்தான் எந்தையூர் வெண்காடே' 'தொடையார் மாமலர் கொண்டு இருபோது உம்மை அடைவாராம் அடிகள் பொடிகள் பூசிப்பல தொண்டர்கள் கூடிப் புலர்காலையே ஒருபோது அடிகள் ஆரத்தொழுது ஏத்த நின்ற (வ்) அழகன் இடம் ... ... மதிமுத்தமே' என்னும் ஒருபொழுது இருபொழுது முப்பொழுது ஆகும் வரையறை அமைந்தது.

திருச்சிற்றம்பலம்

8. சிவபூசையின் பெருமை

சிவபூஜைக்கு வேண்டும் உபகரணங்களைச் சிவாக மங்களுள் விளக்கும் முறைமை, தோத்திர நூல்களுள் அமைதல் இயலாது. ஒரே இடத்தில் எல்லா வுபகரணங்களையும் ஒரு சேர வைத்து முறைமையில் அமையக் கூறுதல் தோத்திரப் பாக்களில் நேராது. அதனால், ஒவ்வொன்றற்கும் தனித் தனி இடம் வகுத்துக் கொண்டு அதனதன் விதி விலக்குகளை வரிசைப்படுத்தி முறையின் வைத்து விளக்கும், சிவாகமங்கட்கும், அவ்வகையில் அமைதற்கியலாத சைவத் திருமுறைகட்கும் பொருளால் மட்டும் ஒற்றுமை காண்பதே தக்கது. அந்நோக்கோடு, சிவபூஜையைக் குறித்து வேண்டப்படும் உப-கரணங்களைத் திருமுறையில் கூறும் அளவை அறிதல் வேண்டும்.

அவ்வாறு அறிதலைக் கொண்டு, திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகளுள் சிவபூஜோபகரணங்களை ஆராய்ந்தால், சிவாகம விதிவிலக்குகளின் வேறுபடாமையும் சிவகிரியைகளைப் புரியும் மெய்யன்பர்க்கு அவரவர் தகைமைக்குத் தகவேண்டும் (சிவ பூஜைக்குரிய) உபகரணங்களும் நன்கு விளங்கும்.

சிவபூஜைக்கு இன்றியமையாது வேண்டித் தேடிச் சேர்த்துக் கொள்ளப்படுவன, இலையும், மலரும், சாந்தமும், புகையும், விளக்கும், நீரும், அமுதும், பாலும், பழமும், உடையவர்க்குச் சார்த்தும் உடையும், பணியும், இண்டை முதலிய விரைகமழ்மாலை முதலியனவும், பால், தயிர் அபிடேகப்பொருள்களும் ஏனைய பிறவும் ஆகும். பிற ஆவன கண்ணாடி, விசிறி, சாமரை, குடை, திருவாசிகை முதலியன. ஞானிகளுக்கு ஞானபூஜை உரியது ஆகும். ஆதலின் அவர்கட்கு (ஊனமாம் உடம்பினில் உறுபிணிகெட எண்ணில்) ஞான மாமலர் கொடு நணுகுதல் நன்மையே என்றருளியதும் பிறவும் அறிக.

1. உயர் பாதமே ஞானம் ஆக நின்று ஏத்தவல்லார் வினை நாசமே 2. உயர் நற்றவம் மெய் கற்று அவை உணர்ந்த அடியார் ஞானம் மிக நின்று தொழநாளும் அருள் செயவல்லநாதன் 3. ஞான நீர் தூவி வாய்ப் பெய்து நின்று ஆட்டுவார் தொண்டரே 4. ஞானமிகு நல்ல மலர் வல்ல வகையால் தோளினொடு கைகுளிரவே தொழுமவர் 5. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர் ஞானவிளக்கினை ஏற்றி நன்புலத்தேனை

வழி திறந்து ஏத்துவார்க்கு இடரான கெடுப்பன அஞ்செழுத்துமே 6.(திருக்கலிக்காமூர்த் திருப்பதிகத்துள்) ஒரு வரையான் மகள் பாகன் றன்னை உணர்வால் தொழுதேத்தத் திருமருவும் சிதை வில்லைச் செம்மைத் தேசு உண்டு அவர்பாலே 7. நுண்ணறிவால் வழிபாடு செய்யுங்கால் உடையான் என்பவையும் பிறவும் ஞான பூஜைக் குரியவை.

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறையில், முறையே திருமங்கலக்குடித் திருப்பதிகத்துள்ளும் திருச்சிக்கற்றிருப் பதி கத்துள்ளும் காணப்படும் வேனல் வேளை விழித்திட்ட வெண்ணணைய்ப் பெருமானடி ஞானமாக (ந்) நினைவார் வினையாயின நையுமே (முன்னர் முதலில் உணர்த்திய) ஊனில் வெண்டலைக் கையுடையான் உயர்பாதமே ஞானமாக நின்று ஏத்தவல்லார் வினைநாசமே என்னும் இரண்டனையும் உற்றுணர்ந்தால், உண்மை நெறி விளக்கம் என்னும் அருள் நூலில் **பரை உயிரில் யான் எனது என்று அற நின்றது அடியாம்** என்னும் **சைவ நெறி யுண்மைச் சிறப்பு** இனிது புலப்படும்.

சடாயு என்னும் சிவபக்தர் சூரிய புத்திரர். ஆதித்தன் மகன் என்ன அகல்ஞாலத்தவரோடும் போதித்த சடாயு என்பான் என்பது திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருப்பதிகத்தினது.

அப்பெரியோன் பத்தியினால் வழிபட்டுப் பலகாலம் தவம் செய்து புத்தி ஒன்றி வைத்து உகந்தான் (பல்லூழி காலம் பயின்றருளை அர்ச்சிக்கின் நல்லறிவு சற்றே நகும்) பொடியாடிக்கு அடிமை செய்த புள் வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவம் ஆகப் போதத்தால் வழிபட்டான் (இஃது இங்குச் சண்டேசுரரைக் குறித்த தன்று) என்று திருஞானசம்பந்தராற் போற்றப் பெற்ற அளவிலாப் பெருமையன் அப்புண்ணியமூர்த்தியாகிய சடாயு யோசனை போய்ப் பூக் கொணர்ந்து அங்கு (திருப்புள்ளிருக்கு வேளூரில்) ஒரு நாளும் ஒழியாமே பூசனை செய்து இனிது இருந்தான் எனின் நம் மனோர்க்கு உற்ற தலையாய கடமை இன்னது என வெளிப்படக் கூறல்வேண்டுமோ? பூஜோப-கரணங்களுள் தலைமையானது பூவே. உலகியலிலே பூவில்லாமல் கல்யாணமா என்கின்றனர். உணர்வியலுக்கே அப்பழமொழி முழுப் பொருளைத் தந்து நிற்பது.

கடிசார்ந்தபோது மலர் ஆன கைக்கொண்டு நல்லபடி சேர்ந்த பால்கொண்டு அங்கு ஆட்டி,... முக்கண் மூர்த்தி அடி சேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டும் அன்றே என்றருளிய திருஞானசம்பந்தர்க்கு மிக்க தொல்லோர் ஆகிய சண்டேசுர நாயனார் பாலும் பூவும் கொண்டு சிவபூஜை செய்த உண்மையை நோக்கின், அவ்வழிபாட்டு முறைத் தொன்மையும் சிறப்பும், பூஜோபகரணப் பொருளும் புலப்படும்,

திருநள்ளாற்றிலே நளன் பூஜோபகரணங்களொடு வழி பட்டான். தன் துன்பம் ஒழிபட்டான். வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி நளன் கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே. என்பது இரண்டாவது திருமுறைக் கண்ணது. அதனால், இக்காலத்து மாக்கள் சனியை முதலாமவனாகவும் நளனை இரண்டாமவனாகவும் திருநள்ளாற்றுப் பிரானை மூன்றா மவனாகவும் கொண்டு வழிபடுகின்றார்கள் போலும்.

சனி வணக்கத்தோடு திரும்பித் திருக்கோயிற்புறத்துச் செல்வோரும் பலர் உளர். சனைச்சரன் எனப்படுமவன் சனீசுரன் ஆனான். (மெல்லச் செல்லுமவன் என்பது பொருள்) ஈசுரபகவானும் ஆனான். சடப்பொருள் சித்துப்பொருள் ஆகவே ஈசுரத்துவம் எய்திற்று. அறியாமையால் விளையும் கெடுதிகட்கு ஓர் எல்லையும் உளதோ?

மார்க்கண்டேய முனிவர் மறைமொழியொடு நதியுறு புனல் புகையொளி முதல் மலரவை கொடு வழிபடுதிறன் மறையவன் உயிர் எனக்காழி மறையவர்க்கிறையவரால் போற்றப் பெற்றார். இதில், பூஜோபகரணங்கள் (பூவும் நீரும் புகையும் விளக்கும் வேத மந்திரங்களும்) குறிக்கப்பட்டன. இங்கே திருக் கோளிலித் திருப்பதிகத்தை நோக்குதல் யாவர்க்கும் கோள்நீக்கம் உளதாக்கும்.

வாலியாரும், கோலமா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி வழிபடப் பொருந்தினார் காவிரி வடகரைத் திருக்குரங்காடு-துறைச் சிவனார். அவ்வாலியார்க்குள்ளதாகிய (மலர், புகை, அளறு (சந்தனம்) கொண்டு சிவனடியைப் போற்றும்) ஆர்வப் பெருக்கமும், அன்பின் உருக்கமும், ஆணவச் சுருக்கமும், அடிநிழல் நெருக்கமும் அளவுட் படாதன. அதனால்தான் கரியசெம்மலாகிய இராமரது சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரம் தாடகையின் வயிரக்குன்றக்கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது புறங்கழன்று போயிற்று. போனாலும், வாலியாரது உடம்பிற் பாய்ந்த போது அவர் வாலிதாய தன் உரத்தைக்

கல்லி ஆர்ப்பொடும் அப்பகழியைப் பறிக்கும் அளவு தாமதித்து நின்றது. அச்சுடுசரம் அவனைத் தவிர்த்துப்போக மாட்டாமையால் அன்றோ, அவன், கரம் இரண்டினும் வாலினும் காலினும் கழற்றிப் பறிப்பான் ஆனான். அவனது மனமும் பெருந்திறலுடையது. உள்ளமும் பெருந்திறலுடையது. பரதாரகமனம் ஆகிய பாவம் செய்த மனம் இராமபாணத்தைத் தன்கண் வரச்செய்தது. சிவபூஜைப் புண்ணியம் செய்த உள்ளம் கொல்ல வந்த அப்பாணத்தை வெளியே செல்ல வொட்டாது தடுத்து நிறுத்தியது. கொல்லவந்த அப்பாணம் அவ்வாலியாரை விரைந்து கொல்லாமையும், உடனே செல்லத் தக்க உள்ளம், கணையைப் பறித்துப் பின்னும் பல சொல்ல நின்று, நெடுநேரம் செல்லாமையும், சிவபூஜை புரிந்தார்பால் எத்தகைய பாணமும் ஏனையோர்பால் இயற்றும் தன் செயலைச் செய்யமாட்டாமையும் ஈங்கு எண்ணத்தக்கன. கம்பர் ஓங்கரும் பெருந்திறல் உடை மனத்தன் உள்ளத்தன் என்றதன் கருத்தை ஆராய்க. இராமபாணம் வெவ்வேறு திறத்தில் ஒவ்வொருவர் உயிரை மாய்த்தது. ஒரே திறத்தில் இல்லை.

இராவணன் சிவபூஜா துரந்தரன் ஆதலின், அவன் உடலிற்புகுந்த அப்பாணம் அவன் தகுதிக்குத் தக்கவாறு நின்ற காலம் எவ்வளவு? புக்கு ஒடிப் புறம்போயிற்று இராகவன்றன் புனித வாளி என்பது அது நின்ற தாமதத்தைக் காட்டாது, தவம் வரம் வலிகளைத் தின்று பருகிப் புறம் போக வேண்டி நின்ற காலம் எவ்வளவு? உயிர் இருக்கும் இடன்நாடி இழைத்தற்கும் மனச் சிறையில் சானகியைக் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக் கருதித் தடவுதற்கும் வேண்டும் காலம் அவனுடலில் அக்கணை நின்றது என்றால், அத்தகைய கொடிய பாணத்தையும் தடுத்து நிறுத்தி அடக்கும் ஆற்றல் சிவபூஜை செய்வார்க்கு எளிதின் அமையும் உண்மை விளங்கும் அன்றோ?

இராவணன், சீதையை நோக்கிக் கூறியவற்றுள்,

இனத்துளார் உலகத்துள்ளார்
இமையவர் முதலினோர் என்
சினத்துளார் யாவர் தீர்ந்தார்
தயரதன் சிறுவன் தன்னைப்
புனத்துளாய் மாலையான்
என்றுவக்கின்ற ஒருவன்புக்குன்

மனத்துளான் எனினும் கொல்வென்
வாழுதி பின்னைமன்னோ

என்றதும் ஒன்று. இதில் சீதைக்குள்ளே இராமன் இருந்தாலும் அஞ்சாமற் கொல்வேன் என்ற தறுகண்மை எதனால் ஆயிற்று? அதுவும் சிவபூஜையின் பயன் அன்றோ? பொருப்பரையன் மடப்பாவையிடப் பாகன் பொருப்பின் கீழ்க்கிடந்து போகாது, இரக்கமுறக் கதறுதலால் இராவணன் தான் எனப் பெயரும் இயம்பி வா என்று, அரக்கனுக்கு முக்கோடியரை கோடி வாணாளும் அளித்துப் போ என்று, உரைப்ப, அரனடி வணங்கி ஆங்கு எழில்சேர் புட்பகத்தின் உவந்து போனான் என்று கூறிற்று உத்தரகாண்டம். சிவப்பிரசாதமாய் பெற்ற அம் முக்கோடியரைக் கோடி வாழ்நாளையுடைய இராவணனை இராம-பாணம் உடனே கொல்லவல்லதாகாமையில் வியப்பில்லை.

அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்தென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற

- திருவுந்தியார்

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே

- திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

9. உள்ளம் உருகில் உடன் ஆவார்

உள்ளம் உருகில் உடன் ஆவார் என்று திருவாய்மூர்ப் பதிகத்தில் அருளினார் திருஞானசம்பந்தர். இதன் விளக்கமே திருவுந்தியாருள்ளும் திருக்களிற்றுப்படியாருள்ளும் இருப்பது. இதனைத் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்துள்ளும் விளக்கமுறக் காணலாம். 'கயிலாய மலையுளானைக் கலந்துருகி நைவார்தம் நெஞ்சின் உள்ளே பானவனைப் பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதே பாழே நான் உழன்றவாறே' என்றது அப்பர் திருவாக்கு. கலந்து உருகிநைதலும், நைவார் நெஞ்சின் உள்ளே சிவாநந்தபானம் பண்ணும் முடிவிலாப் பேறும் ஆகிய இரண்டனை எய்தும் உண்மையை அது தெளிவிக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, திருஞானசம்பந்த சுவாமிகளைப் போலவே அக்கருத்தை எதிர்மறைத் தொடரிலேயே அமைத்து வற்புறுத்தருளினார். அது திருக்கழுமலத் திருப்பதிகத்துள், செழுமலர்க் கொன்றையும் கூவிள மலரும் விரவிய சடைமுடியடிகளை நினைந்திட்டு அழும் மலர்க்கண்ணிணை யடியவர்க்கு அல்லால் அறிவரிதுஅவன் திருவடியிணை யிரண்டும் கழுமல வளநகர்க் கண்டுகொண்டு ஊரன் சடையன்றன் காதலன் பாடிய பத்தும் தொழுமலர் எடுத்தகை அடியவர் தம்மைத் துன்பமும் இடும்பையும் சூழகிலாவே என்பது. அதில் திருப்பதிகத்தைத் தொழும் இயல்பு அடியார்க்கு உண்டு என்பதும் கூறியிருத்தல் காண்க.

இங்கு, தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீந்தல் அரிது என்னும் திருக்குறள் அமைப்பும் திருஞான சம்பந்தரும் சுந்தரப் பெருமாளும் அருளிய திருவாக்கின் அமைப்பும் வாக்கிய ரூபத்தில் ஒன்றுபடுதல் அறியத்தக்கது. இவ்வாறு கூறுதல் உண்மையை வற்புறுத்தும் பொருட்டாகும்.

உள்ளம் உருகுதல் இரண்டு கருத்துடையது. மனம் நெஞ்சம் என்பனவற்றைப் பொருள் வேறுபாடு இன்றி வழங்குதல் உண்டு. உள்ளம் உயிர்க்கே உரிய பெயர். அதையும் மனத்திற்கு உரியதாக வழங்கினார். அதனால், மனவுருக்கம் நெஞ்சுருக்கம் எனப்படுவதும் உயிருருக்கம் எனப்படுவதும் ஒன்றாகக் கருதப்படும் மயக்கத்திற்கு இடம் உண்டாய்விட்டது. உயிருருக்கம் வேறு நெஞ்சுருக்கமும் மனதுருக்கமும்

வேறு உள்ளம் உருகில் உடனாவர் என்றதில் இரண்டனையும் கொள்ளலாம். தவறில்லை. திருக்களிற்றுப் படியாரில் உயிருருக்கம் ஒன்றே கொள்ளற்பாலது. அதுவே திருவுந்தியார்க்கும் உரியது.

உள்ள முதல்அனைத்தும் ஒன்ற ஒருவவரில்
உள்ளம் உருகவந் துன்னுடன் ஆம் தெள்ளி
யுணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருமவன் இல்லாப் பொருள்

திருக்களிறு 14.

இதில் உணர்த்தியது மனத்தின் உருக்கம் அன்று. உயிருருக்கமே அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக என்பரம் அல்லா இன்னருள் தந்தாய் என்று மணிவாசகப் பிரானார் அருளிய திருவாசகம் உணர்த்துகின்றது. இதில் ஆவி கசிந்துருகும் உருக்கமும் ஆக்கை கசிந்துருகும் உருக்கமும் ஆகிய இரண்டும் கூறப்பட்டன. நீர்ப் பானையும் கசிகின்றது. ஆக்கை கசிவதில் வியப்பு உண்டோ? காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்க்குக் கசிதல் விளங்கும். ஆவிக்கும் ஆக்கைக்கும் உருக்கம் பொது. ஆனந்தம் பொது ஆகாது. ஆக்கை ஆனந்தம் அடையும் அறிவு உடையது அன்று. ஆவியே ஆனந்தமடைதற்கு உரியது. திருக்களிற்றுப்படியார் உயிருருக்-கத்தையே தெளிவித்தது. உள்ள முதல் அனைத்தும் ஒருசேர ஒருவுதல் -நீங்குதல், வந்தால், உள்ளம் -உயிர், உருகும். உயிருருக்கம் என்பது ஜீவபோதம் ஒழிதல். அது ஒழிந்தால் எது நிற்கும் சிவபோதம் ஒன்றே நிற்கும். ஜீவபோதம் ஒழியும் அளவும் சிவபோதம் தோன்றாது. சிவபோதம் தோன்றும் ஆயின், ஜீவ போதம் தலைகாட்டாது. உயிருக்கு உயிராகி என்றும் உயிரோடு புணருமவன் சிவன். அச்சிவன் உயிரில் எப்பொழுதும் உள்ளான். உள்ளவனை உயிர் எப்பொழுதும் கண்டு கொண்டிருக்கத் தடை என்ன? சிவனைத் தன்பால் கொண்டிருக்கும் பேறுபெற்றும் சதா சிவதரிசனம் ஏன் உயிர்க்குக் கிடைத்திலது? நான் என்னும் ஜீவபோதம் உள்ள ஒரே காரணத்தால்தான்.

நான்என ஒன்று இல்என்று
தானே எனும் அவரைத்
தன்னடிவைத்து இல்என்று
தாம் ஆம் இறை

என்ற சிவஞானபோத வெண்பாவின் பொருளை உணர்வார்க்கு இத்திருக்களிற்றுப்படியார் வெண்பாப் பொருள் இனிது விளங்கும். அதன் விளக்கமே இது. என்றும் புணருமவன் சிவன். உயிருக்கு உயிர் அவன். அவனைத் தன் உயிர்க்கு உயிராகப் பெற்றிருந்தும் தன் அகம்பாவத்தால் அவனைக் காணாமல் நான்நான் என்று தன்னையே மதித்து அழிகிறது உயிர். அதனால், ஜீவபோதமே முனைத்து வளர்கிறது. சிவபோதம் தோன்றுவது இல்லை. தாங்கள் உளராதல்-ஜீவபாவம். ஜீவபோதம் உளதாயிருத்தல். தெள்ளியுணருமவர், தாம் தற்போதம் கெட்டால் அன்றிச் சிவதரிசனம் பெறமாட்டார். என்றும் புணருமவன் சிவபெருமான். உயிர்க்குயிராயும் அறிவிற்கறிவாயும் இருக்கும் பொருள் என்றும் நீங்காமற் புணரும் பொருள் அன்றோ? அப்பொருள் ஏன் என்றும் புலப்படவில்லை? சிவபோதம் ஒளி போல்வது. ஜீவபோதம் இருள் போன்றது. இருள் இருந்தால் ஒளி தோன்றாது. ஒளி தோன்றினால் இருள் இராது. சிவபோத தோற்றமும் ஜீவபோத நீக்கமும் முறையே ஒளிதோற்றமும் இருள் நீக்கமும் போல்வன. இருள் உள்ளவரை ஒளி இல்லாப் பொருளாகக் கருதப்படும். ஜீவபோதத்தால் சிவத்தை உணரும் அளவும் சிவம் தோன்றாது. தெள்ளியுணருமவர் ஆயினும், அவர் உணர்வான், உணர்வு, உணரப்படும் பொருள், என்னும் திரிபுடி ஞானாவத்தையை உடையவரே. அது நீங்காமல் நீங்கினால் அன்றிச் சிவதரிசனம் எய்தாது. இதை வினாவெண்பா என்னும் அருள் நூல்,

> **காண்பானும் காட்டுவதும் காண்பதும்நீத்து உண்மை**
> **காண்பார்கள் நன்முத்தி காணுர்கள் - காண்பானும்**
> **காட்டுவதும் காண்பதும் தண்கடந்தைச் சம்பந்தன்**
> **வாட்டும்நெறி வாரா தவர்**

என்று உணர்த்திற்று. அத்திரிபுடி ஞானத்தைத் தவிர்த்தாலும் முத்தி சித்திக்காது. அது நீங்காதிருப்பினும் முத்தி சித்திக்காது. அத்திரிபுடி-ஞானத்தை வாட்டும் நெறி சைவ சித்தாந்தத்திற்கே சொந்தம். அதை அந்நெறி நின்றாரே பெறலுரியர். அதனால்தான் உமாபதி தேவநாயனார், தண்கடந்தைச் சம்பந்தன் - மறைஞான சம்பந்ததேவ நாயனார் ஆகிய சந்தானகுரு. நெறியில் வாராதவர் எல்லாரும் திரிபுடிஞானத்தை வாட்டும் நெறி அறியாமல், நீத்துக் காண்பாராய் முத்தி காணா தொழிவர் என்று அறுதியிட்டுக் கூறியருளினார். அவ்வுண்மையின்படி, என்றும் புணருமவனாகிய சிவன், அவனருளே கண்ணாகக் காணும் அறிவைப்

பெறாது, ஜீவபோதத்தால் தெள்ளியுணருமவராகித், தாங்கள் உளராகின்றனர். அவர் உளராகவே அவருள்ளே என்றும் புணருமவனாகிய சிவன் இல்லாப் பொருளாக மறையநின்றுளன். அவன் மாமணிச் சோதியான் ஆக இருந்தும், தாம் உளராகவே அவன் இலனாகின்றான்.

இதுகாறும் விளக்கியது, ஜீவபோதம் அற்றால் அன்றி, சிவபோதம் தோற்றாது. அது தோற்றினால் அன்றி முத்தி சித்திக்காது. என்பதே. இத்தகைய பேருண்மையை விளக்குவதே திருஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்ததாகிய,

> **பண்ணிற் பொலிந்த வீணையர் பதினெண்**
> **கணமும் உணரா நஞ்சு**
> **உண்ணப் பொலிந்த மிடற்றினார்**
> **உள்ளம் உருகில் உடனாவார்**

என்பது. இத்திருவருட் செந்தமிழ்த் தொடரை முன் அமைத்து, நம் உய்யவந்த தேவநாயனார், தாம் அருளிய திருவுந்தியாரில்,

> ***உள்ளம் உருகில் உடன்ஆவர் அல்லது***
> ***தெள்ள அரியர்என்று உந்தீபற***
> ***சிற்பரச் செல்வர்என்று உந்தீபற***

என்று விரித்துப் பாடியருளினார் எனின், திருமுறையின் பொருட் சிறப்பிற்கும் அதனால் நாம் பெறும் அருட்பெருக்கிற்கும் ஓர் எல்லை உண்டோ? அவ்வாறே அத்திருமுறையைக் குறித்து ஏதோ எழுதத்துணிந்த அடியேனது மடமைக்கும் ஓர் எல்லை உண்டோ? இதுவும் அகம்பாவத்தின் விளைவே.

இதுவரையில் அறிந்தவற்றின் சாரம் ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் விளங்கி நின்று முத்தி சித்திக்கப் பெறுதல் வேண்டும் என்பதே ஆகும். ஆதலின் அதைப் பெற உயிர்கள் என்ன செய்தற்கு உரியன? உயிர்கள் சிவபூஜை ஒன்றையே செய்தற்குரியன. உயிர்கள், அறிவால் சிறியனவும் பெரியனவுமாகி வேறுபட்ட அளவுடையன. அவை எல்லாம் சிவ பூஜை செய்யும் உரிமையிற் பொதுவாவனவே ஆகும். மனிதப் பிறவி மட்டும் உரியது என்பது அடாது. பிறவிப் பெருங்கடலின் நீங்கிப் பேரின்பக்கரை ஏறல் வேண்டும் என்னும் ஞானம் எப்பிறவியில் வரினும் அப்பிறவி எல்லாம் அச்சிவபூஜை செய்வதற்கு உரிமை-

யுடையனவேயாகும். ஆதலால் தான், சிவ பூஜைக்கு சாதியோ ஆச்சிரமமோ மற்று யாதுமோ பொருளாவதில்லை. தேவர், முனிவர், மானிடர், அந்தணன், அரசன், வணிகன், வேளாளன், பிரமசாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி எல்லாரும் சிவபூஜை செய்தற்கு உரியராவர். அவ்வண்ணமே, பசு, புலி, யானை, நரி, குரங்கு, கருடன், வலியன், நாரை, ஆமை, பாம்பு, சிலந்தி, நண்டு, எறும்பு முதலியனவும் சிவபூஜை செய்வதற்கு உரியவாயின என்பது பல சரிதங்களால் விளங்கிய பழைய வாய்மையாகும்.

கண்ணப்ப நாயனார் எய்திய முத்திப்பேற்றுக்கு அவர் தோன்றிய வேடசாதி குறுக்கிட்டதோ? சிலந்தி கோச்செங் கண்ணராகக்கூடாது என்று மறியல் செய்தார் எவரேனும் உளரோ? மாவலியாகாதவாறு பூவெலியை யாவர் தடுத்தார்? முசுக்கலையை முசுகுந்த சக்கிரவர்த்தியாகாதவாறு நசுக்க முயன்றார் எவர்? வயதும் சிவபூஜை செய்வதற்குத் தடையாகாது. மார்க்கண்டேயர், துருவன், கிரகபதி, வியாக்கிர பாதர்க்குத் தோன்றிய உபமந்நியமுநிவர், சுகமுனிவர், புலோமருடைய புதல்வி, இத்-திருமுறையாசிரியர் திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவ நாயனார் முதலியோர்க்குப் பாலப்பருவம் சிவ பூஜை செய்வதற்குத்தடை யாயிற்றோ? இளமையிலேயே சிவ பூஜை செய்யப் பட்டினத்தார்க்குத் துணிவுதந்தருளிய சைவா சாரியர்கள் இளைஞர்களேயாவார்கள்.

சிவபூஜை செய்யாமல், சிவபெருமானைக் காண்பது அரிது அரிது அரிது. எக்காலும் அரிது. முக்காலும் சத்தியம். சிவ பூஜையை அகத்தோ, புறத்தோ, கிரியையிலோ யோகத்திலோ ஞானத்திலோ, சாதனம் கொண்டோ கொள்ளாதோ, ஒருபோதோ இருபோதோ முப்போதோ நாற்போதோ சதாகாலமோ எத்திறத்திலேனும் செய்து பேரின்ப வீடு பெறலாம். அதில் சிறிதும் ஐயம் இல்லை. சிவபூஜைசெய்யாதார் வீடுபேறு அடையார் என்பதிலும் சிறிதும் ஐயம் இல்லை.

எய்தலாவது என்றுநின்னை? எம்பிரான் இவ்வஞ்சனேற்கு
உய்தலாவது உன்கண் அன்றி மற்றுஓர் உண்மை
இன்மையில்
பைதலாவது என்று பாதுகாத்து இரங்கு, பாவியேற்கு
ஈதலாது நின்கண் ஒன்றும்வண்ணம் இல்லை ஈசனே

என்பதே அன்றி, போகம்வேண்டி வேண்டிலேன் ஐய நின்ன தல்லதில்லை வேண்டும் நின்கழற்கண் அன்பு என்னும் தொடக்கம் உடைய மணிவாசகங்களும் அவ்வையத்தைத் தவிர்த்து இவ்வையத்தைக் காக்கும் அருண் மொழிகள் ஆகும்.

உலகில், பொருள் பெற்றோர் பலர், சிவபூஜை செய்யாது இருள்வழியில் அலைந்து, அருள் பெறல் இன்றி, வீணே இறந் தொழிகின்றனர். திருவள்ளுவர்,

அற்கா இயல்பிற்றுச் செல்வம், அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்

என்று கழறினார். அக்கழற்றுரையினும் கழற்றிக் கழன்று, உலகில் உண்டுண்டுறங்கி யுறங்கித் திரியும் மூடர்களை நோக்கி,

தன்னது சாயை தனக்கு உதவா துகண்டு
என்னது மாடு (செல்வம்) என்று இருப்பவர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம் உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண்ஒளி கண்டு கொளீரே

என்றார் பெரியார்.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை (சிறுமை) யே உடைய இவ்வுலகில்,

பண்டம் பெய்க்கூரை பழகி விழுதலால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே

ஊரெல்லாம் கூடிஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேர்இட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

அதனால், நாம், நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை (உய்வினை கைவினை) என்று திருஞானசம்பந்தர் அருளிய சிவபூஜையைச் செய்தல் வேண்டும் என்பது நன்கு விளங்கும் அன்றோ?

'புண்ணியம்' என்பது சிவபூஜைக்குரிய தனிச் சிறப்புப் பெயர். 'புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே, நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் (இருவினையையும்) அறுத்து, ஞாலமொடு கீழ்மேலும் நண்ணுன் ஆகி, எண்ணும் இகலோகத்தே முக்திபெறும் இவன்தான்' என்னும் சித்தியில் புத்தியில்லாதவர்க்கு அப்பெயர் எப்படித் தெரியும்? அதனால், திருமந்திரத்திலே உள்ள புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு, நீர்உண்டு அண்ணல் அதுகண்டு அருள் புரியா நிற்கும், எண்ணிலிபாவிகள் எம்மிறை ஈசனை நண்ணறியாமல் நழுவுகின்றாரே என்று திருமூலதேவ நாயனார் திருவாய்மலர்ந்து (நெஞ்சுருகி யழுது வருந்திச்) சொல்லியது சிவபூஜையைக் குறித்து என அறியமாட்டாராயினர். இம்மந்திரம் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கு இறைக்கும் ஏழைகளின் செவிப்படுமா?

இதுவரை எழுதியவற்றைப் படிக்க நேரம் இல்லாதவர்கள் இதைமட்டும் படிப்பதால், முன் எழுதிய அத்தனையும் அறிந்தவராவார்கள்.

சிவபிரானை மனத்தால் எண்ணும் பழக்கம் வாயாற் பொருள்சேர் புகழ்களைச் சொல்லும் பயிற்சியும் சிறந்தனவே. சிறந்தும், அம்மனப் பழக்கமும் நாப்பயிற்சியும் உயிர்க்கு நிலை பெறுதல் இல்லை. ஏன் எனில், நிலைபெறற்கு உரிய வழி நேரே மனத்திற்குத் தருவது அன்று. உடல்வழியாலும் நாவழியாலும் மனத்திற்குத்தரும் வழியே நிலை பெறுவது. இளமையில் எழுத்தைக் கையால் எழுதிப் பழகும் பயிற்சி மனத்தில் அவ்வெழுத்துக்களை எழுமையும் மறவாதவாறு நிலை பெறுத்துகின்றது. அதுதான் இதற்கும் அடிப்படை. காயத்தாலும் வாக்காலும் மனத்திற்குத்தரும் பயிற்சி நிலையானது. வாக்கால் மட்டும் மனத்திற்கு நிலையான பயிற்சி தர முடியாது. எத்தனையோ மக்கள் தோத்திரம் நிறையப் பாடுகின்றார்கள். அவர்கள் உள்ளம், அத்தோத்திரப் பொருளில், கால் விநாடி கூட நிலைத்து நிற்பதில்லை. அப்பொருளின் நிலைபெற்றுக் காயத்தின் வழியாக மனத்திற்குத் தரப்படுவதே அழியாத சாதனம். வாயினாற் கூறி மனத்தினால் நினைக்க வேண்டுவது எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் மனத்திற் கொண்ட பொருள் அம்மனத்தில் நிலையாக இருக்கக் காயத்தால் நிகழ்த்தும் செயலுக்கு உண்டு.

ஒவ்வொருவரும் தம் உயிர்க்கு உயிராக இருக்கும் கடவுளைக் குறித்து சதா தியாநம் புரியலாம். தோத்திரம் செய்யலாம். அத்தியாநமும் தோத்திரமும் காயத்தாற் செய்யும் பூஜையால்தான் உண்மை நிலையைத் தோற்றும். அவ்வுண்மையில் நிலைக்கப்பெறாமல் வெறும் பேச்சும் எண்ணமும் இருப்பதாற் பயன் இல்லை. எண்ணம் பேச்சு எல்லாம் நிலை பெறாதன. அவற்றை நிலைபெறுத்தலும் நம்மால் ஆகாது. காயத்தால் கொடுக்கும் பயிற்சியே மனத்தில் நிலை பெறச் செய்யும். மனத்தில் நிலைக்காதது உயிர்க்குப் பயன் தராது. சிவஞானம் நம்மனத்தில் நிலைத்திருக்க நாம் செய்யத்தக்கது சிவபூஜை ஒன்றே. அதைக் குறித்து வாய்ப்பேச்சும் மனநினைப்பும், காயத்தாற் செய்யும் பூஜையைப் போலப் பயன்படா. நினைப்பும் பேச்சுமாகத்தான் முடியும். செயலாதல் இல்லை. செயல் – கர்மம், தான் பயனை நன்கு தரும். கோடி ரூபாய் தானம் புரியலாம் என்று எண்ணலும் சொல்லலும் என்ன பயன் தரும்? தானம் புரியும் செயல்தானே பயன் தரும்?

நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லால்
கனைகழல் ஈசனைக் காணல் அரிதாம்
கனைகழல் ஈசனைக் காணுற வல்லார்
புனைமலர் நீர் கொண்டு போற்ற வல்லாரே

என்னும் திருமந்திரம் சிவபூஜையைச் செய்தால் அன்றிச் சிவ தரிசனம் கிடைக்காது என்னும் உண்மையைத் தெளி வாக்கியது. அவ்வுண்மையை நம்பிய உத்தமர்கள், சிவ பூஜையைச் செய்து பேரின்பம் உற்றார்கள்.

'மஞ்சனமாலை நிலவிய வானவர் நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம் அஞ்சு அமுதாம் உபசாரம் எட்டெட் டோடும் அஞ்சலியொடும் கலந்து அர்ச்சித்தார்களே' என்பது திருமந்திரம். சிவபூஜை செய்யாத உடம்பு, நிலப்பொறை என்பது முன்னோர் உட்கோள்.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்

'சிவபூஜை' ஒன்றே ஆயினும், இடத்தால் முத்திறப்படும். குருலிங்க ஜங்கமம் என்று. 1. குருபூஜை, 2. சிவலிங்கபூஜை, 3. ஜங்கம - அடியார்,பூஜை மூன்றும் சிவபூஜையே. இம்மூன்றும் திருமுறைகளில் வற்புறுத்தப் பெற்ற வழிபாடுகளாகும்.

சிவபூஜையைச் சுத்தியொடு செய்யக்கடவர். சுத்திகள் 1.பூதசுத்தி, 2.திரவியசுத்தி, 3. இலிங்கசுத்தி, 4. மந்திர சுத்தி - ஆத்மசுத்தி 5. ஸ்தாநசுத்தி என்பன. இவற்றுள் ஆன்மசுத்தி பூதசுத்தியில் அடங்கும். அதனால் ஐந்துசுத்தி என்பர். சுத்தியொடும் தருமமும் சிவபூஜை செய்வார்க்கு இன்றிய மையாதது. தருமம் ஐந்து. அவை 1. திருநீறு அணிதல் 2. திருவடையாள (கண்மணி) மாலை 3. சீருத்திர தியாந பாராயணம் 4. சிவதரிசநம் 5. சிவநைவேதநப்ரசாத போஜநம்.

நறைமலிதரும் அளறொடுமுகை
நகுமலர்புகை மிகுவளர்ஒளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு
நியதமும்வழி படும்அடியவர்
குறைவிலபதம் அணைதர அருள்
குணம்உடை இறைஉறை வனபதி
சிறைபுனல் அமர் சிவபுரம் அது
நினைபவர் செயமகள் தலைவரே

என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்கொடு இக்கட்டுரையை முடிக்கத் திருவருள் துணை புரிந்தது. திருமுறையின் பயன் சிவ பூஜை புரிவதும் பேரின்பம் எய்துவதும் ஆகும்.

திருஞானசம்பந்தர் அருளிய அற்புதப் பதிகங்களைக் குறித்து அடுத்த கட்டுரையில் அறியலாம்

குருவருள்

குருவே சிவம் எனக்கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்தோராய்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே

திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

10. பசுபதி

உயிர்கள் 'பாசம்' என்னும் கட்டுக்குட்பட்டன. அக்கட்டு நீங்குதலே விடுதல் - வீடு ஆகும். கட்டு விடுபட்டால், பெறுவது யாது? இவ் வினாவிற்கு விடை உண்டு. கட்டுப்படுவது துன்பம். கட்டினின்றும் விடுபடுவது துன்பநீக்கம். துன்பம் நீங்கிப் பெறுவது பேறு. அப் பேறு இன்பம். அதனால் அதை இன்பப் பேறு என்பர். துன்பநீக்கம் என்பதை வடமொழி அருள்நூல்கள் துக்க நிவர்த்தி பாசவிமோசனம், மோக்ஷம் முத்தி முதலாகப் பலவாறு கூறுகின்றன. இன்பப் பேறு என்பதைச் சுகப்ராப்தி சிவப்பேறு ஆன்மலாபம் பரமாசாயுச்சியம் - பரமானந்த அவசம், முதலாகப் பலவாறு கூறுகின்றன. பசுபாச விமோக்ஷாய என்பது அதர்வ சிரஉப நிஷத்வசநம். பசுபாச விமோசகம் என்பது பஸ்மஜாபாலோப நிஷத் வசநம். இக் கருத்தைத் திருஞான சம்பந்தர் அருளிய திருப்பாடலில்,

விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனையொண்
டளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்வாம்
களையார்தரு கதிராயிரம் உடையவ்வவ னோடு
முளை மாமதி தவழும்உயர் முதுகுன்றடை வோமே

என்று குறிப்பதிலும் பெற்றாம். இதில் பசுபதி என்றதன் விளக்கம் நன்கு அமைந்துள்ளது. பசுபாச வேதனையாகிய ஒண்டளை தவிர அருள்பதி என்றது பசுபதி என்ற தன் பொருள்விளக்கம் ஆகும். தலைவன் என்றது இங்குப் பதி என்னும் பொருட்டு. பசு, பாசம், பதி என்னும் முப்பொருட் பேறும் ஓரிடத்திற் கிடைத்தது. விளையாத தோர்பரிசில் வரு பசு (த்துவம்.) விளையாததோர் பரிசில் வரு பாசவேதனை என்று கொண்டு, அநாதித்துவம் உணர்த்தும் உண்மையை உணர்தல் வேண்டும். திருவருளால் அன்றி மற்றெவற்றாலும் நீங்காது பாசத்தளை என்பதை 'ஒண்டளை' என்ற சொற்றொடரால் விளக்கியருளினார் நம் காழிவேந்தர். அத் தளையைத் தவிர்ப்பவனே பரத்துவன் என்பார் தவிரஅருள் தலைவன் என்றருளினார். தளை 1.ஆணவம், 2. மாயை, 3. காமியம் என்று மூன்றாதலின், தளையாயின எனப் பன்மையிற் கூறியதுணர்க. பதி, பசு, பாசம் மூன்றும் அநாதியே ஆதலின், விளையாததோர் தன்மை மூன்றற்கும் உரித்தாகும்.

1. புல்லைத்தின்பனவும், 2. பகுத்துணர்வுக் குறைபாடுடையனவும், 3. பிறனால் உழவு முதலிய வேலைகளில் ஏவப்படுவனவும், 4. துயரமுடையனவும், 5. ஏவுவோனால் கட்டப் படுவனவும் ஆனவை பசுக்கள், அவ் வண்ணமே பாசக் கட்டுப் பட்ட பசுக்களாகிய ஜீவர்கள் ஆவார்கள். முற்றுணர்வுக்கும் ஈசன் என்னும் பெயர்க்கும் உரியன் பசுபதி ஆவன் என்று சாமவேத ஜாபால்யோப நிஷதம் கூறுகின்றது. இவ்வுண்மை நம் திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாக்கில்,

பண்ணார் பாடல் ஆடல் அறாத
பசுபதி ஈசன்ஓர்பாகம்
பெண்ணு ணுய வார்சடை யண்ணல்
பேணு பெருந்துறையாரே

1.42.6

என்று விளங்குதல் காண்க.

'ய ஈசேஸ்ய த்விபத சதுஷ்பத்' (எவர் இருகாலும் நாற்காலும் உடைய உயிர்களை ஆள்கின்றாரோ) என்று இருக்கு வேதமும் (10.121.3) 'அஹ மேவ பசூநாம் அதிபதி' (நானே உயிர்களுக்குத் தலைவன்) என்று யஜுர் வேதமும் (6.2.8.2) 'ஏஷாமீசே பசுபதி பசூநாமஞ்சதுஷ் பதா முதசத்விபதாம்' (நாற்காலும் இருகாலும் உடைய உயிர்களைப் பசுபதி ஆள்கின்ருர்) என்று அவ் வேதமும் (3.1.4.3) 'உமாபதயே பசுபதயே நமோநம'. (உமாபதியார்க்கு பசுபதியார்க்கு வணக்கம்) என்று தைத்திரீய ஆரணியகமும் (10.22.40) குறிக்கின்றன. ஸ்வதச்சிவ பசுபதி ஸ்வயம் பசுபதி என அதர்வண பாசுபத ப்ரஹ்மோபநிஷத் கூறிற்று. இதனால் இயல்பான பசுபதியைப் பசுபதி யானவர் எனல் குற்றம். நல்லவர் என்பதற்கும் நல்லவர் ஆனவர் என்பதற்கும் உள்ள வேறுபாடு தெரியாதவர் கூற்று அது.

திருஞானசம்பந்தர் திருவாக்கில் வந்த திருமறைக் காட்டுத் திருப்பதிகத்தில்,

கதிமலி களிறது பிளிறிட
உரிசெய்த அதிகுணன் உயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி
பலகலை யவைமுறை முறைஉணர்

விதிஅறி தருநெறி அமர்முனி
கணனொடு மிகுதவ முயல்தரு
மதிநிபு ணர்கள்வழி படவளர்
மறைவனம் அமர்தரு பரமனே

1.22.5

என்றுள்ள திருப்பாடலில், பசுபதி மிசைவருபசுபதி என்றதன் நயம் உணர்க. உயர்பசுபதி என்று தனிச்சிறப்பும் அவ்வுயர் பசுபதி மிசைவருபசுபதி என்று தலைமைச் சிறப்பும் விளங்கிய வாறறிக. பசுக்களுக்கெல்லாம் பதி திருநந்திதேவர். அவர் மிசைவரும் பசுபதி திருமறைக்காடன் ஆகிய சிவபிரான். திருஞானசம்பந்தர் காலத்தில், திருமறைக்காட்டில் திருநந்தி தேவர் ஆகிய ஊர்திமேல் எழுந்தருளி வருந்திருநாள் மிக்க சிறப்புடையது என உலகுபோற்றிய உண்மையை இத்தொடர் காட்டிற்று.

'இந்திரன்' என்ருல் நாமைகதேசே நாமக்ரஹணமாகத் தேவேந்திரன் என்று பெயர் பெற்றது போல, பதி என்றல் பசுபதி என்றே கொள்ளப்பெறும். 'பசூநாம் பதி பசுபதி' என்னும் வசநம் அதற்கு ஏது. பசுத்துவம் போகாத பசு என்னும் வசநத்தால் அநாதியே பசுத்துவம் ஆகிய ஆணவமலத்தின் தொடக்கால் ஜீவான்மாக்கள் எல்லாம் பசு எனப்படும். ஆணவமலம் பிரதிபந்தம். எதனால்? ஆன்மாவின் முற்றுணர்வைத் தகைதலால். காமியம் அநுபந்தம். ஏன்? ப்ரவாஹா நாதியாக உயிரைப்பற்றிக் கொண்டு, புத்தியை முத்தியில் விருப்பம் தோன்ற விடாமல், உலகபோகத்தில் ப்ரவிர்த்திப்பிக்கும் தன்மையால். மாயை சம்பந்தம். என்னை? ஆத்மாவின் விபுத்துவத்தை மறைத்து ஏகதேசவிர்த்தியாகப் பண்ணுதலால். இவ்வாறு மும்மலமும் ஆன்மாவினொடு கொண்ட சம்யோகம் வேறுபடும்.

மும்மலசம்யோகம், ஆணவத்தைக் குறித்துப் பிரதிபந்த மும், கன்மத்தைக் குறித்து அநுபந்தமும், மாயையைக் குறித்துச் சம்பந்தமும் ஆதல் உயிர்க்கு உளது. சிவசம்பந்தமும் அவ் வந்நிலைக்குத் தக்கவாறு வெவ்வேறு ஆகித் தனித்தனி பெயர் பெறுகின்றது. அதனை இடம் நேர்ந்துழி விளக்குவேன். திருஞானசம்பந்தரைச் சிவசம்பந்தர் எனலாகாது. தாவில் தனிச்சிவ ஞானசம்பந்தராயினார் என்றது திருத்தொண்டர் புராணம். பரமசாயுச்சியத்தைச் சிவசம்பந்தம் என்பது

சம்பிரதாயமும், ஞானாவத்தைகளின் பேதமும், அப் பேதங்க ளுள் ஒன்றற்கொன்று உயர்வுடைமையும், அதன் அதன் உயர் நிலைக்கு ஏற்ற பெயர் உடைமையும் அறியாதார் கூற்றாகும். அவற்றை அறிதலும் பரமுக்தி சாதனமும் பலவற்றுள் ஒன்றாகும்.

'பசுபதி' என்னும் பெயர் பெற்ற ஒருவர், சைவாசார சீலர் ஆக வாழ்வாரேல், அவர்பாலும் மிக்க பக்திகொண்டு ஒழுகுதல் சைவர்க்குக் கடனாகும். அதுகுறித்து, என்னைத்தன் அடியார் குழுவினருள் ஒருவனாகக் கொண்டு ஆண்டருளிய குருநாதர் சொல்லிய நிகழ்ச்சியானது இது :-

அரதத்தாசாரியார்க்குத் தாயார் சிவநிவேதநத்தின் பொருட்டு ஒரு சமயம் பசுபதி என்னும் அந்தணரிடம் சென்று பதக்கு நெல்லைப் பெற்றுக் காய வைத்திருந்தார். தெருவிலே சென்று கொண்டிருந்த ஓர் எருது அதனைத் தின்னத் தொடங்கிற்று. அருகில் இருந்த அரதத்தாசாரியார் அவ்வெருத்தின் பக்கம் அணுகி, நெல்லைக் கூட்டிக் குவித்து, அவ்வெருது தின்னக் கொடுத்துக் கொண்டிருந்தார். கொடுத்தலாவது ஈண்டுத் தின்னத் துணைபுரிதல் ஆகும். அது கண்ட தாயார் சினம் உற்று, அதனைக் கோலால் அடித்து ஓட்டினார். ஆசாரியார் இந்நிகழ்ச்சிக்கு உள்ளம் நொந்திருக்கும் அளவில் பசுபதி என்னும் அந்தணர் வந்தார். வந்து கேட்டு, என் பொருளில் சிவபெருமான் ஊர்தியின் வாயுறையாகப் பயன் பட்ட அளவு போக, மிச்சம் என் புண்ணியமாக நிவேதநப் பொருளா கட்டும். இருதிறத்தும் என் நெல் செந்நெல் ஆயிற்று என்று சொல்லி இன்பம் எய்தினார். அப்பொழுதே, சிவலிங்கபூபதியால் ஏவப்பட்ட ஆட்கள் வந்து ஆசாரியாரைத் தொழுது, சுவாமி, தங்கட்கு ராஜா நானூறு அரிசி மூட்டைகள் தந்தார். அவற்றுள் இருநூறு மூட்டைகளை வெள்ளம் அடித்துக் கொண்டு போயிற்று. மிச்சம் இருநூறு மூட்டைகளை இங்கே கொண்டு வந்து சேர்த்தோம். அவற்றை ஏற்று அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். ஆசாரியர் அதைக்கேட்டுத் தாயாரிடத்தில், அம்மா நீர், பசுபதியின் பொருள் பசுக்களுக்கு உதவலாகாது என்று அவற்றுள் ஒன்றான பசுவை அடித்துத் துரத்தினீர். அத்தீவினையின் பயன் ஆற்றில் இருநூறு மூட்டை நெல் அடித்துக்கொண்டு போகலாயிற்று. அறிந்தீரோ என்றார். உண்மையுணர்ந்த தாயார் மிக வருந்தினார். பசுபதியின் பொருள் பதக்குநெல்லே. அது சிவ புண்ணியத்திற்கு உதவியாவதால் வந்த பெருக்கம் எவ்வளவு?

அளவிடலாமோ? பசுபதி என்பவர் சிறப்பும், ஆசாரியார் அருட்செல்வச் சிறப்பும் இந்நிகழ்ச்சியால் விளங்கும் அன்றே?

அப் பசுபதிக்கு எல்லாம் உறைவிடம் ஆயினும் பசுக்களே அவ்வுறைவிடங்களுட் சாலச் சிறப்புடையது. பசுக்கள் என்றதால் உண்டாகும் விளக்கம் ஆக்கள் என்னின் உண்டாகாது. பசு என்றது ஆவைமட்டும் உணர்த்துவது அன்று. பந்தபாசம் உடைய உயிர்களை எல்லாம் உயர்த்தும் தகுதி உடையது. ஆவைப் பசு என்னும் வழக்கும் உயிர்களைப் பசு என்னும் வழக்கும் ஒன்ருகா, பசுபதி என்பது ஆக்களின் தலைமையுடையது என்று பொருள் பயவாது. உயிர்களின் தலைவன் என்ற பொருள் பயப்பது. அதனால், உயிர்கட்குத் தலைவன் உயிர்களில் ஒன்ருக விளங்குவான். உயிர்சித்து. அத் தலைவனும் சித்து. உயிர் அல்லாத பொருள்கள் எல்லாம் அசித்தே. சித்து அசித்தினிடத்திற் பிரகாசிப்பது சித்தினிடத்திலுள்ள பிரகாசத்தினும் குறைவுடையதே. அக்குறைவுடைய பிரகாசமும் சிவசித்தாகிய பதியைத் தன்பால் விளக்கப்பெற்ற ஜீவசித்து ஒன்றற்கே தெரியும். அசித்துக்குத் தெரியாது, நிறைந்த பிரகாசம் ஜீவன்முக்தர்க்கே தெரியும். எல்லாம் சிவமயம் எங்கும் சிவமயம் என்னும் உண்மை சதசத்தும் சிதசத்தும் ஆகிய பசுக்களுக்குத் தெரியாது. ஜீவன்முக்தர்க்கே நன்கு தெரியும். முத்தான்மா பசு எனப்படான்.

தேஹமும் அஞ்ஞானமும் கண்டம், அவற்றைஉடைய ஜீவன் அகண்டம் எனப்படாது. கண்டப் பொருளே. அத்தகைய உடலும் மலமும் ஒழியும்போது கண்டத்துவம் நீங்கும். அகண்டத்துவம் ஓங்கும். அவ்விரண்டு கண்டப் பொருளுக்கு உட்பட்டிருக்கும் அளவும் அந்த ஜீவன் ஆணவத்தால் மறைக்கப்பட்ட பசுவேயாகும். அவ்வுடலும் அஞ்ஞானமும் சிவ ஞானத்தால் நீங்குங் காலத்தில் ஆணவமல சக்தி கெடும். ஆன்மா சிவத்துவம் உறும்.

பாச சம்பந்தத்தால் ஆன்மா பசு பாசம் நீங்கப் பெற்றது பசு அன்று. ஆன்மா முத்தான்மா அது பசு எனப்படாது. கலைகளொடு கூடாதவனாய்ச் சுவாநுபவ ஞானக்கிரியைகளால் விளங்குபவன் வியாபகன் சின்மயன் சூக்குமன் சிவமே என்னத் தனக்கு மேலாக ஒரு தலைவன் இல்லாதவனாக இருக்கிருன்.

பசு எனும் ஜீவன் எப்பொழுது பொன்வண்ணனாயும் வினை முதலாயும் புருடனாயும் தோற்றங்கள் எல்லாவற்றிற்கும் காரணனாயும் உள்ள இறைவனைக் காண்கிருனோ அப்பொழுது ஜீவன் முக்தனாகிய அவன், புண்ணிய பாவங்களை நீங்கியவனாயும், களங்கம் இல்லாதவனாயும், சிவத்துவத்தை அடையும் நிலைமையனாயும் அமைவன். இது சிவசமவாதம் அன்று.

விரிபுண் ணியபா வாதிகளை மேவு ருது நிவர்த்திசெய்து
பிரியமிகுந்த பரசிவஅ பேத சொரூப மேயான
அரிய சாமியத்தைஇனி தடைவான்

என்று, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், முண்டகோபநிஷத் வாக்கியக் கருத்தினை மொழிபெயர்த்துப் பாடினார்.

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்
காணுகண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணுள் அடைக்கும் வழியது வாமே

திருமந்திரம் - 588

திருச்சிற்றம்பலம்

11. செல்வன் கழலேத்தும் செல்வம்

சிவபெருமானை வழிபடுதல் ஒன்றே உயிர்கள் விளக்கம் பெறுதற்கு ஏது. வேறு யாதும் விளக்கம் தராது. இங்கு விளக்கம் என்றதன் உண்மை விளக்கம் உணர்ச்சிக்கு வரல் வேண்டும். விளங்குதல்-விளக்கம். துளங்குதல்-துளக்கம், களங்குதல்-களக்கம், இளகுதல்-இளக்கம் முதலிய பல தமிழ்ச் சொல்லமைதியை நோக்கின் அதன் பிறப்பியல் தெரியும். விளங்குந் தொழில் ஈங்கு உயிர்களது. விளக்குந் தொழில் திருவருளது. தன் விளக்கத்தைத்தானே காணும் பெருமை இவ்விளக்கத்திற்கு மட்டும் உரியது. சிவவியாபகம் பிறரால் காணும் அளவுடைய தன்று. சிவவியாபகம் எங்கும் உள்ளது, குறைவில்லாதது. அக் குறைவில்லா நிறைவை அடைவதே உயிர்கட்கு வீடு பேறு. அவ் வீடுபேறு ஒன்றே உயிர்கள் கட்டு நீங்கிப் பெறும் விளக்கம். அவ் விளக்கத்தைத் திருஞான சம்பந்தர் (கெழு முதல்) என்னும் சொல்லாற் குறித்தருளினார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் நச்சினார்க்கினி யருரையில், 'குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே' (303. சூ) என்றதன் விளக்கம் இங்கு நோக்கத் தக்கது.

கெழு (என்பது) கேழ் என நீடலும் ஈறு கெடுதலும் 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண் இயல் பின்றே' (395. சூ) என்பதனாற் கொள்க. இக் 'கெழு' பொருத்தத்தை உணர்த்து தலும் 'கெழுமுதல்' என்னும் வழக்கிற்கு முதனிலையாய் நிற்றலும் 'கூறிய கிளவி' என்பதனாற் கொள்க. மேல் வருஞ் சூத்திரங்கட்கும் இவ்வாறே பொருள் கூறுக என்று அவ்வுரையாசிரியர் எழுதினார்.

அவர் உரைத்தவாறு 'கெழுமுதல்' என்பது பொருந்தும் என்ற பொருள் தருதல் ஈண்டும் பொருத்தமே. உயிர்கட்குப் பொருந்தும் இடம் இரண்டு. ஒன்று பதி; மற்றொன்று பாசம். பாசப் பொருத்தம் அநாதி சம்பந்தம் ஆக உயிர்கட்கு உளது. அச்சம்பந்தம் நீங்கப் பாற்றிப் பதிசம்பந்தமாகிய ஏனையதே உயிர்கட்கு வேண்டுவதாகும். ஆதலின், அநாதி சம்பந்தமான பாசப்பொருத்தத்தை அநாதி முதல்வன் திருவருளால் அகற்றிக் கொண்டு, அப்பதிப் பொருத்தத்தை அடைவது, அறியாமையின் நீங்கி அறிவினை நிறைவு செய்வித்துக் கொள்ளும் ஆன்மாக்களுக்குத் தலையாய கடனாம் என்பது பெறப்பட்டது.

நிறத்தைக் குறித்து கெழு என்னும் உரிச்சொல், அந்நிறத்தின் இயல்பாகிய விளக்கத்தைக் குறித்து வரும் வழக்கம் முற்றும் பொருந்துவதே.

கூடுபூம் பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தே என் றெழுவார்கள்
கேட தொன்றிலர் ஆகிநல் லுலகினிற்
கெழுவுவர் புகழாலே

2. 109. 6

என்று ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பாட்டில் 1. விளக்கம் என்ற பொருளும், 2. அதற்கு ஏது புகழ் என்னும் உண்மையும், 3.அவ்விளக்கத்திற்கு நல்லுலகு ஆம் இடமும், 4. அந்நல்லுலகில் உறும் புகழ் விளக்கம் ஆகிய பேறு, கேடு நீக்கத்தால் முழுமை அடைகின்றது என்னும் நிகழ்வும் உணர்த்தியவாறு நோக்கி ஆழ்ந்து அறியற்பாலனவாம். 'துஞ்சல் இல்லா நல்ல வுலகம் பெறுவாரே' சிவ வழி பாட்டால் அன்றி இந்நல்லுலகப் புகழ் விளக்கமும் கேடு நீக்கமும் எய்துவது இல்லை என்னும் உண்மையைச் சைவராவார் அனைவரும் அறிந்து கொண்டு, தவருது, சிவவழிபாடு புரியக்கடவர். நல்லுலகு என்றதற்கு சிவலோகம் என்று கொண்டு, அதற்கேற்பப் பொருளுரைத்தலே சாலவும் நன்ருகும். ஆயினும் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றற்கும் வழிபாட்டுப் பயன் பொதுவாதலின்,யாதும் கொள்ளலாம். தவறன்று. பாடியருளிய ஆசிரியரும், 'ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை ஆதரித் திசை கற்று வல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே'. என்று பாடியதுணர்க.

இத்துணையும் விரித் தெழுதியதனின் கருத்து யாது? உயிர்க்கு முழு விளக்கம் சிவ வழிபாட்டால் தான் உண்டாகும், வேறு எப்பொருளை வழிபட்டாலும் அம் முழுவிளக்கம் உண்டாகாது என்பதே. இதைச் சைவ சித்தந்தம் இனிது உணர்த்துகின்றது. சிவ வழிபாடு ஒன்றே முழு விளக்கம் ஆகிய சிவ வியாபகத்தை அடைவித்து, உயிர்களுக்குக் குறைவிலா நிறைவாகிய பேரின்ப வாழ்வை நல்குகின்றது. இவ் வுண்மையைத் திருஞான சம்பந்தர் அருளிய திருமுறையில் எத்தனையோ இடங்களிற் காணலாம். ஆயினும்,

கோடுதேன் சொரி குன்றிடைப் பூகமும்
கூந்தலின் குலைவாரி
ஓடும் நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைநம்பன்
வாடினார்தலை யிற்பலி கொள்பவன்
வானவர் மகிழ்தேத்துங்
கேடிலா மணியைத் தொழல் அல்லது
கெழுமுதல் அறியோமே

2. 49. 3

என்னும் திருப்பாட்டால் அறியும் வகை, நம் பாசம் முற்றும் மறியும் வகையாய் உள்ளத்தில் ஊன்றும் நிலையில் உள்ளது. ஈரெதிர் மறைகளால் இவ்வுண்மையை நிலைநாட்டும் ஆசிரியரது திரு-வுள்ளத்தை அறிந்து, இதையே அவர் நமக்கு இட்ட அருளாணையாகக் கொண்டு, நாம் சிவ வழிபாட்டை இடை விடாமற் போற்றிவரக் கடவோம். ஈங்குக் கெழு முதல் என்றதைத் தொடர் மொழியாகக் கொண்டு (கெழு+முதல்) விளங்குகின்ற முதற்பொருள் என்றுரைத்தார் ஒருவர். அவர்க்குத் தோன்றிய அப்பொருள் ஒரு நல்ல ஏதுவைக் கொண்டுளது. ‘தொண்டர் தொழுகையே வாழ்க்கையின் மூலதனம்’ ‘கேடிலா மணியைத் தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே’ என்று (அரும் பொருளகராதி பக்கம் 75-6) மயிலைகிழார் இளமுருகனார் எழுதியது கண்டு இன்புறுக.

ஈண்டுக் ‘கெழு முதல்’ என்பது சிவத்தினது வியாபகத் தளவு ஆன்மா எய்திப் பேரின்பந் துய்க்கும் பெறலரும் பேற்றைக் குறித்து நிற்கின்றது. அல்லது அறியோம் என்று இரண்டெதிர் மறையால் வற்புறுத்தப்படும் ஒருடன் பாட்டுப் பொருள் அப்பொருளே ஆகும். அதுவே சித்தம் சிவமாக்கும் உரிய உண்மை நிலை. அந்நிலையைத் தான் ஒன்றியிருத்தல் என்பர் நம் அருட்சான்றோர். சிவத்தினது வியாபகத்தளவு கட்டு நீங்கிய ஆன்மா சிவஞானத்தால் அநுபவ முடையவர்க்கே நன்கு விளங்குவதாகும்.

ஏகனாகியிறைபணி நிற்றல் என்பது ஒன்றியிருத்தலே ஆகும். சுத்த நிலையில் ஒன்றியிருத்தல் இது. சகலநிலையில் ஒன்றியிருத்தல்

இதனின் வேறு. அதைக் கொள்ளல் இங்குப் பொருந்தாது. 'ஒன்றி-யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லை' என்ற திருவடிக்கு, நினைத்தற் கருவியாகிய மனத் தொடர்பு உண்மையால், அச்சகல நிலையில் ஒன்றி யிருத்தலைக் கொள்ளல் வேண்டும். அத்துவிதத்தை உணர்த்தும் பொருட்டாகிய ஒன்றியிருத்தல் அதனின் வேறு. அதைக் கெழு முதல் என்றுர் அல்லர். மனத்தொடர்பால் நினைத்தல் வியாபகம் ஆகாது அவ்வியாபகமே. கருவி கரணங்களைக் கடந்து, அவனருளே கண்ணுகக் கொண்டு, அவ்வருளாய் நின்று அவ்வருளைத் திருமேனி-யாகக் கொண்டு பரிபூரண நிறைவாகி நிலவும் பர சிவத்தோடு ஒன்றி நிற்றலே பூரண வியாபகம். அவ்வுயரிய நிலையில் ஒன்றி நிற்றல் என்பது வேறற நிற்றல் இரண்டாய் நில்லாமை.

... ... பரங்குன்றைச்
சித்தமது ஒன்றிச் செய்கழல் உன்னிச் சிவனென்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே
1. 3. 8

என்றருளிய திருஞான சம்பந்தர் திருவுள்ளத்தில், சித்தம் என்றதன் பொருள் அந்தக் கரணத்துள் ஒன்முன சித்தமே அன்றி ஆன்மாவும் ஆகும். அகவழி பாட்டிலும் புறவழி பாட்டிலும் சிவபரஞ்சுடரை வேறு எதிர் முகம் ஆகவைத்துப் போற்றுதல் உண்டன்றே? அப்பொழுது அந்தக் கரணங்களின் ஒற்றுமை வேண்டும். அதைக் குறித்தது சித்தம தென்றல். அப் பொழுது அக் கரணத்தின் வியாபாரத்திற்குச் செயப்படு பொருள் வேண்டும். அதுவே செய்கழல். அக் கழலைச் சித்தம் உன்னும்; உன்னலே வியாபாரம். அக்கழலையுடையது சிவம். அச் சிவமாகப் பரங்குன்றை நினைத்தலும் ஏத்திவரின் வினைகழலும். இங்கே, சித்தம் -ஆன்மா, ஒன்றிலாவது சிவ வியாபகத்தளவு நிற்றல் ஆகும். செய்கழலுன்னலாவது அவ்வாறு நிற்பதற்கு இன்றியமையாமல் தலையானது எனப் பெறும் அருள் நிலை.

திருச்சிற்றம்பலம்

12. எனதுரை தனதுரை

ஞானநிலை சிவனென்று நித்தலும் ஏத்தலாவது எக்காலமும் சிவமாகவே இருக்கும் பேரின்ப வாழ்வு, இங்குச் செல்லாமல் மயங்கலாகாது. நிலையறிந்து பொருள் உண்மையை உணர்தல் வேண்டும். வழிபாடு என்பது எத்தனையோ பகுதியுடையது. அத்துவித நிலையோ முழு வழிபாடு ஆகும். அதையும் 'ஏத்தல்', 'உன்னல்' முதலிய சொற்களின் ஆட்சி கொண்டு உணர்வதுண்டு. 'துகளறு போதம்' என்னும் தலையான அருள் நூலில், பரை அதீதத்தின் பின் நிகழும் சுத்தாவத்தைக்கு முன் வரையில் தொல்லைமலம் இருக்கும் எல்லை உணர்த்தப்பட்டமையை அறியவல்லார்க்கே, இங்கே 'தொல்வினை நில்லாவே' என்றதன் கருத்து விளங்கும். ஏனையோர் அங்கேயும் வினையுண்டோ என்பர். வினை முதலியன எங்கும் ஒரே நிலையும் ஒரே அளவும் ஒரே இயல்பும் உடையன அல்ல. ஞானிகள் வினைக்கும் அஞ்ஞானிகள் வினைக்கும் எல்லாவற்றுலும் தார தம்மியம் உண்டு. 'சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவம் ஆகும் அத்தன்' அருளால் அன்றி, அத் தார தம்மியத்தை யுணர்தல் கூடாது.

சிவபிரானை அறிவது எத்தனையோ திறத்தில் அமைந் துள்ளது. அத்திறம் எல்லாவற்றுள்ளும் மெய்கண்டார் உணர்த்திய தொன்றே எளியதும் தெளிவுற்றதும் உண்மையதும் உரியதும் உயிர்க்கு முற்றும் உகந்ததும் ஆகும். அத்திறத்தை அறியத் திருமுறைகள் பெருந்துணை புரிகின்றன. புரிந்தாலும் மெய் கண்ட நூல்களை உணர்ந்து திருமுறைகளை ஓதுவார்க்கு உளதாகும் விளக்கம், இலக்கியம் இலக்கணம் சாத்திரம் பயிலாமல் திருமுறை மட்டும் பாராயணம் புரிவார்க்கு எய்துவதில்லை. சிலர் விபரீத ஞானமும் எய்தி உலகர்க்கும் விளக்கம் புரியத் துணிந்து, சாத்திரங்களையும் தோத்திரங்களையும் கெடுக்கின்றனர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு :-

திருந்திய கருணை யாலே திருவுரு மூன்ற தாகி
யிருந்திடும் ஈசர் நோக்கும் இயைந்திடும் உயிர்கள் நோக்கும்
தெரிந்த புண்ணியமும் சற்றும் தெரிந்திடா தனவும் ஒத்து
விரிந்திட அறிவு மேலாய் விளங்கின்நற் பாதம் ஆமே.

என்பது ஸ்ரீ அம்பலவாணர் அருளிய தசகாரியத்துள் உள்ள திரு-விருத்தம். அவர் சிவமாகத் திகழும் சிவஞான மூர்த்தி என்பது சைவ சித்தாந்த ஞானச் செல்வர்க்கெல்லாம் இனிது விளங்கும். இதன் உரையாக வெளி வந்ததில், 'தெரிந்த புண்ணியமும் - எல்லாம் சிவன் செயல் என்று அறியப்பட்டு இயற்றப்பெறும் பதி புண்ணியமும், சற்றும் தெரிந்திடாதனவும் - சிறிதும் அறியப் படாத அதுவதுவாய் அழுந்தி நிற்கும் நிலையும்' என்று பதவுரை எழுதியதும் அல்லாமல் பின் விளக்கமும் எழுதியிருக்கிறது. **தெரிந்த புண்ணியம் :-** புண்ணியம் மேல் நோக்குவிக்கும் என்றபடி மேல்நிலை எய்துவிப்பனவாகிய புண்ணியங்கள் இருவகையில், சிவனலாது பெருமான் இலன் என்று தெளிந்து அவனை உன்னிச் செயப்படுவதாகிய பதிபுண்ணியமே ஆராய்ந்தெடுக்கப்பட்ட புண்ணியம். சற்றும் தெரிந்திடா - தனவும் - இறைவனையே இடைவிடாது பற்றிச் சிவோகம் பாவனையில் இருப்பதால், ஒளியுட் புதைந்த கண் அவ்வொளியையும் அறியாது ஒளியாயிருத்தல் போலவும், அமுதக் கடலில் அழுந்திய உயிர் அமுதமாய் அதனையும் அறியாதது போலவும் சிறிதும் அறியப் படாதனவும் என்பது அவ்விளக்கம். அப்பொருளும் விளக்கமும், அறியாமையின் அடிப்படையில் எழுந்த காரணத்தால் முற்றும் குற்றம் உற்றது.

சிவ புண்ணியம் அபுத்தி பூர்வம் புத்தி பூர்வம் என்று இரு வகைப்படும். அவற்றுள், 1. அபுத்தி பூர்வம் வேள்வி முதலிய வற்றுட் போலப் பொது நீக்கி அறியுமாறு இன்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதூஉம் 2. அந் நோக்கமும் இன்றி மாவலி முன்னைப் பிறப்பிற் செய்தது போலச் செய்தவினை யாதானும் ஓர் ஆற்றல் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதூஉம் என இரு வகைப்படும்.

பொது நீக்கிச் செயப்படுவதாகிய சிவ புண்ணியமும் 1. பொது 2.சிறப்பு என்று இருவகைத்து. அவற்றுள் 1. பொது ஆவது :- சிவ புண்ணியத்திற்கு அங்கம் ஆகிய சிவ தீக்கை இன்றி அவ்வாறு செய்வது. 2. சிறப்பு ஆவது சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆகிய சிவதீக்கை உடையராய் அவ்வாறு செய்வது. இவ்விரண்டும் 1. பக்தி காரணம் ஆக உண்மையாற் செய்வதும் 2.புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்வதும் என வெவ்வேறு இருவகைப்படும்.

அச்சிறப்புச் சிவபுண்ணியம் இரண்டும் சரியையும் கிரியையும் யோகமும் அம்மூன்ருல் நிகழும் ஞானமும் என ஒவ்வொன்று நந்நான்காம். அந்நான்கனுள்ளும் சரியையிற் சரியை முதலாக முப்பத்திரண்டு வகைப்பட்டு இன்னும் பல திறப்பட்டு விரியும்.

இப்புண்ணியங்களுள் நோக்கிச் செய்வன புத்தி பூர்வம், நோக்கம் இன்றிச் செய்வன அபுத்தி பூர்வம். புத்தி பூர்வ வினையை அறிந்து செய்வினை என்பர். அபுத்தி பூர்வவினையை அறியாது செய்வினை என்பர். இலகுவினை என்பது புண்ணியத்தையே. அதிலும் சிவ-புண்ணியத்தையே. புத்தி பூர்வ புண்ணியத்தைத் தெரிந்த புண்ணியம் என்றும், அபுத்தி பூர்வ புண்ணியத்தைச் சற்றும் தெரிந்திடாதன என்றும் அத்தசகாரியத்தின் திருவிருத்தம் உணர்த்துகின்றது. அங்குச் சத்திநி பாதத்திற்கு வேண்டும் இருவினை யொப்பு உணர்த்தப்பட்டது. அஃது அதை உணராமல் எழுதிய உரையாதல் யாவர்க்கும் புலனாகும். அவ்வுரையில் தொட்ட இடங்களில் எல்லாம் பிழை தவிர வேறு இல்லை. அப்பதிப்பில், பக்கம் 81-82 இல் உள்ள பகுதியால் இவ்வுண்மையை அவர் உணர்ந்து எழுதி யிருக்கலாம். திருவருள் துணை செய்யவில்லை.

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையுந் நினைவாகி
அறிநீர்மையில் எய்தும் அவர்க்கு அறியும் அறிவருளிக்
குறிநீர்மையர் குணம் ஆர்தரு மணம் ஆர்தரு குன்றில்
எறிநீர் வயல் புடைசூழ்தரும் இடும்பாவனம் இதுவே.

1.88.6

என்று காழிவேந்தர் அருளிய திருப்பாடல் இங்கு ஊன்றி நோக்குதல் எத்தனையோ நலம் பயக்கும்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதாரத்தின் காரணம், அவர்க்குத் தந்தையாரான சிவபாத விருதயர் புரிந்த தவமே ஆகும். சேக்கிழார் சுவாமிகள்,

மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய் மிகுந்தே
ஆதியரு மறைவழக்கம் அருகி அரனடியார் பால்
பூதிசாதன விளக்கம் போற்றல் பெருதொழியக்கண்
டேதமில் சீர்ச் சிவபாத இருதயர்தாம் இடருழந்தார்

என்று 1. சிவபாத விருதயரது இடருழப்பையும், 2. அதற்கு ஏதுவான ஆதியருமறை வழக்கத்தின் அருகிய நிலையும் சிவ னடியார்பால் திருநீறு முதலிய சாதன விளக்கம் போற்றப் பெருது தவிர்த்தமையும் கண்டு அறிந்து வாய்மையையும் கூறினார்கள். அதை அடுத்து,

மனையறத்தில் இன்பம்உறும்
மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே
ஆடிய சேவடிக் கமலம்
நினைவுறமுன் பரசமயம்
நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப்
பெறப்போற்றும் தவம்புரிந்தார்

என்றருளியதில், பரசமய நிராகரணம் - சிவமதஸ்தாபனம் அவதாரத்தின் குறிக்கோள் என்பதை உணர்த்தினார்.

இவ்வுண்மையைத் திருஞான சம்பந்தர் திருமுறையே வெளிப்படுத்துகின்றது.

அலையாரும் புனல்துறந்த அமணர் குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத் தோற்றம் காட்டி
ஆட்கொண்டீர்
தலையான நால்வேதம் தரித்தார் வாழும் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே கோயிலாக நின்றீரே
2. 55. 11

என்பது, திருஞான சம்பந்தரைச் சிவபிரான் தோற்றியாட் கொண்டதன் காரணத்தைப் (பெரிய புராணத்தின் வாய்மை நிலைநாட்டிய வண்ணம்) உணர்த்துமாறுணர்க. திருஞான சம்பந்தர் திருப்புனிதவாய் மலர்ந்தழுததன் விளைவாகிய நலங்களைப் புராணத் தொடக்கத்தே உணர்த்தும் இடத்தில், அருமறை வழக்கம் அருகிய வாற்ருல், வேதநெறி தழைத் தோங்க என்றும், அரனடியார்பால் பூதிசாதன விளக்கம் போற்றல் பெரு தொழிந்ததால், மிகுசைவத் துறை விளங்க என்றும் ஆசிரியர் அருளினார்.

கஞ்சியைக் குலவு கையரே
கலக்கம்ஆர் அமணர் கையரே
அஞ்சவாதில் அருள் செய்யநீ
அணைந்திடும் பரிசு செய்யநீ
வஞ்சனே வரவும் வல்லையே
மதித்தெனைச் சிறிதும் வல்லையே
வெஞ்ச லின்றி வருவித்தா கா
மிழலை சேரும் விறல் வித்தகா

என்ற திருவீழி மிழலைத் திரு வியமகப் பதிகத்திலும், தம்மைச் சிவபிரான் வருவித்த காரணத்தை உணர்த்தியருளினார்.

குண்டிகை பீலிதட்டோடு நின்று
கோசரம் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள் க
ஞ்சியூணரும் வாய் மடிய

என்று நம் ஆசாரியரது திருவவதாரத்தின் பின் விளைவு கூறி, அதுகுறித்தே, தமக்குத் தோடுடைய செவியனும் விடையேறித் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடி பூசி உள்ளங்கவர் கள்வனுமாகிய பிரமாபுரத்துக் கள்வன், அக் காட்சி தந்தருளிய உண்மையை, இண்டை புனைந்து எருதேறி வந்து என் எழில் கவர்ந்தார் என அவ்விளைவு நிகழ்த்தத் தமக்கு ஆற்றலைத் தந்த திருவருளின் தொடக்கத்தை யுணர்த்தும் வாயிலாக வெளிப் படுத்தியவாறறிக.

திருஞான சம்பந்தர் தம் முற் பிறப்புக்களிலும் திருவடி மறவாத சிறப்புடையவர் என்பது, அவர் திருவாக்கில் வெளியான உண்மையை உலகோர் அனைவரும் உணர்வர். 'பல்லூழி காலம் பயின்று அரனை அர்ச்சிக்கின் நல்லறிவு சற்றே நகும்' என்றதால், சற்றுய நல்லறிவிற்கே பல்லூழி காலம் சிவார்ச்சனை செய்திருக்க வேண்டும் ஆயின், பரிபூரண சிவஞான சம்பந்தர்க்குள்ள சிவார்ச்சனைப் பயிற்சி ஒரு பிறப்பினது மட்டும் எனல் ஒல்லுமோ?

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாத என்னை மையல் செய்திம்
மண்ணின்மேல்

பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே

2. 27. 5

என்று திருத்துருத்தியில் வந்தருளியபோது கருத்திருத்தின மையை வெளியிட்டவாறு காண்க.

மறவி என் சிந்தனை மாற்றி' 2. 67.8

என்றதும் உணர்தற்குரியது.

சிவபாத விருதயர் தவத்திற்காக ஒரு பிள்ளையைத் தரத் திருவுளங்கொண்ட சிவபிரான், திருவடியை மறக்குமாறிலாத திருவருட்செல்வரைப் பிறப்பித்தருளியது சைவசமயத்தின் தனிப்பெரு வாய்ப்பன்றோ? அவர்க்குப் பிணிப்படும் உடம்பு விட்டு இறக்குமாறு காட்டினானாம் இறைவன். அவர் திருவடிகளைத் தொழக் கிடைத்த நம்மனோர் யாவர்க்கும், இனிப் பிறிதொரு பிறவி யில்லாதவாறு, கடைசி பிறப்பாக அதுவே வீடுபெறுஞ் சிறப்பாக அமையும் பேறு எய்தியது.

தேவரையும் மால் அயன் முதற் றிருவின் மிக் கோர்
யாவரையும் வேறடிமையா உடைய எம்மான்

என்ற உண்மைக்குத் தக அத் திருவின் மிக்கோர்க் கெல்லாம் மிக மேலானவராகிய திருஞானசம்பந்தரை வேறு - வீறு, உற ஆண்டருளிய உண்மையைத் திருவெங்குருவைக் குறித்துப் பாடியருளிய திருப்பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாடல் உணர்த் திற்று. நல்லூர்ப் பெருமணம் வேறுகந்தீர் என்றதும் இங்கு அறியத்தக்கது.

ஆறுடைச் சடையெம் அடிகளைக் காண
அரியொடு பிரமனும் அளப்பதற்காகிச்
சேறிடைத் திகழ்வானத் திடைப்புக்கும்
செலவறத் தவித்தனர் எழிலுடைத்திகழ்வெண்
ணீறுடைக் கோல மேனியர் நெற்றிக்கண்ணினர்
விண்ணவர் கைதொழு தேத்த
வேறெமை யாள விரும்பிய விகிர்தா
வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே

ஆட்கொண்டருளிய வண்ணம் தேவி வாயிலாகத் தானே அவ்வுண்மையை, அவர் திருவாக்கில் எத்தனையோ இடங்களிற் காணலாம்.

... நன்றதுணர்வீர் உரைமினோ
ஆதிஎமை ஆளுடைய அரிவை யொடு
பிரிவிலி அமர்ந்த பதிதான்
சாதிமணி தெண்டிரை கொணர்ந்து
வயல்புகளறிகொள் சண்பை நகரே.

அவளே ஆளினும், அவள் தனித்து வந்தாளல் இயலாது அவளை அவிநாபாவமாக உடைய சிவபெருமான் உடன் போந்தே அக்காழி வேந்தரை ஆண்டருளினான் ஆதலின்,

சிற்றிடைப் பேரல்குற் றிருந்திழை யவளொடும்
பெற்றனை யாளுடைப் பெருந்தகை இருந்ததே

எனச் சிறப்பாட்சியையும் பல இடத்தில் குறித்தருளிய வாய்மையை ஆண்டாண்டு நோக்கி வாழ்க. அதனை அத்திருப் பாடலின் முன்னரே, ஆண்ட காரணத்தோடும் உணர்த்திய வாறு காண்க.

போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லா தெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்

புறவம்பதியாக எனையாளுடையான்
இமையோர் ஏத்த உமையோடிருந்தானே

திருஞானசம்பந்தர் முதலிய ஆசாரியார் மூவரும் முதன் முதல் ஆக அருளிய திருப்பதிகம் மூன்றும் 'குருவருள்' விளைவு என்னும் வாய்மையை அகத்தியர் தேவாரத்திரட்டில் அறிந்திருப்பவர் அனைவரும். குருவருளும் வெண்ணீறெழுத் தைந்தும் என்ற தொடக்கத்துத் திருவெண்பாவும் தோடுகூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும் என்றதும், அதனை உணர்த்துகின்றன. அவ்வாறே அகச்சான்றுக நம் காழி வள்ளல் வழங்கியதோரிடத்திலும் குருவருள் விளங்குவதை உணரலாம்.

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே
மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே

மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே
வேதம தோதுவர் மேன்மதியே
பொய்த்தலை யோடுறு மத்தமதே
புரிசடை வைத்தது மத்தமதே
வித்தகர் ஆகிய வெங்குருவே விரும்பி
யமர்ந்தனர் வெங்குருவே

3. 113. 4

என்ற திருவியமகப் பதிகத்தில் எங்குருவே வெங்குருவில் விரும்பியமர்ந்தனர் என்றருளியதுணர்க.

திருஞானசம்பந்தர் இளமைத் திருக்கோலத்தையை என்றும் உடையார். பதினாறாண்டே உலகில் நிலவினார் என்னும் வாய்மைக்கு எத்தனையோ ஆதாரங்கள் உள

'பானல் வாய் ஒரு பாலன்' 'பாலன் ஆய தொன்டு செய்து பண்டும் இன்றும் உன்னையே நீலமாய் கண்டனே நின்னை அன்றி நித்தலும் சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே", என்னும் திருவாலவாய்த் திருப்பதிகங்களில் தமது என்றும் குன்றா இளமைத் திருவுருவை உணர்த்தியருளினார்.

முலைத்தட மூழ்கிய போகங்களும்
மற்று எவையும் எல்லாம்
விலைத்து அலையாவணம் கொண்டு
எமையாண்ட விரி சடையீர்

என்றதிலும் இளமை நிலை விளக்கப்பட்டது.

திருஞான சம்பந்தர் அருளிய திருமுறைகள் 'சிவனைத் தொழுது உலகில் இழுகு மலர் அழியும் வகை கழுவும் உரை' ஆயும், 'கழுமல நகர்ப் பழுதில் இறை எழுதும் மொழி' ஆயும், உள்ள திருவருளுருவின என்னும் உண்மை உயர்வைச் சைவர்கள் உளங்கொண்டு நாள்தோறும் பாராயணம் புரிதல் வேண்டும். இது திருவருளைப் பெற்றுய்வதற்குரிய ஞான சாதனமாகும். சாதகமும் ஆகும்.

திருஞான சம்பந்தர் திருவாய்மொழிகள் எல்லாம் இறைவன் திருவருள் மொழிகளே அல்லாது வேறு இல்லை.

மலையினார் பருப்பதம் துருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக்காடு நெய்த்தானம்
நிலையினான் எனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன் 1. 76. 1

என்னும் உண்மையால் இவர் திருவாக்கெல்லாம் சிவனருள் வாக்கே என்பது நன்கு விளங்கும். அதனால்தான் பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்றுக அமைந்தன. சிவ வாக்கு முதற் கண்ணும் அடியார் வாக்கு அடுத்தும் அமைந்தவாறறிக. 'எனதுரை தனதுரை' என்றதைத் தெளிய,

'நிலை கூடினவர்கள் பிராரத்த தேகத்துடன் கூடி நின்று போகம் புசிப்பதில்லையோ என்னில், மறைப்பாகிய பாசபந்தம் நீங்கின ஞானவான்கள், தத்துவ சுத்திப்பட்டு ஆன்ம போதம் ஜீவியாமல் ஒடுங்கிப் போனதால், (ஒடுக்கம் என்றதன் உண்மைப் பொருளை இங்குணர்க) அவர்களுக்கு முன்போல் அருந்தி இருந்த தேகத்துக்கு உள்ள புசிப்பும் தொழிலும் அவர்கள் பொருந்தார்கள். உயிர் பொருந்தாத உடலோ சடம் ஆதலின், அதுவும் தொழிற்படாது. கர்த்தாவே பொருந்தி நின்று புசிப்பார். எதனாலே என்னில், பெத்தான் மாக்களுக்குப் பாசமோசனம் பண்ணுவதற்குக் கருவியாக இந்தத் தேகமும் போகமும் கர்த்தாவே தன்னுடையனவாய் ஒத்துக் கொண்டு ஜீவன் முக்தி பர முக்தி என்று இரண்டு படுத்தாமல் இந்த முக்தியே பர முக்தியாய்க் கூட்டுவிக்கும்'. என்னும் பழைய சான்றேர் வாக்கையும் அறிதல் சிறந்தது.

பாவினிற் சீவன் முக்தி பகருமேற்பரம முக்தி
மேவுவன்..... இரண்டும் ஒன்றே.

பண்டார சாத்திரம்.

தண்டறு சிந்தை தபோதனர் தாம் மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டது என்று
எண்டிசை நந்தி எடுத் துரைத்தானே

திருமந்திரம் - 1858

திருச்சிற்றம்பலம்

13. திருவைந்தெழுத்து

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருமுறைகளில், நாவினுக்கு அருங்கலம் ஆகிய நமச்சிவாய மந்திரத்தில் அரும்பேருண்மைகளைத் தெளிவுறுத்திய திருப் பதிகங்களும் திருப்பாடல்களும் பல உள்ளன. அவற்றுள் இரண்டு திருப்பதிகங்கள் திருவைந்தெழுத்தின் உண்மைச் சிறப்புக்களை விளக்கும் பொருளவாய் அருளப் பெற்றிருக்கின்றன. அவை 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' என வழங்கப் பெறுகின்றன.

அகத்தியர் தேவாரத்திரட்டிலும், அவை திருவைந்தெழுத்து என்னும் பிரிவிற் கொள்ளப்பெற்றன. 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்னும் வழக்கு நோக்கத்தக்கது. 'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்' என முதலுந் திருப்பதிகம் பஞ்சாக்கரத் திருப்பதிகம் என வழங்கப் பெறும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி யோதுவார்' எனத் தொடங்கும் திருப்பதிகம் நமச்சிவாயத் திருப்பதிகம் எனப் போற்றப்பெறும். காரணம்:- முன்னதில் ஒவ்வொரு திருப்பாடலின் முடிவினும் 'அஞ்செழுத்துமே' என்றுள்ளதால் பஞ்சாக்கரம் எனத் தொகையைக் குறித்து வழங்கலாயிற்று. அஞ்செழுத்து என்பது தமிழ். பஞ்சாக்கரம் - பஞ்சாக்ஷரம், என்பது வடசொற்றிரிபு. நமச்சிவாயத் திருப்பதிகத்தின் முடிவில் 'நமச்சிவாயவே' என்றிருத்தலால் அதுவே பெயராயிற்று. திருவைந்தெழுத்துள் பலவகை உண்டு. அவற்றுள் முதலாவதும், (தூலம் என்னும்) பருமை குறித்ததும் ஆவது. 'நமசிவாய' என நிற்கும் திருமந்திரம் ஆகும்.

திருவைந்தெழுத்தின் வகையை உணர்த்தும் தன்மைய தாக வரும்.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும்
- நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே
பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

என்னும் 'கொடிப் பாட்டு' ஐந்தனுள் ஒன்று இங்குக் குறிக் கொளத் தக்கது. இஃது உமாபதிசிவம் அருளியது.

இவ்வகையுள் 'அஞ்செழுத்து' என்பது பலருக்குந்தெரியும். இதில் [1]எட்டு, [2]ஆறு, [3]நான்கு, [4]பிஞ்சு, [5]பெரிது, [6]பேசுவது, [7]பேசாதது என்னும் ஏழுவகையையும் சிலரே விளக்கம் உற உணர்வர். சிலர் இவ்வகையெல்லாம் பின்னோர் வகுத்துக் கொண்டன என்பர்.

1. எட்டெழுத்து :- விசேடதீட்சை பெறுவார்க்கு உபதேசிக்கப் பெறும் திருவைந்தெழுத்து. அதில் முதலிற் பிரணவம். அடுத்துச் சிவபீசத்தில், இயைந்த ஆகாரமும் மகரமெய்யும், பின்னர் அதனொடியைந்த ஔகாரமும் மகரமெய்யும், முடிவில் சிவமுதலாகிய திருவைந்தெழுத்தும் அமைந்த மந்திரமே எட்டெழுத்து எனப்பெறும். இஃது உபதேசத்திற் பெறுவது.

2. ஆறெழுத்து :- இதற் பிரணவமும் தூலபஞ்சாக்கரமும் இருக்கும்.

3. நாலெழுத்து :- இஃது அறிவான் முதிர்ந்து பக்குவம் உற்றோர்க்கு உபதேசிக்கப் பெறுவது. இதிற் பிரணவமும் நம நீங்கிய மூன்றும் மட்டும் இருக்கும். இஃது அதிரகசிய மந்திரம். இது பின் உள்ள தேவாரப் பாடலிற் காண்க.

4. பிஞ்செழுத்து :- வகாரமாகிய பராசக்தியைக் குறித்த சிவஞான மந்திரம்.

5. பெருவெழுத்து :- சிகாரமாகிய சிவமந்திரம்.

6. பேசும் எழுத்து :- பிஞ்செழுத்துக்கே பிறிதொரு பெயர். இது தக்கதொரு காரணங் குறித்துண்டாயது.

7. பேசா எழுத்து :- இது பேரெழுத்தின் மற்றொரு பெயர். இது தனக்குமேல் ஒரு தலைமைப் பெருமை இல்லாமையைக் குறித்துண்டாயது. முன்னது (பிஞ்சு) பிரவிருத்திக்கும் நிவிருத்திக்கும் தொடக்கம் ஆதலின், 'பிஞ்சு' எனவும், பின்னது (பேரெழுத்து) பிரவிருத்தி நிவிருத்தி ஆகும் இரண்டன் நிலைக்கும் முடிவாய்த் தனிப்பெரும் பொருளாயுள்ளதாதலின் 'பேரெழுத்து' எனவும். குறிக்கப் பெற்றன.

ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை அகத்தினி அஞ்சும் அடங்கிடும்

ஓமயம் உற்றதும் உள்ளொளி பெற்றதும்
நாமயம் அற்றதும் நாம்அறி யோமே.

திரு. மந். 2156

என்பது திருமந்திரம். இதில் 'ஊமை எழுத்து' என்றது பேசா எழுத்து. அடுத்துள்ள 'பேசும் எழுத்து' கொடிப்பாட்டில் அறிவிக்கப் பெற்றதே.

இக்கட்டுரையில், 'பெறுதல்' என்னும் தொழிலால் குறித்து வருதலைக் குறிக்கொள்ளல் வேண்டும். அஃறிணை, விருப்பம் இன்மை, துன்பம் முதலியவற்றைக் குறித்து, 'படுதல்' என்னும் தொழிற்சொல் ஆளப்படும். மாடு ஓட்டப் பெற்றது எனலாகாது. ஓட்டப்பட்டது என்றே கூறுதல் வேண்டும். திருப் பெருந்துறையில் மாணிக்கவாசகர் திருத்தேரை இழுத்தமையால் மாடு வீடுபெற்றது என்றெழுதத்தக்க இடத்தில் மாடு விடுபட்டது எனலாகாது. ஊர்ப்பட்டியில் அடைபட்ட மாடு அப்பட்டியினின்றும் விடுபட்டது என்பது ஆண்டைக்குத் தகும். நாய் அடிபெற்றது எனில், அடிபடுவதில் நாய்க்கு விருப்பு உண்டு எனப்படும். அடிபட்டது என்பதே அதில் அதற்கு விருப்பம் இன்மையைக் காட்டும். துன்பப்பட்டது என்னும் தொடர் துன்பம் பெற்றது என நிற்கின், பொருந்துமோ? இங்கும் இம்முறையில் அறிக. திருமந்திரத்தைக் காட்டிலும் உயர்வுடையது யாதுளது? அதனைப் படுதற்றொழிலால் குறித்தல் பெரும்பாதகம் விளைக்கும்.

ஆமை என்றது யகாரம் ஆகிய ஆன்மாவைக் குறித்த உருவகம். 'அஞ்சும்' அடங்கிடும் என்றது பொறியடக்கத்தை யுணர்த்தி நின்று, பாச நீக்கத்தைக் குறிப்பது.

'ஓமயம் உற்றது' என்றது பரநாத ரூபமான நிலையைக் குறிப்பது.

'உள்ளொளி பெற்றதும்' என்றது உயிரது சிவஞானப் பேற்றைக் குறிப்பது.

'காலம் அற்றதும்' என்றது நகாரம் மகாரம் யகாரம் ஆகிய மூன்றும் அற்ற உண்மையைக் குறிப்பது. நகாரம் அறுதல் திரோதான சக்தி நீக்கம். மகாரம் அறுதல் மலசக்தி நீக்கம். யகாரம் அறுதல் தற்போதம் தவிர்தல். நகாரம் எதுகை நோக்கி நீண்டது. 'நாமயம்' என்பதன் ஈற்றில் உள்ள மகரமெய் 'சிவாயம்' 'சிவம்' 'நமசிவாயம்' என்பவற்றிற் போல நின்றது. 'தவம்' என்றதிற் போல நின்றவாறு வேறு.

இங்கே, 'ஊமையெழுத்தொடு பேசும் எழுத்துறில் ஆமை-யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்' என்றுபதேசித்த திருமந்திரம், திருஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கிற் பல இடங்களில் வந்துள்ளது.

துன்பாய மாசார் துவராய போர்வையார்
புன்பேச்சுக் கேளாதே புண்ணியனை நண்ணுமின்கள்

என உபதேசித்தருளிய திருஞானசம்பந்தப் பெருமானார் அப்புண்ணியனை நண்ணும் சாதனம் ஈது என்று தம் பெருங் கருணைப் பெருக்கால், உணர்த்தியருளத் திருவுளங் கொண்டார். அதனால், எவ்வாறு புண்ணியனை நண்ணும் ஆறு என நாடுவார்க்குத் தெளியச் செய்யும் பொருட்டு,

'நண்பாற் சிவாய எனா' என்றருளினார். 'சிவாய' என்னுந் திருமந்திரத்தில், முதலிற் பேசா எழுத்தாகிய பேரெழுத்தும், அடுத்துப் பேசும் எழுத்தாகிய பிஞ்செழுத்தும், முடிவிற் பேரன்புடைய ஆன்மாவைக் குறிக்கும் ஆமையும் நிற்றல் அறிக,

நண்பாற் சிவாய எனா நாலூர் மயானத்தே
இன்பாய் இருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே

'நண்பு' என்றது சிவத்துவம் உற்றவர்க்குள்ள மெய்யன்பு குறித்தது. இங்கு 'நன்பு' என்றே திருவாய் மலர்ந்தருளியிருப்பார் காழிவேந்தர். முச்சுழி வேண்டுவதின்று, 'நன்பு' என்ற செந்தமிழ்ச் சொல்லிற்கும் சிறந்த பொருள் உண்டு. அது நண்பினும் சாலச் சிறந்தது. நன்பு, நன்கு, நற்கு, நன்மை, நலம், நன்றி, நன்று, முதலியவை 'நல்' என்னும் பண் படியிற்றோன்றியவை நன்மை+தீமை, நன்கு+தீங்கு, நலம்+பொலம், (சிவபோகசாரம் பார்க்க) நல்லாங்கு+ பொல்லாங்கு, நன்று+தீது, நன்பு+தீன்பு என்றவற்றை நோக்கின் அதன் உண்மை புலப்படும். 'தீன்பு' என்பது தீம்பு என மருவி வழங்குமாறு 'நன்பு' என்பதும் 'நம்பு' என மருவி வழங்கப்பட்டது. 'நம்பும் மேவும் நசையாகும்மே' என்றதில் உள்ள 'நன்பு' என்பதன் முதனிலை எது? 'நம்' என்பது முதனிலையாயின் 'நம்பன்' என்றதிற் பகரம் எவ்வாறு வரும்? இன்பன், வன்பன், அன்பன் முதலியவற்றில் பகரம் எவ்வாறு வந்ததோ அவ்வாறே 'நம்பன்' என்றதிலும் வந்தது. இன்பு+அன், வன்பு+அன், அன்பு+அன் என்றவற்றால் வந்த பகரம் நன்பு+அன் என்றலும் வந்தது. அதனால் நம்பன் என்றது நன்பன் என்றதன் மரூஉவேயாம். 'நம்'

என்பது எவ்வாற்றானும் முதனிலை யாகாது. மலையகராதியில், 'நன்பன்' என்றதொரு பெயர் சணலைக் குறித்துளதாக உளது. அதனால், 'நன்பு' என்னும் செந்தமிழ்ச் சொல் இருப்பது தெளிவாயிற்று. வன்பு+மென்பு, துன்பு+இன்பு என்றிருத்தல் போலத் தீம்புக்கு நம்பு இருத்தல் வேண்டும். அவை தீன்பு+நன்பு என்றவற்றின் மரூஉவே -யாகும். ஆதலின், இந்நாலூர்த் திருப்பதிகப் பாடலில், 'நன்பாற் சிவாயஎனா' என்றிருப்பது பொருத்தமே, டண்ணகரம் இருத்தலால் எதுகை நயம் கெட்டிலதெனினும், திருவருட் பாடலிலும் இலக்கணம் செவ்விதின் அமையும் உண்மையைக் கற்றுணர்ந்தோர் முற்றும் அறிவர்.

... ... வசிவல அவனதிடம்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினம்
காரார் காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே 1.126.2

விதியுமாம் விளைவாம் ஒளியார்ந்ததோர்
கதியுமாம் கசிவாம் வசி ஆற்றமா
மதியுமாம் வலியாம்மழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே 3.48.2

என்னும் திருக்கடைக்காப்பில் திருவடிப் புகழ் உணர்த்தும் வாயிலாக அதைப் பெறும் சாதனம் ஆகிய திருவைந்தெழுத்து (பிஞ்செழுத்தும் பேரெழுத்தும்) உபதேசித்தருளப் பெற்றமை உணர்க. வசி ஆற்றல் அறிவாற் கணிக்கும் திருமந்திரஜபம் ஆகும்.

வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமும்ஆம் ஆங்கு

என்று திருவருட்பயன் (88) உணர்த்தும் உண்மையை இங்கு உற்றுணர்தல் பெருநலம் பயக்கும். அதற்கு நிரம்ப அழகிய தேசிகர் அருளிய உரை இது :- "அவ்வாறு உச்சரிக்குங்கால், வகாரம் ஆகிய அருள் சிகாரம் ஆகிய சிவத்தினைக்காட்டி, யகாரம் ஆகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும். அன்றியும் அவ்வருளே அந்தச் சிவத்திற்குக் குற்றம் தீர்ந்த திருமேனியாய் இருப்பதும்" இதனால் திருவைந்தெழுத்தில் வகாரம் ஆகிய அருளினது தன்மை வகுத்துக் கூறப்பட்டது.

இதன் உரையில், சிவசத்தியினைக்காட்டி என்றுள்ளது ஏடு எழுதினோர் பிழையாகலாம். சிகாரம் ஆகிய சிவசக்தி எனல் குற்றமே. வகாரம் சிவசத்தியே அன்றிச் சிகாரம் சிவசக்தி அன்று. சிவம் சிவசத்தி இரண்டும் சிகாரம் எனப்பெறின், சிவத்தைக் குறித்த திருவைந்தெழுத்து யாது?

சிவஞானபோதப் பேருரையில், 'மானதம், மந்தம் உரை என உச்சரிக்குமாறு மூவகைப்படும். அவற்றுவிட சுத்த மானதம் எனப்படும் அறிவாற் கணித்தலே ஈண்டு உச்சரித்தல் என்பார் (ஒன்பதாவது) சூத்திரத்துள் உச்சரிக்க என்னாது எண்ணுக என்றார்' என்று மாதவச் சிவஞானயோகிகள் எழுதியருளியதை அறியக்கடவர் சைவர்.

'வசி' என மாறுதலின் விளக்கம் 'உண்மை விளக்கம்' முதலியவற்றால் உணரத்தகும்.

ஆதிமலம் இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலமும் தீர்வாகா: போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம்; மாறி
விதிப்படிஓ தஞ்செழுத்து மே.

உண்மை விளக்கம் 43

'மாறுதல்':- 'சிவாய நம' என மாறுதல் முதலாகப் பல உள. அவற்றுள், ஒன்றும், முடிவும் ஆகும் 'வசி' என்பது.

'சோதிமிகு நீறதுமெய் பூசியொரு தோலுடை புனைந்து தெருவே மாதர் மனைதோறும் இசைபாடி வசி பேசும் அரனார் மகிழ்விடம்... நீடுதவிமாணிகுழியே;' (335:2) என்னுந்திருக் கடைக்காப்பில் 'வசி' என்பது, 'அறிவனூற் பொருளும் உலக நூல் வழக்கும்' ஆகிய இரு திறத்திலும் பொருள் கொள்ள நின்றது. 'அறிவனூற் பொருள்' என்றது 'ஆகமநூல் வழியின் நுதலிய ஞானயோக நுண்பொருள்' ஆதலைத் திருக்கோவையார்க்குப் பேராசிரியர் எழுதியருளிய தொடக்கத்திற் காண்க. இவ்வுண்மையைத் திருவிழாவிற் பிச்சாடனர் திருவுலாவைக் காணப் பெரியோர் பெரிது விழைதலானும் உணரலாம். அத்திருக்கோலம் மருள் நீக்கித் தெருளளிக்கும் அளவிலாப் பெருமையுடையது.

இலங்கிய மேனியிராவணனே யெய்துபெயரு மிராவணனே

கலந்தருள் பெற்றதுமாவசியே காழியரனடி மாவசியே

என்னுந் திருக்கடைக்காப்பில், திருஞான சம்பந்தர் இத் திருவைந்தெழுத்தை 'மாவசி' என்று கூறி அதன் மாட்சி தோற்றிக் காட்சியருளினார்.

திக்கமர் நான்முகன் மால்அண்டம் மண்டலம் தேடிட
மிக்கமர் தீத்திரள் ஆயவர் வீழி மிழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும்
நக்கர்தம் நாமம் நமச்சிவாயவ் வென்பார் நல்லாரே

3.9.9

எனத் தனியாகத் திருவீழிமிழலையிற் பாடியருளியதோடு, திரு-நல்லூர்ப்பெருமணத்தில் வந்தவர் அனைவரும் தம் இழிந்த பிறவி தீர்ந்து இறைவன் திருவடி நீழலிற் சேர்ந்து அழிவிலாத இன்பம் ஆர்ந்து வாழ்வுகூர்ந்து விளங்கத் திருவுளங்கொண் டருளிப் பாடிய நமச்சிவாயத் திருப்பதிகம் ஒவ்வொன்றின் ஈற்றிலும் தூலபஞ்சாட்சரத்தை உபதேசித்ததும் சைவ நன்மக்கள் நினைவிற்கொண்டு, தங்கள் கடமைகளுள் திருவைந்தெழுத் தோதும் பழக்கத்தை மேற்கொள்வாராக.

இங்கு இத்திருவைந்தெழுத்துக் குறித்துப் பல அரிய கருத்துக்களைத் தெரிவிக்க எண்ணம் உண்டு. அவ்வளவும் கூற இடம் இல்லை. அதனால், சிலவற்றை மட்டும் தெரிவிக்கின்றேன்.

திருவைந்தெழுத்தில், சிகாரம்- சிவத்தையும், வகாரம்-சிவை (சக்தி)யையும், யகாரம் தற்போதத்தையும் (ஆன்மாவை)யும், நகாரம் - திரோதானத்தையும் (+மாயையையும்) மகாரம் - பாசத்துள் முதலாய ஆணவத்தையும் குறிக்கும்.

சிவசிவைதற் போதம் திரோதானம் பாசம்
இவை யிவையே யஞ்செழுத்தின் எல்லை...

இப் பஞ்சாட்சரத்தை 'நாவார அஞ்செழுத்தை யோதின் நரகு' என்றருளினார் காழிக்கண்ணுடைய வள்ளலார். அதற்குக் கருத்து சிவஞானிகள் சீவன் முக்தர்கள் மும்மலம் அற்றவர்களாதலின், அவர்கள்

மாயாமல சம்பந்தமான வாக்குடைய நிலையினரைப் போல அநுட்டித்தல் குற்றம் ஆகும் என்பது. அதை,

நாவார அஞ்செழுத்தை யோதில்நர கென்றுரைத்தீர்
ஓவாத முத்தர்எலாம் ஓதுவதென் - பாவாய்கேள்
சொல்லிறந்த அஞ்செழுத்தைச் சொல்லிறந்த உண்மையிலே
சொல்லிறந்து நின்றோது வார்...

என்றதால் அறிக. இவ்வுண்மையைத் தான் சிவஞானபோதப் பேருரை விளக்கம் என இக்கட்டுரையிற் காட்டிய வாக்கியம் உணர்த்திற்று.

நெஞ்சால் நினையும் நெறி யுண்டாகில் நீள்பிறப்பாம்
பஞ்சாக் கரத்தின் அருள் பாராமல் - எஞ்சா
எழுத்தென்று கொள்ளில் எரிவாய் நரகில்
விழுத்துஞ் சிவன் ஆணை மெய்.

மாறா வலக்கரத்தாற் பூசிக்கின் மாநரகம்
ஏறா நரகம் இடக்கரத்தால் - கூறாத
அஞ்செழுத்தை நாவால் அறைகுவையே ஆமாகில்
விஞ்சுபிறப் பேழாய் விடும்.

இவையெல்லாம் சிவஞான நிலையில் நிற்பாரைக் குறித்து எழுந்தவை. இவற்றால், 'பேசா எழுத்து' என்றதன் உட்கோள் வெளிப்பட்டது. இதையோகநிலையில், 'பதுமாசனத்தில் இருந்து கொண்டு தலையும், கழுத்தும் அசையாமல், மகா பஞ்சாக்கர மந்திர தியாநமாய், நாவசையாமல், உமிழ்நீர் இறக்கப்படும் இடத்தில் சிம் என்று இருக்கவும். இது பேசாத மந்திரம் எனத் திருநந்தி தேவர் திருமூலநாயனார்க்கு அநுக்கிரகம் செய்தருளியது' என்னும் ஆன்றோர் எழுதிய வசநமும் இங்கு அறியத்தக்கதாகும். (திருமந்திரம், சிவயோக சிந்தனை பக்கம் : 56 பார்க்க).

பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழித்துஅங்கு உறங்கும் விளைவறிவார் இல்லை
எழுத்தறி வோம்என் றுரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே திருமந். 2721

என்னும் திருமந்திரத்தைப் பலமுறை நோக்கியுணர்வது நன்றாகும்.

தாந்தாதி ஐந்தி னோடே பாந்தாதி ஐந்தும் கூட்டச்
சேர்ந்தாய வாறே செப்பத் திகழ்தூலம் சூக்கந் தன்னில்
வாய்ந்தாய பஞ்ச வன்னம் வகைவகை யுச்சரிக்கச்
சேர்ந்தாய புத்திமுத்தி சேர்வது திண்ணம் ஆமே.

என்னும் **தத்துவரத்தினாகர விருத்தம்** ஓர் அதிரகசிய மார்க்கத்தில் திருவைந்தெழுத்தை உணர்த்துகின்றது. இக்காலத்திற் போல முற்காலத்தில் இத் திருமந்திரங்களை வெளிப்படச் சொல்வதும் எழுதுவதும் இல்லை. பொய்வழிச் செலவு வளர வளர மெய்வழிச் செலவிற் கொளுத்த வேண்டி, முன்னோர் நெறியிற் பிறழ்ந்தும் உண்மையை வெளிப்படுத்தத் துணியும் ஆவசியகம் உண்டாய்விட்டது. இது பழங்காலத்துக் கொள் கையிற் பாடப்பட்ட செய்யுள், அதனால் இரகசியமாக உணர்த்திற்று. இதன் பொருள், சம்பிரதாயம் அறியாதார்க்கு விளக்குவது அரிது. 'தாந்தாதி' 'பாந்தாதி' என்னும் இரண்டு மட்டும் விளக்கினால், இப்பாடற் பொருள் இனிது விளங்குவதாகும். நன்னூற் சூத்திரத்தில், பகரத்தை அந்தமாக உடைய சொல் எனக் குறிக்கத்தக்க இடத்தில், 'பாந்தம்' என்றார். ஆண்டுப் ப+அந்தம் என்பன 'பாந்தம்' என்று புணர்ந்து நின்றன . அவ்வளவில் மட்டும் அப்புணர்ச்சியை ஒப்புக்காட்டலாகக் கொண்டு, 'தாந்தாதி' 'பாந்தாதி' என்பவற்றை உணர்தல் வேண்டும். இப் 'பாந்தாதி'யிற் கொள்ளும் வண்ணம் அப் 'பாந்தம்' என்பதற்குப் பொருள் கொள்ளின் கற்பவர்க்கு நன்னூலார் கருத்துண்டாகாது. அங்குப் பகரத்தினை அந்தமாக உடைய சொல் என்றும், இங்குப் பகரத்திற்கு அந்தமான எழுத்து என்றும் பொருள் கொள்ள வேண்டும். அங்கு செய்ப, கொள்ப, என்ப முதலியவற்றை உணர்த்துவது எண்ணம். இங்குப் பகரத்திற்கு அந்தமான அடுத்து நிற்கும் மகரத்தை யுணர்த்துவது எண்ணம். அவ்வாறே தகரத்திற்கு அந்தமாய் அடுத்து நிற்கும் நகரத்தை உணர்த்துவது எண்ணம். தந, பம என்பது வழக்கம். அவற்றுள் ஆதியந்தம் கொள்ள வைத்தார். தாந்தம் – தகரத்திற்கு அந்தமான நகரம். பாந்தம் – பகரத்திற்கு அந்தமான மகரம். இந் நகார மகாரம் இரண்டும் ஆதியாக நின்றது தூலபஞ்சாக்கரம் – **நமசிவாய**. இது கால முன்னாகக் கொண்ட கூற்று. பாந்தாதி – மகரம் ஆதியாக நின்றது. அஃது இடம் முன்னாகக் கொண்ட கூற்று. அது சூக்கும

பஞ்சாக்கரமான **சிவாயநம** என்பது. இதில் முதல் மூன்றெழுத்தும் இடப்பின்; பின் இரண்டும் இடமுன். அவ்விரண்டில் மகாரம்முன் அதையே பாந்தாதி என்றார். தூலபஞ்சாக்கரம் புத்தியைத் தரும். சூக்கும பஞ்சாக்கரம் முத்தியை நல்கும். அதனால், 'தூல சூக்கம்' என்றும் 'புத்திமுத்தி சேர்வது திண்ணம்' என்றும் கூறினார்.

மந்திரம் நான் மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 3.22.2

ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க தக்கார்.
3.54.4

திருச்சிற்றம்பலம்

14. திருஞானசம்பந்தர் திருஅவதாரம்

வேத நெறி தழைத் தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத் தொண்டு பரவுவாம்.

எனச் சேக்கிழார் பெருமானார் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருத்தொண்டுகளைப் பரவும் பொருட்டாகத் தொடங்கியருளினார்.

நெறி (வழி)யும் துறையும் தெரியாமல் எதிலும் ஈடுபட லாகாது. துறைக்கு நெறி அத்தியாவசியமானது. வழியே சென்று துறையில் இறங்கிப் படியத் தக்கது இங்குச் சிவாநந்தசாகரம். இத் தலைத் திருப்பாடலில் 'வேதம்' நெறியெனப் பட்டது. 'சைவம்' துறை எனப்பட்டது. வேதம் ஆகிய நெறியிற் சென்று, சைவம் ஆகிய துறையில் இறங்கி என்ன செய்தல் வேண்டும்? ஆடித் திளைத்தல் வேண்டும்! எதில் ஆடல் வேண்டும்? சிவாநந்தக் கடலில். அச்சிவா நந்தக் கடலில் மூழ்கித் திளைக்க விரும்பினால் அக்கடலில் இறங்கும் துறையை நன்றாக அறிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு அறிதல் முழுகுவோர் தொழில், அவர் அறிய இனிது விளங்குந் தொழில் துறையினது. அதனால், 'துறை விளங்க' என்று விளக்கத்தைத் துறையினதாக்கினார். அத் துறை விளக்கம் நமக்குக் கிடைக்க வேண்டினால், அதற்குரிய நெறி செவ்விதின் அமைதல் வேண்டும். அதைத், தழைத்து ஓங்குதல் என்றார் அருண் மொழித் தேவர். தழைத்தல் ஓங்குதல் என்று இருசெயல் அமைந்தமை ஏன்? வேத மார்க்கத்தில் பல சமயங்கள் உள்ளன. அவற்றையே பொருளெனக் கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றைச் சார்ந்து, அவ்வளவில் அமைந்தவர் சைவத் துறையை அடைதல் இல்லை, பலபல சமயங்கள் தாமே, பரிபக்குவக் குறைவுடையவர்க்குச் சித்தாந்தமாகத் தோன்றித் தம்பால் நிறுத்திக் கொள்ளும் ஆயின், அவர்க்குச் சைவத் துறை விளக்கம் எவ்வாறு எய்தும்? சைவத்தின் பேதங்களை யுணர்வதன் முன்னர்ச் சைவம் என ஒன்றுண்டு என்பதை உணர்தல் வேண்டும். 'சைவம்' (முதலினும்) சைவவேதம் (இடையிலும்) சைவ சித்தாந்தம் (முடிவினும்) ஆகமுறையே அறியத் தக்கன. முதலதே

உணராதார் முடிவினதை உணர்தல் எவ்வாறு இயலும்? சைவ சித்தாந்தச் செம் பொருட்டுறையைத் திருவுள்ளத்திற் கொண்டு, 'மிகு சைவத் துறை' என்றார் ஆசிரியர். 'மிகுதல்' கீழ்க் கீழ்ப் பொருளைக் கடந்த மேன்மேற் சென்ற இடத்துத் தனக்கு மேல் ஒன்றும் இன்றித் தானே எல்லாவற்றிலும் மேற் பட்டதாகி முடிதல். அதுவே 'சித்தாந்தம்' என்னும் முடிந்த முடிபு. ஈண்டு 'மிகுசைவம்' என்றது 'மிகு-பஞ்சாக்கரத்தால்' (உண்மை விளக்கம்) 'மிகுமுத்தி' (சிவாநந்த மாலை 170) என்னும் இடங்களிற் போல முடிந்த நிலையையே உணர்த்திற்று. சிகாரத்தையே மிகுபஞ்சாக்கரம் என்றதும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி (பரமுத்தி)யையே மிகுமுத்தி என்றதும் அறிக.

இலையினும் மேலானது தழை. இலையே முடிவாகக் கொள்ளப்பட்டது; அதன் மேலும் தழைத்தலின், பல்வேறு சமயங்களும் இலை போல்வன. பூர்வபட்சம் செய்து கழிக்கப் படுவன. அவ்-விலைகளுக்கும் அப்பால் உள்ள ஒன்றை உணர்த்தும் முறைமையில் வேதம் விளங்குகின்றது. அவ்விளக்கமே தழைத்தலாகச் சொல்லப்பட்டது. அது நுணுகிய நிலையில் இருப்பின் , அவ்வழியிற் செல்வோர்க்கு மேலும் கடந்து செல்ல மாட்டாத இடர்ப்பாடு தோன்றித் துறையை அடையும் பேறு கிட்டா தொழியும். அதனால், அத்தழைத்தல் நுணுகாத நிலையில் நின்றும் பருத்துத் தோன்றல் வேண்டும். அஃதாவது அதன் மேலும் வேறொன்றில்லை. அதுவே சைவம், என்று தெளிவுறுத்தல் ஆகும். ஆதலின், 'வேதநெறி தழைத்தோங்க' என்றார்.

வேத நெறி தழைத் தோங்கினால் அன்றிச் சைவத்துறையும், அத்துறையில் விளங்கக் காரணம் வேறில்லை. அவ்வேத நெறியின் தழைத் தோங்குதலே, சைவத் துறை விளக்கத்திற்கு ஏதுவாகும்.

உலகியல் வேத நூல் ஒழுக்கம் என்பதும்
நிலவு மெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்

என்று பின்னர் வரும்பகுதியை இங்கு வைத்து நோக்கலாகாது. அது வேறு முறையில் கூறும் பொருள். இங்கு வழியும் துறையுமாகத் தனித் தனி உருவகம் செய்யப்பட்டன. வேதமும் சைவமும், அங்குச் சைவ நெறியின் வேறுபாடு பலவற்றுள், 'மெய்ந் நெறி' சித்தாந்தச் செம்பொருளாகிய சிவத்தை அடையும் நெறி என்றும், அந்நெறியில் ஒழுகும் ஒழுக்கம் ஆகமசாரமே அன்றி வேதசாரம் அன்று என்றும்,

வேதசாரம் உயர்ந்தோரது (உலகியல்) ஒழுக்கம் என்றும், ஆகமசாரம் சைவர்க்கே உரிய அருளியல் என்றும், வேத நூல் ஒழுக்கமாகிய வைதிகமும் ஆகம நூல் ஒழுக்கமாய சைவமும் கலந்த வைதிக சைவம் இன்னது என்றும் அழகுறத் திருப்பாசுரப் பொருளுணர்த்தி நின்றது.

1. உலகியல் வேத நூல் ஒழுக்கம்; 2. மெய்ந்நெறி சிவநெறி; 'அது' என்றது இங்கு நெறி என்னும் முன்மொழிப் பொருட்டாய் நின்றதே அன்றிச் சுட்டன்று. இச்செயல் (அது) சுட்டுப் பொருளைப் பயவாது நிற்குமிடங்களில் 'பகுதிப் பொருள் விகுதி' என்னும் வழக்குணர்க. 'இது' 'உது' என்னும் இரண்டு இவ்வாறு நிற்றல் இல்லை. அவ்விரண்டையும் கலதிவாயினர் காணார். அவர் காணுவராயினும் அவர்க்கெல்லாம் அரசனாக இருக்கும் தென்னவன் காண்டல் வேண்டும் என்னும் பான்மை நேர்ந்தது. அவனது முன்னை நல்வினைப் பயனாக! தென்னவன் அறியும் பான்மையால் 'அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்க' என்று 'இந்த மெய்ம் மொழிப்பயன் உலகம் இன்புறச், சந்த வேள்விகள் முதல் சங்கரர்க்கு முன் வந்த அர்ச்சனை வழிபாடு மன்னவாம்' என இயைபு படுத்தி அறிவித்தருளிய அருண் மொழித் தேவர் திருவுள்ளத்தை நன்குணர்தல் வேண்டும்.

தென்னவன் அறியும் பான்மையால் 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்றருளியதன் பயன் உலகம் இன்புற வேள்வி முதலிய சிவ வழிபாடு மன்னுதல் என்னும் உண்மையைத் தொடக்கமாகக் கொண்டு அதன் மூலத்திற்கு ஒத்தது. திருப்பாசுரப் பொருள் விளக்கம், 'இந்த மொழி' என்றது 'வாழ்க' அந்தணர் வானவர் ஆனினம் என்னும் முதலடியை, அம்மொழிப் பயன் உலகம் இன்புறுதலும், அவ்வின்பத்துக்குக் காரணமான சிவவேள்வி முதலிய சிவ வழிபாடு நிலை பெறுதலும் ஆம். மன்னுதல் – நிலை பேறு. சந்த வேள்விகள் – சிவ யாகங்கள். (சிவாக்கினி காரியம், சிவ பூசை, சிவத் தியானம் முதலிய எல்லாம் 'வேள்வி' எனப்படுவனவே.)

அடுத்து, 'வீழ்க தண்புனல்' என்றது, அவ்வேள்வியின் நற்பயன் ஆகும். இவ்வண்ணம் வேத நூலொழுக்கமாகிய உலகியலையும் மெய்ந்நெறியாகிய சிவ நெறியையும் தென்னவன் அறியும் பான்மையால் நம் முன்னவனார் காழிவேந்தனார் அருளிய திருப்பாசுரத்தின் பிரதம வியாக்கியானம் செய்யும் அருண் மொழி அது. பூர்வபக்ஷம் செய்தே

சித்தாந்தம் உணர்த்த வேண்டுதலின், இங்ஙனம் அருளினார் நம்சமயாசாரியார். ஆசாரியரது கடமை தீதாகிய அயல் நெறி ஆழ்க என்றலும். இது தென்னவனுக்குச் செய்தருளிய உபதேசம் ஆதலின் முற்றும் நியாய முடையது. இக் காலத்தில் செவியைத் துளைத்துச் சிந்தையை வருத்திக் கொண்டிருந்த மறைந்த 'வாழ்க' 'வீழ்க' என்பவற்றை எண்ணி, இதனைக் குற்றங் கூறி அபசாரப் படுதல் தகாது.

வேத நெறி வேதத் துறை, சைவ நெறி, சைவத்துறை என்னும் நான்கில், வேத நெறியில் செல்வது வேதாசாரம் (வைதிகம்): சைவம் - சிவ சம்பந்தம், சிவநெறி - சைவாசாரம்; (சைவம்). தொடக்கம் வேத நெறியொழுக்கம். ஒழுக்கம் - செலவு. நெறியில் ஒழுகும் ஒழுக்கம் - வழியிற் செல்லும் செலவு. அந்நெறியிற் சென்று அடையும் வேதத்துறை மட்டில் ஆயின், சைவத்துறை விளங்காது. அவ்வேதத் துறையையும் கடந்து சென்றால் தான் சைவத்துறையை அடையலாம். வேதத் துறையில் இறங்கி முழுகும் வெள்ளம் உபநிடதம். அதில் மூழ்கித் திளைப்பவர்க்கே சைவத்திறம் நன்கு எய்தும். **உபநிடதம் வேதாந்தம்.** அந்தம் – சிரம். ஆதி – பாதம், 'ஆரணங்கள் படித்தும்- வேத சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால்' அன்றிச் சைவத் திறம் அடைதல் அரிது. சைவத்துறை விளக்கத்திற்கு வேதநெறி யொழுக்கமும், சைவத்திறம் அடைதற்கு வேதாந்தப் பொருளுணர்ச்சியும் அத்தியாவசியம் ஆகும். வேதநெறியில் ஒழுகி சைவத்துறை விளங்கப் பெற்றுள்ளவர் பரம்பரை பொலிவுற்றுத் திகழும்.

அவ்வேத நெறியொழுக்கத்தையும், அது தழைத்தோங்கும் படி அந்நெறியை உலகிற்பரப்பும் பெரும்பயன் விளைக்கும் பெறலருந்-தொண்டு புரிதலையும், எல்லாரும் மேற்கொள்ளல் இயலாது. வேத நெறியில் ஒழுகலாம். அந்நெறியை உலகிற்பரவச் செய்தல் எளிதோ? நெறியில் ஒழுகுவார்க்கு அதைப் பரப்பும் தொண்டு வாய்த்தல் ஒருதலையன்று. நெறியைப் பரப்பவல்லார் உண்மையராயின், அவ்வந்நெறியில் ஒழுகாதிரார். இக் காலத்தினும் 'ஆசாரியர்' என்ற வழக்கிற்குத் தகத்தாமும் வாழ்ந்து ஒழுகித், தமது நெறியை உலகினும் பரப்பி வந்தருளும் உண்மைச் சிறப்புடைய பெரியார் சிலர் உளர்' இன்றும் அவர் திருவருளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். கோயில்களில் சிவலிங்கப் பெருமான்களைக் கண்டு சிவத்தை வழிபடுதல் எளிதன்று, 'சிவலிங்கப் பெருமான் நன்கு செய்யப்

படவில்லை; பீடம் பெரிதாயிற்று; கோமுகம் நீண்டது; ஆவுடையார் சிறிது; சிவலிங்கம் பெரிது' என்பன முதலிய குறைகளைக் கூறிக் கொண்டு, அச் சிவலிங்கப் பெருமான்களின் உச்சியில் இருந்து நச்சிய நலங்களையெல்லாம் நல்கும் அச் சிவபரஞ்சுடரைக் கண்டு வழிபடும் ஆற்றல் பெறாது அவமதிக்கின்றனர் சிலர். சிவாகம வசநம் இது :-

திருக்கோயில் உள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே

சிவலிங்க தரிசனக் கிரமத்தை அறிந்து கொண்டால், இங்கும் அங்ஙனம் வழிபட்டு உய்யும் பேறு எய்தலாம்.

சிவன் நாதரூபலிங்கம். **சக்தி** விந்துரூப பீடம். யோனியும் லிங்கமும் ஆகச் சம்பந்தத்தால் சகல பிரஜோத்பத்திகளை உண்டாக்குகின்ற உண்மை சாத்திரங்களிற் கூறப்பட்டுள்ளது.

ஓங்காரத்தில் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் ஐந்தும் அடக்கம். சமட்டிப் பிரணவம் அறியாதது சமட்டியே! தனித்தனியே ஐந்தும் வியட்டியாகும். இங்கே,

சிவம் சத்திதன்னை ஈன்றும்;
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந் திருவரும் புணர்ந்துஇங்கு
உலகுஉயிர் எல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரியாகும்;
பான்மொழி கன்னியாகும்;
தவந்தரு ஞானத்தோர்க்குஇத்
தன்மைதான் தெரியும் அன்றே

சித். சுப: *164*

என்னும் திருவிருத்தத்தின் பொருளுண்மையை உள்ளத்திற் கொண்டு முற்கூறியதையும் பிற்கூறுவதையும் அறிதல் அறிஞர் கடனாகும். இதில் 'தவம் தருஞானத்தோர்' என்றது இறப்பில் தவம் ஆகிய சரியை, கிரியை, யோகம் என்பவை காட்டும் ஞானத்தைப் பெற்றுள்ளோர் என்று பொருளுணர்த்துவது. இறப்பில் தவத்தால் ஞானத்தை மருவுதல் சிவஞானபோதத்தில் அறியத் தரும்.

சத்தியும் சிவமும் ஆய தன்மை
இவ்வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் ஆக
உணர்குண குணியும் ஆக
வைத்தனன்; அவளால் வந்த ஆக்கம்
இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார்
பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்.

சித்.சுப. 89

சிவன்அருவுருவும் அல்லன்
சித்தினோடசித்தும் அல்லன்
பவம்முதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடுவானும் அல்லன்
தவம் முதல் யோகபோகம்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும்
ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே.

சித். சுப. 90

இங்குப் பீடலிங்கத்தின் இயல்பு ஓர்வார்க்கு.

மச்சர் அங்கமும் மலரவன் அங்கமும்
வச்சி ராங்கமும் இல்லைமண் மீதிலே;
அச்செ லாம்இலிங் காங்க பகாங்கம்ஆம்
பிச்சர் காள்!எம் பிரான் அல்லதில்லையே

என்னும் உண்மையும் தெரிய வேண்டுவதாகும்.

திருக்களிற்றுப்படியாரிலே, 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' 'யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும் மாதேயும் பாகன் இலச்சினையே' என்றிருப்பனவும் சிவலிங்கத்தின் மெய்ப்பொருளை உணர்த்துவன. 'ஆணெல்லாம் சிவமாகவும் பெண்ணெல்லாம் சத்தியாகவும் வியாபரியா நிற்கும்' 'பீடம் மனோன்மனி சொரூபமாகவும் சிவலிங்கம் சதாசிவ சொரூபமாகவும் நிற்குந்-

தன்மையினையும் சிவானுக்கிரகம் இல்லாத பேர் தெளிய மாட்டார்கள்' 'ஞான சத்திமயம் சிவலிங்கம் எனவும் கிரியாசத்தி மயம் பீடம் எனவும் உணரப்படும்' (மறை ஞானசம்பந்தருரை).

'பிரபஞ்சம் எல்லாம் சத்தியினது வடிவம் சிவனது வடிவுமாய் இருக்கிற முறைமையை உடைத்தாயிருக்கும்' 'குணமும் குணியும் பிரிபடாத தன்மைபோலச் சத்தியும் சிவமும் பிரிபடாது.' சிவத்தை விட்டுச் சத்தியும் தனித்து ஒரு முதலாய் நில்லாது; சத்தியை விட்டுச் சிவமும் தனித்து ஒரு முதலாய் நின்று காரியப்படாது; அது என்போல என்னில் ஆவுடையாளும் சிவலிங்கமும் ஒன்றைவிட்டு ஒன்று நீங்காமல் தன்னில் கூடியிருந்து ஆன்மாக்களை இரட்சிக்கிற முறைமையை அறியார்கள். பிரபஞ்சமெல்லாம் சிவசத்தியினுடைய வடிவா யிருக்கும். இந்தச் சிவமும் சத்தியும் குணமும் குணியும் போல் பிரிபடாமல் கூடிநின்று பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும் (நிரம்பவழகிய தேசிகருரை).

இதனொடு, 'பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரமநகர் மேய அண்ணல் செய்யாதன எல்லாம் அறிந்து வகைவகையாலே நண்ணிய ஞானசம்பந்தன்' என்றருளியதை உளங்கொள்க. இதுகாறும் குறித்தவற்றால், பொதுவில் 'எல்லாம் சிவமயம்' ஆதலையும், சிறப்பில் ஆசாரியப் பெருமக்களையும், அடியார்களையும், சிவலிங்கப் பெருமான்களையும் கண்டு சிவசத்தி பாவனையில் வழிபடல் வேண்டும் என்பதையும் அறிதல் வேண்டும் சிவலிங்கம் தாபரம். மகேசுர (உற்சவ) மூர்த்திகளும் குருவும் அடியார்களும் ஜங்கமம்.

சிவலிங்க தரிசனம்

ஓங்காரம் பீடம், அகாரம்உயர் கண்டம்; மேற்
பாங்கார் உகாரம் பயில்பீடம் - ஆங்குள்
மகாரம் மிகுவட்டம் மன்னுநிலை விந்துப்
பகாதசிவம் நாதம்எனப் பார்

- காழிக் கண்ணுடைய வள்ளலார்.

திருச்சிற்றம்பலம்

15. சிவபாத இருதயர் செய்த தவம்

திருஞானசம்பந்தர் தமது புனித வாய் மலர்ந்து அழுதது எப்பயனை விளைத்தற் பொருட்டு? சைவர்க்குச் சிறப்பாயும் ஏனையோர்க்குப் பொதுவாயும், பிறவிப் பெருங்கடலைத் தாண்டிப் பேரின்பக்கரையேறும் பேறு வெவ்வேறு வகையில் எய்தற் பொருட்டாகும். அவ்வகையே இம்முதற் செய்யுளில் முத்திறமாக அடக்கிக் கூறப்பட்டது. திருவாய் மலர்ந்தழுததன் பயனாக முதலில் நின்றது வேதநெறி தழைத்தோங்கும் ஒக்கம். அடுத்து நின்றது மிகு சைவத்துறை விளக்கம். வேத நெறி தழைத் தோங்கின், சைவத்துறை விளங்கும். அது விளங்கின் எது பொலியும்? இருளிற் பொலிவற்றுக் கிடந்த பொருள் விளக்கினொளியில் விளங்கித் தோன்றும் பொலிவையுற்றுக் கிடக்கும். அத்தகை பொலிவு பெற்றுத் தோன்றும் பேறு பூத பரம்பரைக்கு வாய்த்தது. திருஞான சம்பந்தரது திருவாய் மலர்ந்தழுத அழுகையால், பூத பரம்பரை, மிகு சைவத்துறை விளக்கத்தால், பொலிவுறும் முன்னர், எந்நிலையில் பொலிவற்றுக் கிடந்தது? சிவநெறி விளக்கம் பெற்றிலாது ஆணவ காரியமான அஞ்ஞான இருளிற் பொலிவற்றுக்கிடந்தது. அவ்விருள் நீங்கிப் பொலிவுற்றது பூத பரம்பரை. அது மூன்றாவது பயன் ஆயிற்று. ஆகவே, அருண் மொழித்தேவர், புராணத் தொடக்கத்தில் சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர், வேதநெறி தழைத்-தோங்கவும், மிகுசைவத் துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும் தம் புனிதவாய் மலர்ந்தழு தருளினார் என்றார்.

சும்மா இருப்பவர்பால் தோன்றுஞ் சுடரொளியைப்
பெம்மான் இவன்என்ற பேராள! - அம்மை
முலையுண் டழுத முதல்வா பிறப்பில்
அலையுண் டலைந்தேன் அற.

என்றதில், பிறவித் துன்பம் தீர்தல் அம் முதல்வர் அழுததன் பயன் எனக் குறித்தது காண்க. பூத பரம்பரைக்கு இதுவே முடிந்த பயன். பொலிவின்மை, பிறப்புக்களாலும், பொலிவு, பிறவாமை யாலும், பூத பரம்பரைக்கு எய்தும். திருவருட் பொலிவும் கருவிருளின் பொலியாமையும் இங்குப் பொருந்தும். பொல்லாமை - பொலிவுறாமை, 'இமயப் பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங் காக்கையும் பொன்னிறமா யிருக்கும்.' இங்கும் பொன்னிறம் இல்லாத கரிய காக்கை என்றே

பொருள் கொள்ளல் வேண்டும். (பொல்லா) இழிந்த எனல் ஆசிரியர் கருத்துக்கு வேறாகும். உவமைக்கும் பொருளுக்கும் ஒத்த பொருட்டும் அன்று. பொல் என்பது பொன் என்றாயிற்று. அம் ஈறு பெற்றுப் பொலம் என்றாதலால் அது புலப்படும். பொலிதல் என்பதற்குப் பொன்னைப் போல ஒளிர்தல் என்பதே பொருள். 'பொல்லாத ஆணவம்' 'பொல்லா முயலகன்' என்பவை முதலியவற்றிற்கும் அதன் இருள் நிறங்கருதிய வாற்றாற் பொருள் கோடல் வேண்டும். தீமை குறித்த பொருள் (அச் சொல்லுக்குப்) பின் உற்றதே. பரஞ்சோதி முனிவர் விருத்த குமார பாலரான படலத்திலே இச் சொல்லை அப் பொருளில் ஆண்டது பலர்க்கும் தெரியும். பொலியாத என்ற தன் மரூஉவே பொல்லாத என்பது. எதிர் மறையாய் பொல்லாத என்பதற்கு உடன் பாட்டுச் சொல் 'பொலி' என்னும் முதனிலை உடையதே ஆகும். ஆதலின் அதன் உண்மைப் பொருள் நன்கு விளங்கும்.

சீகாழியிலே அந்தணர்குடி முதல்வர்; வேதாசார சீலர்; கவுணியர் கோத்திரம் விளங்க (அவ்வழி) வந்தவர்; சிவபாத இருதயர் என்னும் உயரிய பெயர் வாய்ந்தவர்; 'அறவோர்' என்றதில் யாதும் ஐயுற வேண்டா ஒன்றும். அவ்வறத்தால், தாம் மட்டும் வாழ்தல் வேண்டும் என்று கருதும் இழிநிலை அவரின் அருகிலும் நிற்க மாட்டா தொழிந்தது. எல்லாவுயிரும் வாழ்தல் வேண்டும் என்னும் உயர்நிலைக்கு உறைவிடம் ஆனார். 'உலகு' என்றது உயிருள் பொருள் உயிரில் பொருள் ஆகும். இரு திறத்தையும் குறிக்கும். அவ்வுலகு என்னும் பொருளில் 'புவி' என்னும் சொல்லை ஆண்டு ஆண்டருளினார். 'சிவபாத விருதயர் என்று உளரானார்' எனச் சொல்ல வந்த அருண்மொழித் தேவ நாயனார், 'என்று' என்றதற்கும் உளரானார் என்றதற்கும் நடுவில், 'இப்புவி வாழத்தவஞ் செய்யியல்பினார்' என, அவர் உளராதலின் பயனை உலகோர் அறியச் செய்யத் தாம் உளங்கொண்ட விருப்பம் விரைந்து முந்திய உண்மையைத் தோற்றியருளினார். புவி வாழத் தவஞ் செய்யியல்பு சிவபாத விருதயர்க்கு இருந்த ஒன்றே, சைவ சமயத்தில் தனிப் பேராசிரியராகத் திருஞான சம்பந்தர் திருவவதாரம் புரியக் காரணமாயிற்று.

அதற்கும் ஒரு காரணம் உண்டு. திருவவதார காரணம் அவர் தந்தையாரது இயல்பாய்ப் புவிவாழச் செய்யும் தவம். அதாவது தவஞ் செய்யியல்பு புவிவாழ்தற் பொருட்டாதல். தவஞ்செய் இயல்பும் இயல்பாற் செய்யுந் தவமும் வெவ்வேறு. அவை முறையே ஏதுவும் பயனுமாம்.

புவிவாழத் தவஞ் செய்யும் இயல்பு அ வர்க்கு எய்தியதன் காரணமும் இங்கு உணரத்தக்கது. அஃது யாது? அவர் அந்தணராவார்; மறை தேர்ந்த அருளொழுக்கத்தராவார்; அவர்க்கு அவ்வியல்பு வரத் தடை என்ன? அந்தண்மைக்கும் மறைதேரொழுக்கத்திற்கும் கோத்திரம் விளங்கவந்த பாத்திரச் சிறப்பும் பிற நலங்களும் அவரது இருதயத்தில் சிவபாதத்தை நிலைபெறச் செய்துவிட்டன. அவர் நெஞ்சம் அத்-திருவடிக்கே இடமாய் விட்டது. அத்திருவடியும் அவர் நெஞ்சத்தை ஒருசிறிதும் பிறிதொன்றற்கு நினைப்பிடமாக்காது தனக்கே உரிய சருவ மானியமாக்கிக் கொண்டது. அதனால், அவர் அகத்தை உணர்ந்த அக்காலத்து நன்மக்கள் அவரைச் 'சிவபாத விருதயர்' என்று நெஞ்சார நினைந்து மகிழ்ந்து அவர்க்குக் காரணப் பெயராக வழங்கி வாழ்ந்தனர். இருதயத்திற் சிவபாதமே அன்றி வேறு யாதும் இல்லாத பரிபூரணம் உணர்ந்த பெரியவர், அப்பாதாநுபவம் பல்லுயிர்க்கும் உண்டாக வேண்டும் என்று நினைப்பது இயல்பு தானே! அவ்வியல்பே இப் புவிவாழத் தவஞ் செய்யியல்பாயிற்று. ஆகவே, சேக்கிழார் பெருமானார், அவ் வறவோர் உளரானார் எனச் சொல்லி முடிப்பதற்கிடையில், அவரது பெருங்கருணை நிலையைக் கூறி, அத்தகையோரே உலகில் உளராதல் வேண்டும் என்றார். அவ்விருப்பத்தை சமய வளர்ச்சிக் கண்ணால், நோக்கி உணர்தல் தக்கதே என்க. சிவபாதம் அவரது இருதயத்தில், வேறு எதற்கும் இடம் தாராமல் நிறைந்திருந்தது. இதையும் அச் 'சிவபாத விருதயர்' என்னும் திருப் பெயரினது காரணத்தையும் பகவதியாரது சிவபத்தியையும் விளக்க வேண்டி, சேக்கிழார் பெருமானார், 'அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாதுபரவும்' உண்மையை உணர்த்தியருளினார். இயல்பாகவே இருதயத்திற் சிவபாதத்தை அன்றி அயலாக மற்றெதையும் அறியாத பெருமைக்குரிய அவ்வந்தணர்க்கு வந்த மனைக்கிழத்தியாரும். தம் உறவால், அவரது அவ்வியல்பை, வேள்வித்தீயை வளர்க்கும் ஆனின் நெய் போன்று, கணவனார் கருத்தமைந்த மணவாட்டியராக விளங்கி வாழ்ந்தார். 'வாழ்க்கைத் துணை' என்றதன் உண்மைப் பொருள் அவ்வம்மையார்பால் முற்றுற அமைந்திருந்தது. 'திருமனையார்' 'வாய்ந்தமறை மரபின்வரு பெற்றியினார்' என்று போற்றினார் ஆசிரியர்! அவ்வந்தணரது இயல்பாற் செய்யும் தவத்தின் காரியம் ஆன **'திருஞானசம்பந்தரது திருவவதாரம்'** யாவர் பெற்ற பேறாயிற்று? அவ்வம்மையார் பெற்ற பேறு அன்றோ?

அப்பேற்றைத் தமிழுலகில் அம்மையார் தாம் பெற்றார். வேறு எவ்வுலகில் எவர் பெற்றார்? பெற்ற பெருமை முற்றும் உற்றவர் அவர் ஒருவரே ஆனார். ஆகவே, 'எவ்வுலகும் பெறற்கு அரிய பெருமையினார்' எனப் போற்றும் நிலைக்கு அம்மையார் உரியார் ஆனார். போற்றும் நிலை ஆசிரியர்க்கும் வாய்த்தது. அவர் போல அடியேங்களுக்கும் அப்போற்றல் ஆகிய புண்ணியம் கிடைத்தது. 'எவ்வுலகும்' என்றதில் ஆடுஉவு(லகு)ம் மகடூஉவு(லகு)ம் அடங்குமெனினும், மகடூஉப் பொருட்டே கொள்ளத்-தக்கது. அம்மையாரது திருப்பெயர் 'பகவதி' என்பது. பொற்பும் கற்பும் மேம்படு சிறப்புடையவர்.

சிவபாத விருதயரும் பகவதியாரும் ஆகிய இவரது மரபும் சைவநெறி வழிவந்தமையால், அவ்விருவர் உறவும் திருவருளுறவை வளர்த்துக் கொள்ளுஞ் சிறப்புற்றது. கவுணியர் கோத்திரத்திற்குத் தக்க சூத்திரம் 'செப்பு(ம்) நெறிவழி வந்தார் சிவபாத விருதயர்' 'பகவதியாரும் கற்பு மேம்படு சிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்' என்று முன் உணர்த்திப், பின், 'மரபிரண்டுஞ் சைவ நெறிவந்த கேண்மையினார்' என்றார் 'தொண்டர் சீர் பரவுவார்'. அக்கேண்மையால், அவ்விருவர் திருவுள்ளத்திலும், 'அரவணிந்த சடை முடியார் அடியலால் அறியாது பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மை' வளர்ந்தது. இவர் மனை வாழ்க்கை மறைவிதி வழாது, குறைவறு நிறைவுடன் யாவர்க்கும் வியப்புண்டாக மேவியது.

அக்காலத்திலே, சிவபாத விருதயரது தவஞ்செய்யும் இயல்பு புவிவாழ்தற் பொருட்டு என்று முன் அறிந்தோம் அன்றே! அப் பொது நெறித் தவம்புரியும் இயல்பு, தொடங்குங் துன்பமாய் இன்பம் பயக்குங் கல்வியைப் போல்வதொரு தன்மையதாயிற்று. உலகம் வாழ்தல் வேண்டும் என்ற நினைவும் ஆர்வமும் உடையார்க்கு அது வாழ்ச்சி பெற்றால் மகிழ்ச்சி விளையும். இன்றேல் வருத்தம் உண்டாகும். வாழ்ச்சி பெறாத ஒன்று, வீழ்ச்சி உறுவதொன்று, இரண்டும் இருப்பின் இடர்ப்பாடு எய்துவது இயல்பு தானே! சிவபாத விருதயர்க்கு உலகுவாழ்தல் வேண்டும் என்பது விருப்பம். உலகோ வாழ்நெறியில் இல்லை. வீழ்நெறியில் மிகுந்துளது. வாழ் நெறியிலில்லாமையாவன இங்கு யாவை? ஆதியருமறை வழக்கம் அருகியதும் 'அரனடியார் பால் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதொழி'ந்ததும் ஆகும். வீழ்நெறி மிகுதலாவது புறப்புறச் சமயங்களின் பொய் மிகுதல். இருதயத்தில்

உள்ளது என்றேனும் வெளிப்பட்டுத் தோன்றுதல் இயல்பு, இருதயத்தில் சிவபாதம் இருக்கின்றது. அது வெளிப்பட்டுத் தோன்றுதல் உறுதி.

அது வெளிப்படுதற்கு அடிப்படையாய் நின்றது புவிவாழத் தவஞ் செய்யும் இயல்பு, அதன் தொடக்கமாக வந்தது இடர்ப்பாடு. அவ்விடர்ப்பாடு விளையச் சார்பாயிருந்தவை 1. புறப்புறச் சமயப் பொய் மிகுதலும் 2.ஆதியருமறை வழக்கம் அருகுதலும் 3. பூதி சாதன விளக்கம் போற்றப் பெறாதொழிதலும் ஆகிய முத்திறமும். அம்மூன்றும் தவம் புரிதற்கு ஏதுவாயின. ஏதமே இல்லாத சீர் மிக்க சிவபாத விருதயர் இவ் ஏதம் மூன்றும் உலகில் இருக்கக் கண்டதால், அவரது இருதயம் சிவபாதத்திற்கே இடமாயிருந்த நிலையிற் சிறிது தவிர்ந்து இடர்க்கும் இடமாயிற்று. இங்கே பெரிய புராணத் திருவிருத்தப் பாடலை உணர்தல் திருஞான சம்பந்தரது திருவவதார காரணம் இது தான் என நன்கு அறியச் செய்யும். ஆதலின் அதைக் குறித்தல் வேண்டும்.

மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம்
பொய்ம்மிகுத்தே
ஆதியரு மறைவழக்கம் அருகிஅர னடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தாம் இடருழந்தார்.

திருத். புரா. 1921

சமண்கையரும் சாக்கியரும் தம் பொய்ப்பொருள் வழியை மெய்ப்பொருள் நெறியாக மிகைபடச் சொல்லி, உலகை வஞ்சித்துத் தம் மதத்தில் நம்மக்களைச் சேர்த்து விட்டனர் என்பதும், அதனால் முற்கூறிய முத்திறத்துள் அதுபோக ஏனைய இரண்டும் பெருகின. அம்முத்திறத்தையும் கண்டன, சிவபாத விருதயமும் திருவிழிகளும், அக்காட்சி இடர்ப்படுத்தியது. இதைக் கூறிற்று இத்திருப்பாடல். கையரும் சாக்கியரும் தம் பொய் மிகுத்தனர். மிகுத்தமை காரணம், அருகியதும் ஒழிந்ததும் காரியம். மிகுத்தே அருகி ஒழியக் கண்டு உழந்தார் என்று கொண்டுரைத்தல் வேண்டும். தம் பொய்யை மிகுத்தவர் தாம் என்பார் சமண்கையர் சாக்கியர் என்று எழுவாயாக்கினார் ஆசிரியர். மிகுந்தே என்னாமையின், இவ்வாறு உரைத்தல் வேண்டிற்று.

மானினேர்விழி மாதராய்வழு
திக்கு மாபெருந் தேவி கேள்
பானல் வாயொரு பாலனீங்கிவன்
என்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய
இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன்அலேன் திரு
ஆலவாயரன் நிற்கவே.
3.39.1

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடன் ஆய பரமனே
ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே. 3.108.1

திருச்சிற்றம்பலம்

16. தோடுடைய செவியன்

மனையறத்தின் இன்பம்உறு
மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே
ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம்
நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப்
பெறப்போற்றுந் தவம்புரிந்தார்

திருத். புரா. 1922

ஆதியருமறை வழக்கம் அருகியதற்குக் காரணம் பரசமயம் பயின்றதே. அதன் காரியம் இரண்டனுள் ஒன்று பூதிசாதன விளக்கம் அரனடியார்பால் போற்றல் பெறாமை. அவ்விரு காரியத்தையும் போக்க முதலிற் செய்யற் பாலது பரசமய நிரா கரணம். அதைச் செய்யும் பொருட்டு ஒரு மகவைப் பெற நினைந்தருளினார் சிவபாதவிருதயர். அம்மகப்பேற்றிலும் மகடூஉவை வேண்டாது ஆடூஉவை வேண்டினார். அது காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிவித்தது. அது செய்யும் வன்மை அந்தக்காதலனாக இருத்தல் வேண்டும் அன்றோ? பரசமயம் நிராகரித்து நீறாக்கும் காதலன் என்றது அதற்கே. 'புனைமணிப்பூண்' என்றது நிராகரஜயாபரணத்தையும் குறிப்ப தாகும்.

தந்தையார்க்கும் தாயார்க்கும் இக்கருத்தொருமை வாய்ந்தது. இருவரும் பெரியநாயகியாருடன் புகலித்திருத் தோணி வீற்றிருந்தார் சேவடிக் கீழ் வழிப்பட்டனர். கருத்து முடிந்திடப் பரவினர். அவ்வாறு பரவும் காதலியர் மணி வயிற்றில் 'உருத் தெரியவரும் பெரும் பேறு' உண்டாயிற்று. புவிவாழத் தவஞ் செய்யும் இயல்பு காதலனைப் பெறத்தவம் புரிவித்தது. அத்தவம் உலகுய்ய அப்பெரும்பேறு உளதாக்கிற்று. திருவருளைப் போற்றி மகிழ்ச்சியில் திளைத்தனர் இருவரும்.

அவம் பெருக்கும் புல்லறிவின்
அமண் முதலாம் பரசமயப்

பவம் பெருக்கும் புரைநெறிகள்
பாழ்படநல் லூழிதொறும்
தவம் பெருக்குஞ் சண்பையிலே
தாவில் சரா சரங்களெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார்
திருவவதாரஞ்செய்தார்.

திருத். புரா. 1929

அத்திருவவதாரப்பயன் அளவில்லாதன. அவற்றைச் சேக்கிழார் பெருமானார் வகுத்துரைத்த சுருக்கம் அவரவர் அறிவின் பெருக்கத்தால் விரித்துரைக்கத் தகும் பெருமை யுடையது. அவற்றைத் திருஞான சம்பந்தநாயனார் மூர்த்திபுராணத்தின் (21-26ம் திருவிருத்தங்களால்) உணரலாம். அவற்றுள் ஒன்றும் இங்குக் குறிக்கத்தக்க முக்கியம் வாய்ந்ததும் ஆவது யாது? பிற சமயத்தருக்கொழியச் சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கத் திருவவதாரஞ் செய்தார் என்பதேயாகும். 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க வேண்டி இருக்க மறைவேந்தர் திருக்கமலவாய் திறந்தழுதார் என்றதும் ஈண்டு நினைக. 'வண்டமிழ் செய்தவம் நிரம்ப' (அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல' என்ற பெரியபுராணத் தொடர்ப்பொருள்களை அங்குணர்தல் வேண்டும்) அவற்றை உணர்ந்தே மாதவச் சிவஞான முனிவர், தமிழ் அடையைச் சிறப்பிற் கொண்டு,

காழிமாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை
யேழிசைத்தமிழ் ஞானசம்பந்தன் எம் அடியான்
யாழ நீ பெறவும் உரு இங்கு வந்தளிப்பான்
ஆழியோய் அதுகாறும் இவ்வரைப்பினில் அமர்ந்து
ஈட்டருந்தவம் - இயற்றுக என்றருளி யதாக

இறைவன் திருவாக்காக முத்தமிழ் விரகர் பாடல்களால் பரஞ்சுடர் திருவுருப்பெற்றான் மாலோன் என்று அறிவிக்கும இடத்தில் உளங்குளிர்ந்து வெளியிட்டருளினார்.

ஆதியருமறை வழக்கம் அருகிய நிலை தீர்த்து சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கிப் பயிலவும். அரனடியவர்பால் பூதி சாதன

விளக்கம் போற்றல் பெறாதொழிந்ததுயர் தீர்ந்து, தொண்டர் மனம் களிசிறப்பத் தூய திருநின்ற நெறி எண்டிசையும் தனிநடப்பவும் திருவவதாரஞ் செய்தார். மேதினிமேற்சமண்கையர் சாக்கியர்தம் பொய்மிகுத்தமை ஒழிந்து, அவம் பெருக்கும் புல்லறிவினமண் முதலாம் பரசமயப் பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்படத் திருவவதாரஞ் செய்தார். இவற்றால், தந்தையார் பிரார்த்தனை நிறைவேறியது எதிர்கால நிகழ்ச்சியைத் துணிவு பற்றி இறந்த காலத்திற்கொள்ளல் குற்றம் ஆகாது.

திருவவதாரம் புரிந்தபின்னர், திருக்கழுமலத்தோர் எல்லோரும் உற்ற மகிழ்ச்சிப் பெருக்கும் உவகைப் பேச்சும் அளவுட்படாதனவாகும். அவர் சிவனருள் எனப் பெருகும் சித்த மகிழ்ச்சியுற்றனர். அது காழிவேந்தரது திருவரவுக்குரிய நிமித்தம் ஆயிற்று சோலை முழுவதும் தென்றலார் வந்துலவ மன்றலும் பரவிற்று. விண்ணவரும் மலர்மழை சொரிந்து, மண்ணகத்தில் வந்து மாமறையவரோடு ஓமகாரியம் செய்தனர். எங்கும் மறையொலி விளக்கம் உற்றது. மரம் செடி கொடி புட்கள் முதலியன தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருகப் பெற்று உயர்ந்தன. குளம் முதலியவற்றில் கலங்கிய நீரும் தெளிந்தது, தண்ணீராயிற்று. விசும்பும் அழுக்கு அகன்றது. எல்லாத்திசையும் மங்கலமாகப் புட்கள் ஒலித்தன. மங்கள வாத்தியங்கள் வாசிப்பவர் இல்லாமலே தாமே இயம்பின.

சிவபாதவிருதயர் தம் திருமனையில், மகவு பிறந்தமைக்குச் செய்யும் அணிசெய்தார். சிந்தைக் களிப்புற்றார் நெய்யணிவிழா வொடு திளைப்பாரானார். மங்களகர முழக்கம் பொங்கச் செய்தார். சாதகன்மம் புரிதற்குரிய பல சடங்குகளையும் செய்வாரானார்.

சாதகன்மம்:- 1. அத்திரமந்திரத்தை அறைந்து நூறு முறை ஓமம் செய்து 2. வாம மந்திரத்தை வாய்மலர்ந்து குழந்தையின் திருமுகத்தை நோக்கி 3.பஞ்சப்பிரம மந்திரங்களைப் பகர்ந்து உச்சி மோந்து, 4.தற்புருட மந்திரத்தைச் சாற்றி வலச் செவியிற்புகுத்தல்.

மறைக் குலமடந்தையர் திருமாளிகைகளைச் சுடர்மணி விளக்குக்களால் அழகுறுத்தினர். பொற்சுண்ணமும் மகரந்தப் பொடியும் வீசிக்கொண்டனர். மேடைகள் பாலிகையோடு விளங்கின. பொற்-குடங்கள் புண்ணிய நீர்நிரம்பிப் பொலிந்தன. தானதருமங்கள் பொன்

முதலிய பொருள்கள் விழாவில் சாலச் செய்யப்பட்டன. நம்பனடியவர்க்கு நல்லவழி வந்த செல்வ மெல்லாம் நழுவாது நண்ணிய புண்ணியம் பெருகிற்று. எங்கும் பூந்தோரணம் இலங்கின. வேப்பிலை செருகிடல் முதலிய காப்பு வினைகள் விளங்கின. பலவகைப் புகைப் பொருள்களாலும் புகைவளர்த்துத் தெய்வமணம் வீசுந் தொழில்களைப் புரிந்தனர் அம்மகளிர் முதலோர். பத்துநாட்களிலும் மாமறை நூல் விதிப்படி (திருவருட்சிறப்புறும்படி) செய்யத்தக்கன எல்லாம் செய்து இன்புற்றார்கள். திருப் பெயர் வைத்தல், பதினொன்றாவது நாளில் நிகழ்ந்தது.

சேமவுதயப் பரிதியிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற் குழவி என்னத்
தூமணி நிரைத்தணி செய் தொட்டில் அமர்வித்தார்

திருத். புரா. 1944

திருஞான சம்பந்தர் ஆகற்பொருட்டுப் பெருமலை பயந்த கொடி, பேணு முலையின் பாலை அருமறையொடு குழைத்து அமுது செய்தருளப் பெறவளர்வாரை, அன்னையார் பகவதியார் சிவனடிப் பத்தியையே தம் திருத்தனங்களினின்றும் சுரந்து அமுது செய்ய ஊட்டியருளினார். உலகவழக்கிற்கு வேறாகத் திருநீற்றுக்காப்பையே குழந்தையின் திருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார். மற்றைக்காப்புகள் அத்திருக் குமாரர்க்கு மிகை என்னும் நினைவு எல்லார்க்கும் தோன்றுமோ? 'பகவதியார்' 'மனைவியார்' அல்லரோ?

இதன்பின், ஆசிரியர் சேக்கிழார் பெருமானார் ஒரு பிள்ளைத் தமிழும் உண்மைப் பிள்ளைத் தமிழே எனப் பாடியருளினார்.

குழந்தை தளர் நடையிட்டது. ஓராண்டாயிற்று. நடந்து விளையாடத் தொடங்கிற்று. கொழும் பொடி ஆடிய கோலவீதியில், பேரொளி வீசி வந்து சிற்றில் சிதைத்தல் முதலிய இளமைச் செயல்கள் ஆற்றியது. தோணியப்பர் திருவருட் பேற்றுக்குரிய தவத்தின் முளைபோல வளர்ந்தது. மூவாண்டு நிகழ்தலின் அருமறையும் வருமுலகும் உய்யலாயின.

சேவாண்ட கொடியவர்க்குச் சிறுவர் ஆகிய காழிவேந்தர்க்கு மூவாண்டில், நாவாண்டபல கலையும் நாமகளும் நலம் சிறப்பப், பூவாண்ட திருமகளும் புண்ணியமும் திருவெய்த ஒன்று நிகழ்ந்தது.

அதுதான் இவர் புராணத்தின் தலைச் செய்யுளில் அறிவிக்க நின்ற இன்பச்செய்கை.

துறக்குமா சொலப்படாய்
 துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறிலாத என்னை
 மையல் செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்
 பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்குமாறு காட்டினாய்க்கு
 இழுக்கு கின்றது என்னையே
 2.98. 5

என்று திருத்துருத்தியில் ஏகி அங்கு வீற்றிருந்தருளும் சொன்ன வாறறிவாரைத் துணையடி தொழுது பாடியருளிய திருப்பாடலை உளத்திற் கொண்டு, சேக்கிழார் பெருமானார்.

பண்டுதிருவடி மறவாப் பான்மையோர்
 தமைப்பரமர்
மண்டுதவ மறைக் குலத்தோர்
 வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டின் நிலை தரவருவார்
 தொடர்ந்த பிரிவுணர் வொருகால்
கொண்டெழலும் வெருக் கொண்டாற்
 போல் அழுவார் குறிப்பயலாய்
 திருத். புரா. 1958

என்று பாடியருளினார். 1. இவ்வழுகையும் 2. தந்தையார் நீராடச் செல்லுங்கால் பின் தொடர்ந்து சென்றழுத அழுகையும், அவர் திருக்குளத்து நீராடியவேளையில் அவரைக் காணாதவராய், முன்னுணர்வு மூளத்தொடங்கிய அழுகையும் ஆகமும் முறை-யழுகையும் 1. வேத நெறிதழைத் தோங்கல் 2. மிகு சைவத் துறை விளங்கல் 3. பூதபரம்பரை பொலிதல் ஆகிய மூன்றற்கும் காரணமான உண்மை ஆதலைப் புனிதவாய் மலர்ந்தழுதலாக ஓதப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

17. திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பாடல்

ஞானத்தால் தொழு வார்சிவ ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனைநான் அலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனை நானும் தொழுவனே.

இத் திருப்பாடலில், 'சிவஞானிகள்' 'ஞானத்தால்' என முதலிலும் முடிவிலும் உள்ளவற்றைச் சிலஞானிகள், ஞானத்தாய் என்று அச்சிடுவித்தும் பாடியும் வருதல் பிழை. காரணம் இதில் எழுத இடமில்லை. வாக்கிய லட்சணம் தெரிந்தோர்க்கு அப்பிழை தானே விளங்கும்.

குறிப்புரை

ஞானத்தால் :- யோகத்தாலும் கிரியையாலும், சரியை யாலும் வழிபடுதலின் வேறாதலை விளக்க நின்றது. உண்மை ஞானத்தால் (துசகாரியத்தால்) தொழுவார். அவர் சிவ ஞானிகள், சில ஞானிகள் எனிற் பல ஞானிகள் எதனால் தொழுவார்கள்? சிவஞானிகளுள் சில பல எனல் குற்றமே தரும். சிவஞானிகள் உன்னை ஞானத்தால் தொழுவார். நான் உன்னை ஞானத்தால் தொழுவேன் அல்லேன். உண்மை ஞானத்தால் உன்னை தொழுவார்கள் தொழக்கண்டேன். கண்டதால், ஞானம் பெறாத நானும் உன்னை ஞானத்தால் தொழுவேன். ஞான பூஜையைச் செய்வது ஒன்றே என்பால் உளது. அப்பூஜையும் அதற்குரிய சிவஞானமும் எனக்கில்லை என்று அது நிறையப் பெற்ற சொல்வேந்தர் இச்சொல்லால் தம் நிலையைத் தாம் எண்ணுமாற்றில் வைத்து நமக்குபதேசித் தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

18. திருநாவுக்கரசு அடிகள் அருளிய உருவகம்

செய்யுள் அணியுடையதாயின் சிறக்கும். அணியுறாச் செய்யுள் பணிவுறாத்தையல் போலப் பொலிவுறாது. நன்னூலார், 'எழுவகைத் தாதுவின் உயிர்க்குடல் போல், பல சொல்லாற் பொருட்கிடனாகச் செய்வன செய்யுள்' என்னாது 'அணிபெறச் செய்வன செய்யுள்' என்றார். அஃது அறிவிற் குறைந்தார் செயற்கரியது. பேரறிவினார்க்கே அணியமையச் செய்யும் வல்லமையுண்டு. அதனை 'உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்' என்றார் பவணந்தி முனிவர்

அணியே செய்யுட்குச் சிறந்தது என்ற காலம் போய்த் தொனியே பெரிது என்னும் ஆராய்ச்சி தோன்றிப் பல நூற்றாண்டாயின. வடமொழியிலே 'தொனியாலோகம்' 'இரச கங்கா தரம்' முதலிய சாலச் சிறந்த நூல்களைக் கற்றுணர்ந் தோர்க்கே அத் தொனிவிசேடம் துலங்கும். தமிழிலே பரிமேலழகர் திருக்குறளிற் பதினெட்டிடங்களில் அறிவித்த 'குறிப்பெச்சம்' அத் தொனியில் அடங்கும்.

அணியியல் சொல்லணி பொருளணி இரண்டனையும் உணர்த்தும். சொல்லணியியல் எழுத்தாலும் சொல்லாலும் அமைக்கும் மடக்குவகையையும் சித்திரக்கவியையும் வழுக் களையும் மலைவையும் அறிவிக்கும். பொருளணியியல் தன்மை, உவமை, உருவகம் முதலிய பற்பல அணிகளை விளக்கும். தமிழிலே தண்டியலங்காரம் மாறனலங்காரம் சந்திராலோகம் (யாப்பு) அணி-யிலக்கணம் என்பனவே உள்ளன. வடமொழியில் அளவில்லாத நூல்கள் இருக்கின்றன. நாமகள் கழுத்தணி (சரஸ்வதி கண்டாபரணம்) என்னும் நூல் மதுரைச் செந்தமிழிலே தொடர்ந்து வெளியாயிற்று. அதியற்புத அலங்கார சாத்திரம் அது. அணியன்றிப் பிணி மிக்க செய்யுள் பாடும் பாவலர்க்கு அந்நூல்கள் வேண்டாதனவே.

திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில் எத்தனையோ அணிகள் இயல்பாக அமைந்துள்ளன. அவற்றுள் உருவகவணியை மட்டும் எழுதுதல் வேண்டும் என்று தெய்விகப் பேரவைத் தலைவர் சீலத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் நல்லுள்ளம் ஒரு சிறிது ஆற்றல் பயந்தது. அப் பயமே இப்பயனை விளைத்தது.

உருவகவணி என்பது உவமைக்கும் பொருட்கும் (உவமேயத்-திற்கும்) வேறுபாடொழித்து ஒன்றென்னும் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமையுளதாக்கிக் கூறுவதோரழகு. ரூபகம் என்ற வட சொல்லைத் தமிழிலே உருவகம் என்பர். அதன் இயல்பு உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதல், ஒற்றுமையுளதாக்கல் என்றால் அவ்விரண்டிற்கும் வேற்றுமை யில்லாதவாறு சொல்லல். பொருள் இரண்டும் வேறுபட்டனவே ஆயினும் சொல் அவற்றின் வேறுபாட்டைத் தோற்றாது. அவ்வுருவகவணி தொகை, விரி, தொகைவிரி, இயைபு, இயைபிலி, வியநிலை, சிறப்பு, விரூபகம், சமாதானம் உருவகம், ஏகாங்கம், அநேகாங்கம், முற்று, அவயவம், அவயவி எனப் பதினைந்து திறத்தில் அமையும் என்று தண்டியலங்காரம் கொண்டியன்றது. இயன்றவரை அப்பர் அடிகளார் அருள்மொழிகளையே எடுத்துக் காட்டி விளக்க முயல்வோம்.

'வாட்கண்ணி வாட்டமதெய்த அம்பர வீரூரியானும் ஆரூரமர்ந்த அம்மானே' என்றதில் 'வாட்கண்' என்பது தொகையுவமம். வாள் உவமம். கண் பொருள், அதனைக் கண்வாள் எனின் உருவகமாம். கண்ணாய உவமேயத்தில் வாளாய உவமானத்தை ஏற்றிக் கண்ணையே வாளென்றதும் உருவகம்.

திருவாரூர்ப் பெருமானைத் தேன் போன்றவன் என்னும் இடத்தில் 'ஆரூரில் வார்தேனை வாய் மடுத்துப் பருகியுய்யும் விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே.' என்றருளினார் நம் அப்பரடிகள். பூங்கோயில் ஆதலின் ஆரூரில் வார் (ஒழுகுந்) தேன் என்று உருவகித்தருளினார் (பூ+தேன்).

'பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறு' என்றது உவமை. 'மேனிப்பவளம்' (4-6-8) என்றது உருவகம். உவமேயம் ஆகிய மேனியில் உவமையாகிய பவளத்தை ஏற்றி யொன்றாக் கூறியது.

வெந்தநீ றருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழும் நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே, 4.11.5

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே 4.11.12

எனத் திருநீற்றையும், வேதாங்கங்களையும், சிவ வேணியையும், தாமரையையும், பஞ்சகவ்வியத்தை ஆடுதலையும், கோட்ட மின்மையையும், நமச்சிவாயத்தையும் 'அருங்கலம்' ஆக உருவகித்தருளினார்.

'கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது' என்பதை எல்லோரும் உள்ளத்திற் கொண்டொழுகின் நாடு ஈடேறும், பீடுபெறும், 'வளைவிலியாய் எல்லார்க்கும் அருள்செய்வான்... அடியே சிந்திக்கப் பெற்றேன் நானே' என்னுந் திருத் தாண்டகத்திலே 'வளைவின்மை' என்றதும் இங்கே 'கோட்டம் இன்மை' என்றதும் 'சலம் இலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அ(ல்)லால், என்றதிற்றொடங்கும் 'சலம் இன்மை'யும் ஒரு பொருளவாதல் அறிக. சிவஞான சித்தியிலே,

சலம் இலனாய் ஞானத்தால் தனையடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவன் அவர்தாம் செய்வினை தன்னால்
நலமுடனே பிறர் செய்வினை யூட்டியொழிப் பானாய்
நணுகாமல் வினை அவரை நாடிக் காப்பன்

சிவ. சித். சுப. 307

என்றதையும் நோக்குக. சலமில்லாத நலமிகும் ஆட்சியே நாட்டில் வறுமை, பிணி, முதலியன தோன்றாது காக்கும். அதனாற்றான், கோட்டம் (வளைவு-சலம்) இன்மை கோவினுக்கு அருங்கலம் என்றுருவகித்தருளினார். 'அரசர்க்கு உரித்து அருங்கலம் என்பது தமிழிலக்கண நூலில் நான்கன் வேற்றுமைக்கு எடுத்துக்காட்டுகளுள் ஒன்று. 'அருங்கலன்' பெறுதல், விற்றல் முதலியவற்றின் அருமை-யதாகிய பூண் (அணிகலம்).

நாலாந் திருமுறையிலே பதினைந்தாவது திருப்பதிகத்திலே முழுவதும் உருவகமே உளது. பற்றற்றார் சேரும் பழம் பதிப்பொருளாய சிவத்தைப் பணிந்தெழுவார் பாவம் நாசமாகும் உண்மையை அத் திருப்பதிகத்தைப் பாராயணம் பண்ணுவார் அநுபவத்தில் அறிவர்.

அருமணி, மாணிக்கம், பவளம், முத்து, மருந்து, வலம்புரி எனக் கடல்படு பொருளாயும், பொன்னாயும், சுடர், சுடரிற்றிகழும் துளக்கிலி, விளக்கு, கதிரொளி, நிலாச்சுடர் மதி, ஞாயிறு, வளர்மதி, கண் முதலியனவாயும் கட்டியாயும் கரும்பாயும் கரும்பின் இனிய சாறாயும், மலர், கனி, தேனாயும், மலையாயும் களிறு, அரிமானேறு, இராசசிங்கம், எழிலேறு, பேரேறு, அடலேறு, முதலியனவாயும், கற்பகம், விதி, புகழ், ஞானக் கொழுந்தாயும் உருவாகித்தருளினார். அத் திருப்பதிகத்திலே பாசூர் நிலாய பவளத்தை, சிற்றம்பலத்து எம்திகழ்கனியை, ஆனைக்காவில் அணங்கினை, கானப் பேரூர்க்கட்டியை, கானூர் முளைத்த கரும்பினை, வாய்மூர் வாழும் வலம்புரியை, அதிகை மூதூர் அரசினை, உறந்தை ஓங்கு சிராப்பள்ளி உலகம் விளக்கு ஞாயிற்றை, கருகாவூரிற் கற்பகத்தை, புத்தூருறையும் புனிதனை முதலிய செந்தமிழ்த் தொடர்களின் பொருளாழத்தை அறிவார் ஆநந்தக் கடலில் அழுந்தித் திளைப்பார். 'பெருவேளூர் எம்பிறப் பிலியை' என்றதொடு 'பிறவியை மாற்று வானைப் பெருவேளூர் பேணினானை' என்றதையும் நோக்குக. 'உறுகயி றூசல் போல' எனத் தொடங்குந் திருவிருத்ததில் 'பாதத்து அறு கயிறூசலானேன்' என்றதை உவமையாயும் உருவகமாயும் கொள்ளலாம். 'ஆனேன்' என்றதனை 'ஆள்வாரிலிமாடு ஆவேனோ' என்பதுபோற் கொண்டுரைப்பினும் அவ்வீரணியுமாகும்.

உடல் இடிஞ்சில் (நெய்கொள்ளும் மண்ணகல்), நெய் அமர் திரி, நெஞ்சத்துள் விளக்கு, 4:29:2 எனவும் உள்ளத்த திரி எனவும், வருந்தினகளிறு தன்னை வருத்துமா வருத்தவல்லார் எனவும், உருவகித்தவற்றை அறிவோர், 'மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றம் என்னும் வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடம் ஆகாதே, சிவனை நினையுமா நினைந்து உய்யலாம்.

முத்தினை மணியை பொன்னை
முழுமுதற் பவளம் ஏய்க்குங்
கொத்தினை வயிர மாலைக்
கொழுந்தினை அமரர் சூடும்
வித்தினை வேத
வேள்விக் கேள்வியை 4.74.1

என்ற உருவகத்தை அழகிதா நினைந்தவாறே (திருத்தாண் டகத்திலே)

'திருவே என் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே' முதலிய வுருவகத்தையும் நினைந்து மகிழ்ந்துய்வர்.

மனத்தோணிபற்றி மதிக்கோலை யூன்றிச் சினச்சரக்கை யேற்றிப் பிறவிக்கடலில் ஓடும் போது சித்தசன்(மனன்) என்னும் பாறை தாக்கி மறியும். அப்போது ஒற்றியூரனை அறியவும் ஓடும் தோணி ஓடாது தாக்குண்டு கடலில் ஆழ்ந்து மீண்டும் பிறவிக்கு ஆளாதலையறியவும் இயலாது. அக்கேடு உண்டாகாதவாறு ஒற்றியூருடைய கோவை உன்னுகின்ற உணர்வை அவனை வேண்டிக் கேட்டு நல்கப் பெறல் அறிவிற்குத் தக்கது.

'மனம் எனும் தோணி பற்றி மதியெனுங் கோலை ஊன்றிச் சினம் எனும் சரக்கை (வினை எனும் சரக்கை 265) ஏற்றிச் செறிகடல் ஓடும்போது மனன் எனும் பாறை தாக்கி மறியும்போது அறிய ஒண்ணாது உனை உ(ன்)னும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே!' இதில் மூன்றாவதடியில் 'மனன்' என்றது மன்மதனை. அவனுக்குள்ள சித்தஜன் என்னும் பெயர்க்குரிய பொருளை உணர்த்த 'மனன்' என்னும் ஆண்பாற் பெயரைக் குறித்தருளினார் அப்பர் அடிகளார். மனதெனும் பாறை என்றது பிழை. 'மனனில் வைக்குஞ் செறிவிலேன்' என்றதும் அறிக. இங்குச் சித்தஜன் என்னும் பொருட்டன்று. 'பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்ற தாயுமானவர் பாடலில் உள்ள படி, செறிகடல் என்றது பாசக்கடல் என்றதாயும் கொள்ளல் தகும்.

உயிர்க்கு நிலை உடம்பு. அவ்வுடம்பை இறைக்கும் ஏற்றத்திற்குக் காலாக வுருவகித்தார். உடம்பினுள் இருக்கும் உள்ளத்தைச் சால் (தாழி) ஆகவும், அம்மனத்தின் நீங்காத துயரத்தை ஏற்றம் ஆகவும் அத்துயரத்தால் பெருகும் துன்பத்தை ஏற்றக்கோல் ஆகவும் அக்கோலைப் பற்றி (மண்ணுலக வாழ்வு ஆகிய) நீரை இறைப்பது பயன் சிறிதும் இல்லாமல் பாழாவதாகவும் அந்நீர் எப்பயிர்க்கும் பயனாகாமல் விழலுக்கு இறைத்த வெட்டிப் பாழாகவும் அவ்விறைப்பு மிக்க இளைப்பை விளைப்பதாகவும், இவ்வளவும் ஐம்பொறிகளின் தொடர்பால் உண்டாவதாகவும் உணர்த்தும் ஒரு நல்ல வுருவகம் இது :

உயிர்நிலை யுடம்பே காலா உள்ளமே தாழி யாகத்
துயரமே ஏற்றம் ஆகத் துன்பக் கோலதனைப் பற்றிப்

பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்கு நீர் இறைத்து மிக்க
அயர்வினால் ஐவர்க்கு ஆற்றேன் ஆரூர் மூலட்டனீரே
4.52.7

இதில், சுழிய விடப்பட்ட பயிர் சிவநெறி யொழுக்கம் வழாத முறையால் எய்தற்பாலதாய ஆன்மலாபம். பாழ் என்றது குறிக்கோள் இலாது கெடுவதாய புன்னெறி.

'முப்பதும் முப்பத்தாறும் இடுகுரம்பை அப்பர்போல் ஐவர் வந்து அதுதருக இதுவிடு என்று ஒப்பவே நலியலுற்றால் ஐவர்க்கு ஆற்றுவார் ஆர்?' பொறியிலா அழுக்கை ஓம்பிப் பொய்யினை மெய்யென்றெண்ணி நெறியிலா நெறிகள் சென்று உய்யுமாறறிய மாட்டார் ஆற்றாது அலமருவர்.

நள்ளிருளில் நட்டமாடும் நாதனை நம் உள்ளிருளாகிய அதனை நீக்கி ஒளிகண்டு, கண்டவொளியாற் கருதுவார்க்கு ஆற்ற எளியானைக் காண்டல் வேண்டும். வேறு எத்திறத்தாலும் காண்டற்கரிய கடவுளை அத்திறத்தாற் காண முயன்றால், அம்முயற்சி நிறைவுற இது செய்க.

வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீ தன்றன் பாதம்
மெள்ளத்தான் அடைய வேண்டின் மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார் காலத்துக் கலந்து நின்று
உள்ளத்துள் ஒளியும் ஆகும் ஒற்றி யூருடைய கோவே
4.45.1

என்ற திருநேரிசை காட்டும் வழியினும் வேறு சிறந்த வழி இல்லை. இதனைத் திருவுந்தியாரில்,

கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாம் என்றுந்தீபற
வீடும் எளிதாம் என்றுந்தீபற 23

என்று உணர்த்தியருளினார் நாம் உய்ய வந்த தேவநாயனார்.

இல்லம் உடையார் அவ்வில்லத்துட்புக்கு ஒளித்திருக்குங் கள்ளரொடு கலத்தலை நம் அப்பரடிகளார் பிறிதொரு திரு நேரிசையிலும்,

வெள்ளநீர்ச் சடையனார்தாம்
வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு
உறங்கும் நான்புடைகள் போந்து
கள்ளரே புகுந்தீர் என்னக்
கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோம் என்று நின்றார்
விளங்கிளம் பிறையனாரே

4.75.9

என்றருளினார். கருளர் - கள்ளர், வெருளர் - வெள்ளர். கருமியர் - கம்மியர், பெருமகன் – பெருமான் – பெம்மான் – அரைமீ – அம்மீ – அம்மி முதலிய பல சொற்களால் இம்மரூஉவை அறியலாம். கருநாடியர் - கன்னடியர் என்றலும் அது.

ஏன் இங்கு இப்பொருள் கருதலாயிற்று? இவ்வினா செவ்வினாவே, சிவத்தைப் பேணுந் தவத்தோர், வெளிநாட்டம் அற்று உள் நாட்டம் உறக்கடவர். 'தொண்டர் அகம் அ(ல்)லாற் கோயில் இல்லை' என்றதும் அத் தொண்டர், நகமெலாந்தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி முகமெலாம் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்தும் அடிமை பூண்டிருப்பின் அவர் அகமே கோயில் ஐயனுக்கு என்றதும் அறிவர்

உணர்வு எனும் இமை திறந்து விழித்திலேன்

பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறுபத்தர்கள்
சித்தத்துட்புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே

4.20.10

தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என் உள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

4.9.12

என்னும் திருநாவருண் மொழிகளால், அகத்துறைவானை அகத்திலேதான் தேடி அறிந்து கொள்ளல் வேண்டும். புறத்திலே தேடிப் பொழுது போக்கலாகாது என்றும் உணர்வர். அவ்வுணர் வுற்றால், மேலே சுட்டிய உள்ளொளியை உணர்தல் வேண்டும். அதனை உணர இவ்வுருவகத்தை ஓதிஓதிப் பயின்று அநுபவம் உறுதல் கடனாகும்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிர்எனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே 4.75.4

இதில் உடம்பாகிய வீட்டில் மனமாகிய மண்ணகலில் பாச ஞானம் பசுஞானம் ஆகிய நெய்யை இட்டு உயிராகிய திரியைக் கலந்து பதிஞானமாகிய தீயாற் சுடர்கொள்ள இருந்து பதியை நோக்கி, அவனே தானே ஆகிய அந்நெறி, யேகனாகியிறைபணி நின்று அயரா அன்பு செய்யின், கடம்பன் தாதையின் கழலடி நிழலில் இறுமாந்திருக்கலாம் என உபதேசித்தருளினார். இத்திரு நேரிசையால் உடம்பை மனை-யென்றருளிய நம் அப்பரடிகளார் வேறொரு திருநேரிசையில், இவ்வுடலை நம் உடல் அன்று அவன் கோயில் என்று உபதேசித்துக் காட்டும் உருவகம் இது:

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமை ஆக
வாய்மையே தூய்மை ஆக மனம் மணியிலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலும் நிறையநீர்அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

4.76.4

இத் திருநேரிசைப் பொருளநுபவம் எளிதின் அடையலாம். அடைந்தால் இதன் உண்மையே பேரின்பமாக வளரும்.

இவ்வுடல் நமது என்னும் மமதை உள்ள வரையில் அது சிவாலயம் என்னும் உண்மையை உணர்தல் இயலாது. அறிவரியான் தன்னை அறிய வேண்டி இவ் யாக்கையை ஆக்கினான். ஆக்கி அங்கங்கே உயிரை அமைத்தான்.

கால்கொடுத் திருகை ஏற்றிக் கழிநிறைத்து இறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால் சுவர்எடுத்து இரண்டு வாசல்
ஏல்வுடைத்தா அமைத்து அங்கு ஏழு சாலேகம் பண்ணி
மால்கொடுத்து ஆவிவைத்தார் மாமறைக் காடனாரே
4.33.4

என்னுந் தேவாரம் சிவஞான சித்தியாரிலே ஆக்கையை ஆக்கினவன் யாராலும் அறிவரியான் ஆகிய அரன் என்ற உண்மைக்கு ஆதாரம் அன்றோ? தன்னை அறிய இவ் யாக்கை ஆக்கினன் என்றது மால்கொடுத்து ஆவி வைத்ததால் விளங்கிற்று. அவ் வாய்மையை அறியாமல்,

கால்கொடுத்து எலும்பு மூட்டிக்
கதிர்நரம்பு ஆக்கை ஆர்த்துத்
தோல்உடுத்து உதிரம் அட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஒல்எடுத்து உழைஞர்கூடி
ஒளிப்பதற் கோ 4.67.3

இதை ஆக்கினான் ஆண்டவன்?

ஆக்கைதொறும் உயிரை வைத்தான், அவ்வுயிர்க்கு உயிராய் அறிவு கொடுத்தான். அருளால் அவ்வுயிரொடும் அவ் யாக்கையில் நொடியும் பிரியாமல் உறைகின்றான், அந்தப் பிரியாத பெரியானை மறவாமல் நம்மை நாம் மறந்து, ஊனினுள் உயிரைவாட்டி உணர்வோம் ஆனால் எளியனாவான். அவ்வாறான பொழுதுதான் அவனே இவ் யாக்கையில் உள்ளான் 'நாம் அலோம்' என்றுணர்வோம், அவன் இரக்கத்தால் நம்மைப் பெரும் பிறவிக் கடலினின்றும் பேரின்பக் கரையில் ஏற்ற நம்முட் செறிதலை அறிந்து தெளிவோம். அச் சிந்தையுந் தெளிவும் ஆகித் தெளிவினுட் சிவமும் ஆகும். ஆகவே அதனைச் சிவஞான சித்தியார்,

அறிவரியான் தனைஅறிய, யாக்கை ஆக்கி
அங்கங்கே உயிர்க் குயிராய் அறிவு கொடுத்து அருளால்
செறிதலினால் திருவேடம் சிவனுருவே யாகும் சித்தி.324

என்றது. எனவே அச் சிவனுருவாகிய திருவேடத்திற்கு நிலைக்களம் ஆன இக்காயம் கோயிலாயிற்று. ஆகவே 'ஊனுடம்பு ஆலயம்' அதன் (உள்ளத்தாகிய) உள்ளம் பெருங் கோயில்' (மூலஸ்தாநம்) வள்ளற்-பிரானார்க்கு வாய் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம். கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே. இது முதலாவது நிலை. இவ்வுண்மை யுணர்ந்துள்ளவர் சிவோஹம் பாவனையால் ஜீவபாவம் கெட்டுச் சிவபாவம் வளரப் பெறும் தொடக்கத்தில், சிலசில வேளைகளில் ஜீவனாகவும் இருப்பன். பல வேளைகளில் சிவனா-யிருப்பன். 'சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனும் ஆவர்' என்று எச்சவும்மை கொடுத்தோதினார். இஃது இரண்டாவது நிலை.

குறியால் இதயத்தே அரனைக் கூடும் (யோகக்) கொள்கையினால் அரன் (சிவன்) ஆவன் என்றார். இது மூன்றாவது நிலை. குறி-அருண்ஞானக் குறி

குறியொடு தாம் அழியும் நெறி ஒன்று உண்டு. அதிற் குறி என்றது ஞானத்தை. தாம் என்றது ஞாதுருவை. அவ் வீரியல்பும் அழியும் நெறி என்றது ஞேயம். (சிவமாகிய காணப்படும் பொருள்) ஒன்று மாத்திரமாய் நிற்கும் நெறி. 'குறியொடு தாம் அழியும் நெறியதனால் சிவமேயாய் நின்றிடுவார்' என்றருளினார் அருணந்தி தேவநாயனார். இது நாலாவது நிலை, இதுவேமுடிந்த நிலை. முதலாவது ஞானத்திற் சரியை இரண்டாவது ஞானத்திற் கிரியை, மூன்றாவது ஞானத்திற் யோகம். நாலாவது ஞானத்துள் ஞானம். இம்முத்தி நிலையைப் பெறுதலையே 'கழலடி காணலாமே' என்றருளினார் நம் அப்பரடிகள். விரிவஞ்சி நிறுத்தினாம்.

வாழ்க திருநெறி! வளர்க திருமுறைப் பயிற்சி!

திருச்சிற்றம்பலம்.

19. அப்பர் உவமையுள் ஆமையும் ஒன்று

ஆமையைச் சூடுமிகாத உலைநீரில் இட்டால், ஆநந்தமாகத் திளைக்கும். சூடு ஏறஏற ஆமைக்கு அழிவு நெருங்கும். புலன்வழி நடக்கும் மாக்களும் அதனால் விளையும் பெருந்துன்பங்களை அறிவதில்லை. புலனெறி நீங்கி அருள் நெறியில் ஒழுகுவதே பேரின்பம் பயப்பது.

ஆமை நீருள் வாழும் உயிர் என்பது முன்பே அறிந்ததே. ஆயினும் அதன் இயல்புகள் எல்லாம் நமக்குத் தெரியா. உயிர் நூலறிஞர் அறிந்தது மிகுதியாயிருக்கலாம். நம் முன்னோர் அறிந்து உணர்த்தியவற்றுள் ஓரியல்பு மட்டும் இதில் எழுதப்படும். இதனால் நமக்கு உண்டாகும் பயன் பெரிது. துன்பத்தில் வீழ்வதை இன்பத்தில் வாழ்வதாக எண்ணி மீண்டும் மீண்டும் பிறந்திறந்து துயருறுந் தொல்லையைத் துறக்க விரும்புவார்க்கு இது போன்ற உண்மையும் உவமையும் பெரும்பயன் விளைக்கும்.

கூற்றுவன் உடம்பும் உயிரும் ஒருங்கு கூடிநிற்பதை இரு கூறுபடுத்தும் ஒரு வேளையை உற்று நோக்கியிருக்கின்றான். உடல் வேறு உயிர் வேறாகக் கூறுபடுவது உயிரின் வினையும் அன்று. உடலின் செயலும் அன்று. கூடிய இரண்டிற்கும் உள்ள பொதுத் தொழிலும் அன்று. அவற்றிற்கே உரிய வேலையா யிருந்தால் உயிர் நினைத்தவாறே உடலோடு கூடவும் பிரியவும் கூடும். கூடியதை அறிந்து மகிழாத உயிர் உடலினின்றும் பிரியும்வரையில் 'பிரிந்துவிடுவேனோ' என்றும், 'இவ்வுடம்பு பிரிந்து விடுமோ?' என்றும் வருந்துகின்றது. உயிரே உடம்பை எடுத்துக் கொள்தாயின். அவ்வருத்தம் அடையக் காரணமில்லை. அழகற்ற உடலைத்தள்ளி, அழகுற்ற உடலைக் கொள்ளலாம். உடலை அடைவது உயிர்வயத்தில் இல்லாமையால் வந்த உடலைச் சுமந்து வருந்தி நடத்துகின்றது. உடலினின்றும் பிரிப்பது உயிர்கட்கும் உடற்கும் வேறான ஒன்றன் காரியம். அது திருவருட்குள்ள பலவேறு ஆற்றல் (சக்தி)களுள் ஒன்று. அஃது அவ்வவ்வுயிர் செய்த கருமத்திற்கு ஏற்றவாறு நிகழும். காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது என்பது முதுமொழி. கருமத்தை உணர்ந்து ஒத்துக்கொண்டு அதற்கு அஞ்சி ஒழுகும் பூமியே நாம் வாழும் பூமி. அதனால்தான் அதைக் கருமபூமி என்றும் வழங்கிவருகின்றனர்.

இவ்வுலக வாழ்க்கை ஒரு வலை போல்வது. இதில் இன்பம் இருப்பதாக எண்ணித் துன்பத்தையே அநுபவிப்பது உயிர். எல்லாவுயிர்க்கும் இது **பொது.** மக்களுயிர்க்கோ **சிறப்பு.** அறிவிற் சிறந்த மக்களும் அறியாமையுடைய விலங்கு முதலியவையும் இத்திறத்தில் ஒன்றாகமாட்டா. மாக்கள் இவ்வுலக வாழ்வாகிய வலையிற் சிக்கிக்கொண்டு துன்பத்தை இன்பமாக அநுபவிப்பது மிக வருந்தத்தக்கதாகும். சைன முனிவர் ஒருவர், அந்நிலையில் மாக்கள் உலக வலைப்பட்டு வருந்துவதைப் பலமுறை கருதினார். மாக்களது அந்நிலைக்கு வருந்தினார். அவ்வருத்தத்திற்கு அவரை அறியாமலே ஓர் ஒப்புண்டு என்று அவரது உள்ளம் உணர்ந்தது. ஒப்பாவன பற்பல உள்ளன. உள்ளவாறு உணர்ந்து உணர்வுடையோரால் உரைக்கப்-பட்டன. பாட்டாகவும் பாடப்பட்டன. பட்டாலும், பட்ட-படுகின்ற துன்பத்தை விட்டபாடில்லை. விட்டொழிக்காது துன்பவலையுட்பட்டு வருந்தும் மாக்களை அறிவுறுத்த விரும்பி அதை ஒரு வெண்பாவில் வெளியிட்டார். அது பேதைமை என்னும் தலைப்பின் கீழ்உள்ள நாலடிப்பாடலாகும்.

கொலைஞர் உலைஏற்றித் தீமடுப்ப ஆமை
நிலைஅறியா தந்நீர் படிந்தாடி அற்றே
கொலைவல் பெருங்கூற்றம் கோட்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு 331

இதில் முன்னீரடியில் ஆமையின் இயற்கையொன்று கூறப் பட்டது. பின்னீரடியில் மக்கள் இயற்கை குறிக்கப்பட்டது. ஆமையினியல்பு மக்கள் இயல்பிற்கு ஒப்பாக்கலுற்றது.

இங்குக் குறித்த ஆமையின் இயல்பு யாது? இதுவே இப்பொழுது எழத்தக்க கேள்வி. உயிர்களைக் கொன்று, அவற்றின் உடலைத்தின்று, தம் உடலைப் பெருக்கும் மாக்கள் கொலைஞர் ஆவர். அவருள் ஆமையைக் கொன்று தின்று கொழுத்துலவுகின்றவரும் உளர். அவர்கட்கு அவ்வாமையைக் கொல்லும் உபாயம் நன்கு தெரியும். ஆமையை மாய்ப்பது அரிது. நெருப்புமூட்டி, உலைநீர்ப்பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, அதில் ஆமையை இட்டுவிடுவர். தீயும் சுடர்விட்டு எரியும், நீரும் சூடுற்றுக் கொதிக்கும். ஆமையும் ஆநந்தமாக நீரில் முழுகித் திளைக்கும். நீர் காயக்காய ஆமைக்கு அழிவு அணுகிக்கொண்டே இருக்கும். அழிவுவரும் நிலையை ஆமை அறியாது. அதைத்தான்

'கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை நிலை அறியாது அந்நீர் படிந்தாடி யற்றே' என்று உவமைப்படுத்தி யுணர்த்தினார். இதற்குரிய (உவமேயச்) செய்தி அவர் உள்ளத்தில் ஊன்றி நின்ற பழமை உடையது. ஆமைக்கு உலைநீரில் வாழ்வது இன்பத்தை விளைக்கின்றது. மாக்களுக்கு உலக வலையில் சிக்குண்டு இருப்பது சுகத்தைத் தோற்றுகின்றது. ஆமையை அணுகி நிற்பது அழிவு. மாக்களை மருவி நிற்பது மாய்வு. ஆமைக்கும் மாக்கட்கும் பின் விளைவை அறியாத குற்றத்தில் சிறிதும் வேறுபாடில்லை. அந்நிலையில் மாக்கட்குத் தனியாக மாண்பு சிறிதும் இல்லை. மாள்வுதான் உண்டு. பின்விளையும் மாள்வை முன் அறியாத இழிவை 'மாண்பு' என்று எதிர் மறையிலக்கணையாலே குறித்தார் அப்புலவர். இதனால் மாக்களது பேதைமைக்கு ஆமையின் பேதைமை ஒப்பாகும் உண்மை விளக்கப்பட்டது. இது சைன முனிவர் பாடலிற் கண்டது.

சைன மதத்திற் சேர்ந்தொழுகிச் சைவ நெறியின் மீண்டுய்ந்தருளிய திருநாவுக்கரசு நாயனார் இவ்வொப்புமை யைத் தமது திறத்தில் வைத்துப் பாடி நமது திறத்தை நாடச் செய்திருக்கும் உண்மையை நாம் அறிதல் அத்தியாவசியமாகும். அவ்வாசிரியர் அருளியவாறாவது:-

'என்னை நடுங்கச் செய்து துன்புறத்துவோர் ஐவர். அவரோ கள்வர்'. கள்வர்க்கு நடுங்காமலிருப்பவர் எவருளர்? தொலைவிருக்கும் கள்வராயின் நடுக்கம் உண்டாகாது. சூழ்ந்து (வளைத்து) கொண்ட கள்வர்க்கு நடுங்காதிருப்பது எவ்வாறு? உயிர் உடலினின்றும் நீங்குவதில் சிறிதும் வெறுப்பில்லாத வராயினும், உடம்பில் உள்ளபோதே உய்ய விரையும் உத்தமர்க்கு அவ்வுய்தி எய்துமுன் உடம்பிற்கு கேடு வருவதாயின், அஞ்சாதிருத்தல் ஒல்லாது. ஐவரும் என்னைச் சூழ்ந்து நடுக்கத்தை விளைக்கின்றனராயினும், அவர் சூழ்ச்சிக்கு ஆளாகி, அவர் ஆட்டுமாறு ஆடியும், ஓட்டுமாறு ஓடியும், காட்டுமாறு கண்டும், ஊட்டுமாறு உண்டும் எனக்கு இளைப்புண்டாய்விட்டது. இளைத்துப்போயும் அவர் திறத்தில் எனக்கு ஓர் இன்பம் உண்டு போலத் தோன்றி, அவ்வின்பத்தையேநாடி, அவ்வலையிலே சிக்கிநிற்பதற்கே மீண்டும் அவாவுகின்றேன்.

உற்று நோக்கின், அந்நிலையும் ஆமையின் நிலைபோலத் தான் இருக்கின்றது. உலையை அடுப்பின்மிசை ஏற்றி, தழலும் எரியுண்ட நீரில் முழுகித் திளைக்கும் ஆமைக்குத் தெளிவு இருப்பின், அவ்வெந்நீரில் திளைக்குமா? நீரின் ஓரளவு வெப்பம் ஆமையின் உடலுக்கு இனிதாயிருந்தது. வெப்பத்தின் முதிர்ச்சி அதன் அழிவுக்கு ஏதுவாயிற்று. அதைத் தெளியாமை அக்களியாமைக்கு அழிவாக்கிற்று. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐவரால் வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை, ஐந்தும் பிறப்பிறப்பாகிய துன்பத்தை விளைக்கும் என்று தெளியாமையே பேரின்ப வாழ்வைப் பெற வொட்டாது. பிறந்திறந்துழலுந் துன்பத்தைச் செய்கின்றது. தெளிந்து திருவருள் பெற்றுச் சிவமாதற்கே பிறந்தேன். தெளியாமல், ஐம் புலத்தாசை வலையுட்பட்டு பிறவிப் பெருங்கடலில் விழுந்து துன்புறுதற்குப் பிறந்தேனல்லேன் என்பது. இதனை உணர்த்தும் திருநேரிசைப் பாடலாவது,

வளைத்துநின்றார் கள்வர் வந்துஎனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத்து உலையைஏற்றித் தழல்எரி மடுத்தநீரில்
திளைத்துநின்று ஆடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்துநின் றாடுகின்றேன் என்செய்வான்
தோன்றினேனே
4.79.6

பானுகோபன் வீரவாகுதேவர் முன்போந்து போர் செய்த களிப்பில் முழுகித் திளைத்திருந்து, தான் தன்குலத்தோடு வேரறச் சாய்ந்தொழிய இருக்கும் பின்விளைவைத் தெளிந்திலன். அது குறித்து, தணிகைப் புராணத்தில், கச்சியப்ப முனிவர், 'உலைபடும் இளவெந்நீரின் உளம் மகிழ கமடம் (ஆமை) ஒத்தான்' என்று பாடியருளினார்.

இவ்வாறு மூவரும் ஆமையின் தெளியாமையையும், அதன்பின் எய்தும் அழிவையும் உணர்த்தும் வகையில், உலக வலைச் சிக்கலையும் அதனால் பிறந்திறந்துழலும் துன்பத்தையும் உணர்த்தி, மக்களனைவரும் கடவுள் நெறியில் ஒழுகிப் பேரின்பம் எய்தக் கடவர் என்று வற்புறுத்தினர்.

திருச்சிற்றம்பலம்.

20. திருவடியும் திருநாவரசும்

திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்துள் திருவடியைத் தொழுது பாடிய அளவினை நோக்கின், ஏனையவற்றின் அளவு குறைவினதே. அதனால், அவ்வளவும் இதில் எழுத இயலாது. இயலாதெனினும், இயன்ற அளவு முயன்றெழுத வற்புறுத்தினார், திருநாவரசர் திருநெறியே தந்நெறியாகக் கொண்டொழுகும் சைவப் புலவர் திருமுறையாராய்ச்சிப் புலவர். சித்தாந்த வித்தகர் திரு ரா.சண்முகசுந்தரனார். அவர் வற்புறுத்தும் அதனின் நீங்கவல்லேன் அல்லேன். காரணம் அவர்க்கும் எனக்கும் சிவனடிமைத் தொடர்பு பெரிதுண்மையே ஆகும்.

திருநாவுக்கரசர், தாம் புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியனாகிய சிவபிரான் திருவடியை மறவாது- வழுவாது போற்றும் வாய்ப்பு வேண்டும் என வரங்கேட்டார். 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந் தர வேண்டும்' என்பது, திருப்பாதிரிப் புலியூரில் இறக்கவும் மற்றொரு பிறவி யெடுக்கவும் நேருமோ என்று அஞ்சியும் ஐயுற்றும் நின்றவர் போல அப்பர் சுவாமிகள் வேண்டிய வரம். இப்படிப் 'புழு' நினைப்பு வருதல் பெரியோர்க்கு இயல்பு. உபநிடதங்கள் சிற்சில உண்மைத் துறவிகட்கு ஒப்பாகப் புழுவைக் காட்டியிருக்கின்றன. அவை நாரத பரிவிராஜகோபநிஷத் முதலியன. புழு ஊர்ந்து வெல்வதால் உயிர்களுக்குத் துன்பம் இராது. அதுபோலத் துறவியும் நடைகொள்ளக்கடவன். 'பர்யடேத் கீடவத்பூமௌ வர்ஷாஸ் வேகத்ர சம்வஸேத்' 'கீடவத்விசரேந் மஹீம்'. நாற்றம் மிக்க உடம்பிற் பற்றுடையவன் புழுவை ஒப்பான். 'த்வக்மாம் ஸருதிரஸ் நாயுமஜ்ஜா மேதோஸ்தி ஸம் ஹதௌவிண் மூத்ரபூருயரமதாம் க்ரீம் நாம்கிய தந்தரம்' பிரமர கீடம் போல உபாசித்து வந்தால் எல்லாக் கட்டுக்களினின்றும் வீடுறுகின்றான்.

புழுவுக்குங் குணம் நான்கு எனக்கும் அதே
புழுவுக்கு இங்கெனக்குள்ள பொல்லாங்கில்லை
புழுவினும் கடையேன் புனிதன் தமர்
குழுவுக்கு எவ்விடத்தேன் சென்று கூடவே 5.91.4

என்பது திருநாவரசர் அருளிச் செய்த திருவாக்கு. அதிலே, எனக்கும் புழுவுக்கும் குணக் கணக்கில் வேறுபாடில்லை. நான்கு குணம் என்னும்

ஒன்றில் மட்டுந்தான் ஒற்றுமை உளது. இங்கு எனக்குள்ள பொல்லாங்குகள் புழுவுக்கு இல்லை. பொல்லாங்குடைய யான் (சிவ போக சாரத்தில் உள்ளது இவ்வாட்சி) நல்லாங்குடைய புழுவினும் கடையேன் ஆவேன். ஆதலின், சிவனடியார் இணக்கம் எனக்குச் சிறிதும் இல்லை.

அவர் எவ்விடத்தவர்? யான் எவ்விடத்தேன்? அவர் இருக்கும் இடத்திற்கும் யான் இருக்கும் இடத்திற்கும் நெடுவாசி உண்டு, அதனால் அவரிடத்திற்சென்று அவரோடு கூடி அருளா ரமுதம் உண்ணும் பெருநிலையைப் பெற யான் தகுதி யில்லாதேன் என்பது இத்திருக்குறுந் தொகையின் உட் கோளாகும். இதிற் குறித்த நான்கு குணங்கள் யாவை? புழுவின் குணம், நான்கு எவை? நாவரசர் குணம் நான்கு எவை? இவ்வினாக்கள் இரண்டனுள் ஒன்றற்கே விடை தெரிகிறது. ஞானிகளின் நாற்குணம் "திருமந்திரம்-சிவஞான சித்தியார்" முதலிய அருள் நூல்களிற் கூறப்பட்டன. புழுவின் குணம் எனக்குத் தெரியவில்லை. சிலர் என்னிடம் சொன்னவை சிறிதும் பொருந்தாதன. அதனால் அவற்றை இதிற் குறித்திலேன்.

'ஞானிக்கு உடற்குணம் ஞானத்தின் நான்குமாம்' என்றது திருமந்திரம். 'உடற்குணம் நான்கும் பண்டையுறுதியிற் செல்லுதியாயின், நடுத்திகழ் ஞானவாய்மை நழுவியது என்பர்' என்பது உமாபதி சிவத்தின் திருவாக்கு. 'ஞான யோகக் கிரியாசரியை நான்கும் நாதன்றன் பணி' என்பது சிவஞான சித்திவசநம். இவற்றால், ஞானத்திற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆன நான்கும் இத்திருக்குறுந் தொகையிற் குறித்த நான்கு குணம் ஆகும் என்பது தெளிவாயிற்று. ஆயினும் புழுவின் குணம் நான்கு எவை என்பதற்கு விடை கிடையாது.

'உண்பதனோடு ஆன குணம் நான்கும்' என்று தக்ஷிணா மூர்த்தி தேசிகர் அருளியனவாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலனாகிய குணங்களை அன்றி வேறு குணங்களைப் புழுவின்பாற் கொள்ளல் எஞ்ஞான்றும் இல்லை. இன்றாகவே அவற்றுள் ஒன்று குறைந்தனவே கொள்ளப்படுவன. தள்ளப்படுவதை நிச்சயம் பண்ணாததே ஐயம் அறாமைக்கு ஏது. இக்காலத்து உயிர் நூலறிவுடையார் என்ன கூறுவரோ?

சிவத்தியாநம் இல்லாதவர் புழுவாய்ப் பிறப்பர் என்பது நியதி. அதனைத் திருக்கோவையாரும்,

மாடஞ்செய் பொன்னகரும் நிகர்
இல்லைஇம் மாதர்க்கு உன்னப்
பீடஞ்செய் தாமரையோன் பெற்ற
பிள்ளையை, உள்ளலரைக்
கீடஞ்செய்து, என் பிறப்புக் கெடத்
தில்லைநின் றோன் கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சிஎன்
றோ நின்று கூறுவதே. 129

என்றது. (கீடம் – புழு). பொன்வண்ணத் தந்தாதியும்.

தனக்குன்றம் மாவையம் சங்கரன்
தன்னருள் யின்றிப் பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யான்அரு
ளால்புழு வாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுல
கோடொக்க எண்ணுவனே. 43

அதில் உள்ள 98-ஆம் திருப்பாடலும் இங்கு நோக்கத்தக்கது. கோயிற்றிருப்பண்ணியார் விருத்தமும் 'என் விதி வசத்தால், கடை படு சாதி பிறக்கினும் நீ வைத்தருளு கண்டாய், புடைபடுகிங்கிணித் தாட் செய்ய பாதம் என்னுள் புகவே' 'அருள்தரு சீர்த்தில்லையம் பலத்தான்றன் அருளின் அன்றிப், பொருள் தருவானத்து அரசு ஆதலின் புழுவாதல் நன்றாம். சுருள் தரு செஞ்சடையோன் அருளேல், துறவிக்கு, நன்றாம். இருள் தரு கீழ் ஏழ் நரகத்து வீழும் இருஞ்சிறையே' என்றது. 'நரகம்புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின்' என்னும் திருவாசகத்தின் விளக்கம் இது.

இவ்வுண்மை நாயன்மார் அருளிச் செயல்களை நோக்கின், திருவடி வழிபாடு ஒன்றே சைவர்க்கு உரியது. அஃது இல்லையேல்

புழுவாய்ப் பிறப்பது உறுதி என்பது புலனாயிற்று. ஆகவே, நாம் எல்லோரும், சிவபிரானை வேண்டிக் கொள்ளும் வரம் ஒன்றே. அதுவே இது. வேறும் பல வழி தேவாரத்துள் உள. முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ளற் பாலன இவை :-

(1) கருவுற்ற நாள் முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும். (2) கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்து உடையேன். (3) கருவுள்ளிருந்துன் கழலே நினைந்தேன். (4) முத்தி தருந்தாளிணைக்கே சரணம் புகுந்தேன். (5) எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால் கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன். கழலடியே கைதொழுது காணின் அல்லால்... உணர மாட்டேன். புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என ஒருமுறைக்குப் பத்து முறை சொல்ல வேண்டும். (6) பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை. (7) இம்மை உன் தாள் என் நெஞ்சத்து எழுதி வை; ஈங்கு இகழில் அம்மை அடியேற்கு அருளுதி என்பது இங்கு ஆர் அறிவார்? (8) காதல் செய்வோர் தேவா திருவடி நீறு என்னைப் பூசு என்பவை முதலிய தேவாரச் செம்பொருளடிகளை ஓதி நாள் தோறும் திருவடி நினைவை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

அதனால்தான், 'இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கிற் கடம்பமர்காளை தாதை கழலடி காணலாமே' என்றது சுவாநுபூதிகமாம். முக்கணான் பாதநிழலுள்ளிடை மறந்து நின்றங் குணர்வினால் எய்யலாம் புள்ளுவர் ஐவரையும் இங்கு அவனருளே கண்ணாகக் காண்டல்-ஞானத் தீயால் நோக்குதல் - அவனருளாலே அவன்தாள் வணங்குதல் புள்ளுவரைப்பாத நிழலுள் இருந்து உணர்வினால் எய்யலாம் என்றன. எல்லாம் பொருளால் ஒன்றே ஆகும்.

அவ்வாறு செய்யாமை பிறப் பிறப்பை விளைக்கும். 'பூக் கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்... காக்கைக்கே இரையாகிக் கழிவரே.' 'திருக்கோயிலில்லாத திருவிலூரும்' 'திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்' என்று தொடங்கும் திருத்தாண்டகங்களை அவ்வப்போது பாடிக் கொண்டிருத்தல், எதிர் மறை முகத்தாற் பெரும் பயன் தரும். திருவடி நிழலை அடைந்து அழியாத பேரின்ப வாழ்வு பெறப் பெருந்துணையாய் நிற்கும் திருவைந்தெழுத்து ஓதுவது இன்றி-யமையாதது. அதன் பொருளறிந்து ஓதுதல் வேண்டும். வாய்மையின் ஓதல் வேண்டும். (தன்னை நினையா வஞ்சர் தம்மை மறந்தானை(ச்)

சேராதார் நன்னெறிக்கட் சேராதார்) என்று திருநாகேச்சரத்துள் பாடியருளிய பெருமானார், திருவீழிமிழலையிலும் அவ்வஞ்சனை-யாளர்க்கும் நஞ்சணி கண்டர்க்கும் இடைநிலமும், இடைப் பொழுதும் அளவிலாதன என்று குறித்தமை அறியத்தக்கது. 'வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானைத் திருவீழிமிழலை -யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 'வஞ்சனை இன்றி, அகம் குழைந்து, மெய் வருந்தி அழுவார் தங்கள் வாயவன் காண்.' வஞ்சனையாளர்க்குச் சேயவன் ஆகி மறைந்தவன், 'வஞ்ச நெஞ்சர்க்கு (வாயவனாய் அணியவனாய்) அருளும் நள்ளாறன்' என்ற உண்மையை அனுபவித்துணரலாம். திருவீழிமிழலையில் அஞ்செழுத்தைக் குறித்துப் பாடியருளியதற்கு உரிய உண்மைக் காரணத்தை ஆராய்ந்தறிதல் வேண்டும். 'மிழலையுள்ளீர் விக்கி அஞ் செழுத்தும் ஒத்து (முதனிலை திரிந்த தொழிற் பெயர்) ஒழிந்து உம்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே' சிவனெனும் நாமம்.... பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால், என்னைப் பன்னாள் அழைப்பு ஒழியான் இவன் என்று எதிர்ப் படுவான் அவன். 'நின்நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும், சாம் அன்று உரைக்கத் தருதி கண்டாய் எங்கள் சங்கரனே.' என்று வேண்டுதல் நம் கடனாகும். யகரம் விட்டிசைக்கும் நேரசை, ஆனால், தான் அவ்வெந்தையார் திருநாமம் ஆகிய நமச்சிவாயம் நம்மை இரு விசும்பில் (அவரடியில்) இருத்தும்.

முருகார் நறுமலர் இண்டை தழுவி வண்டே முரலும்
பெருகா றடைசடைக் கற்றையினாய், பிணி
மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை இது; நானுடையது; இது பிரிந்தால்
தருவாய் எனக்கு உன் திருவடிக் கீழ் ஓர் தலைமறைவே.
4.113.2

என்ற விண்ணப்பமே நல்லோர்க்கு இறுதி விண்ணப்பம். இது கைகூடிட வேண்டிச் சிற்சில திருப்பதிகங்களை நாள்தோறும் ஓதிவருதல் வேண்டும். அவையாவன:

1. 'எட்டாந் திசைக்கும்' எனமுதலும் அடிநிழற்கீழ் ஆருயிர்த் திருவிருத்தம்.

2. 'குறுவித்தவா' எனத் தொடங்கும் பொன்னடிக் கீழ்த்-திருவிருத்தம்.

3. 'சிந்திப்பரியன' எனத் தொடங்கும் (இருபது) அடித்தலத் திருவிருத்தம்.

4. 'மன்னும் மலைமகள்' எனப் பின்னும் இணையடித் திருவிருத்தம்.

5. 'மாணிக்கு' 'கருடத் தனிப்பாகன்' என்னும் இருமலரடித் திருவிருத்தம். இத் திருப்பதிகத்துள் ஏனைய திருவிருத்தங்கள் நம் தவக் குறைவால் மறைந்தன.

6. தூங்கானைமாடச் சுடர்க் கொழுந்தடித் திருவிருத்தம்.

7. மரண பயம் போக்கும் திருக்கடவூர் உத்தமன் சேவடி விருத்தம்.

8. அணியணாமலைத் திருநேரிசையுள் வருந்திருவடி மறவா நினைப்பின் சிறப்பு.

9. திருவதிகைத் திருத்தாண்டகத்துள் ஒன்றாய திருவடித் திருத்தாண்டகம்.

10. 'முளைத்தானை' எனமுன்னும் திருவாலவாய்த் திருத்தாண்டகம்: சிவனடியே சிந்திக்குந் திருப்பெருக்குந் திருத்தாண்டகம்.

11. 'உன்னடிக்கே போதுகின்றேன்' என்னும் உயர் புகலூர்த் திருத்தாண்டகம்.

12. திருவடியைச் சொல்லும் ஏனைய தேவாரத் திருப் பாடல்கள் (பெருகும் என்றஞ்சி இதிற் குறித்திலேன்) திருவடி சுமக்கும் திறத்தில் இராவணனுக்கும் சொல்வேந்தர்க்கும் உள்ள நெடுவாசி கூறும் திருப்பாடல்களையும் நோக்குவாராக. இவற்றை ஓதி வருவோம் ஆயின், அப்பொழுது தான் நாம் எல்லாம் திருவடி நிழலைத்தரும் நமச்சிவாயம் நாவால் சொல்லவல்லோம் ஆவோம். வாழ்க வாகீசர் வாய்மை! வளர்க அவர் காட்டிய சைவநெறி.!

திருச்சிற்றம்பலம்.

21. இறையை வணங்கல்

திருத்தாண்டகம்

அரியானை அந்தணர் தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை, அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள் தம் கோனை, மற்றைக்
கரியானை நான்முகனைக், கனலைக், காற்றைக்,
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

இறைவன் என ஆண்பாற் படுத்து வழங்குகின்றோம். அவ்விறைமைப் பொருள் எத்திணையும் எப்பாலும் எவ்விடமும் கடந்தது. அக்கடந்த நிலையை உணர்த்தச் சொல்லுக்கு ஆற்றல் இல்லை. நாதாந்தமாகிய அப்பொருளை நாதகாரியமாகிய சொல் எவ்வாறு உணர்த்தும்? 'சொல்லும் இடம் அன்று. சொல்லப்புகும் இடம் எல்லை சிவனுக்கு என்றால் நாம் என் சொல்கோம்' என்று திருவுந்தியாரிலே திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், சொல்லுக்கும் நமக்கும் உள்ள மாட்டாமையைக் காட்டி யருளினார். 'ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன்' எனச்சொல் வேந்தரும் அப்பாற்பட்ட பொருளை ஆண்பாலில் வைத்தே உபதேசித்தருளினார். 'சொற்பதமுங் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாய்' 'சொற்பதங் கடந்த தொல்லோன்' 'சொல்லிறந்து நின்ற தொன்மை' 'சொற்கழிவு பாதமலர்' என்றருளினார் மணிவாசகர். அமலம் உடைய பொருள் மாயாமல காரியமான சொல்லுக்கு அடங்குமோ? சொல்லுக்கு அடங்காச் சுகப் பொருளைச் சொல்லாற் சொல்லியுணர்வதே தொடக்கறாத உயிர்க்கு வேண்டுவது. தொடக்கு அற்ற முத்தர் சொற் பொருள் இரண்டற்கும் அதீதநிலையில் இருந்து நேரே உணர்ந்தநுவிப்பர். அவ்வாறே உணர ஏனையோர்க்கு இயலுமோ? அவ்விறைமைப் பொருளை உணர்ந்தோர், உணரா-தோர்க்கு உணர்த்துந்திறம், உண்மையை உள்ளவாறே உணர்த்தும் முறைமையதாகும்.

அது வருமாறு:- அம்மெய்ப்பொருள், பெருமை, நுண்மை, அருமை, எளிமை என்னும் நாற்றிறத்திலும் ஒப்பில்லாதது. பெருமையினும் நுண்மையினும் ஒப்பில்லாதது, அருமையினும் எளிமையினும் ஒப்பில்லாதது என்று இருதிறத்திலும் அடக்கினர் பெரியோர். பெருமையால் நுண்மையும் அருமையால் எளிமையும் பெறலாம். ஆதலின் அருமை பெருமை இரண்டனுள் அடக்கிக் கூறுதலும் உண்டு. அவ்வாறே இத்திருத்தாண்டகத்தில் 'அரியான்' எனவும் 'பெரியான்' எனவும் முதலடியினும் முடிவடியினும் முறையே உணர்த்தியதறிக :

ஒப்பில்லாப் பெருமை :- எல்லாவற்றையும் படைத்தும் காத்தும் அழித்தும், தான் படைக்கவும் காக்கவும் அழிக்கவும் படாமை . 'ஆக்கம் அளவு இறுதி இல்லாய்... ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய், போக்குவாய்' எங்கும் நின்ற பரியன்.

ஒப்பில்லா நுண்மை :- அருவம், உருவம், அருவுருவம் என்னுந் தடத்த நிலையே அன்றி மெய்யுணர்வுருவாகிய சொரூப நிலையும் உடைமை. உயிர்க்குயிர், உணர்வுக்குணர்வு ஆயநிலை, 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.' உயிர்க்குயிராய் நேரியன். நோக்கரிய நோக்கு, நுணுக்கரிய நுண்ணுணர்வு.

ஒப்பில்லா அருமை :- ஆனா அறிவாய் அளவு இறந்த பல்லுயிர்க்குங் கோனாகி நிற்றல். அந்நிலைமையை முத்தர் உணர்வர். வானாடர் காணார். வானோர்க்கு அரிய மருந்தே போற்றி. தேவாமிர்தம் தேவர்க்கு எளிதிற் கிடைக்கும். சிவாமிர்தம் அத்தேவர்க்கும் அரிதே. மருந்து-அமிர்தம். கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி, கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன், காண்டற்கு அரிய கடவுள் கண்டாய், சொலற்கரிய சூழலாய், இது உன் தன்மை.

ஒப்பில்லா எளிமை :- பேரருள் என்பது அப்பெரும் பொருள் அகளமாய் அறிவரியதாயிருந்தும் தானே சகளமாய் எளியதாய்ப் போந்து உயிரைப் பக்குவப்படுத்தித் தானாகச் செய்யும் எளிமையை உணர்த்துவது. பேரருள் என்ற தொடரே அதன் உண்மையை உணர்த்தும், உயிர் உணரும் பான்மை உணர்த்த உணர்வதே. அறிவிக்க அன்றி அறியாவுளங்கள், அப்பொருளே தனக்குணர்த்தப்

பிறர்ஒருவனையும் வேண்டாதது. முற்றுணர்வுடையது, பல்லாருயிர் உணரும் பான்மையென மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை. (வானோர் அல்லாத) ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி, (கனவிலுந் தேவர்க்கரியாய் ஆகியும்) 'நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி,' கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன் நனவே எனைப் பிடித்து ஆட்கொண்டவா நயந்து நெஞ்சம், கண்ணீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ, சிவபெருமான், தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்.

இந்நான்கும் வெவ்வேறு வகையாக ஆசிரியரால் உணர்த்தப்படும், திருக்களிற்றுப்படியார் முதற்கண், 1. அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் எனப் பெருமையையும், 2. அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் என நுண்மையையும், 3. அம்மையப்பர் எல்லா-வுலகுக்கும் அப்புறத்தார் என அருமையையும், 4. அவர் இப்புறத்தும் அல்லார் போல் நிற்பார் என எளிமையையும் உணர்த்தியதறிக. சிவஞான சித்தியாருள், உலகு அவனுருவில் தோன்றி யொடுங்கிடும் பெருமையும் உலகினுக்குயிராம் நுண்மையும், உலகினை இறந்து நின்றது அரனுரு எனப்படும் அருமையும், உலகுமாய் நின்ற எளிமையும் (68) இனிது விளக்கியவாறறிக. ஆரியத்தில், விசுவ காரணம் - பெருமை, விசுவாந்தரியாமித்துவம் - நுண்மை, விசுவாதிகம் - அருமை, விசுவரூபம் - எளிமை எனப்படும்.

சிவஞான முனிவர் (68. உரையில்) 'சிந்திதன் ஆயினும் அசிந்திதனே' என்பதற்கு வேதத்துள் உருத்திரன் 1. விச்சுவாதிகன் 2.விச்சுவகாரணன் 3. விச்சுவத்திற்கு அந்தரியாமி 4. விச்சுவரூபி என்று கூறுஞ் சுருதிகளே சான்' என்று எழுதினார். 'உலகமே உருவமாக, யோனிகள் உறுப்பதாக, இலகுபேரிச்சா ஞானக்கிரியை உட்கரணம் ஆக, அலகிலா உயிர்ப்புலன்கட்கு அறிவினை ஆக்கி, ஐந்து நலமிகு தொழில்களோடும் நாடகம் நடிப்பன் நாதன்' என விசுவரூபி என்றதன் விளக்கம் அருணந்தி சிவத்தின் திருவாக்கில் வந்தது. இங்கு கூறிய ஐந்தொழில் அறிவித்தற்கண் படும் மிகநுண்ணியன். பட்டினத்து அடிகள் அருளிய ஒருபாவொரு பஃது முதலகவல் விசுவரூபியை விரித்துணர்த்துகின்றது. நாள்தொறும் அவ்வாறிருந்துவரின் பிறப்-பில்லாப் பெருவாழ்வு எய்தும், திருவருட்பயன் தலைச் செய்யுளில்

நிகரிலிறை என உத்தேசமாகக் குறித்து. இந்நான்கும் தனித் தனியா நில்லா.

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்.

என்று அந்நிகரிலிறைமையை வகுத்தும் அடுத்த நான்கு திருக்குறளால் விரித்தும் அருளினார் நம் ஆசிரியர் உமாபதி தேவாதி நாயனார். பருமையும் பெருமையும் ஒன்றாகக் கருதிய இடம் இது. பருமைக்கு நுண்மை மறுதலை. அப்பர் நாயனார், அரியான், பெரியான், சிந்தையான், கரியான், நான்முகன், கனல், காற்று, கடல், வரை கலந்து நின்ற(வன்) என அந்நான்கு திறத்தையும் கூறியருளினார். அப்பெருமானைப் பேசாத நாள் எல்லாம் பிறந்து இருந்து வாழும் நாள் அல்ல. செத்திட்டிருக்கும் நாளேயாம். நாளும் அயர்ந்து மறந்து அரன் திருவடிகள் நினையமாட்டா மதியிலியேன் வாழ்வெல்லாம் வாளா மண்மேற் பிறந்த நாள் நாளல்ல. வாளா(நாவறளாமல்) ஈசன் பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு செறிந்து எறும்பியூர் மலைமேல் சென்று மாணிக்கத்தை அடையப் பெற்றேன். விரிவச்சம்.

திருச்சிற்றம்பலம்

22. அப்பர் திருவுருவம்

சைவ சமயாசாரியர் நால்வருள், திருநாவுக்கரசு நாயனார் - அப்பர் திருவுருவை, அவர் வாழ்நாளிற் பண்டை நல் வினைப் பயனாக மண்ணுலகில் இருந்த நல்லோர், உளங்குளிரக் கண்ணாரக் கண்டு, வாயாரப் புகழ்ந்து போற்றினார்களேயன்றி, எம் போன்றார் அப்பெரும் பேற்றை யெய்தற்கு வாய்ப்பின்றி யொழிந்தது. 'சென்ற தெண்ணி னைதல்' 'கழிவிரக்கம்' எனப்படும் குற்றத்துள் இது சேராது. இது முன்னோர் விரும்பி வேண்டியதொன்று

வினையரும் புகலிக் கிறைமணப்பந்தர்
விருந்தினுக் குதவிலேன் முந்திற்
றுனையிரந் திடுவான் வந்தனன் பதம் நீ
உதவிஎன் துயரொழித் தருளாய்
... ...
சோணசைலனே கைலை நாயகனே

என்றும்,

வாட்டுபவங் கொல் புகலி வண்புலவன் பேரின்ப
வீட்டுபவங் கொள்ளைகொள விட்டநாள் - கேட்டுவரா
தெப்பிறப்பி லெங்ஙனிருந் தேதுபுரிந் தெய்த்தேனோ
ஒப்பிறப்பில் வெங்கையுடை யோய்

திருவெங்கைக் கலம்பகம் - 75

என்றும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமண நாளில், பற்றற்றார் புரியும் வீட்டுக் கொள்ளைக்கு உரிமையடையும் பிறவி எய்தாமையை எண்ணிப் பெரிது வருந்திய சிவப்பிரகாச சுவாமிகளைக் கழிவிரக்க முற்ற கற்றாராகக் கருத இடனுண்டோ? அவரோ சென்ற தெண்ணி னையுஞ் சிறுமைக் குரியராவார்?

திருநாவுக்கரசு நாயனார் செந்நெறியை உணரும் அன்ப ரனைவரும் அப்பெருமானைக் காணும் பிறவியைப் பெறாமைக்கு வருந்துவது குற்றமேயாகாது. அவர் வாழ்நாளிற் பிறவாது போயினும், அவர் திருவுருவை ஒருவாறு கண்டுவக்கும் வண்ணம், முன்னோருட் சிலர் பாக்களிற் படம் பிடித்து வைத்துதவியருளினர். அச்சிலருள்ளும்

தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமானே முதல்வராவார். அவருடை-யதையொட்டியே சிவஞானமா முனிவர், கச்சியப்ப முனிவர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் மூவரும் அப்படத்தை மிக்க அழகுற எழுதியளித்தனர்.

அப்பர் திருவுருவத்தைப் படம் பிடிப்போர்க்குப் புறத்தோற்றம் ஒன்றே காட்டலாகும். அகநிலையைத் தோற்றல் அரிது என்ற நினைவு உண்டாகலாம். இந்நாளிற் புகைப்படம் புறத்தோற்றத் தையும் 'ஒரொளி' (யீ-ஷழிதீ) அகத்தோற்றத்தையும் காட்டுகின்றன. அவ்வாறே நம் முன்னோர்களும் அப்பர் திருவுருவத்தின் அகம்புறம் என்னும் இரண்டு தோற்றத்தையும் கவிப் படத்திற் கவின் மிகப் பிடித்து வைத்தார்கள்.

அகத்தோற்றத்தில் இன்றியமையாதனவாகிய மூன்றே படமெடுக்கப்பட்டன. பற்றற்ற நிலை, அந்நிலையைப் பெற்ற திருவுள்ளம், அவ்வுள்ளத்துள் தொடர்ச்சியாயிருக்கும் அன்பின் முதிர்ச்சி என்பனவே அவை.

புறத்தோற்றத்தில், பொதுவாக முழுத்த காட்சியாகத் திகழும் சிவவேடப் பொலிவழகு, திருமேனி யசைவு, அன்பு நீர் பொழியும் இன்பநோக்குடைய இணைவிழி, ஞானப் பாடல், ஓயாது வழங்கும் செந்திருவாய், உழவாரப்படையுடைய உலகு தொழுந் திருக்கை என்னும் ஐந்துமே காணப் பெறுதலால் வேறு பிடித்தற்கு யாது மின்றெனல் விளங்கும்.

அகம் புறம் இரண்டற்கும் பொதுவாக நின்று இரண்ட னியல்பும் விளக்கும் இணைவிழியும் பெருந்தகைமையும், செஞ்சடைப் பெருமான் கஞ்சப்பூந்தாளே சார்வான நெஞ்சத் துருக்கத்தை வெளிப்படுத்தும் நீர் மழையாலும் வடிவிற் பொலி திருநீற்றாலும் கந்தையும் மிகையாங் கருத்தாலும் திருமேனி யசைவாலும் சிவஞானம் பழுத்தொழுகுந் திரு நின்ற செம்மையாலும், அகத்தை விளக்கிப் புறத்தில் இலங்குகின்றன. வாகீசர் வேறு: 'அன்புறு பத்திவடிவு' (பெரிய அப்பர் சஉரு) வேறு என்று கொள்ளாதவாறு அருள்மொழி தேவர் அருளியுள்ளார்.

உள்ளம் உரை உடல் என்னும் முப்பொறிகளையும் அப்படம் அழகுறப் பிடித்துக் காட்டுகின்றது. உள்ளத்தைக் கந்தையும் மிகையென்னும் பெருந் துறவின் நடையறாமை. இடையறாப் பேரன்பு, சிவபெருமான் சேவடியே தைவரு சிந்தையாகிய மூன்றும்

உணர்த்துகின்றன. உரையைப் பதிகச் செஞ்சொன் மேய செவ்வாய் ஒலிக்கின்றது. உடலைப் பெருந்தகைமைக் குரியவற்றுள் ஒன்றான திருமேனியசைவு, சிவவேடப் பொலிவழகு, நைந்துருகிப் பாய்வது போலன்புநீர் பொழி கண்கள், உழவாரத் தனிப்படை என்பவை காட்டுகின்றன.

படம் பிடித்தாருள் முதல்வர், நோக்கல்லாத நோக்கிற்கு மெட்டாத திருத்தொண்டர் புராணத்தை அம்பலத்தாடுவான்றன் உலகெலாம் மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்கி வாக்கினாலுஞ் சொல்ல வல்லவரும், சைவர்களின் பாக்கியப் பயனாகியுள்ள வரும் ஆகிய சேக்கிழாரேயாவார். சிவஞான மாமுனிவர் அப்படத்தினின்றும் வேறொரு படியெடுத்துதவி யருளியவர். கச்சியப்ப முனிவரரும் அப்படி ஒரு சிறிது அருளியவரே. மாபெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் அப்படியே அழகு மிக்க படி எடுத்துதவினார். அவர் படங்களின் ஒற்றுமை:-

க)	கந்தை மிகையாங் கருத்து	- சேக்கிழார்
	நடையறாப் பெருந்துறவு	- சிவஞான மாமுனிவர்
	நிந்தையறு முழுத்துறவு கந்தை மிகையாங் கருத்து	- மீனாட்சி சுந்தரம் பிள்ளை

'புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடுஞ் சொல்லோடும் வேறுபாடிலா நிலைமை துணிந்திருந்த நல்லோர்' என்றும் அருளினார் சேக்கிழார்.

(உ) 1. 'நாயகன் சேவடி தைவரு சிந்தை'

2. 'எய்துற்ற தியானம் அறா உணர்வு'

3. ஓவாது சிவன்தாள்கள் தழுவிய சிந்தையி லுணர்வு'

4. அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மையுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்'

என்னும் நான்கும் சேக்கிழார் திருவாக்கு.

'சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சு'

என்பது சிவஞான முனிவர் திருவாக்கு.

'தந்தையொடு தாயிலான் திருவடி தைவரு மனம்'

என்பது பெரும்புலவர் வாக்கு.

சிவஞானமா முனிவர் திருவாக்கில் 'திருவடிக்கே' என நின்ற ஏகாரமும் 'செம்பொற்றாளே சார்வான திரு மனம்' என்பதிலுள்ளதே (பெரிய. அப்பர். உஉரு).

(ங) 1. 'சிந்தையிடை யறாவன்பு'

2. 'உலகுக் கெல்லாம் அன்புசெறி கடல்'

3. 'கரணங்களும் உடன் உருகும் பரிவின'

4. 'மன்னிய அன்புறு பத்தி வடிவான வாகீசர்'

5. 'கருத்திற் பரவு மெய்க்காதற் றொண்டர்'

6. 'நிறையன்புறு சிந்தையி னேசம்'

என்னும் இவை அருண்மொழித்தேவர் அருளியவை.

'இடையறாப் பேரன்பு' என்பது முனிவர்பிரான் தனிமொழி.

'சிந்தை யிடையறாவன்பு' என்பது புலவர்பிரான் பொன்மொழி.

(ச) 1. 'தூயவெண்ணீறு துதைத்தபொன் மேனியுந் தாழ்வடமும்'

2. 'அந்தமிலாத் திருவேடத் தரசு'

3. 'கருத்திற் பரவு மெய்க்காதற் றொண்டர் திருவேடம்'

4. 'வடிவிற் பொலி திருநீறு'

என்பன எங்கள் பாக்கியப் பயன் பார்த்தருளிய படிவம்.

'சிவவேடப் பொலிவழகு' என்பது யோகக் காட்சி. 'கவின் வெண்ணீறு' என்ற பேரிசைப் புலவர்க்கு முன்னரே, 'கோல வெண்ணீற்று வண்டலாடிய மேனி' என்றருளினார் உச்சிமேற் சைவர் கொள் கச்சியப்ப முனிவரர்.

(ரு) 'திருமேனி தன்னி லசைவு' என்றருளினார் குன்றைமா முனிவர்.

(சு) 1. 'மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவு'

2. 'நைந்துருகிப் பாய்வதுபோ லன்புநீர் பொழிகண்'

3. 'கண்ணும் பொழிமழை யொழியாதே பெய்யுந்தகையன.'

4. 'வந்திழி கண்ணீர் மழை'

5. 'சித்தம் நிறைந்த அன்பு தெவிட்டுந் தெளி வெள்ளம்
மொய்த்திழி, தாரைக் கண்பொழிநீர் மெய்ம்முழுதாரப்
பணிவுற்றார் நாகப்பூ ணணிவாரை'

6. 'மனங்கசிவுற் றெப்பொழுதும் ஒழுகிய கண்பொழி புனல்'

எனப் பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர் உணர்ந்துரைத்தருளினார்.

'மழைவாரு மிணைவிழி' என்றருளினார் பாண்டிநாட்டு மாயோகியார்.

'கொண்டலாடிய விழிகள்' என்றருளினார் தொண்டை நாட்டுக் கச்சியப்ப நாவலரேறு.

'தாரைக்கண்' என்றது சோணாட்டுப் பாவலரேறு.

(எ) 1. 'பதிகச் செஞ்சொன் மேய செவ்வாய்'

2. 'மதுர வாக்கிற் சேர்வாருந் தீந்தமிழின் மாலைகள்'

3. 'ஈ·றின்றி யெழுந் திருவாசகம்'

4. 'தானநிறை சுருதிகளிற் றகும் அலங்காரத் தன்மை
கானவமுதம் பரப்புங் கனிவாயில் ஒளிபரப்ப'

5. 'தொழுது பலவகையாலுஞ் சொற்றொடைவண்டமிழ்
பாடி வழுவில் திருப்பணி செய்து'

என்பன செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் சொல்வளம்.

'ஞானப் பாடற் றொடையறாச் செவ்வாய்' என்பது எங்குடி முழுதும் ஆட்கொண்ட மாமுனிவர் திருவாய் மலர்ச்சி.

'மல்கும் ஆநந்தம் உண்டு ஆங்கு எதிரெடுத்தென ஓது செம்பாட்டு' என்றது அவர் முதன் மாணாக்கர் அமுதவாக்கு.

'சிவஞானம் பழுத்தொழுகு செய்ய வாய்' என்பது மதுரைக் கடவுள் மதுர வாக்கு.

(அ) 1. 'சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன் மெய்யுற்ற
திருப்பணி செய்பவர்'

2. 'கையுழவாரப்படை'

3. 'உழவாரத் தனிப்படை'

4. 'கையிற் றிகழும் உழவாரம்'

என்றது பெரியபுராணம்.

'உழவாரத்திண் படையறாத் திருக்கரம்'

என்றது காஞ்சிப்புராணம்.

'கையுழவாரப்படை' என்றது உறையூர்ப் புராணம்.

(சு) 'வாக்கின் பெருவிறன் மன்னர்' என்ற சேக்கிழார் திருவாக்கும், 'வாகீசப் பெருந்தகை' என்ற மாதவக்கிழார் வாக்கும் நோக்கத்தக்கன.

இக்காட்டிய தொடர்கள் பலவற்றாலும் அப்பர் திருவுருவப் படம் முதன்முதல் அருள்மொழித் தேவர் அறிந்து பிடித்த உண்மையை உணரலாம். ஆயினும், அப்பெருமானுக்கு எப்படிக் கிடைத்தது என்ற வினா எழாது போமோ? எழும். எழும்.

தெய்வச் சேக்கிழார் பெருமான், நமக்கு உய்வைத் தரச் செய்த நால்வர் மெய்வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும் பிற திருமுறைகளும் நன்காராய்ந்துணர்ந்த ஞான வித்தகர் என்பது சைவத்தவர்க்குத் தெரிந்ததே. அக்குன்றை முனிவர் திருநாவுக்கரசு நாயனாரருளிய தேவாரத்திலிருந்துணர்ந்து அத்திருவுருவப் படத்தை எழுதியருளினார்.

தேவாரச் சான்றுகளைப் பின் அறியலாம்.

(1)

இப்பிறவியைச் சீச்சீ என (4.76.10) வெறுத்த திருநாவுக்கரசு நாயனார் தினையளவும் பொறையில்லாத உயிர் போகுங் கூட்டை ஒரு பொருளாகக் கருதி உலகெலாம் ஆளலாம் என்று பேசும் ஆங்காரம் அற்ற திருவுள்ளத்தார். அதனால் தாய் தந்தை சுற்றம் செல்வம் ஆகிய எப்பற்றும் அற்ற தூயராகி, 'செத்தால் வந்து உதவுவார் ஒருவருமிலர்' என்று உலகியல்பைப் பிறர்க்கும் எடுத்துரைத்தருளினார். (6. 42+62. 541), அப்பற்றுண்டாக்கும் தந்தை தாயர் சகோதரர் மனைவி மக்கள் வரவுஞ் செலவும் மாயம் ஆதலையறிவுறித்திய அவரோ அதற்கு மகிழ்வார்? (6.93.10) அவ்வினையுளே யழுந்தி வேதனைக்கு இடமாகாதே ஆண்டானை நினையுமாறு வற்புறுத்தினார். 'பாசமற வீசும் படியோம்

நாம்' 'துறவி என்று அகமது ஒரேன்' என்றருளி அவரினும் முற்றத் துறந்தார் யாவருளர்? 'பற்றிலார்க்கருளும் அரும் பொருளையே' மருந்தும் சுற்றமும் மக்களுமாகப் பொருந்தி நின்ற (5.31.9) அவர்க்குப் 'பாசமற்றுப் பராபர ஆனந்த ஆசை' (5.31.9) யன்றி வேறு ஆசையே இல்லை. ஐவரிடம்வைத்த ஒற்றியெல்லாம் சோன்று கொண்டான் கச்சி யேகம்பன், எனில், என்னத் தடை என்ன?

'புகலூரண்ணல், என்னைப் பிறப்பறுத்து, என்வினைக் கட்டறுத்து, ஏழ்நரகத்து என்னைக் கிடக்கலொட்டான். சிவலோகத் திருத்திடுவான்' என்ற அவர்க்கு உறவாவார் உருத்திர பல்கணத்தார்; உடை கோவணத்தொடு கீள்; பகையும் நட்பாம்; தீமையும் நன்மையே; பிறவாப் பேறு இப்பிறப்பிலேயே எய்தியது. 'அம்மை அடியேற்கு அருளுதி என்பது இங்கு ஆர் அறிவார்?' 'இம்மை உன்தாள் என்றன் நெஞ்சத்து எழுதிவை' எனக் கட்டாயப் படுத்தி அவ்வாறே பெற்றவர். 'தீவினை தீர்த்திடும் ஒண்கழலானுக்கு அல்லது எப்பற்றும் இலன்.' (5.96.1) ஒரு பற்றும் இல்லாமையைக் கச்சியேகம்பனறிய வல்லான் என்றருளி யவர்க்குக் கந்தையும் மிகையாகும் சிந்தையுண்டு என்பது, முதன்முதல் சேக்கிழார் அறிந்த உண்மை. கீளார் கோவணமே மிகை என்ற அப்பர்க்கு எப்பற்றும் இல்லை என அறியாதார் எவர்? (5.99.9)

(2)

'சிவனடியே சிந்திக்கப்பெற்றேன் நானே' எனத் தேவாரந் தொறும் முடிதலறிந்த நல்லோர் பலரும் அப்பர் திருவுள்ளம் சிவபெருமான் செம்பொற்றாளே சார்வானது என்றுணர்வர். 'விசையமங்கை யாண்டவனடியே காண்டலே கருத்தாகி யிருப்பன்' 'மண்ணாசை பெண்ணாசை (பொன்னாசை) மூன்றும் வருத்தாவாறு நல்லுருவிற் சிவனடியே அடைவேன்' சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றேன்' 'எண் அளந்து என் சிந்தையே மேவினான்'[a] ([a]காஞ்சிப் புராணம் 'காமனை முனிந்து நெடுஞ்சடை முடித்து என்ற திருப்பாட்டை நோக்குக) 'ஒருவரும் அறியா வண்ணம் என் உள்ளத்துள்ளே ஒளித்து வைத்த சிறையான்' சிறையில் பிறர்க்கு இடம் ஏது? 'வெளியே போகாது என் உள் புகுந்து இடங்கொண்டு என்னை ஆண்டான்'. 'ஈசன்தான் என் மனத்திற் பிரிவிலன்' 'திருவாரூர் மணவாளா மருவாரும் நின்னடியே மறவேன்' என அருளிய அப்பர் சிவபெருமானுக்கே இடமாக வைத்த நெஞ்சம்

உடையவர் என்பது படமெடுத்தோர்க்குத் திடமாகத் தெரிந்த உண்மை. அதைச் சிவஞான மாமுனிவர் 'சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சு' (என்றதும்) 'தைவருசிந்தை' 'தைவரும் மனம்' எனத் தெய்வக் கவியும் சைவக்கவியும் உணர்த்தியதும் ஊன்றி உணர்ந்து ஒருங்கிய சிந்தையராக நம்மை ஆக்கும். திருநாவுக்கரசர் தம் திருவுள்ளம் திருவுடையான் திருவடிக்கே இரவும் பகலும் பிரியாது வணக்கம் புரிதலைத் தாமே வியந்து, 'திருவையாறமர்ந்த தேனை மறவிலா நெஞ்சமே நன்மதி உனக்கு அடைந்தவாறே' என்றருளினார். 'நெஞ்சின் ஏற்றேன் பிற தெய்வம்' என்றது ஏகாரத்தால் விளங்குகின்றது. நலந்தீங்கிலும் மறந்தறியாத நெஞ்சும் திருப்புகலூருமே சிவனடியைத் தெரிசிக்கும் இடம் என்று முடிவாகக் கூறி விட்டார். 'உன்னை யல்லால் நினைவு ஏதும் இல்லை' என்று தீச்சான்றாகத் திருவண்ணாமலையிற் சொல்லிவிட்டார். சிவபெருமான் நெஞ்சுள் நின்று நினைப்பித்தான். நினைக்கும் வகையில் நினைப் பித்தான். எப்போதும் என் நெஞ்சு இடங்கொள்ள வளைத்துக் கொண்டிருந்தேன். 'எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால் கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன் கழலடியே கைதொழுது காணின் அல்லால்.... உணரமாட்டேன். புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்றெல்லாம் பாடியருளிய நாவரசர் அத்திருவடி நினைப்பால் வரும் பயனையுந் தெளிவித்தார்.

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான் பிணி
இறப்பு நீங்கி இங்(கு) இன்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுள் செந்நெறி யான்கழல்
மறப்ப(து) இன்றி மனத்தினுள் வைக்கவே. 5.77.3

(3)

அப்பர், 'அன்பை ஆண்டவனே உள்ளத்திருத்தினான்; (4.5.2) அவ்வன்பு அளவுபடாதது;(4.3.11). அவ்வன்பினும் வேறு ஆக்கந்தரும் பொருள் இல்லை. (4.40.6) அது குறையா திருக்கின்றதை அளந்து பார்ப்பான்' என்றார். (4.56. 5+5. 21.6) ஆண்டவனை அன்பில் அணைத்து வைத்த உண்மை, அதனால் உள்மெலி சிந்தையராதல், அத்தகைய அன்பர் மறைபயிலாது புறமோதி வேள்விபுரியாது கொலைபயின்ற புலையரேனும் அவர்க்கு அடிமையாதல் (4.15.7,

4.3.6, 6.95.10) எல்லாம் குறைவறக் கூறியருளிய சொல்வேந்தர், அன்பு இடையறாமல் நெய்யொழுக்குப் (தைலதாரை) போல அமைதல் வேண்டும் என்றுணர்த்தியருளினார். அதை

துன்பெலாம் அறநீங்கிச் சுபத்தராய்
என்பெலாம் நெக்கு இராப்பகல் ஏத்தி நின்(று)
இன்பராய் நினைந்து என்றும் இடையறா
அன்பராம் அவர்க்கு அன்பர் ஆரூரரே 5.7.4

என்னுந் திருக்குறுந்தொகையாலறியலாம். 'இடையறா அன்பு' என்று செந்தமிழ்ச்சொற்றொடர் இனிது அமைந்தவாற்றை அறிந்து வண் தமிழ்ப் புலவர் சுவைக்கக் கடவர். 'ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்கு என்னூடகத்தே நின்றுருகத்தந்தருள் எம் உடையானே' என்ற திருவாசகம் ஈண்டு நினைவில் வரும். சேக்கிழார் திருவாக்கிலும் இத்தொடர் வந்துளது. (சு+பத்தர் = நல்லன்பர்) சுபம் உடையரெனல் சிறந்ததன்று.

(4)

'திருவாய்ப் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்த' நாவுக்கரசர் திருவாளன் திருநீற்றை உருவார நிறையப் பூசி, 'நீறணியுங் கோலமே நிகழப்பெற்றோம் என்று கூறிக் கொண்டு, திருநீறும் சாதனமும் கண்டால் அடிமைத்திறம் நினைந்து உவந்து போற்றி, ஈசன் திறமேபேணித் தொழும் பெற்றியராதலின். 'தூயவெண்ணீறு துதைந்த செம்மேனி' (5.65.4) எனச் சேக்கிழார் திருவுளத்தில் தோன்றி, 'தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனி' என வெளிப்பட்டது. உள்ளம் சிவன் கழலே நினைய வாய் திருவைந்தெழுத்தே பயில, உடம்பு திருநீற்றையே அணிய நேர்ந்தால் எவர் தாம் சிவகதியை எளிதின் எய்தார்? அவ்வாறெய்தி யவர்க்கல்லாது மற்றெவர்க்குச் சிவவேடப் பொலிவழகு வாய்க்கும்? வாய்த்தவரைக் கண்டால் வாயார வாழ்த்தாதார் யாவர்? அவருள்ளும் சேக்கிழார்பிரான் சிவஞான மாமுனிவர் முதலோரோ வாழ்த்தாது வாளாகழிப்பர்? 'சிவ வேடப் பொலிவழகு' என மனங்கொள்ள எண்ணி வாய்கொள்ளச் சொல்லி மகிழ்ந்தார்களே! அவர்கள் அன்பே அன்பு! அருளே அருள்! ஆற்றலே ஆற்றல். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்பது போல சிவவேடச் சிறப்பைச் சிவவேடத்தாரே அறியவல்லார்.

(5)

'வெள்ளந் திளைக்கின்ற முடியினான்றன் திருவடி பரவ மாட்டாது இளைக்கின்றேன் இருமி ஊன்றி என் செய்வான் தோன்றினேனே' என்பது முதலிய தேவாரங்களை உணர்ந்த தொண்டர்சீர் பரவுவார் ஆளுடைய அடிகள்' 'திருமேனி தன்னிலசைவு கண்டருளினார். (4.28, 78.1.8)

(6)

கனிமனத்தொடு கண்களும் நீர்மல்கிப் புனிதனைப் பூவனூரனைப் போற்றுதல் மனிதரிற் றலையான மனிதர் கடன். (5.65.6) ஆற்றைச் செஞ்சடையிலணிந்த அழகை எண்ணி எண்ணி நோக்கி நோக்கி உள்ளூறிய உருக்கம் எய்துதல், அழுது திருவடிக்கே பூசிக்க இருத்தல், அழுவார்வாயில் ஆண்டவன் இருத்தல், அகங்குழைந்து மெய்வருந்தி அழவல்லவர்க்கு அவன் அருளுதல், அழுதவர் வஞ்சத்தைத் தீர்த்தல், அழுவாருடைய அநாசாரத்தைப் பொறுத்தல், அழுவார்க்கு அருகில் நின்று, அஞ்சலென்று அபயத்-திருக்கரம் அளித்து, ஊனந்தீர்த்து அன்பனாதல், தொண்டர்காள் நாடுமின் ஆடுமின் அழுமின் தொழுமின் அடி பாடுமின் பரமன் பயிலும் இடம் கூடுமின் எனல் அன்புருக்கம் எய்தினார்க்கே கூடுதல், என்பவற்றை மொழி மன்னர் திருப்பாடல்களால் விளங்க வுணர்ந்துருகலாம். பொய் யுரையாது பூம்புகலூரான் பொன்னடிக்கே வைத்த உள்ளம் உடையவர், 'காராண்ட மழை போல கண்ணீர் சோரக் கன்மனமே நன்மனமாகக் கரையப் பெற்றோம்' என்றருளியதை உற்றுணர்ந்து 'மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவு' காட்டிய மேட்டிமையுடைய சேக்கிழார் வாழ்ந்த நற்காலத்துக்கே சைவரானோர் வணக்கஞ் செலுத்தக்கடவர்.

(7)

நன்றுடையானுந் தீயதில்லானுமாங் கொன்றை வேணி யனையே என்றும் எண்ணித் தொழும் அப்பர், நின்றுண்பார் சொன்ன வாசகமெல்லாம் மறந்தார். (6.98.8), பேயர் பேசுவன பேசாராகிச், சைவப்பொற்புடையனவே பேசக்கடவோ மென்றுறுதி, பூண்டு, கருவுற்றநாள் முதலாகவே உருகிய உள்ளத்தாராயும், பேய்வாழ்

காட்டிலாடியை வாழ்த்தும் வாயராயும், பூத்து ஆடிக் கழியாதே, சிவத்தொண்டு புரிவதில் உழைத்தும் துள்ளியும் உள்ளத்துள்ளே உரு இழைத்தும் நீற்றுச் சந்தனவெள்ளை விரவியும் பயன்படுத்திக் கொண்ட திருமேனியராயும் விளங்கிய திருநாவுக்கரசு நாயனார் எப்பொழுதும் நாவார நம்பனையே பாடுவார்; பாடப்பெற்றோம் என்று களிப்பார்; பாட்டுவித்தான் இறைவன், பாடினேன் நான் என்பார்; பாமாலை பாடும் பயிற்சி அப்பரமனருளியதே என்பார்; பன்னிய நூல் தமிழ்மாலை பாடுவித்துச் சிந்தைமயக்கறுத்த திருவருளை வாழ்த்துவார்; தொண்டு பாடி உய்ந்து போவன் என்பார். 'நமச்சிவாயஞ் சொல்ல வல்லோம் நாவால்' 'நா நமச்சிவாயமே நவின்று ஏத்தும்' 'நலந்தீங்கிலும் நாவில் மறந்தறியேன்', 'பிறை சூடியை நறைக்குழலாளொடும் பாடிக் காடும் மலையும் தொழுது ஆடாவருவேன்' 'அண்ணாமலையுளானே உன்னையல்லால் சொல்லுமா சொல்லிலேனே', 'கூத்தா, நின்குரையார் கழலே யலது ஏத்தாநா எனக்கு', 'அரவோடு பிறையுஞ் சூடினை என்பதல்லால் பிறிது இறையும் சொல் இல்லை', 'எழுத்து அஞ்சும் என்றன் நாவில் மாற்றேன், 'கங்கை மணவாளா, நின்றன் நாமம் உரையா(மல்) உயிர் போகப் பெறுவேனாகில், உறு நோய் வந்து எத்தனையும் உற்றால் என்னே, அடியேனை அஞ்சல் என்னாய்', 'நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும், சாம் அன்று உரைக்கத் தருதி எங்கள் சங்கரனே' இறைவன் நீள்கழலேத்தி யிருக்கிலே கொடுமாநுட வாழ்க்கையால் குறைவிலோம்', 'வார்சடையானைப் பிதற்றியே முன்னைப்பாவம் முதலறப் பின்னைப் பெரிதும் அருள் பெற்றது', 'பிறந்தேன் நின் திருவருளே பேசினல்லால் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே', 'பெருவேளூர் பேணினானை ஓத நாவுடையனாகி உரைக்கு-மாறுரைக் கின்றேனே', 'திருவிராமேச் சுரத்தைத் தொடலிடை வைத்து, நாவிற் சுழல்கின்றேன்' என்றெல்லாம் 'வாயாரப் பாடியாடிப் பணிந்தெழுவார்' திருக்கோளிலி யீசனை இரவும் பகலும் பாடுமின் சிவகதி கூடலாம் என நம்மையும் ஏவுவார். கையிற் பூக்கொண்டு சிவநாமஞ் செப்பாதார் காக்கைக்கே இரையாகிக் கழிவதுபற்றி வருந்துவார். இத் தன்மையை உணர்ந்த சேக்கிழார், அப்பர் திருவாயில் மதுரவாக்காக வந்த தீந்தமிழ்மாலைகளை நினைந்து நினைந் துருகினார். அத்திருவாயைப் படத்திலெழுதி நமக்குங் காட்டியருளினார்.

(8)

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற திருவாக்கும் சரித்திரமும் கொண்டு உழவாரப்படை திருக்கையிலிருந்ததைப் பார்த்துப் படமெழுதினார். உழவாரத் தனிப்படை கையிற்றிகழ்வது தெரிந்து எழுதிய சிறப்பு எல்லாவற்றினும் பெரிதும் போற்றத்தக்கது. (பெரிய, அப்பர்,416)

(9)

'வெண்மயிர் விரவி' 'இருமி யூன்றி' 'இளையனு மல்லேன்' 'மிக்க அயர்வு' என்னுந் தொடர்கள் திருமேனி யசைவை யுணர்த்தி, வாகீசப் பெருந்தகையார் எண்பத்தொரு வயதை உறுதிப்படுத்தலாம்.

இதுகாறும் காட்டிய தேவாரப் பகுதிகளால், திருநாவுக்கரசு நாயனாரான நம் அப்பர் திருவுருவம் செவ்விதின் ஞானக் கண்ணிற்கு நன்கு புலப்படுதலை சொல்லோவியத்தி லமைத்துதவிய பெருநன்றியைச் சைவர் மறவாது போற்றக்கடவர்.

வாழ்க ஆளுடைய அந்தணர்.

திருச்சிற்றம்பலம்.

23. ஒருவனா? ஓருருவனா?

திருகச்சித் திருவேகம்பத்தில் ஓதுவார் தேவாரம் பாடினார். அப்போது அன்னாபிடேகச் சிறப்பு நிகழ்ந்தது. அது திருக்கச்சி மயானத்தில் நடந்தது. அதற்கென்றுள்ள திருத்தாண்டகத்தை ஓதுவதே சாலச் சிறப்பும் பொருத்தமும் ஆதலை எண்ணி, 'மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான்' என முதலுந் திருத்தாண்டகத்தைப் பாடினார். திருமுறைப் பண்ணிசைப் புலவர் திருவாளர் சாரங்கபாணி செட்டியார். அவர் பல்லாண்டுகளாகத் தமக்கு வாய்த்த நல்லிசைக் குரலில் நல்லிசைப் புலமை விளங்கும் வண்ணம் எல்லோரும் இன்புறப் பாடினார். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் திருமடாலயத்தில் அவரை வரச்செய்து உணர்த்திய உண்மையை இக்கட்டுரையில் உலகர் அறிய வேண்டி எழுதலாயிற்று. அறிஞர்கள் இது குறித்துத் தம் உள்ளத்தில் தோன்றுவதை எழுதின், அஃது ஒருக்கம் காட்டி மேலும் சில எழுதத் தூண்டும்.

அத் திருத்தாண்டகத்தில் 'ஒருவன் அல்லன்' என்று உளது. எல்லாப் பதிப்பிலும் அதுவே காணப்படுகிறது. திருமுறைகளில் ஏடெழுதி-னோராலும் அச்சிற் பதிப்பித்தோராலும் பலபல பிழைகள் உள்ளன.

சென்னை 'மர்ரே கம்பெனி' முதல்வரிடம் பேசும் போதும் திருவையாற்றில் அருளிய திருவடித்தலம் குறித்த திருப் பதிகத்திற் காணும் பிழைகளைக் காட்டினோம். அப்போது 'கிழித்தன தக்கன்' என்பது 'இழித்தன தக்கன்' என்றும் 'வெங்கட் பிணி' என்பது 'எங்கள் பிணி' என உள்ளவற்றைச் சுட்டினோம்.

'தாயவன்கான் உலகிற்கு' என முதலும் திருக்கச்சித் திருவேகம்பத் திருத்தாண்டகத்தில், 'சேயவன் காண் நினை வார்க்கு' என்பது 'சேயவன் காண் நினையார்க்கு' என்று இருத்தல் வேண்டும். அதை அடுத்து, 'சித்தமாரத் திருவடியே உள்கி நினைந் தெழுவாருள்ளம் ஏயவன் காண்' என்று வருதலே அது பிழை என்று மெய்ப்பிக்கும். திருநாவுக்கரசர் திருவாக்கில் எப்பிழையும் உளதாகாது. இவை யெல்லாம் ஏடுகளின் எழுத்திலும் தாள்களின் அச்சிலும் ஏற்பட்டவையே இன்னோரன்னவை திருத்தப்படாமை வருத்தப் படுத்துவன.

திருமுறைப் புலமையும், அத் திருமுறையை வெளியிட வேண்டும் செல்வமும், வெளியிடும் வாய்ப்பும் ஒருங்குவாய்த் தவர்க்கே அத்திருமுறையைப் பிழையில்லாத திருமுறையில் அச்சிடச் செய்ய இயலும்.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
    மயானத்தான் வார் சடையான் என்னினல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருருவன் அல்லன்
    ஒரூரன் அல்லன் ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
    அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
    இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே
6.97.10

என்றிருந்த திருத்தாண்டகம், 'ஒருவன் அல்லன்' என்று பிழையுற்று ஓதப்படுகின்றது. என்னின் நல்லான், என்னின் அல்லால் என வெவ்வேறு கொள்ளப்படுகின்றது.

'ஒருவன்' என்று திருநாவுக்கரசர் தேவாரத்துள் வரும் இடங்கள் மிகப்பலவாகும். ஒருவன், ஒருத்தன் என்று பாடியருளிய நாவரசர் அத்தாண்டகத்தில் மட்டும் ஒருவன் அல்லன் என்று பாடியருள்வாரா? பாடினால், ஒப்பில் அப்பன், ஒப்பிலாதவன், ஒப்பிலாமணி, ஒப்பிலொருத்தன், ஒப்புனக்கில்லாவொருவன் என்னும் மணிவாசகத்தைக் கொள்வது பயன் என்ன தரும்? பலபல வேடமாகும் பரனை ஒருவனும் அல்லன் எனின் சிவ பரத்துவம் என்னாகும்? பலவும் அல்லன் ஒருவனும் அல்லன் என்றால், சூனியவாதிக்கன்றோ வெற்றி முரசொலிக்கும்.

'ஏகன் அநேகன்' 'ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு' 'ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்' என்றஅருள் வாக்கிற்கு ஒவ்வாமல், ஒருவன் அல்லன் என்றால், சூனியவாதம் பேசுவதன்றி, வேறாகுமோ? காஞ்சிப் புராணத்தில்

ஒருவனாகிய சிவபிரான் உலகுயிர் அளிப்பக்
கருணை கூர்ந்துமுன் நவந்தரு பேதமும் காட்டு

திருநிகர்ப்ப ஓர் பாலியே வயல்வளஞ் செழிப்பப்
பெருகு தண்புனல் பற்பல கால்களாய்ப் பிரியும்

என்று பாடியிருப்பதையும், அதற்கு இவ்வாதீனத்து மகா வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் எழுதிய குறிப்புரையில், இயைத்துக் கொள்வித்த 1. தேற்றேகாரம் 2. அடை மொழி ஆகிய இரண்டன் சிறப்பையும் அறிஞர் அறிந்து கொள்ளக் கடவர்.

ஒரு தனிப் பொருள் இருதிறனாகி உவ்விரண்டும்
ஒருமையுற்றிடும் வியப்பும் அங்குள்ளது விரிக்கில்
ஒருபரம் பொருள் சிவனொடு சத்தியென் றிரண்டாம்
ஒருமையுற்றிடும் உமையவள் கம்பரைத் தழுவி

என்னும் விம்மிதப்படலத்துச் செய்யுள் உணர்த்துவது போன்று, உணர்த்தும் பிரமாணம் ஆயிரக் கணக்கில் காட்ட முடியும்.

'ஒருவன் ஒப்பு இறந்தோன்' என்பது காளிங்கர் உரை (திருக்குறள் 1023).

திருப் பேரூர்ப் புராணத்திலே கச்சிப்ப முனிவர் அருளிய பாடல் இது:

ஏகமே எனும் இருக்கெனின் இருக்கின் உட்பொருள்க்கே
ஏகமே பதிபல அல எனுமது காண்டி
ஏகமே எனச் சுட்டுவான் ஒருவன் இங்குளன் அவ்
வேகன் போல் அலன் இருள்மலத்தோடுளன் இவனே

இதனாலும் 'ஒருவன் அல்லன்' என்று சொல்லலாகாது என்பது தெளிவாகும். சிவஞான போத வெண்பா ஒன்றில் இப்பாடற் கருத்திற்கு ஆதாரம் உளது.

ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி

என்ற சிவஞான போத வெண்பாவின் விளக்கமே மேற்படி புராணப்பாடல்.

இவற்றை நன்குணர்ந்து நோக்கின் 'ஒருவன் அல்லன்' என்றிருப்பது பிழை என்றும் 'ஓருருவன் அல்லன்' என்றிருத்தல் வேண்டும் என்றும் அவ்வோதுவாருக்குச் சொன்னோம். அதை அவர் எங்கும் பரவச் செய்வேன் என்று சொல்லிச் சென்றார்.

திருச்சிற்றம்பலம்

24. திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

ஒரு திருத்தாண்டகத்தின் ஒரு சொல்லில் (ஒருவனா? ஓருருவனா?) எனும் உண்மையைக் குறித்து எழுதியது அறிஞர் பலர்க்கு விருந்தாயிருக்கலாம். இவ்வாதீன நாவலர் சைவத் திருவாளர் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் நேற்றிரவு இம்மடாலயத்தில் நல்லோர் பல்லோர் முன்னர் அத்திருத்தத்தின் பொருத்தத்தை நன்கு வெளியிட்டு, பிழைபட்ட பாடத்தால் உண்டாய சீர்க் குறைவையும் குறித்துச் சொல்லி மகிழ்வித்து மகிழ்ந்தார்கள். மேலும் சில, அவர்களிடம், தேவாரப் பதிப்புகளில் உள்ள பிழைகளைச் சொன்னோம். அவர்கள் அவை பிழை என்றே கொண்டு, திருமுறைகளிலும் மெய்கண்ட நூல்களினும் செய்யற்பாலதொரு கடன்மையை வற்புறுத்திப் பேசினார்கள். அக்கடன்மைக்குத் துணையாகலாம் என்று இக்கட்டுரையிலும் தேவாரத்தில் கண்ட சிற்சிலவற்றை எழுதலானோம். தேவாரம் என்னும் பெயர் தேவாராதநம் என்றதன் மரூஉப் பெயர். இது மலையாள வழக்கில் இன்றும் உளது. இப்பெயர் திருநாவுக்கரசர் அருளிய திருமுறைக்கே உரிய பெயராயிருந்தது. காலப் போக்கில், மூவர் அருளியவற்றிற்கும் பொதுவாகிவிட்டது. காரணம்:- கால அடைவில் தேவாராதநம் நிகழ்பொழுதில் மூவர் அருளியனவும் ஓதப்பெறுவதேயாகும்.

திருஞானசம்பந்தர் அருளியவற்றைத் 'திருக்கடைக் காப்பு' என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளியவற்றைத் 'திருப்பாட்டு' என்றும் முன்னோர் சொன்ன உண்மையை உணர்ந்தோர்க்கு, அப்பர் அருளியவற்றை வேறு பெயரால் குறித்திருத்தல் வேண்டும் என்பது விளங்கும், முன்னையவர் அருளியவை, முதன் முதலில், தேவாராதந காலத்தில் ஓதத் தொடங்கி நிகழ்ந்தமையால் அவை மாத்திரம் அப்பெயர் பெற்றன. (நிகழ்தல் - பிரசித்தியடைதல்) இன்றும் தேவாராதனம் கழிஞ்சுதோ என்பர் மலையாளத்து வைதிகாசாரமுடையவர். பூஜை செய்தாயிற்றோ என்பது அதன் கருத்து.

தேவாரத்தில் (நாலாந் திருமுறையில்) 'திருக்கழுமலம்' என்னும் (சீகாழிக்குரிய பன்னிரு பெயருள்) ஒன்றனுக்குரிய திருப்பதிகத்திலே, ஏழாவது திருப்பாடல் இது:-

முற்றிக் கிடந்துமுந் நீரின் மிதந்துடன் மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்து தொழப்படுகின்றது சூழரவம்
தெற்றிக்கிடந்து வெங்கோன்றளந்தூன்றி வெண்டிங்கள் சூடும்
கற்றைச் சடைமுடியார்க்கிடம் ஆய கழுமலமே
4.82.7

இதன் மூன்றாவதடியில், தெற்றிக்கிடந்து என்றதற்கும் வெண்டிங்கள் என்றதற்கும் இடையில் உள்ள தொடர், எம் மனோர்க்குப் பொருள் விளங்காதவாறுளது. இதைக் குறித்து, தருமையாதீனத்திலே இருந்த காலத்தில், எம்மால் எழுதப் பெற்றும், சீலத்திரு கயிலைக் குருமணி அவர்களால் உலகிற்கு வழங்கப் பெற்றும் நிலவும் நாலாந்திருமுறைக் குறிப்புரையில் எழுதியிருப்பதையும் நோக்குதல் நன்றாகும். இதிலும் அதன் உண்மையை உணர்த்துவது, திருக்கோயில், வழிபாடு புரிவருள், தமிழ்நலம் உணர்வார்க்குச் சாலக் களிப்பளிக்கும்.

'திருவாரூர்ச் செப்பேட்டின்படி யெழுதியதாய்க் கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்திலிருந்த பிரதிக்கிணங்க வித்வான். காஞ்சிபுரம் சபாபதி முதலியார்' ஆராய்ச்சி செய்து தந்த பதிப்பில், 'வெங்கோன்றளந்தூன்றி' என்றுளது. இஃது அட்சய யாண்டு புரட்டாசித் திங்கள் வெளியானது என்றுகுறிக்கப்பட்ட பதிப்பு.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிய திருமுறைகள், மேற்படி சபாபதி முதலியாரால், திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதிக்கிணங்க ஆராய்ந்ததாக அவ்வெளியீடு தெரிவிக்கின்றது.

சமாஜப் பதிப்பில் உள்ளவாறு எம் நினைப்பில் இல்லை. அப்பதிப்பு இப்போது எம்பால் இல்லை. மயிலை கிழார் இளமுருகனார் 1953இல் வெளியிட்ட பதிப்பு, எம் அன்பிற்குரிய பெருநிலக்கிழார் திருவாளர். கு. ஐயா சுப்பிரமணிய முதலியார் அவர்களால் சில திங்களின் முன் தரப்பட்டது. அதிலும், 'வெங்கோன்றளந்தூன்றி' என்றே இருக்க காணலாம். இதில் ஈரெழுத்தும் திரிவிக்கிரமாவதாரம் கொண்டன. வேறு சில பதிப்பிலும் இவ்வாறுள்ளன.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத்தின் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீட்டிலும் இவ்வாறே இருப்பினும், அதில் ஒரு திருத்தமும் காணப்படுகின்றது. 'தூன்றி' என்பது 'துன்றி' என நெடில், குறிலாகி, உண்மைப் பாடத்தை உய்த்துணரத் துணை புரிவதாயிற்று. ஆயினும், 'வெங்கோன்றளம்' என்பதை உணர எங்கோன்றளம் ஆகிய திருக்கச்சி யேகம்பத்தை வழிபடல் இன்றியமையாதது.

அறிவித்தால் அறியும் இயல்புடைய உயிர்கட்கு, அவன் திருவருள்தானே உணர்த்த வல்லது. அத்திருவருளைத் துணைக்கொண்டு ஆராய்ந்தால் இதன் உண்மை புலனாகாது போமோ?

திருக்கழுமலத்துப் பெருமானார் கற்றைச் சடைமுடியில், சூழரவம் தெற்றிக்கிடக்கின்றது. வெண்டிங்கள் சூடப்பட்டுளது. இவ்விரண்டும் தெளிவாகியவை. இடையில் உள்ளதும் தெளிவா தற்குறியதே. 'வெண்டிங்கள்' என்ற பண்புத் தொகைப் பெயர்ச் சொல்லிற்கு முரண்டொடையாகச் 'செங்கொன்றை' என்னும் பண்புத் தொகைப் பெயர் அப்பர் திருவுள்ளத்தில் தோன்றிச் செங்கொன்றை வெண்டிங்கள் என முரணடை கொடுத் தருளினார். 'நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள் நீங்காமை வைத்துகந்த நீதியானே' என (6.84.10, 6.99.5) அருளிய திருத்தாண்டகத்தில் அமைந்த முரண்டொடை ஈண்டு நோக்குக. 'செஞ்சடை வெண்மதி' (6.4.53) என்றதும் அறிக. 'வெங்கோன் றளம் , என்றிருப்பதால், (ளம் என்றதை நோக்கிக்) கூவிளம் கூதளம் எனக் கருதலாம். 'கோன்ற' என்றதை நோக்கின், கொன்றை எனக் கருதுவதே ஆராய்ச்சியறிவுடைமைக்குத் தக்கதாகும்.

'வெண்மதி பைங்கொன்றை மாலையுங் கண்ணியும் ஆவன (4.17.8) எனவும் அப்பர் திருவாக்கில் வந்திருப்பதால், பைங்கொன்றை என்றோ வெங்கொன்றை என்றோ ஈண்டுக் கொள்ளலாம். ஆயினும் 'பொற்றாது மலர்க் கொன்றை சூடினான்' 'பொன்திகழ் கொன்றை மாலை' 'பொன்மணியம் பூங்கொன்றை மாலை' 'பொன்னாங் கொன்றை' 'பொன்னலத்த நறுங்கொன்றைச் சடையினான்' 'பொன்னிதழ்க் கமழ்தார்' 'பொன்னிலங் கொன்றை யந்தார் மாலை' என்னும் வழக்காலும் 'செங்கொன்றை' எனத் தடையில்லை. தங்கத்தை ஒத்தகொன்றையை மட்டும் 'பைங்கொன்றை' என்பது மரபு. 'செம்பொன்' என்பது பொன்னையும் 'பைம்பொன்' என்பது தங்கத்தையும் உணர்த்தும் தமிழ் வழக்குண்மையை அறிஞர் நன்கறிவர்.

'செங்கொன்றை'யோ 'பைங்கொன்றை'யோ யாதா னுமாகுக. இத் திருவிருத்தத்தில் கொன்றையும் துன்றி என்பது தக்கதாதல் புலவர்க்குப் புலப்படும்.

ஐந்தாவது திருமுறையில் தொண்ணூற்றேழாவது திருப் பதிகத்தில், இருபத்தொன்பதாவது திருக்குறுந் தொகைப் பாடலாக ஒன்று இருக்கிறது. அதைத் திருமந்திரத்திலும் காணலாகின்றது. இரண்டிற்கும் வேறுபாடு உண்டோஎனின், சிறிது உண்டு.

திருமுறையில் உள்ளவாறு இது:

தன்னிற் றன்னை யறியுந் தலை மகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையும் சார்தற் கரியனே. 5.97.29

திருமந்திரத்தில் உள்ளவாறு இது:

தன்னினில் தன்னை யறியுந் தலைமகன்
தன்னினில் தன்னை யறியத் தலைப்படும்
தன்னினில் தன்னை சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியவே. 2349

இவ்விரண்டனுள்ளும் தவறு உண்டு. இப்பாடலின் உண்மை யுருவம் சிறிது வேறுபடும். இலக்கணமும், கருத்துக்கு ஏற்ற சொல்லமைப்பும், பொருள் நோக்கிற்கு ஏற்ற தொடரமைப்பும் திருமந்திரத்திலும் தேவாரத்திலும் குற்றம் உற்றுள்ளன.

திருமந்திரத்தில் அரியனே என்பது அரியவே என்றதே தவறு. தேவாரத்தில், 'அறிவிலன்' என்றதும் 'தன்னில்' என்றதும் திருமந்திரத்திற் காணப்படும் பாடத்தின் வேறாகும். திருமந்திரத்தில் வெண்டளை பிழையாவாறு பாடல்கள் அமைந்து உள்ளன. இவ்வுண்மையை உணராமல் பாடபேதங்களை மட்டும் நோக்கி நூலைக் கெடுத்தனர் சிலர். அவ்வுண்மைத் திறத்தைத் தனிக் கட்டுரையில் வெளியிடுவோம். திருமுறைகளுள் திருமந்திரமாலை (10)யும் பிரபந்தக் கட்டளை (11)யும் நல்ல வெளியீடாக வரும் நற்காலத்தைச் சைவத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருப்பது பெரிய தொரு கடனாகும்.

'அறியத் தலைப்படும்' 'அறியிற்றலைப்படும்' என்ற பாடத்தில் தலைப்படல் ஒன்றே ஈண்டு நினைவிற் கொள்ளற் பாலது. தலைப் பாடும் சார்வும் ஒரு பொருளாதல் பிற்கால வழக்கு. தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு அணித்தாய காலத்திலும் அப்படி இல்லை. அத்தலைப்படற் பொருட்டாய சார்பு மூன்றாவதடியின் இருத்தல் தக்கதே. அத்தகுதியில், 'சார்கிலனாகில்' 'சார்கிலனாகிடில்' என்று இருத்தல் வேண்டும். வெண்டளைக் கேடு பற்றிய குற்றம் கொள்ளாத வகையில் அது பொருந்தும். திருமந்திரப் பாடமெல்லாம் வெண்டளை பிழையாதவை. அச்சிடுவித்தோர் முதலியோர் அதை அறியார். 'சார்கிலன் ஆகிடில் சார்தற் கரியனே' என்பதே பொருத்தமாகும்.

இப்பாடல் தேவாரத்தில் இருத்தல் பொருந்தாது. தேவாரத்தில் உயிரும் மெய்யுமாந் தமிழெழுத்து முப்பதும் ஆய்தமும் முதலாக நின்ற திருக்குறுந்தொகைகளே (அத்திருப்பதிகத்தில்) இருத்தல் வேண்டும். வ, ற, ன என்னும் மூன்றெழுத்துக்கும் உரிய பாடல்கள் எங்கேயோ ஒளித்துக் கொண்டிருக்கின்றன. 'நகரவெல் கொடி' எனத் தொடங்கும் திருக்-குறுந்தொகையில், 'ஙகரவெல் கொடி' என்றிருத்தல் வேண்டும். 'இலங்கை மன்னனை' என முதலும் திருப்பாடல் 'இயக்கர்கின்னரர்' என்னும் திருப்பாடலுக்குப் பின் இருத்தற்குரியது. னகரத்திற்குரிய திருப்பாடல் இருந்த இடம் திருமந்திரப் பாடலின் போலிக்கு உறைவிடம் ஆயிற்று. ஆகவே, னகரத்தை இரண்டாவதெழுத்தாக உடைய திருப்பாடல் இருத்தற் குரிய 'இடத்தை'த் தனதாகக் கொள்ளும் 'வலத்தை' எப்படியோ பெற்று, 'தன்னினில்' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல் தேவாரப் பாடலாய்விட்டது. அத்திருப்பதிகத்தை நோக்கி வணங்கி முதற்றிருப் பாட்டுக்குப் பின்னர், 'அகரம் முதலிய பன்னீருயிரும்' ஆய்தமும் தகர முதல் பதினெட்டுடம்பும், முறையே முதலாக நிற்கப் பாடியருளிய அப்பர் சுவாமிகளது தமிழ்ப்பற்றின் திறத்தைப் போற்றி வருதல் உண்மைச் சைவர்க்கு உற்ற கடனாகும். அக்கும் எனத் தொடங்கும் திருப்பாடல் அஃகேனத்திற்கு உரியது. அதன் பின்னுள்ளவை 'ககரம் முதலிய மெய்' பதினெட்டிற்கும் உரியன. அவற்றுள், முற்குறித்த மூன்றெழுத்தும் முதலாக நின்ற திருப்பாடல்களை நாடித் தேடிப் பாடி வரும் நலம் என்று வாய்க்குமோ? எந்நூலிலிருந்து கிடைக்குமோ?

திருச்சிற்றம்பலம்.

25. திருநாவுக்கரசர் திருத்தொண்டின் நெறி

திருக்கோயிலுள் இரண்டிதழ்களில் வெளி வந்த கட்டுரை களை நோக்கிய அன்பர் சிற்சிலர். தொடர்ந்து இவ்வாறாய உண்மைகளை எழுதி வரல் வேண்டுமென்று வேண்டியதை யேற்று, இதிலும் சில எழுதுகின்றோம். அறிஞர் உலகம் இவ்வுண்மைகளை யேற்றுக்கோடல் எமக்கு ஊக்கம் உண்டாக்குகின்றது.

ஐந்தாவது திருமுறையில், திருவேட்களத்திலும் திருநாகேச் சரத்திலும், பாடியருளியனவாக ஒரு திருக் குறுந்தொகைப் பாடல் உளது. அஃது இஃது:

வட்ட மாமதில் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கையர் ஆயினும் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே 5.42.9

இத்திருப்பாடல் திருநாகேச்சரத்ததாக உள்ளதில், மூன்றுடன் ஆகிலும்-சிட்டர் போல் திரு எனச் சிறிது வேறுபட்டுள்ளது.

மயிலை கிழார் இளமுருகனார் பதிப்பில், எண் 5652, 5756 ஆக உள்ளவற்றை நோக்குக. பண்முறை யேடுகளே எங்கும் கிடைக்கின்றன என்று ஸ்ரீ இராஜம் ஐயங்கார் அவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. அதனால், நூற்று நான்கு பாடல்கட்குள் இவ் வேறுபாடு காணப்படுகின்றதை நோக்கி, ஏடெழுதினோர் பிசகாகக் கோடல் எளிதே. ஈரிடத்திலும் ஒன்பதாவது திருக் குறுந்தொகைப் பாடலாகவே உள்ளதும் நினைக்கத்தக்கது.

இதனை முன்னர்க் காட்டியது ஏன்? பின்னர்க் காட்டுவதை நன்குணர்ந்து நம்புதல் குறித்தே. சீரளவிற் சிறியதை முற்காட்டுதல் அறிவார்க் கெளிதாக்கும். இது நாலாந் திரு முறையில் உள்ள திரு விருத்தம்; திருவையாற்றுத் தலத்திற்குரியது.

அந்திவட்டத் திங்கட் கண்ணியன்
ஐயா றமர்ந்து வந்தென்
புந்திவட்டத் திடைப் புக்கு நின்றானையும்
பொய்யென்பனோ

சிந்திவட்டச் சடைக் கற்றை
யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத் தொடு கொன்றை
வளாவிய நம்பனையே. 4.98.1

இதன் வடிவம் சிறிது வேறுபட்டுத் தனித்திரு விருத்தங்களாக நாலாந் திருமுறை முடிவில் உள்ளவற்றுள் ஐந்தாவதாக இருக்கின்றது. முதலடியில், 'திங்கட் கண்ணியன்' என்பது 'இளங் கண்ணியன்' என்றும், மூன்றாவதடியில் 'சிந்தி' என்பது 'சந்தி' என்றும் உள்ளதே அச்சிறு வேறுபாடு. இப்பாட பேதம் எவ்வாற்றாலும் சரியானது அன்று. கண்ணியில் இளங்கண்ணி முதுகண்ணி என்னும் பேதம் இல்லை. வட்டச் சடைக் கற்றையைச் சிந்தியலம்ப அலர்ந்த நந்தி வட்டம் என்பதே பொருள். 'சந்தி' என்று ஒன்று சந்தியில் நின்று மோனையையும் பொருளையும் கெடுத்தது அங்கு அடுத்தது ஆகாது. இதனை நாலாந் திருமுறைக் குறிப்புரையில் எழுதியிருக்கின்றோம். தருமையாதீனத் திருக்கோயில்களுள் எதிலேனும் அதனை விலைக்குப் பெற்று நோக்கியின்புறலாம்.

'ஐயாறமர்ந்து வந்தென்புந்தி' என்றதை 'ஆறமர் செஞ்சடையான்' என்று தவறாக எழுதியதை, யாவரும் அறிந்து கொள்ளலாம். அதுபாட பேதம் ஆகாது. சிலர் பதிப்பில், பாட பேதத்திற்கும் தவற்றிற்கும் பேதம் தெரியாத உண்மை பெரிது வெளிப்படக் காணலாம்.

'ஐயாறமர்ந்து வந்து' என்று புறத் திருப்பையும் 'என்புந்தி வட்டத் திடைப் புக்கு நின்றான்' என்று அகத் திருப்பையும் உணர்த்தியருளினார் நம் அப்பர். அவர்க்கு இவ்வாறு உணர்த்தும் பழக்கம் உண்டு.

விண்ணினார் மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்தஞ்சும்
கண்ணினாற் கழல் காண்பிடம் ஏதெனில்
புண்ணியன் புகலூரும் என் நெஞ்சுமே. 5.46.5

திருவையாற்றுத் திருப்பதிகங்களை யெல்லாம் ஊன்றி நோக்கின் இவ்வுண்மை இனிது புலனாகும்.

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை யுள்ளும் உறைவான்' என்னுந் திருக்கோவையில் உள்ளது போலத்

திருமுறையிற் பல இடத்தில் உள்ளதைக் காணலாம். இத்தகைய இடங்களை நோக்கி நெடிது நினைந்து அன்பின் பெருக்கம் உடைய கவிஞர் ஒருவர்,

ஆகத்திலே ஒரு பாதிஎன் அம்மைக்
களித்து அவள் தன்
பாகத்திலே ஒரு பாதி கொண்டாய்;
மற்றைப் பாதியும் உன்
தேகத்திற் பாதியும் சேர்ந்தால்
இருவர் உண்டே! சிவனே
ஏகத் திராமல் இருப்பாய்
களந்தையும் என் னெஞ்சுமே

என்ற நயம் உறப் பாடினார். இது களக்காட்டுச் சத்திய வாசகர் இரட்டை மணிமாலைப் பாட்டு. இதை மகாமகோ பாத்தியாய ஐயரவர்கள் வெளியீடாக வந்தது. இது போல அப்பாவலர் பிரானார் பாடிய பழநி யிரட்டை மணி மாலையும் மிக்க நயம்உள்ள பாக்கள் உடையது. அவ்விரண்டனையும் நோக்கின், இக்காலப் பாவாணர்கள் தம் பாட்டை நன்கு பாடிவர முயல்வார்கள்.

நாலாந் திருமுறையுள் 'முந்தி வட்டத்திடைப்பட்ட' எனத் தொடங்கும் திருவிருத்தத்தைப் போல, இக் கட்டுரையிற் காட்டிய திருவிருத்தம் வேறுபடாமையை உணர்தலும் இங்கு நலம் பயக்கும்.

திருவையாற்றுத் திருப்பதிகத்தில் 'ஓதிய ஞானமும் ஞானப் பொருளும்' எனத் தொடங்குவதில், 'சோதியஞ் செஞ்சுடர் ஞாயிறும்' என்றிருந்தது. எண்ணும்மையாகக் கொண்டு 'சோதியும்' எனப் பிழைபடப் படித்து வருகின்றனர். 'சோதியே சுடரே' என்றதில், சோதி வேறு-சுடர் வேறு என்னும் உண்மை உணர்வார்க்கு இது தெரியும். ஞாயிறும் மதியும் கூறிய இடத்தில் தீயையும் கூறினார் என்று கொண்டார் எனச் சிலர் துணியலாம். அத்துணிவு ஈண்டுப் பொருந்தாது. 'சொரிவிப்பார்' என்னும் தொடக்கத்தையுடைய திருக்குறுந் தொகைப் பாடலைப் போல் பல இடங்கள் உள்ளன. அங்கெல்லாம் இவ் வண்ணம் கொள்ளல் கூடும்.

ஈசன் என்னை அறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி ஏற்றப் பெறுதலால்;
ஈசன் சேவடி ஏத்தப் பெற்றேன் இனி
ஈசன் றன்னையும் யான்மறக் கிற்பெனே 5.93.3

என்னும் குறுந்தொகைப் பாடலில், இரண்டாவது அடிக்கண், 'ஏற்றப் பெறுதல்' என்றிருப்பது பிழை. அஃது அடுத்த அடிக்கண் உள்ளவாறே ஏத்தப் பெறுதல் என்றிருப்பதே பிழையுறாதது. ஏற்றலுக்கும் ஏத்தலுக்கும் வேறுபாடு பெரிதுண்டு. எடுத்தல் என்றது ஏத்தல் என மருவியதும் உண்டு. அஃது எடுத்தேத்தல் 'ஏத்தெடுத்தல்' என வரும். இது பயிற்சியில் உளது. 'எடுத்தல் படுத்தல் நலிதல்' என்னும் முத்திறத்துள் ஒரோசையைக் குறிக்கும் எடுத்தல் ஏத்தல் என மருவுதல் வியப்பன்று. பகுத்தீடு பாத்தீடு பாதீடு என்பதிற் போல, முதல் இருகுறில் (முதலாவது குறிலின்) நெடிலாகி (இரண்டாவது குறில் கெட்டு) நிற்றல் இயல்பு. பொழுது போழ்து போது; துகள் தூள்; நிகளம் நீளம்; அகழும் ஆழும் புகுந்தான் பூந்தான் போந்தான் என்பவை பல உள்ளன.

திருநாவுக்கரசு நாயனார் திருவிடைமருதூரில் இசைத்தருளிய திருக்குறுந்தொகைப் பதிகம் இரண்டு. திருநேரிசை ஒன்று, திருத்தாண்டகம் இரண்டு, இவ்வைந்து திருப்பதிகங்களுள், முன் இரண்டனுள், ஒரே திருக்குறுந்தொகை ஈரிடத்தில் உள்ளது. அஃது எவ்வாற்றான் நேர்ந்ததோ அறியக்கூடவில்லை.

'பாசம் ஒன்றிலராய்ப் பல பக்தர்கள்' எனத் தொடங்குந் திருப் பதிகத்தின் ஐந்தாவது திருப் பாடலையும், 'பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்' என முதலும் திருப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாடலையும் ஒருங்கு வைத்து நோக்குதல் வேண்டும். இரண்டும் வேறல்ல. இரண்டாவதடியீற்றின் கண் 'ஆர்' என்னும் விகுதி 'ஐ' என்று இரண்டனுருபாகிய வேறுபாடு மட்டும் உளது.

வண்டணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்டணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டிசைக்கும் இடைமருதா என
விண்டுபோயறும் மேலை வினைகளே 5.15.3

இதில், 'கூத்தனார்' என்பது மற்றைத் திருப்பதிகத்தில் உள்ள தன்கண், 'கூத்தனை' என்று வேறுபாடு சிறிதே கொண்டிருக் கின்றது.

திருமுறைச் சொற்றொடர்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் ஆற்றல் பெறுவது எளிது அன்று. புலமையுடை யோர்க்கே அரிதாக இருப்பது அது. அருள் நூல்களுள் உள்ள தொடர்களைப் பிரித்தலில் அறிவு விரைதலாகாது. ஆய்ந்து ஆய்ந்து பிரித்துப் பொருள் கோடல் தக்கது.

திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரில் எழுந்தருளிப் பாடிய திருவிருத்தத்துள் இரண்டாவதாக வெளியிடப் பெற்ற திருப்பாடல்

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தா
னாரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீள்நா டறியும் அன்றே!

என்பது. இதனுள் இரண்டாவதடியின் ஈற்றெழுத்தும் மூன்றாவதடியின் முதலெழுத்தும் தமிழியல் மரபிற்குத் தகப் புணர்ந்துள்ளன. பொன்+நீர்மை = பொன்னீர்மை, மான்+நிறம் = மாநிறம், கான்+நீட்சி = கானீட்சி என்பவற்றிற் காணுமாறே னகரமெய்யும் நகரமெய்யும் புணர்ந்துள்ளன. 'படுத்தான்' என்பதன் ஈற்றுமெய் னகரம். 'நார்' என்றதன் முதல்மெய் நகரம். னகரமும் நகரமும் புணர்ந்தால் (நெட்டெழுத்தின் பின்னதேல்) ஒரு னகரம் ஆதல் தமிழ் மரபு. தனிக் குற்றெழுத்தின் பின்னதேல் இருநகரமாகும். அதற்கு எடுத்துக்காட்டு. அப் 'பொன்னீர்மை' என்பது. ஏனையிரண்டும் நெட்டெழுத்தின் பின்னதற்கு எடுத்துக் காட்டாவன. அவன்+நிறம் = அவனிறம் என வருவதும் நெட் டெழுத்தின் பின்வருதலோடு ஒப்பதே. இதனைத் தொல்காப்பியர்,

குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல

என்ற நூற்பாவால் அறிக.

முதற்குறித்த திருவிருத்தத்துள், முதலடிக்கண் 'ஆரூர்' என்றிருப்பதைக் கருத்திற் கொண்டு, மூன்றாவதடியின் முதலெழுத்தை இஃது என்றுணர்தல் அரிதன்று. மிக எளிதே. அவ்வளவு அறிவு

சென்றிலதாயின், உண்மையை உணர்ந்து பிரிப்பது மிக அரிதேயாம். எதுகை மோனை அறிந்தவராயின், அவர்க்கு அதன் உண்மை தெரியலாம். பிரிக்குமாறும் பிரிக்கலாம். 'நம்பிநந்தி' என்பது மூன்றாவதடியின் ஈற்றுச் சீர். அச்சீரின் முதலெழுத்தாகிய நகரத்திற்குரிய மோனையெழுத்தே அதன் முதற்சீரின் முதலெழுத்தாக அமைந்துள்ளது. அது நகரமெய்யாகும். ஆகவே, 'நாரூர் நறுமலர்' என்றே பிரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும் என்பது நன்கு விளங்கும். 'ஆரூர் நறுமலர்' என்று பிரித்துள்ள பதிப்புக்கள் உள்ளன. அத்திரு விருத்தத்தின் மூன்றாவதாக உள்ள திருவிருத்தம் 'அடித்தொண்டனந்தியென் பானுளனாரூரமுதினுக்கே' என்றிருப்பதை அடித் தொண்டன் அந்தியென்பானுளன் நாரூர் அமுதினுக்கே எனப் பிரிக்காதுவிட்டதற்கு நாம் இன்புறுதல் வேண்டும். இவ்வாறு முன்னையோர் பால்யாண்டும் காண்டல் இயலாது.

இங்கு 'நாரூர் நறுமலர் நாதன்' என்று கொண்டு பொருளுரைப்பதே நாவரசர் நல்லருளுள்ளக்கிடக்கை. ஆரூர் நறுமலர் எனப் பிரித்தது புண்ணியம் ஆகாது.

திருவாரூர்த்தியாகேசர்க்கே செங்கழுநீர் மாலை செவ்வந்தி மாலை இரண்டும் சிறப்பின் உரியன. செங்குவளை மாலையும் அத்தகைய சிறப்பினதே.

... ... திருமார்பிற்
பார்த்தமையும் நக்கமையும் பாய்ந்தென்னச் செங்கழுநீர்
சேர்த்தமையும் முத்தும் சில பூண்டு - மார்த்தாண்டன்
முன்னந் தனைமறைத்த முன்னோன்

எனவும்.

செவ்வந்தி மாலை நீலவானம் திருமார்பிற்
செவ்வந்தி மாலை தெரிசியீர்

எனவும் திருவாரூருலாவில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடியவற்றாலும் அவ்விருமாலையும் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானுக்குச் சிறந்தமை புலப்படும்.

முற்காலத்தில் மகளிர் செயலின் மாண்பைத் தெரிவிக்கும் பற்பலவற்றுள் ஒன்று இது: செவ்வந்தியைப் பயிரிட்டு பார்த்து வந்த பெண்

ஏழு, செவ்வந்திக்கு ஏழு பெயர் வைத்து, அப்பெயரால் அவற்றைக் குறித்தும், வளர்த்துக் கொண்டு வந்தாள். அவற்றுள் ஒன்று 'வீதி விடங்கு' என்ற திருப் பெயருடையது. தியாகேசர்க்குச் செவ்வந்தி சிறப்பானது என்பதனை அதனாலும் அறியலாம். ஏழூரிலும் தியாகராசப்பிரான் இருப்பினும், அவர் ஒருவரே ஆவார். ஏழாவார் அல்லர். ஆதிவிடங்கர், அவனிவிடங்கர், புவனிவிடங்கர், நீலவிடங்கர், நகரவிடங்கர், வீதிவிடங்கர், அழகவிடங்கர் என்பவற்றை,

ஆதி அவனி புவனிதிரு நீலநகர்
வீதி யழக விடங்கென்னும் - சோதிதிருப்
பேரேழும் இட்டுப்பெண்மகவாய் நீ வளர்த்த
ஓரேழ செவ்வந்திக் குள்ளோங்கி - ஆரூரன்
நாமத்த தொன்றும் அலர்ந்தது

என்ற (திருவாரூர் உலாக்) கண்ணிகளில் அமைத்தும் 'வீதிவிடங்கு' என்னும் செவ்வந்தியின் பெயரீடு குறித்தும் உணர்த்தினர்.

'தோடலர் செ(வ்)வந்தியத் தோடசைய மார்பிற்றொடுத்த செங்குவளை யசைய....ஆடும் உன் அசபநடம்' எனத் தருமைக் குரு மகா சந்நிதானம் அருளிய அசபா நடனப் பதிகத்தும் சிறப்பு மலர், கூறப்படுதல் அறிக.

இவற்றால், 'நாரூர் நறுமலர் நாதன்' என்று தியாகராசப் பெருமானைக் குறித்தருளிய நாவரசர் திருவுள்ளம் ஓராறு புலப்படும். இன்றும் திருவாரூரில் தியாகராசப் பெருமானுக்குத் தவனம் மருக்கொழுந்து முதலிய நறுமலர் அணி செய்யும் முறைமை தனிச் சிறப்புடையது ஆதலை, ஆண்டுச் சென்று வழிபட்ட அன்பர் அனைவரும் அறிந்து அகமகிழ்ந்திருப்பர். நறுமலர் தொடுக்கவுதவும் நாரும், தொடுப்பார்க்கு இன்றி யமையாது வேண்டும் நாரும் (அன்பும்) இங்குப் பொருளாய் நிற்கும். அந் நறுமலர் புனைந் தருளும் நாதன் வீதிவிடங்கப் பிரான். இவ்விடத்தில் ஆரூர் என்று பிரிப்பது எவ்வாற்றிலேனும் பொருந்துமோ? அறிஞர் ஆராய்ந்துணர்க.

திருச்சிற்றம்பலம்

26. திருவாசகத்துக்குருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்

'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துஉகக், கண்கள் தொடுமணற்கேணியின் சுரந்து நீர்பாய, மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப்பு எய்தி அன்பர் ஆகுநர் அன்றி, மன்பதை உலகில் மற்றையர் இலரே' எனக் கவிதா சார்வ பௌமர் (பாமுழுநிலத்தர்) கூறியதை இக்காலத்தாரும் தம் ஆட்சியில் உணர்ந்துவரினும், ஒரு சிலர்க்குத் தோன்றும் ஐயம் நீங்குமென்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மாணிக்கவாசகப் பெருமானார் 'பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவர்' சித்தமும் பித்தும் சிவனுக்கே ஆக்கியவர். அவ்-வித்தகத்தேவனும் தன் திருப்பாதங்களை இவர் சித்தமெனும் திண் கயிற்றால் கட்டுவிக்கும் விழுமியநிலையுற்றவன். அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே பத்து ஏதும் இல்லாது பற்றற அம் மெய்த்தேவனையே பற்றி நின்றவர். அவன் திருவடியை யொட்டாத பாவித்தொழும் - பருரு அறியாதவர். இவர் சித்தமே சிவம். இவர் செய்தனவே தவம். ஆண்டவனை நினைத்தலும், காண்டலும், பேசலும் - எப்போதும் உடையராய், எஞ்ஞான்றும் எல்லா எலும்பும் உள்ளே நெக ஆனந்தத்தேன் அருந்தியிருந்தவர். அந்நிலையிலும்,

வேண்டும் வேண்டும்..... மிக்க அன்பேமேவுதலே

என்றும்,

நெகுமன்பில்லை நினைக்காண என்றும்
இல்லை நின்கழற்கன்ப தென்கணே
ஏலம்ஏலும்நற் குழலி பங்கனே என்றும்
வேண்டும் நின்கழற்கண் அன்பு என்றும்
குற்றலாத் தமர்ந்துறையும் கூத்தா நின் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

என்றும்

ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்கு என்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே

என்றும்,

... ... அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்கு அன்பு எனக்கு
நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே

என்றும்,

... அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுத் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்பதென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே

என்றும்,

சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ
என்பொல் லாமணி யைப்புணர்ந்தே

என்றும்,

ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்பது என்றுகொல்லோ
என்பொல் லாமணி யைப்புணர்ந்தே

என்றும்,

வேண்டியமுதவர், இவ்வாறு வேண்டி வேண்டி அன்புருக்கம் முற்றிய நிலைவரையிலும் வளரப்பெற்றும், தம் அன்பையும் கண்ணப்பர் அன்பையும் ஒத்திட்டுணர்ந்தார். அவரன்பு தமக் கின்றென்று அருளினார். நிறைந்த அன்புடைய கண்ணப்பரோடு குறைந்த அன்புடையர் என்னும் தமக்கு வாசியில்லா வண்ணம் தம்மை ஆண்டுகொண்ட சிவபிரான் பெருங்கருணையைப்

பாராட்டினார். 'அறைகூவி வீடருளும் அங்கருணை வார்கழலின் நயந்தனைப்பாடி நின்றாடியாடி' உருகுவாராயினார்.

அத்தகைய ஒப்புயர்வற்ற செப்பற நிலை யெய்துதற்குக் கருவியாகவுள்ள பலவற்றுள் உருக்கமே சாலச்சிறந்தது. அவ்வுருக்கம் அருணெறியுருக்கம், மருணெறி யுருக்கம் என்றிரு வகைத்து. அவ்விரண்டும் உண்மை, போலி என்னும் இரண்டனாலும் வெவ்வேறாய் நால்வகைப்படும். அவற்றுள் அருணெறி யுண்மை யுருக்கம் ஒன்றே ஈண்டுக் கொள்ளப்பட்டது. அது மெய்ஞ் ஞானத்தாணுவோ டத்துவிதஞ் சார்வார் கண்ணதாஞ் சிறப்பினது.

திருவாசகத்திற் காணப்படும் அருணெறி யுண்மை யுருக்கம் ஒவ்வொருவருள்ளத்தும் ஊன்றி நிற்கற்பாற்று. திருவாசகத் துருக்கம் மற்றொரு வாசகத்துமில்லை. அது தனியுருக்கம். அதனால் அஃது ஈடும் எடுப்பும் அற்றது. அத்தகைய அருணெறி யுண்மைத் தனிப் பேருருக்கம் 'வேனில் வேள் மலர்க் கணைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க் கரிய பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ் நெஞ்சு' உடையவர்க்கு எஞ்ஞான்றும் எட்டுணையும் வாய்ப்பதரிது. அவ்வுண்மை யுருக்கம் உயிரைப் பிறவிப் பெருங்கடல் நீந்துவிக்கும். இப்பெண்மை யுருக்கம் அதனை அக்கடலுட் பன்முறையும் அழுந்துவிக்கும். திருவாசக வுருக்கம் உள்ளம், உரை, உடல் என்னும் முப்பொறித் தூய்மையுடைமையான் ஆவது. பித்து எம்பிரானொடும், பிறவி பிறரொடும் ஆட அணைவது. மற்றது பித்து மகளிரொடும் பிறவி தம்மொடும் ஆடப் பிணைவது.

அருணிலை யுருக்கத்தின் குறிகளாவன :- திருவாசகம் 5

உள்ளம் :- 1. - உள் வெதும்பல்

2. - பொய் தவிர்தல்

உரை :- போற்றுதல்

உடல் :- 1. - மெய் யரும்பல்

2. - கை தலை வைத்தல்

3. - கண்ணீர் ததும்பல்

வேர்க்குங்கண் ணீர்ததும்பும் கம்பித்து மெய்ந்நடுங்கும்
வார்த்தை நழுவும் மனம்பதறும் கார்க்கதமாய்க்

காந்துமுரோ மாஞ்சலியா குங்காத லித்தார்கட்
கேய்ந்தகுண மாமிவையே எட்டு

என்பாருமுளர்.

மாணிக்கவாசகப் பிரானார் தம் உருக்கத்தைப் பலவாறு உணர்த்தியருளினார். அவற்றை அடியேன் அறிந்த அளவு இக்கட்டுரையில் குறிக்கின்றேன். யானா உருக்கத்தைப்பற்றி எழுதுகின்றேன் ? என்று எனக்கே நகை உண்டாகின்றது. என்னாட்சியில் சிறுதும் காணப்படாத உருக்கத்தைப்பற்றி எழுத முற்படுதல் பொருளின் உயர்வு பற்றியே என்க.

திருப்பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளத்து ழூழ்கிய முனிவர் உருக்கம் யாண்டு முடிவுறும்? ஆண்டுச் சென்று கண்டு நின்ற-வராயிருந்தும், தம் உருக்கத்தைச சிறிதாகவும், அடியார் பிறர் உருக்கத்தைப் பெரிதாகவுங் கொண்டு வருந்துகின்றார். 'உள்ளந்தான் தொட்டு உச்சந் தலைகாறும் நெஞ்சாயிருந்து உருகுதல் வேண்டும். உடம்பெல்லாங் கண்களாகிக் கண்ணீர் வெள்ளம் பாயவேண்டும். அவ்வாறில்லையே! கன்னெஞ்சும் மரக்கண்ணும் பெற்ற தீவினையே-னாயினேன். அடியார், 'வெள்ளச் சடையாய்! வெள்ளை விடையாய்! தேவாதி தேவா!' எனப் போற்றுதலைச் செவிமடுத்து மேன் மேலும் போற்றுதலையும் அது கேட்டலையும் வேட்ட வுள்ளத்தாராய்ப் பள்ளத்திற் கீழ் மேலாகப் புரண்டோடும் வெள்ளம் போலப் பதைத்து உருகுகின்றனர் பற்றர் பல்லோர். அத்தன்மை உடையாரைத் தவிர்த்து என்னை ஆண்டு கொண்டாய். என்னையாண்ட உன்னையெண்ணி உடம்பெல்லாம் நெஞ்சும் கண்ணுமாகி உருகப்பெற்றிலேன். முருட்டுச் சிந்தையும், இரும்பின் வன் செவியும், மரக்கண்ணுமுடைய என்னை எற்றினுக்கு ஆண்டாய்? எனக் கடவுளைக் கடாவினார். 'நாயேன் தனையாண்ட பேதாய்' என்றும் விளித்துவிட்டார்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா

வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே

(அண்ணா விளியுமாம் எதிர்மறைப் பெயரெச்சமுமாம்)

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்பராய் நினைவார் எனைப்பலர் நிற்க
இங்கெனை எற்றினுக் காண்டாய்?
வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்! சிவ லோகா!
திருப்பே ருந்துறை மேவிய சிவனே!

எனவருந்தி வேண்டிப் பெற்ற உருக்கம் ஆளுடைய அடிகளாரிடம் இத்தன்மையாக விளங்கிற்று எனத் திருவாசகம் தெள்ளிதின் விளக்குகின்றது. அவ்விளக்கம் நம் ‘உள்ளத்துறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம் தெள்ளும்’ நல் விளக்கமாம். ‘அமுதடி யடைந்த அன்பர்’க்கு ஆக்கையுருகிற்று. அது புரை புரை கனிந்துருகிற்று. ஆனந்தமாய்க் கசிந் துருகிற்று. ஊனெலாம் உருகின. தேனும், பாலும், கரும்பும், அமுதும் ஒத்து இனிக்க உருகின. எலும்பு உருகிற்று. அது நைந்து நைந்து உருகிற்று. எலும்பின் உள்ளே உருகிற்று. அன்பாறு கரைபுரள உருகிற்று. எலும்பின் துளைதொறும் உருகிற்று. அதில் இன்தேன்பாய உருகிற்று. நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள் ஏற உருகிற்று. கடவுள் கருணையினால் நிற்க உருகிற்று. தழலது கண்ட மெழுகது போல உருகிற்று. அழுது உடல் கம்பிக்கத் தொழுது உளமது உருகிற்று.

ஒருருவாக அள்ளூறாக்கையை இவ் வுருகுவதாய உள்ளங் கொண்டே செய்தான் இறைவன் எனச் சிறப்பித்துரைக்க உருகிற்று. தேனும், அமுதும் ஊறி நிற்க நெக்குருகிற்று. சிறைபெறா நீர் போற் சிந்தையிற் பெருந்துறைப் பெரு வெள்ளம் பாய உருகிற்று. தன்பாற் பந்த மறுக்கும் ஆனந்தமா கடல் அடங்கி யொடுங்க உருகிற்று. தன்னையே கோயிலாக் கொண்டு ஆண்டு அளவிலா ஆனந்தம் அருளிப் பிறவி வேரறுக்கப் பிஞ்ஞகனாகிய பேரா ஒழியாப் பிரிவிலா மறவா நினையா அளவிலா மாளா இன்பமாகடல் அடங்கி நிலைக்க உருகிற்று.

இவ்வண்ணம் ஆக்கையும், அதன் புரையும். அதிலுள்ள எல்லா ஊனும், என்பும், அதன் புரையும், அதன் துளையும், எல்லா எலும்பும், உள்ளமும் ஆகிய இவைதாம் உருகினவோ ? வேறு யாதேனும் உருகிற்றோ ? என்று ஆராய்ச்சி தோன்றுகின்றுழி முன் வந்து நிற்பது உயிரேயாம். அவ்வுயிரும் உருகிற்று. இறைவன் மணிவாசகரது உயிரையும் உருக்கினான். உருக்கிய தோடமையாது உண்டும் சுவை கண்டான். தம்மையுண்டு சுவைகண்ட சிவபிரானை மாணிக்கவாசகரும் உண்டார். இங்ஙனம் ஒருவரை யொருவர் பருகி இருவரும் வேறற ஒருவராயினர்.

இவற்றை யுணர்த்தும் திருவாசகங்களாவன :-

1. ஆக்கை

(அ) அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆநந்த மாய்க்கசிந் துருக 389

(ஆ) அரைசனே அன்பர்க் கடியேன னுடைய
அப்பனே ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே 390

(இ) புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்து 545

2. ஊன்

(க) தேனைப்பாலைக் கன்னலின் தெளிவை ஒளியைத்
தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை 62

(கா) வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை யும்அமு
தத்தையும் ஒத்து
ஊனையும் என்பினை யும்உருக் காநின்ற
ஒண்மையனே 125

(கி) ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
188

(கீ) பாவியேனுடைய ஊனினையுருக்கி 544

(கு) ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக் கோன் 330

(கூ) ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் 23

3. என்பு

(ச) என்பே உருக நின் அருள் அளித்துன் இணை மலரடி காட்டி 601

(சா) என்பு நைந்துருகி நெக்குநெக் கேங்கி.......
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி 4.80.87

(சி) என்புள்ளுருக்கி இருவினையை யீடழித்து 561

(சீ) எனைத்தான் புகுந்தாண்டான் எனதென்பின் புரையுருக்கி 509

(சு) உடலகத்தே,
குரம்பை கொண்டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத்துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங்கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை அமைத்தனன் 3.172.7

(சூ) என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடுகின்ற என்பொலாமணி 518

(செ) என் என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட ஈசனே மாசிலா மணியே 545

4. அகம், உள்ளம், நெஞ்சு, மனம்

(ட) அகநெக அள்ளூறு தேனொப்பனே 102

(டா) பொய்யனேன் அகநெகப் புகுந்தமுதூறும் புதுமலர்க் கழலிணையடி 398

(டி) உருகுவ துள்ளங் கொண்டு ஒருருச் செய்தாங்கு எனக்கு அள்ளூறாக்கை அமைத்தனன் 3

(டீ) தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து 4.61

(டு) உனையுணர்ந்தே உருகிப் பெருகும் உள்ளத்தை 494

(டூ) கன்னெஞ்சுருக்கிக் கருணையிலாலாண்டு கொண்ட
.....தில்லையம்பலவன் பொன்னங்கழல் 225

(டெ) கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக்கருணையினால்
நிற்பானைப் போல என்நெஞ்சினுள்ளே
புகுந்தருளி 318

(டே) அழுகேன் நின்பால் அன்பாம் மனமாயழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னா கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தார் 92

5. ஆவி, உயிர், உயிருண்ணல், சிவமாதல்

(த) ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக 389

(தா) ஆவியோடாக்கை புரைபுரை கனியப் புகுந்து
நின்றுருக்கி 390

(தி) உன் இணைமலரடி காட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
இன்பே அருளி எனை உருக்கி
உயிருண்கின்ற எம்மானே 601

(தீ) நின்ன தாட்கருப்பு மட்டு வாய்மடுத்து 84

(து) ஊன நாடகம் ஆடுவித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா 99

(தூ) அப்பனே எனக் கமுதனே ஆ
னந்தனே அகம் நெக அள்ளூறுதே
னொப்பனே உனக் குரிய அன்பரில்
உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்பனே சுடர் முடியனே துணை
யாளனே தொழும் பாளர் எய்ப்பினில்
வைப்பனே எனை வைப்பதோ சொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே 102

(தெ) அடியேற் கருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன் 3.165.7

(தே) உன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்......... தண்ணீர்
பருகத் தந்துய்யக் கொள்ளாய் 417

(தை) தந்துன்றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்? 397

(தொ) திருப் பெருந்துறை யுறை வான் நிச்சம் என
நெஞ்சில் மன்னி யானாகி நின்றானே 514

(தோ) அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட
பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணங்
கொட்டாமோ 288

இவ்வாறு உருகுவதன் பயனையும் மணிவாசகப் பெருமானார் அருளியுள்ளார். அன்புடையராய் என்புருகப்பாடி ஆடிப் பரவுவார் பிறவிப் பெருங்கடலை எளிதிற் கடப்பர் என்னுங் கருத்து விளங்க,

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்புருக்கும் பரம் 534

என்றருளியதை யீண்டுக் காண்க.

உடையா னேநின் றனையுள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்பதாக முடித்தாயே. (60)

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக்
கூறல் வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன்
சோத்தம்எம் பெருமானே
உடைந்துநைந் துருகி உள்ளொளி நோக்கி
உன்றிருமலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டா யம்மானே

(421)

திருச்சற்றம்பலம்

27. சிவபுராணம்

நம் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தை அறியாதார் எவருமிரார். சிவபுராணத்தை ஓதாதார் ஒருவருமிலர். இச்-சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து ஓதுதல் இம்மையிலேயே வீடு பேறளிக்கும். 'பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின், பல்லோரும் ஏத்தப் பணிந்து சிவனடிக்கீழ் உள்ளார்' என்று சிவபுராணத்தின் பயன் அதன் முடிவிலே விளக்கப் பெற்றது. இங்கு அதன் உட்கோளைத் திருவருளைத் துணையாகக் கொண்டு இயன்ற அளவு எழுதுவாம்.

சிவபுராணம் என்பதற்குச் சிவனது அநாதி முறைமையான பழமை என்று முன்னோர் மொழிந்த பொருளை முன்னர் அறியக் கடவோம். சிவம் என்பதன் பொருள் நன்மை என்பது. வேறு கூறும் யாவும் இதனுள் அடங்குவனவே. தனக்கு மேலொரு நன்மையில்லா நன்மையைத்தான் இங்குச் சிவஞானியர் கொள்வர். அந்நன்மையின் பழமை முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையாகும். அதையே அநாதி முறைமையான பழமை என்றனர். அப்பழமை இச்சிவ புராணத்தை ஆவியோடாக்கையுருகப் பாடிப் பொருளுணர்ந்து சுவைப்பார்க்கே நன்கு விளங்கும். இச்சிவ புராணத்தைக் கற்பவர் கற்கும்போதெல்லாம் திருப்பெருந்துறையிலிருப்பவராக நினைத்துக் கொண்டு ஆங்கு ஆளுடைய அடிகளை ஆரா அன்பொடும் கண்ணுங் கருத்துங் குளிரக்கண்டு கைகுவித்துப் போற்றிய நிலையராகத் தம்மை மறந்து அத்தலைவர் இயல்புகளை நோக்கியவராய்க் கற்றல் நன்று.

மாணிக்கவாசகப் பெருமானார் திருப்பெருந்துறையை அடைந்தார். அவரைச் சார்ந்திருந்த எல்லாம் வழியிலேயே விட்டகன்றவாதலின், தமக்கு எச்சார்பும் இல்லாமல், திருவருட்சார்பு ஒன்றே இருத்தலை உணர்ந்தார். அவ்வுணர்ச்சி அத்திருப்-பெருந்துறையை அடைந்த அப்பொழுதே தாம் திருவருள் வெளியில் நிற்றலைத் தோற்றியது. எல்லாம் திருவருண்மயம். பார்க்குமிட-மெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணத்தை அறிந்தார். ஒளியே! ஒளியின் உணர்வே! உணர்வின் உவகை பொங்கும் களியே! களிக்குங் கருத்தே! கருத்தைக் கவளங் கொண்டே வெளியே!

வெளியின் விளை சுகமே! என்று அழைக்கின்றார். அழைத்துக் கொண்டே அதைப்பற்றிப் பிடிக்கும் பேரார்வத்தோடும் விரைந்-தோடுகின்றார். ஓடஓட உருக்கம் பெருக்கமுற்றது. உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சா யுருகினார். உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பாய்ந்து பள்ளம் தாழ் உறுபுனலின் கீழ்மேல் ஆகப் பதைத்தார். 'எய்தலாவது என்று நின்னை' என்று நாடித்தேடி ஓடிப்பாடி ஆடி வருகின்ற வாதவூரரைத் திருப்பெருந்துறைக் குருநாதர் எளியராகி வந்து, ஒளிசெய் மானுடமாகிப் பணிகொண்டு, கையிலங்கு பொற்கிண்ணம் போன்றார். உடனே 'என்னை நின் அடியனாக்கினாய் போற்றி' எனப்போற்றி, ஊனநாடகம் ஆடுவித்த அப்பெருமான் ஞான நாடகமும் ஆடுவித்தற்கு எளியனாகிவந்த முடிவிலா நலங்குறித்து வாழ்த்தத் தொடங்கி,

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்டகுருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

என வாழ்த்தினார்

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்

என்பது சித்தாந்தமாதலின், முதலில் திருவைந் தெழுத்தை வாழ்த்தினார். நாதன் - சிவன், தாள் - அவனது சத்தி, நாதன்றாள் வாழ்த்து அச்சிவசத்தி வாழ்த்து. வாழ்க என்பது ஆறு முறை வந்தது. ஷாட்குண்ய சங்கேதம்.

வானவர்கள் தாம் வாழ வாழ்த்தினார்கள். மாணிக்கவாசகர் பாழ்த்த பிறப்பறுக்க வாழ்த்தினார். வானவர்கள் பெற்ற பயன் பெத்தநிலைச் சிற்றின்பம். மாணிக்கவாசகர் பெற்ற பயன் முத்திநிலைப் பேரின்பம். 'பாழ்த்த பிறப் பறுப்பான் யானும் உன்னைப் பரவுவன்' என்றதறிக. பரவுதல் - வாழ்த்தல். அவ்விரு வேறின்பத்தையும் விளக்குதல் சிவஞான பாடியத்துள் காண்க.

சிவசத்தியாகிய திருத்தாளை வாழ்த்தினால் சிவசத்தி குணங்களாகிய ஆறும் வாழும். அவை வாழ்தலாவது உயிரிடத்து

விளங்கப்பெறுதல். அதுவே சிவசத்திவாழ்வு. அவ்வாழ்விற்காகவே கடவுள் உயிர்கட்குப் பெரிதும் இரங்கி வாழ்த்த வாய் வைத்தான்; வணங்கத் தலை வைத்தான்; இணங்கத் தன் அடியார் கூட்டம் வைத்தான். 'தன்னடியார்' என்றதை ஊன்றி நோக்கவேண்டும். ஏனையடியார் கூட்டம் நெஞ்சறைபோக வஞ்சனை செய்யும்

அவ்வாறு அறுமுறை வாழ்த்து நிகழ்த்தியதும், தம்மொடு பொறாது தோற்றோடிய மலவெற்றியை யெண்ணி மகிழ்ந்து, அவ்வெற்றிக்குக் காரணமான திருவருளைக் கொண்டாடத் தொடங்கி,

வேகங் கெடுத்துஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

என ஐந்துமுறை ஜயகோஷமிட்டார். இது பஞ்சக்ருத்ய சங்கேதம் பின்னர்,

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

என்று எட்டுமுறை யிறைஞ்சினார். இஃது அஷ்டமூர்த்தி தரிசன சங்கேதம். பஞ்சக்ருத்யம் அஷ்டமூர்த்தங்களிற் கலந்தே நிகழ்தலின், அதனை அடுத்துக் கூறியருளினார். 'ஐம்பெரும் பூதம் இருசுட ரான்மா அன்றி வேறுலகிலை' என்பது சிவ தத்துவ விவேகமுடையார் தெளிந்தவுண்மை. நீலகண்டபாடியம் முதற் சுலோகம் நோக்குக. 'நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாயமைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்' அல்லனோ இறைவன்? காணப்பட்ட உலகமான அஷ்டமூர்த்தத்தைக் கொண்டே நிகழ்த்தும் ஐந்தொழில் வாயிலாக இறைவனது தடத்தவடிவத்தையுணர வேண்டும். உயிர்கள்,

ஐயா, நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம்

என்றவாறு பேறெய்தற்குரியவழி இது. பேறாவது முற்குறித்த ஷாட்குண்யா பாதாநம், சிவாநந்தப்பேறு. அதுவே உயிர்க்கு உய்தி. தொழில் அவ்வுய்தியைத்தரும் ஐந்தொழில். அப்பேறுந் தொழிலும் உணர்தற்கு இடம் அஷ்டமூர்த்தமாகிய உலகம்.

'நமச்சிவாய வாழ்க' 'நாதன்றாள் வாழ்க' என்று தொடங்கி, 'ஆராத இன்பம் அருளுமலை போற்றி' என்று நிறுத்திய குறிப்பால், திருவைந்தெழுத்தும் குருமூர்த்தியும் வேதாகம விதி விரோதமின்றி வாய்க்கப் பெற்றவர்க்கே ஆராத இன்பம் நேராதல் கூடும் என்பது ஒருதலையாதல் விளங்கும்.

'நாதன்' எனக் குறிக்கப்பட்டவரே ஆதி குருமூர்த்தி, அவரை இடைவிடாது இதயத்தில் வைத்தவரே உய்வர். 'என்னை இப்பவத்திற் சேராவகை எடுத்து என் சித்தத்தே தன்னை வைத்துத் தாளிணை தலைமேற்சூட்டி' என்ற நம் ஆசாரிய சுவாமிகள் திருவாக்கை 'நாதன்றாள் வாழ்க' என்பதோடு பொருத்திப்பார்க்க. இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காத நாதன்றாள்மலரை வாழ்த்தினால் தான் நாம் சிவாநந்த வாழ்வு பெறுவோம். 'உனைப்போல், இருந்த நம் குருவடிவை நின்கருத்தில் இருத்துவாய் பொருளிதுவென மொழிந்தார்' என்ற திருவாதவூரடிகள் புராண மொழியை நோக்குக.

கோகழி-ஆத்தன்மை (பசுத்துவம்) போக்கிய துறை; திருப்பெருந்துறையில் நிகழ்ந்தது குரூபதேசம். அக்கோகழியில் அம்மணிவாசகப்பிரானை ஆண்டகுருமணி அருளிய உபதேசம் ஆகமம் ஆகும். இடம் கோகழி. நூல் ஆகமம். அக்குருநாதன் ஏகனாயினும், கலப்பால் எல்லா உயிருமாய் அநேகனாதலாற் பயன்படுகின்றான். வேகம்-மலவெப்பம் கெடுத்து வெற்றிகொள்ளும் ஆற்றல் அவ்வேந்தனுக்கே உரியது. அவனருள்வழி நில்லாதாரே புறத்தார். அவர் பலரும் திருவருட்கு நெடுஞ்சேயரேயாவார். 'கூம்பலங் கைத்தலத்தன்பர்' (திருக்கோவையார் 11) 'குவிகைத் தளிருடையார்' (பெரியபுராணம் 670) சிரங்குவிதல்-அறிவுகுவிதல், கருத்துக்குவிதல், சிவபுராணம் உய்யக்கொள்ளும் இயல்பு, பிறவிவழக்கறுக்க நின்ற நிலையை உணர்த்துவது.

சிவபுராணத்தை 'முந்தைவினை முழுதும் மோய உரைப்பன் யான்' என்றதால், வினைமட்டுங் கூறினாரேனும் ஏனையிருமலமும் கொள்ளப்படும். 'வினையினீங்கி' என்புழியும் மும்மலமும் கொள்ளற்பாலன. வினைமட்டும் நீங்குதலைக் கொள்ளின் அது கொள்ளும் புத்தர் முதலியோரின் வேறாதல் சைவர்க்கு எய்தாது. நீங்குதல் உயிர்க்கு இல்லை. நீக்கப் பெறுதலையுடையதே உயிர். 'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது'. வினைக்குப் பற்றுக்கோடு மாயை. வினை வர மாயை தொழிற்பட மலம் காரணம். அதனால் வினை முழுதும் மோய என்புழி மும்மலமும் முடிய என்பதே கருத்து. முடிய என்றதன் மரூஉவே மோய என்பது. இச்சொல்லாராய்ச்சியைத் தமிழ்ப் பொழிலில் வெளியிட்டுள்ளேன். மும்மலநீக்கம் சிவப்பேறு இரண்டு முணர்தலே கருத்தாதலின், சிவபுராணம் ஓதுவார்க்கு வரும்பயன் பாசவீடும் சிவப்பேறும் என்பது தெளிவாம்.

சிவபுராணத்தை உரைப்பன்யான் எனத் தற்போதமாக் கூறினாரல்லர். கண்ணுதலான் கருணைக்கண் காட்டவந்து எய்தி, எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சிக் கூறுவேன் என்றதுணர்க. காட்ட இறைஞ்சி யுரைப்பன் எனக்கொள்க.

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்

என்பது முதலாக வருவன முன்னிலை அமைந்தவற்றாலும், அதன் முன்னவை படர்க்கையில் அமைந்தவாற்றாலும், முடிவிற் 'சொல்லற்கரியானை' எனப் படர்க்கையிற் குறித்தவாற்றானும் 21, 22 ஆம் அடிகள், 20 ஆம் அடியிலுள்ள உரைப்பன்யான் என்பதைத் தழுவ நிற்றல் காண்க.

23 முதல் 93 முடியவுள்ள அடிகளை உரத்த இன் குரலில் தக்க இசைகூட்டி, திருவடிக்கீழ் நின்றுகொண்டு, சிவ பெருமானை எதிர்வரப்பெற்று, முழுமனத்தொடு வாக்கும் காயமும் ஒன்றுபட்ட நிலையில், உருகித் தோத்திரம் புரிவோர் சிவபுராணத்தா லெய்தற்குரிய சிவாநந்தத்தை இன்றே பெறுவர்.

இன்பி லினிதென்ற லின் றுண்டே லின் றுண்டாம்
அன்பி னிலையே யது திருவருட்பயன் - 80

என்பது சிவாகமம். கூர்த்தமெய்ஞ்ஞானத்திற் கொண்டுணர்வார் கருத்துக்கும் நோக்கரியதும் நுணுக்கரியதுமான சிவபுராணச் சிறப்பை

அடியேனோ கூறவல்லேன்? உணர்த்த வுணரும் உயிர்களுள் அடங்கும் அடியேன் யானே உணரவும் உணர்த்தவும் வல்லனாதல் இயலுமோ? இதுகாறும் எழுதியதும் அவ்வுணர்த்த உணர்ந்ததேயாகும்.

ஆதலின், திருவாசகத்தை முற்றும் ஓதிப்பயன் பெறற்கியலாதார். சிவபுராணத்தையாவது நாடோறும் பாராயணம் புரிந்து முன்னர் அதனைச் சொல்லிப் போற்றிப் புகழ்ந் திருந்து பொய்கெட்டு மெய்யான சிவபுண்ணியர் மீட்டும் வந்து வினைப்பிறவி சாராதவாறு கள்ளப் புலக்குரம்பைக் கட்டினை அழிக்கவல்ல கடவுளருள் பெற்றுய்க.

திருச்சற்றம்பலம்

28. நமச்சிவாய வாழ்க

ஊனுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்!
கானிடை ஆடலான் பயில் கருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே.

இத்தலைப்பில் உள்ள வாழ்த்து, நம் சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகப்பெருமானார் அருளிய திருவாசகத்தின் முதலில் இருப்பதென்று எல்லோரும் அறிவர். அறிந்தாலும், அங்கு வாழ்க என்பது, யாப்பியற் கட்டளை வழாது, கூவிளம் எனப்படும் சீராக இசைத்தற்கு ஒரு மாத்திரையுடைய அகரத்தை நெட்டெழுத்தயலிற் கூட்டி, 'வாழ்க' என்று அமைத்து, 'நாதன்' என்னும் வருமொழியின் முதலசையாகிய நேரொடும் இயைத்தது ஆகும். அவ் அகரமாகிய அளபெடையெழுத்து இங்கு இன்மையை நோக்கி ஏதேனும் எண்ணுவர்.

வெண்பாவினமைப்பிற்கு அது வேண்டும். தனித் தொடராகப் பிரித்துக் கொள்ளும்போது அது வேண்டாததாகும். 'நமச்சிவாய வாழ்க' என்று மட்டும் அச்சிட்டுதவிய அன்பரையும் அறிவேன். அவர் அன்பிற்கு மிக்க மகிழ்ச்சியுறுவேன். அது தமிழ்மரபன்மையை அவரொடு பிறரும் அறிதல் வேண்டும்.

மாணிக்கவாசகப்பிரானார் திருவாசகத்தின் முதலில், நமச்சிவாய வாழ்க என்று அருளியதன் நோக்கம் யாது? அதன் அமைதி யாது? இவ்வினாக்களுக்கு விடையிறுத்தலே இக்கட்டுரையின் கருத்தாகும். ஆகவே, இத்தொடரின் அமைதியை விளக்கச் சொல்லியலை ஒட்டி இன்றியமையாத சில இங்குக் கூறுவாம்.

நமச்சிவாய வாழ்க என்பது இரண்டு சொல்லாலாகிய ஒருதொடர். இதில் ஒன்று பயனிலை, ஒன்று எழுவாய். வாழ்க என்பது பயனிலை; நமச்சிவாய என்பது எழுவாய். பயனிலையில் வாழ்தல் ஆகிய வினை-தொழில், உணர்த்தப் பட்டது. அவ்வினைக்கு முதல் நமச்சிவாய என்பது. எனவே வாழ்ச்சியாவது, நமச்சிவாய என்னும் அம்முதலை அன்றி வேறு எதையும் சாராது. நமச்சிவாயத்துக்கு வேறாய் ஒன்றும் இல்லை. இருந்தால் தானே, வாழ்க என்னும் பயனிலைக்கு எழுவாயாக யாதானும் ஒன்றனை வருவித்துரைக்கலாம்? யாதும்

இல்லாமையால், நமச்சிவாய என்ற ஒன்றே எழுவாய் ஆம். வேறு எதைக் குறித்தாலும் அஃது இந்நமச் சிவாயத்துள் அடங்கும். அடங்கவே, இவ்வாழ்த்து, எல்லாமாய் உள்ள ஒரு மெய்ப்பொருளை வாழ்த்தி, அவ்வாற்றால் எல்லாப்பொருளையும் வாழ்த்திய ஒரு தனிப் பெருமை உடையதாயிற்று.

நமச்சிவாய என்பது மந்திரமாகக் கொள்ளுங்கால், நம என்றும் சிவாய என்றும் இரண்டு சொற்கள் புணர்ந்த ஒரு தொடராகும். நம என்பதில், ம-எனக்கு, ந-இன்று. என்று பிரித்துக் கொள்வதுமுண்டு. மற்று யார்க்கு என்றால் சிவாய - சிவனுக்கு என்றாகும். நம-வணக்கம். சிவாய-சிவனுக்கு என்றும் பொருளுரைத்தல் உண்டு. நம: சிவாய என்ற தொடர் தமிழில் நமச்சிவாய என்றியைதல் மரபு.

இத்திருவாசகத்தின் தொடக்கத்தில், நமச்சிவாய என்பது தூல பஞ்சாக்கரமாய் நின்றது என்பதை மறக்கலாகாது. பஞ்சாக்கரம் - திருவைந்தெழுத்து. அது தூலமாயும் சூக்கும மாயும் காரணமாயும் வரும். நம இரண்டும் மாறியும் நீங்கியும் நிற்கும். நமச்சிவாய என்பது சிவாயநம என மாறிநிற்கும். நம நீங்கிச் சிவாய என்றும் நிற்கும். எப்படி நிற்பினும் மாறினும் அது மந்திரமாகவே நிற்கும் எனலாகாது.

போற்றியோம் நமச்சி வாய புயங்கனே மயங்குகின்றேன்

என்னுந் திருவாசகத்தில் உள்ளது, தூலபஞ்சாக்கர மந்திரம்.

நக்கர் நாமம் நமச்சிவாய என்பார் நல்லரே

என்னும் திருக்கடைக்காப்பு (திருமுறை 3 பதிகம் 267 பா 9) அதை எவ்வாறு உணர்த்திற்று ?

வசிவல அவனதிடம் 1. 126 .2
வசியாற்றமாமதியுமாம் 3 . 316. 2
வசிபேசும் அரனார் மகிழ்ந்த இடம் 3. 335. 2
மாவசியே 3 . 371 . 10

என்பவற்றுள் ஆண்ட ஈரெழுத்தும் ஐந்தெழுத்தாயினும் மந்திரமாகக் கருதப்படாவாறு, சத்தியும் சிவமும் ஆகிய சொக்கலிங்கப்பெருமான் எனத்திகழ்தலை அறிக.

நண்பால் சிவாயஎனா நாலூர் மயானத்தே
இன்பா யிருந்தானை 2.182.10

என்பதில் மூன்றெழுத்தே நிற்கின்றன. இங்குச் சிவனுக்கு என்று பொருள் கூறின், பயனிலை யின்றி, நின்றுவற்றும். அதனால் இங்கு அது மந்திரமாக நின்றிலது.

'சீரார் நமச்சிவாயம் சொல்லவல்லோம்' என்னும் திருத் தாண்டகத்தின் பகுதியில் அமைந்தவாறு மந்திரம் ஆகுமோ? அங்குச் சிவாயம் என்று இருத்தலால் சிவனுக்கு எனல் ஏற்குமோ?

நற்றுணையாவது நமச்சிவாயவே
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்னுமிடத்தில், சிவனுக்கு வணக்கம் எனல் எவ்வாறு பொருந்தும்? இங்கு நாமம் என்றதும் காண்க.

மந்திரம் நமச்சிவாய ஆக நீறு அணியப்பெற்றால் வெந்தறும் வினையும் நோயும், 'சித்தம் ஒருக்கிச் சிவாயநம என்று இருக்கின் அல்லால்அத்தன் அருள்பெறல் ஆமோ?' என்னும் இடத்தில் மந்திரம் எனலாம்.

'படைக்கலமாக உன் நாமத் திருவஞ்செழுத்தும்' நான் துஞ்சும் போது நின் நாமத் திருவஞ்செழுத்தும் 'நாதன் நாமம்' என்று உணர்த்தியவாறு, நாமம் ஆகக்கொண்டு வாழ்க என்பதற்கு எழுவாயாக் கொள்ளுவதே வெள்ளறிவில்லாத தெள்ளறிவுக்குத் தகும்.

இறை சத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள் - திருவருட்பயன் - 82

என்னும் சிவாகம வசனப்படி அத்திருநாமம் விளங்குகின்றது. உண்மை விளக்கத்தில் 'சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும் அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்' என்பதும், சிவப்பிரகாசத்தில், 'திருவெழுத்தைந்தில் ஆன்மாத்திரோதம் ஆசு அருள் சிவம் சூழ்தர நடுநின்றது என்பதும் ஈண்டு உணரத்தக்கன. இவற்றை உணர்ந்தால், நமச்சிவாய என்பதில் உள்ள ந,ம,சி,வ,ய எனப்பெறும் ஐந்து பொருளும் எழுவாயாக, அவை 'வாழ்க' என்னும் பயனிலை கொள்ளும் என்னும் உண்மை தெள்ளிதின் விளங்கப்பெறலாம்.

1. நகரம், மாயையமையயும் அதன் வகையையும் மாயேயத்தையும் கன்மத்தையும், திரோதான சத்தியையும் குறிக்கும். குறிக்கவே, ஆணவம் அல்லாத சடப்பொருள் எல்லாம் இவ்வொன்றனுள் அடங்கிவிட்டன.

2. மகரம் ஆணவமலத்தைக் குறித்தது. (இவ்வாழ்வு பெறத் தருசூலையினுக்கு எதிர்செய் குறை என்கொல் என்பது போன்றது இம்மகரத்தை வாழ்த்துவது)

3. சிகரம் சிவத்தைக் குறித்தது.

4. வகரம் திருவருளைக் குறித்தது.

5. யகரம் ஆன்மாக்களைக் குறித்தது.

சிவய மூன்றும் சித்துப்பொருள், நம இரண்டும் சடப் பொருள். சிவ-பதி, ய-பசு, நம-பாசம், நமச்சிவாய என்பது ஐந்து பெயர் கூடிய தொருதொடர். அதுவே வாழ்க என்பதற்கு எழுவாயாகும். ஆதலின், வாழ்த்து, முற்கூறப்பட்ட எல்லாப் பொருட்கும் எய்திற்று, எய்தவே, ஆளுடைய அடிகள் முதன் முதலில், எல்லாப் பொருள்களையும் ஒருசேர வாழ்த்தினார் என்பது தெளியப்படும்.

எல்லாமாய் அல்லதுமாய் இருக்கும் சிவமுதலை வாழ்த்தும் வழியால், அவ்வாழ்த்து எல்லாவற்றிற்கும் உரியதாயிற்று. ஆகவே, அப்பொதுமை நீக்கிச் சிகரமாகிய நாதனையும் வகரமாகிய தாளையும் சிறப்பின் எடுத்து வாழ்த்தியருளினார்.

அச் சிகார வகாரப் பொருளிரண்டும் புறத்தில் உள்ளவாறே அகத்தும் உள்ளமையால், 'இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க' என்று மீண்டும் அவ்விரு பொருளையும் வாழ்த்தினார்.

அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான் - திருவருட்பயன் - 42

என்பதில், அகத்தே இமைப்பொழுதும் நீங்காது நிலவும் பரமசிவம், புறத்தே குருவாகி எழுந்தருளும் உண்மை உணர்த்தப் பெற்றதும் அந்நீங்காத சிவமுதலே அன்றி வேறு முதலில்லை. அம்முதலே, மாணிக்க வாசகர்க்குக் குருமணியாய் வந்து ஆட்கொண்ட மெய்மையைத் தேர்ந்து, 'கோகழி ஆண்ட குரு மணிதன் தாள் வாழ்க'

என்று வாழ்த்தி இன்புறலாயிற்று. அக்குருமணியின் உபதேசம் சகலாகம சாரமான சிவஞான போதம் ஆதலின், 'ஆகமம் ஆகின்றது' என்றும், அவ்வுப தேசம் பெற்றதும் இன்பநிறைவு உண்டானதால், 'அண்ணிப்பான்' என்றும் வாய்மையை வெளிப்படுத்தி, அவ்வின்ப நிறைவையும் அதற்குத் திருமேனியாய்த் திகழும் பராசத்தியையும் மீண்டும் வாழ்த்தி யருளினார். சி. நாதன், நீங்காதான், குருமணி, அண்ணிப்பான் என்பவை இன்பநிறைவை உணர்த்தி நின்றன. வ. தாள் (4) இரண்டும் திருவருளை உணர்த்தி நின்றன.

இதுகாறும் கூறியவற்றால், இத்திருவாசக வாழ்த்து ஆறனுள் முதல் ஐந்தும் வெவ்வேறு நிலையில் அம்மையப்பரை வாழ்த்தியனவே என்பது உறுதியாயிற்று.

அவற்றுள், முதலாவது வாழ்த்து, எல்லாமாகி அல்லனாய் உடனுமாவான் ஒருவனை வாழ்த்தி, சிவனது சொரூப நிலைக்கு உரித்தாயிற்று.

இரண்டாவது அப்பேரறிவாகிய சைதந்நியம், நம் ஆசிரியர்க்கு உபதேசித் தருளற்பொருட்டு நோக்கி நிற்கும் நிலையில் தனது பராசத்தி வேறு, தான் வேறு ஆகும் பெற்றியைக் கருதி, நாதனும் அவன் தாளுமாக வைத்து வாழ்த்தியதாகும்.

மூன்றாவது வெளியே கதிரோனும் கதிரொளியும்போல ஒளிரும் சிகாரமும், வகாரமும், உள்ளேயும், 'சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும் தூயற் சோதியுட்சோதி' ஆகி நின்றிடும் உண்மையை வாழ்த்தியதாகும்.

நான்காவது 'எண்ணரிய ஞானபாதம் கூடுமவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்தி கொடுகுறுகி மலம் அறுக்கும்' (சிவப்ர.37) 'பக்குவக் குறிபார்த்து அருளினம் குருமுதலாய்' (இருபா இருபஃது 2) 'குருவும் இவனே ஈசன் இவன்தான்' என்னும் சிவாகம வசனப்படி உள்ளிருந்து வெளிப்பட்டு வந்து உபதேசித்த சிவகுருவை வாழ்த்தியதாகும்.

ஐந்தாவது முன் குறித்தது திருவருளாகிய பரஞானம். அது தமக்கு உபதேசரூபத்தில், அபரஞானமாகி, அதன் வாயிலாக விளங்கிற்று. அதனால் அப்பரஞானத்தை அளித்த அபரஞானத்தை (சிவாகம ஞானத்தை) வாழ்த்தியதாகும்.

ஆறாவது பொதுவாக, தடத்தத்தில் எல்லாமாய் நின்றும், சிறப்பாக, அவை அல்லனாய் ஏகனாகி நிற்கும் சொரூபமே மெய்ப்பொருளியல்பு, அப்பொருளே எல்லா ஆன்மாக்களிலும் இருத்தலின், எண்ணிறந்ததுமாகின்றது. அப்போது அநேகமான ஆன்மாக்களாகவே கொள்ளப்பெறுகின்றது. பெறவே 'அநேகன்' என்னும் பெயர்க்குப் பொருளாகின்றது. அநேகன் 'ஏகன்' (திருவாசகம் 29) வகரமும் யகரமுமாகிய சித்துப் பொருளிலிருப்பதும் அன்றி, நகர மகரங்களாகிய சடப்பொருளையும் தொழிற்படுத்துவதால், 'இறைவன்' என்னும் பெயர்க்கும் அதுவே பொருளாகின்றது.

பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் செந்திறத்தள்
எந்நிறத்தளாய் இருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்தனாய் இருப்பன் ஆங்கு

- திருக்களிறு - 79

என்றவாறு, அம்பிகையாகிய அத் தாரத்தோடு ஒன்றாவதும் ஓர் கூறாவதும் எங்கும் தலைநிற்பதும் அத்தாரத்தின் நாதாந் தத்தே இருப்பதும் நால்தானத்தே இருப்பதும், வேதாந்தத்தே இருப்பதும் கருதியே அவனை இறைவன் என்றனர் நம் முன்னோர். என்றும் எங்கும் எவ்வகையிலும் தங்கு மவனே இறைவன் எனப்படுவான். இறைவன் என்பதற்குச் சிவபெருமானையே பொருளாகக் கொள்ளுதலைப் பண்டைய உரையாசிரியர்பால் உணர்க.

இவ்வாறுள்ள வாழ்த்து ஆறும் இறைவனது ஆறு குணத்தையும் குறித்து நிற்பன என்பது சைவசித்தாந்தச் செல்வர் கருத்து. 'வெல்க' என்ற ஐந்தும் ஐந்தொழிலும் ஐம்மல நீக்கமும்பற்றிய குறிப்பும் 'போற்றி' என்ற எட்டும் எட்டுருவ (அட்டமூர்த்த)க் குறிப்பும் ஆதலை உணர்க. திருவண்டப் பகுதியுள் பதினொருமுறை வாழ்த்தியது பதினொரு மந்திரப் பொருட்குறிப்பு. சொல்லத்தக்கவை முழுதும் சொல்லிவாழ்த்திய நம்பெருமான் 'என்சொல்லி வாழ்த்துவனே' என்றது அவரது ஆராமையை அறிவித்தது.

அவ்வாழ்த்தில் அவர்க்கு ஆராமை ஏன் என்று வினாவலாம். அவர் வாழ்த்திற்கும் பிறர் வாழ்த்திற்கும் வேறுபாடு, அவர் அருளிய திருவாசகமே கூறுகின்றது. பிறர் (வானவர் முதலோர்) தாம் வாழ

இறைவனை வாழ்த்துவர். தாம் உயரவும் அவ்வுயர்வு கருதித் தம்மைப் பிறர் தொழவும் வேண்டி அவ்விறைவனை நினைத்துத் தொழுவர். மாணிக்கவாசகரோ, தமக்கு வாழ்வோ உயர்வோ தம்மைப் பிறர் தொழுந்தலைமையோ வேண்டித் தொழுவாரல்லராய், பிறவிப் பெருங்கடலைத் தாண்டும் பொருட்டே சிவபிரானை வாழ்த்துவார்.

வானோர், வாழ்ச்சி முதலியவை தமக்கு ஓங்க வாழ்த்துகின்றனர். மாணிக்கவாசகர் பிறவிநீங்க வாழ்த்துகின்றார். தம் பிறவி நீங்க வாழ்த்துகின்றார். தம் பிறவி நீங்க வாழ்த்தும் அவர், பிற ஆன்மாக்களை வாழ்க என்றாராயின், அவ்வாழ்வு, உடம்பெடுத்தல் ஒழியும் வகையிலோ? உடம்பெடுத்து அழியும் வகையிலோ? நன்குநோக்கி உணர்மின். வணங்கும் ஆன்மாக்களுக்கு யாது முன்நிற்கும்; 'நீ மாளா வாழ்கின்றாய்' 'வாழாத நெஞ்சமே வாழ்கின்றாய்' 'மண்ணிடை வாழ்வுஎனும் ஆழியுள் அகப்பட்டு...... தலை தடுமாறாமே' 'கடல் உலகில் வாழ்கிலேன்' 'மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன்' என்று பற்பலமுறையில் வெறுத்த வாழ்க்கை, பிற ஆன்மாக்களுக்கு வேண்டும் என்று அப்பெருமானார் திருவுள்ளம் உள்ளுமோ ?

முத்தினை முறுவல் செய்தாள் ஓர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே

என்றும்

அலைபுனல்சூழ் பிரமபுரத்து அருமணியை
அடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறலாமே

என்றும் அருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்க்கு என்ன கருத்தோ? அன்ன கருத்தே நம் சமயாசாரியர் ஏனைத் திருமுறை ஆசிரியர் எல்லோர்க்கும் ஆதலின், அழியாது நீடுலகில் நிலையுடைய பெருஞ்செல்வம் பெற்றுத், திருவடி நீழலில் வாழ்கின்ற வாழ்க்கையை அன்றி வேறு பொய் வாழ்க்கையை இத்திருவாசகத் தொடர்க்குப் பொருளாக, சைவ சித்தாந்தம் சிறிதுணர்ந்தாரும் எண்ண இசையார். துஞ்சும் போழ்தும் துஞ்சாப்போழ்தும் நெஞ்சம் நைந்து, வஞ்சம் அற்று நமச்சிவாயமாகிய திருவடியை வாழ்த்துக. அவ்வாழ்த்து, கூற்றுவன் அஞ்சிப் போயொழிய உதைத்து நம்மைக் காக்கும்,

மறவாதே தன்திறமே வாழ்த்தும் தொண்டர்
மனத்தகத்தே அனவரதம் மன்னி நின்ற
திறலானைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே

திருச்சிற்றம்பலம்

29. வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

வேகம் என்ற சொல் பல பொருள் தரும். அப்பொருளைக் காண வேகம் வேண்டா. வாயுவேகம் மனோவேகம் எல்லாம் எல்லாரும் அறிந்தனவே. இதன் தலைப்பில் உள்ள வேகம் சிலர்க்குத்தான தெரியும்.

வேகம் பாபம் என்ற பொருளதுமாம். அதையே நாம் கெடுத்தல் வேண்டும். நம்மால் அதைக் கெடுத்தல் இயலாது. அது கெடத்தக்க வழியும் நமக்குத் தெரியாது. அவ்வழியையும் கடவுள் குருவாய் வந்தருள்வது சமயாசாரம் உள்ளவர்கள் அறிவுக்கு மட்டும் தெரியும். அது தெரிதற் பொருட்டே 'வேக மதநல்யானை வெருவவுரி போர்த்துப் பாகம் உமை யோடு ஆக' எழுந்தருளினான் இறைவன்.

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா என்றென்
றோதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள்காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடைமதியஞ் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள் செயாயே
4.62.1

என்று நம் அப்பரடிகள் அருள் செய்தவாற்றால் அவ்வுண்மை விளங்கும். பாதிமாதுடன் ஆய காரணம் அவன் கழலடிக் காட்சி, கட்டுற்றழலும் உயிர்க்குக் கிடைத்தற் பொருட்டு எனல் இத்திருநேரிசையால் நன்கு தெரியும். இன்ன பல பல திருமுறைத் திருப்பாடல்கள் உள. அவற்றுள் வேறொன்றும் காட்டி இதனைக் கற்போர் கருத்து உறுதிப்படக் காண்போம்.

மாயம் எல்லாம் முற்றவிட்டு, இருள்நீங்க, மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தான்; அவன் றன்திருவடிக்கே
தேயம் எல்லாம் நின்று இறைஞ்சும் திருப்பாதிரிப்புலியூர்
மேய நல்லான் மலர்ப்பாதம் என்சிந்தையுள் நின்றனவே
4.94. 4

இத்திருவிருத்தத்துள்ளும், மாயமெல்லாம் முற்றும் விட்டு அகலவும் ஆணவமாய மூலமலவிருள் நீங்கவும் ஏதுவாக நம்

பரமசிவம் மலைமகட்கு நேயம் நிலாவ இருந்த உண்மை புலப்படுதல் உணர்க. அவன் அருளாலே அவன்றாள் வணங்குதல் அன்றி வேறு எவ்வழியானும் அவனை வழிபடல் அரிது.

இறைவன் திருநந்தி தேவர்க்கும், இவர் சனற்குமாரர்க்கும், அவர் சத்தியஞான தரிசனிகட்கும், அவர் பரஞ்சோதி மாமுனிகட்கும், அவர் மெய்கண்ட தேவர்க்கும், அவர் அருணந்திதேவர்க்கும், அவர் மறைஞான சம்பந்த தேவர்க்கும் அருளிய உண்மையை எடுத்துக்காட்டாகக் கருதி அதனது மறையைத் தெளிதல் வேண்டும். மலைமகட்கே நேயம் நிலாவ இருந்த - இருக்கின்ற - இருக்கும் நெறி இதுவுமாம்.

இறைவன் அருணந்திதனக்கு இயம்ப நந்தி
கோதில் அருட் சனற்குமாரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீதுஅகல எமக்கு அளித்த ஞானநூலைத்

சிவ.சித்.10

தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே
ஈசன்புண்டரிகத்தாள் சேரும் பரிசு
தேவர்பிரான்.......... இவர் இச்சந்தானத்து
எமை ஆளும் தன்மையோரே

'ஞானச்சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட சைவசிகாமணி' என்ற சித்திவசனம், பிரகாசவசனம் எல்லாம் 'வேகம் கெடுத்தாண்டவேந்து' செய் உபகாரத்தை விளக்குவன. சிவனை ஆண்டவன் எனல் மரபன்று. குருவையே ஆண்டவன் என்பது மரபு. சிவன் குருவாய் வருவான், ஆள்வான். 'ஆள்வான்' எனல் எதிர் காலத்தது. எக்காலத்திற்கும் உரியதை அம்முக்காலத்திற்கும் உரிய சொல்லாற் சொல்லல் வேண்டும் என்பது தொல்காப்பிய விதி. நன்னூலரும், 'முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே' என்றார். எனினும் உரையாசிரியர் செய்யும் என்னும் நிகழுங் காலத்துச் சொல் ஆகிய வாய்ப்பாட்டை மறந்தனர்.

ஆளும் என்பது சிவனுக்குரியது. ஆண்டான் ஆண்டனன் ஆண்டவன் முதலியன குருவுக்குரியன.

சிந்தையினுள்ளும் என் சென்னியினும் சேர
வந்தவர் வாழ்க என்றுந் தீபற
மடவாளுடனே என்றுந்தீபற

என்றதில், வந்தவர் என இறந்தகாலச் சொல்லாற் கூறியதையும் அதனுரையிலே,

சிந்தையிலும் என்றன் சிரத்தினிலும் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று

திருக்களி -100

என்று அக்காலச் சொல்லாக வந்தவன் தந்தவன் என்றதையும் 'உய்ய வந்தார்' என்றதையும் உய்ய வருவார் என்னா ததையும்,

அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி நிகளமாம்
ஆணவ மூல மலம் அகல ஆண்டனன் காண்
மாணவக என்னுடனாய் வந்து

திருக்களி - 4

ஆகமங்கள் எங்கே அறுசமயந் தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே பாகத்
தருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடியை யாரறிவார் பேசு.

திருக்களி - 5

என்றவற்றில் ஆண்டவனாக் கூறியதையும் அறிக. அந்தப் பெருவடிவு எனச் சிவத்தையும், பாகத்து அருள்வடிவும் தானும் ஆகி ஆண்டவன் எனக் குருவையும், அக்குருநாதர் நம் வேகங் கெடுத்தாண்ட வகையில் ஆகமங்களையும் அறுசமயங்களையும் யோகங்களையும் ஞானங்களையும் அருளிய உண்மையையும், அவற்றாலும் அவற்றை உபதேசித்ததாலும், உபதேசித்த குருவினருளாலும் (அபரஞான பரஞானோப தேசங்களால்) அறியத்தகும் பெருவடிவாகிய பரசிவத்தை யுணர்தல் இயலுமாற்றையும், இயன்று சிவமாதலையும் தெளிவித்தது அறிக.

இங்கே வேகம் கெடுத்தாண்டவன் வேந்தன், இறைவன், மாயப் பிறப்பறுக்கும் மன்னன், மன்னவன், மகன் என்பவற்றால், குருவையே

வேந்தன் முதலிய பெயராற் குறிப்பது மரபாதல் விளங்கும். 'கோகழியாண்ட குருமணி' என்புழியும் ஆண்டவன் குருநாதனே எனல் புலப்படும். நாதன் என்றதும் குருவையே உணர்த்துகின்றது. நமச்சிவாயத்தை உபதேசித்த நாதன்றாள் வாழ்க என்றது சிவவாழ்த்து அன்று குரு வாழ்த்தே.

ஏகனும் ஆகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்றுந்தீபற
நம்மையே ஆண்டான் என்றுந்தீபற

திருஉந்.5

இதில் ஆண்டவன் குருநாதன் என்ற உண்மை வெளிப்படும். மெய்கண்டதேவன் மிகுசைவநாதன்' எனச் (சைவா சாரியன் என்று) சிறப்புறக் கூறியதுணர்க. 'மிகு' என்ற அடையால், தனக்குமேலொன்றில்லாத் தலைமையைஉணர்த்துதல் மரபு. அதனை 'மிகுசைவத்துறை விளங்க', மிகுநூல், மிக்கதொரு பக்குவத்தால் மிகுசத்திநிபாதம் மேவுதலும், மிகுசைவநாதன் என்னும் ஆட்சிகளிற் காண்க.

இக் குருநாதன் நம் வேகங் கெடுத்தாண்டவன் என்னும் பெரும் பேறுறல் ஒன்றே நாம் பிறந்ததன் பயனாகும். நம்மை அவன் ஆட்கொள்ள எடுக்குந் திருமேனியை அருள் நூல்கள் மூவகைப் படுத்துக் கூறுகின்றன.

போகியாய் இருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகிஆனாற் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்

சிவ.சித்.சுப.70

இச் சிவஞானசித்தியார் திருவிருத்தம் அம் முத்திருமேனியையும் உணர்த்தும். போகத்திருவுருவம், யோகத்திருவுருவம், வேகத் திருவுருவம் அவை.

போகத்திருமேனி :- கல்யாணசுந்தரர், சோமாஸ்கந்தர், உமாமகேசுவரர்

யோகத்திருமேனி :- தக்ஷிணாமூர்த்திதேவர், பிக்ஷாடனர்.

வேகத்திருமேனி :- காமாரி, வீரபத்திரர்.

இதில், போகியாய், யோகியாய் என்றவாறு வேகியாய் என்னாது, வேகியானாற்போல் என்றதை உணர்தல் கடன்.

அகளமயமாய் நின்ற அம்பலத்துஎம் கூத்தன்
சகளமயம்போல் உலகில் தங்கி - நிகளமாம்
ஆணவ மூல மலம் அகல ஆண்டனன்

திருக்களி. 4

என்றதிலும் கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம். கழிந்தக்கால் எங்குமாய்க்கருது அரன்போல் நிற்பன் என்றதிலும் உள்ள போல் என்பதுபோல் அறியப்படும் மாயாவாதிகளுக்கு எட்டாத ஒன்று இது.

வேகம் கெடுத்து ஆண்டவன் குரவன். சரியாகுரு, கிரியாகுரு, யோககுரு மூவகையருள்ளும் அடங்காத ஞானகுருவையே 'அருட்குரு' என்பது மரபு. சிவஞான சித்தியாரில், 'மன்னும் அருட்குரு' (252) 'அருட்பரன்' (253) எனத் தொடக்கத்தினும், 'யார்க்கும் ஈனமிலான் ஞானகுருவே; குருவும் இவனே ஈசன் (உம்) இவன் தான் என்றும் இறைஞ்சி யேத்தே', 'ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும், மற்றொன்றாலும் வாராதாகும். மற்றவையும் அவன் அருளால் மருவும்' பரம்பிரமம் இவன் பரசிவன்தான், பரஞானம் இவன், பராபரன் தான், அரன் தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே என்றும் அருட் குருவை வழிபடவே அவன் (சிவன்) இவன் (குரு) தான் ஆயே சிவமே ஆக்கும் என நூலின் முடிவினும் ஞான குருவையே போற்றிய உண்மையை உணர்க. இதனை அறியாதார் 'அருட்குரு' என்ற பிறிதினியைபு நீக்கிய அடையுள்ள ஒட்டுப் பெயரை (ஒரு சொன்னீர்மைத்து என்றதும் நோக்காமல்) அருள் + குரு என இரு சொல்லாகப் பிரித்து அருளினால் என மூன்றாவ தனுருபு விரித்துரைத்தார். முதனூலில் 'தவத்தினின் உணர்த்த' என்றதற்குத்தக, வழி நூலினும் கொள்ள விரும்பி அங்ஙனம் கொண்டாரானார். அதனை, 'மன்னும் அருள் என்றதும் ஈண்டு இறப்பில் தவத்தின் மேற்று. மூன்றாவது விரித்துரைக்க' என்னும் உரையாலறிக. அருள் - ஞானம், அருட்குரு ஞானகுரு. ஞானசாதனம் யோகாதியான இறப்பில் தவம். சாத்தியமான ஞானத்தையுணர்த்தும் இடத்தில், சாதனத்தைக் கோடல் சிறிதும் ஈண்டுப் பொருந்தாது, எட்டாவது நூற்பா முதல் இந்நூன் முடிவு

வரையில் 'அருட்குரு' எனப் பிறிதினியையபு நீக்கிய அடை கொண்டதாகவே ஆசிரியர் அருளிய உண்மையை அனைவரும் தெளிய அறியலாம்.

அத்தகு தலைமையுடைய குருவருளைப் பெற வேண்டின், நம் வேகம் கெடவேண்டும். அவ்வேகம் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் உண்டாகும். வாக்கு - உரை, நாக்கு என இருதிறம். வாக்குவேகம் – சொற்பற்றிய வேகம், நாக்கு வேகம் – நுகர்வாலுண்டாகும் வேகம், நடை - காயம் குறித்து நின்றது. ஒழுக்கம் பற்றிய வேகமும் அடங்கும். பந்தம் - பந்த சம்பந்தம். பெத்தம் எனவும் படும். துட்டம் - துஷ்டம், தூஷிக்கப்படுவது, வெறுப்பிற்கு நிற்பது. இவ் வெல்லா வற்றாலும் வேகமும் பாவமும் நிகழும், இவை அனைத்தும் விட்டகலப் போக்கினால் அன்றி வீடு பெறலரிது. துஷ்ட பக்த வேகம் எனலாகாது. பக்தர் என்றால் அடையான துஷ்டம் வேகம் இரண்டும் முறையே அப் பக்தர்க்கு முன்னும் பின்னும் நில்லா. வேகமும் அவ்வேகத்தாலாம் பாவமும் வேறறக் கெடுதல் வேண்டும்.

தாவா மனவேகம் சாற்றும் உரைவேகம்
நாவாரும் வேகம் நடைவேகம் - ஓவாத
துட்டபத்த வேகம்எனச் சொல்வேகம் இத்தனையும்
விட்டகற்றி னால் அன்றே வீடு

என்னும் பழைய அருட்பாடலை நன்குணர்ந்து, வேகங்கெடுத்தல் வேண்டி, அதைக் கெடுத்தாளும் ஞான குருவை வழிபட்டு, வேகங்கெடுத்துய்யும் வெற்றியுற்று வாழ்க. இஃது ஐந்தொழில் வெற்றியுள் முதலாய படைத்தற்றொழில் வெல்க என்றதால் சிவா நந்தத் தோற்றம் வெல்க என்னும் கருத்தாய் நின்றது. 'தோற்றம் துடியதனில்' என்றதும் ஈதே. இதனை அறிவார் ஆர்?

திருச்சிற்றம்பலம்

30. திருவெம்பாவை

'எம்பாவை' என்பது இங்கு மாணிக்கவாசகப் பெருமானார் அருளிய திருவாசகத்துள் ஒரு பகுப்பைக் குறித்து வழங்குவது. திருவாசகத்துள்ளே நீத்தல் விண்ணப்பம், அன்னைப் பத்து முதலிய பத்துக்கள், பண்டாய நான்மறை, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் எண்ணப்பதிகம் முதலியவை அல்லாத எல்லாம் 'திரு' என்னும் அடையொடு வழங்குவன. கீர்த்தித் திருவகவல், போற்றித் திருவகவல், கோயில் மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம் என்றவற்றுள் இடையில் அவ்வடை நின்றது. கோயிற்றிருப்பதிகம் என ஒன்றுள்ளதால், அதனின் வேறுபடுத்துக் காட்ட மூத்த என்னும் பெயரெச்சம் அடையாயிற்று.

திருமுறைகளுள் உள்ள திருப்பதிகங்கள் எல்லாவற்றினும் முற்பட்டமையால் அம்மையார் அருளியதை மூத்த திருப்பதிகம் என்ற வழக்கும் இங்கு நினைவிற்கொள்ளல் தகும். காரைக்காற்பேய் செந்தமிழ் பத்தும் வல்லார்' 'காரைக்காற்பேய் தன் பாடல் பத்தும்' என்றருளிய முறையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் திருமுறைகளில் உள்ளது. அப்பர் அடிகளும் மாணிக்கவாசகப்பிரானும் அருளிய திருமுறைகளில் அம்முறை இல்லை. இக்கூறியவற்றால் 'மூத்த' என்ற அடைமொழிக்கு ஏதுவும், இடைப்பிறவரலாக, முடிவில், அருளியவர் திருப்பெயர் அமையும். இருவர் அருளிச் செயலில் அஃது இன்மையும் உணரக்கூடும்; ஈண்டு மற்றொன்றும் நினைத்தற்குரியது, அம்மையார் அருளிய இரு திருப்பதிகத்துள் முதலாவது 'கொங்கை திரங்கி' என்ற முதலைப் பெற்றது. அவ்விரண்டனுள் மூத்தது முன்னது என்னுங் கருத்தும் தோன்றக் காணலாம். எல்லாத் திருமுறைகளுக்கும் மூத்தது என்ற கருத்தே பலரும் கொண்டிருப்பதாகும். ஆயினும் சேக்கிழார் பெருமானார், அம்மையார் புராணத்திலே, 'மூத்த நற்பதிகம்' என முதல் தோன்றியதையும் 'திருப்பதிகம்' என அடுத்து எழுந்ததையும் உணர்த்தியருளியவாறுணர்க.

'எம்பாவை' மிக்க பழங்காலத்தினும் இருந்தது. அதனைத் 'திருவெம்பாவை' என்றார் அல்லர். திருவாசகத்துள் இருக்கும் இதுவே திருவெம்பாவை எனப் போற்றும் பெருமைக்குரியது. இக்காலத்தில் தோன்றியனவும் திருவெம்பாவை என்ற பெயர் கொண்டிருத்தல்

அருணெறியொழுகுவார்க்கு வருத்தம் ஆக்கும். கற்பழித்த கொடுமையிலே முதிர்ந்தவர்க்கு ஒருவர் பாடிய எம்பாவைகளும் அவ்வடையுற்று வெளிவந்துள்ளன. சைவத் திருமுறைகளை மயங்கியுணரும் வகையில், ஏனைய இருவேறு முறையும் தோன்றியுள்ளன; (முறை-நூன்முறை), திருத்தொண்டர் புராணத்-தையும் மதியாது, புதுப்புராணம் தோற்றினார். அதில் இருளும் மருளும் நீங்கி அருளும் பொருளும் அறியுந் தெருளில்லார்க்கும் புராணம் உண்டு. 'சைவம்' என்னும் பழைய (திங்கள்) வெளியீட்டில், 'சைவப்பகைவர் சைவர்களே' என்றொரு கட்டுரை உண்டு. அதனை நிறுவியசெயலே இப்புதுப்புராணப் படைப்பு. எம்பாவைக்கும் இவ்-வகைப் புதுப்படைப்பு உண்டாயிற்று.

'எம்பாவை' என்னுந்தொடர், தொன்று இருந்தவாறு தோன்றுவது அன்று. இன்று எம்பாவையாகித் தோன்றுகின்றது. பண்டு அத்தொடர் இருந்தவாற்றை அறிவது நன்று. 'பாவை' என்பது தமிழகத்துத் தொல்லாடல் பலவற்றுள் ஒன்று. சிலப்பதிகாரத் துரை (பக்கம் 90. காதை.3.அடி.14 - 15) மேற்கோளாய ஒரு குறள் வெண்பா.

பாவை திருமகள் ஆடிற்று + அதற்கு உறுப்பு +
ஓவாமல் ஒன்றுடனே ஒன்று என்றுள்ளது.

இத்திருமகளாடிய பாவையாடல், வெவ்விய போர் செய்தற்குத் சமைந்த போர்க் கோலத்தொடு அவுணர் மோகித்து வீழும்படி கொல்லிப்பாவை வடிவாய்ச் செய்யோள் ஆகிய திருமகள் ஆடிய பாவை என்னும் ஆடலுக்கு உறுப்பு இரண்டு என்பது இதன் பொருளாகும். இதனைக் கடலாடு காதையுள் (60 - 61)

செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருமகள் செய்யோள் ஆடிய பாவை

என்றதால் அறியலாம்.

இந்தப் பாவையாடல் காலப்போக்கில் வழக்கு வேறு பாடுற்று, இத்திருவெபாவையிற் கூறப்படும் ஆடலுக்கு இயைவதாயிற்று. இதனை இசைவார் அரியர். அவர், திருவாசகத்தில் உள்ள பிறபல கூத்துக்குரிய திருப்பதிகங்களை ஆய்வாராயின் இதனை மறுக்க முனையார்.

சிலப்பதிகாரவுரை மேற்கோளுள் ஒன்று (வரிக் கூத்துக்களைத் தொகுத்துக் கூறும் பஃறொடை வெண்பா) ஆக, அரங்கேற்றுகாதை (13)யில் உள்ள பலவகைக்கூத்து விளக்கத்தையொட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதிலே உள்ள அம்ம(ா)னை, (கோத்) தும்பி (வண்டரசு), சாழல், தோள்வீச்சு (தோணோக்கம்), உந்தி, (பொற்சுண்ணம் இடித்தல்) அவலிடி முதலியவை திருவாசகத்தில் தனித்தனித் திருப்பதிகத்திற் கொண்டு பாடப்பட்ட வரிக்கூத்துக் குலத்தன.

இளங்கோவடிகள் 'ஆடல் என்றனைத்தும் ஒருங்குடன் தழீஇ உடம்படக் கிடந்த வரியும் குரவையும் சேதமும் என்ற இவை' எனச் சிலம்பின் முடிவிற் குறித்தருளினார். அவற்றுள், இவை வரிக் கூத்துட்படும். திருவாசகத்துட்காணும் இவை போலப் பாவையாடலும் கருதற்பாலது.

பரிபாடலின் (11.74.91) தைந்நீராடுதல் கூறப்பட்டது. இதுகுறித்து, மு.ரா. கட்டுரையெழுதினார். அதைப் பலர் அறிந்திருப்பர் அதுவே தைத்திங்களின் முற்பட்ட மார்கழி நீராடல் ஆயிற்று. பரிபாடலில் 'அம்பா ஆடல்' (81) என்றதும் இதுவும் ஒன்றே. மேற்கூறிய பாவையாடல் என்றதே இதற்கு அடிப்படை. இல்லையேல், பாவை, திருப்பாவை. அம்பா, அம்பா ஆடல் என்ற பெயர் அமையா. இத்திருவாசகத் திருவெம்பாவையில், 'மார்கழி நீராடல்' என்றதும் பரிபாடலில் தைந் நீராடுதல் என்றதும் வேறாகா. 'தைந்நீர்' என்பதில் 'தை' என்றது பன்னிரண்டனுள் ஒன்றாய திங்களைக் குறிப்பதன்று. நீரினது குளிரியல்பை யுணர்த்து வதேயாகும். தைத் திங்கள் என்பது பத்தாவது மாதத்தைக் குறித்த பெயராக் கொண்டது தமிழ்ச் சொல். அதை வடசொல்லாக வடமொழியாளர் எழுதினர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பேரகாரதியிற் காண்க. தைப்பூசம் என்றது அவ்வடசொல் அடிப்படையில் அமைந்ததாகக் கூறினார். தமிழிலே தொன்று தொட்டுள்ள 'தை' என்னுஞ் சொல் நீர்க்கு அடையாய் நின்றதுணர்க.

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்யவுவர்க்கும்

என்ற குறுந்தொகைப் (196) பாட்டிலே தன்மையைக் குறித்தே நின்றது அச்சொல். அதனால், தமிழர்க்கு அத்திங்கள் வெய்ய நிலைக்கு மாறாக

தண்ணிய நிலையைத் தரும் இயல்பு வாய்ந்தது. தெண்ணீர்த் தண்மை காலத்தின் மேல் நின்றது. இதனை ஐங் குறுநூற்றுள் (84) ‘மகளிர் ஆடும் தைஇத் தண்கயம் போலப் பலர் படிந்துண்ணும் நின்பரத்தை மார்பே’ என்றதாலும் அறியலாம். ‘தை இய மகளிர்’ (கலித். 27) ‘தையினீர் ஆடிய தவம் தலைப் படுவாளோ (கலித். 59) ‘தைஇ நின்று தண்பெயற் கடைநாள்’ (அகம் 24) முதலிய நாலரை அடியையும் இங்கு நோக்கல் தகும். மாதத்தைக் குறித்ததெனல் பொருந்துமோ? பதிற்றுப்பத்திலே முத்தம் தைஇய முடிச் சேரல் என்றதற்கு, முத்துமாலைக் குளிர்ச்சியைச் செய்யும் முடியையுடைய சேரல் என்றது பொருள். இவற்றால், ‘தை’ என்ற மாதப் பெயர் வட சொல்லாகாது. தைந்நீராடல் என்றதிலும் மாதப் பெயர் அன்று. அக்காலத்தியல்பு ஆகுபெயராய்க் காலத்தைக் குறித்ததாகக் கொள்ளுமிடம் இல்லை எனல் கருத்தன்று. மார்கழி நீர் என்றது மாதப்பெயரோடு கூடியது. தைந்நீர் என்றது அன்னதன்று. இரண்டும் ஒன்றேயாதலின் நீராடல் மார்கழி மாதத்தைக் குறித்ததே என்பது நம் கருத்து. பன்னிருமாதத்துடன் மார்கழி நீராடலே சிறப்பாயுள்ளது. காரணம் பலவுள. ஐப்பசி முதலே தொடங்கி விடியலில் நீராடி வருதல் பல துன்பங்களைத் தடுத்து நலங்களைப் பயப்பதாகும். பனியால் வருந்தல் நேராது. மார்கழியில் பெரிதும் தாக்கும். நிலையின் நீங்கி உய்யலாம். இது நம் முன்னோர்க்கு மெய்யநுபவம். ‘தையல்’ என்னும் பெயரது காரணம் உணராதார் பிழைபடக் கூறினார். அகாரதிப் பொருள் எல்லாம் உண்மைப் பொருளாமோ?

பாவை நோன்பு என்பது திருவாசகத்தில் யாண்டும் நுழைய மாட்டாது. அது சிவநோன்பொன்றற்கே இடம் ஆய திருவருட் பெரும்பனுவல். திருப்பாவையில் அஃது இருக்கலாம்.

கடையம் அயிராணி மரக்கால் விந்தை கந்தன்
குடைதுடிமால் அல்லியம்மல் கும்பம் -
சுடர்விழியால்
பட்டமதன்பேடு திருப்பாவை அரன் பாண்டரங்கம்
கொட்டி இவை காண்பதினோர் கூத்து

(சிலப்பதிகாரவுரை மேற்கோள்) என்பதில் உள்ள ‘திருப்பாவை’ என்னும் பெயரையே கொண்டிருத்தலால், ஆண்டாளம்மையார் அருளிய திருப்பாவையின் பெயர்க் காரணமும் தொன்மரபும் புலப்படும்.

'எம்பாவை' என்ற மரூஉப் பெயரின் தொன்மை எல்லோரும் ஆடுவோம் பாவை என்பதேயாகும் எல்லோரும் ஆடுவோம் பாவை. இதுமரூஉ ஒவ்வொரு பாட்டினும் 'ஏலோர் எம்' என்றுள்ளதும் 'பாவாய்' என்பதும் மரூஉவே. தமிழிற் பல சொற்கள் ஐயீறாக இருந்து ஆயீறாக மாறுதல் எல்லாப் புலவர்க்கும் தெரியும்.

இஈ ஆகும் ஐ ஆய் ஆகும் 606

முன்னிலைக் கிளவி
இ ஐ ஆங் என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும் 708

என ஆசிரியர் தொல்காப்பியனாரும்

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே நன்.335

எனப்பவணந்தி முனிவரும் ஐ ஆய் என அடுத்துக் கூறியதை ஆராய்தல் வேண்டும். நாரை - நாராய், பூவை - பூவாய், தோகை - தோகாய், மூங்கை - மூங்காய், கோதை - கோதாய் எனப்பெயர்ச் சொல்லினும், வந்தனை - வந்தாய், உண்டனை - உண்டாய், நடந்தனை - நடந்தாய், ஓங்கினை - ஓங்கினாய் என வினைச் சொல்லினும் ஏன் ஐ ஆய் ஆயிற்று?

ஐகாரம் ஆயாதல் நாவிற்கெளியது. மேற்காட்டியவை விளியும் வினையும் ஆகும். எம்பாவாய் என்பதில் விளியாயும் இல்லை, வினையாயும் இல்லை. பாவை என்னும் ஐயீற்றுப் பெயர்ச் சொல்லே ஆயீற்றுச் சொல்லாயிற்று. அதை விளியாக் கொள்வோர் விளியாதிருத்தல் மானக்கேடாக்கும். திருவாசகத்திலே சிவனைப் பாடுதலன்றிப் பிறிது யாதும் இல்லை. திருவெம்பாவையிலே மார்கழி நீராடும் மகளிர் எல்லாரும் ஆடுவோம்பாவை என்றனரே அன்றிப் பாவை நோன்பை யுட்கொண்டு பாவாய் என்று அப்பாவையை விளித்தாரல்லர்.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப் பாடத் தொடங்கி, அப்பெரும் பொருளையே சிவனே சிவனே என்று ஓலமிட்டு, உன்னைப்பிரானாகப் பெற்ற உன் சீரடியோம் உன்னடியார் தாள்

பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம். அன்னவரே எம்கணவர் ஆவார். அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம். இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதி என்று வேண்டியது பாவையை விளித்தோ?

ஐயா! வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா! வெண்ணீறாடீ! செல்வா! .... மடந்தைமண
வாளா! எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம்,
எம் கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க,
எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க.
கங்குல் பகல் எம் கண் மற்றும் ஒன்று காணற்க.
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதி

என்று பாவையை விளித்துக் கேட்டதாகக் கொள்ளும் பெரும்புலவர் பாவை விளி என்று எழுதினார்.

இத்திருவாசகத்தில் எல்லாத் திருப்பதிகங்களும் மாணிக்கவாசகப் பெருமான் சிவபிரானையே போற்றுவன வாயுள்ளன. திருவெம்பாவை நோன்பு குறித்து மகளிர் போற்றினர் எனலாமோ? அம்மனை திருப்பொற் சுண்ணம், திருச்சாழல், திருக்கோத்தும்பி, திருப்பூவல்லி முதலியவை போலத் திருவெம்பாவையும் மகளிர் பாடுதலாகப் பாடியருளினார். அம்மகளிர் பிறர் மகளிர் வீட்டிற் சென்று எழுப்பிக் கூட்டிக்கொண்டு பொய்கையை உற்று நீராடிய வண்ணம் பாடியிருக்கின்றது வெளிப்படை. இது மார்கழி நீராட்டம் என்று இதன் முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க முன்னோருட் பலரும் பின்னோருட் சிலரும் சக்தியை வியந்தது' (திருவெம்பாவை 16) என்னும் தலைப்பின் பொருளுண்மையை உணர மாட்டாதவராய் விளக்கம் எழுதினர், பேசினர், அந்தப் பேச்சு இன்றும் உண்டு.

அகத்தியர் திருவாசகத்தின் பொருளைச் சிறுசிறு சூத்திர-வாக்கியங்களாக அருளினார் என்று ஒரகவல் உண்டு. அதனைக் கழகப்பதிப்பின் மட்டும் நாம் கண்டோம். உண்மையில் திருவாசகத்தின் தலைப்புகளுக்கு உயரிய கருத்து உணர்த்தும் சூத்திரமாகவே விளங்குகின்றன. திருவான்மியூரில் தமிழ்த்தெய்வத்தின் பெயரால் விளங்கும் நூலகத்து வெளியீடாய திருவாசகத்திலும் அவ்வுரை

யெழுதிய சிவானுபவச் செல்வர் தாண்டவராய சுவாமிகள், அகத்தியர் அருளிய சூத்திரங்களின் பொருளை விளக்கி அவற்றை ஒட்டி உரைத்தார்கள். அவ்வுரையின் முதலில் உள்ளவை பெரியதொரு சைவசித்தாந்த சாத்திரம் ஆகும். அவர்களால் உண்டாகும் ஞானம். அவ்வுரையாற் பெறலாம் அனைவரும்.

மனோன்மணி முதலிய சக்திகள் 19ஆவது திருவெம்பாவைப் பாடற்கண் உள்ளவாறு உரைத்து நல்க வேண்டுதல் பொருந்துமோ? இவ்வினாவிற்குத் தக்க விடை தோன்றும் வரையாம் அக்கருத்தை இசைந்தேற்கத் துணியேம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி (1) ஆதியும் அந்தமும் ஆகித் தோற்றம், போகம் (பரிபாலனம், காப்பு), ஈறு -சங்காரம், மறைப்பு - காணாமை, அருளல் - அநுக்கிரகம் என்ற ஐந்தொழிலும் புரியும் உண்மையை, உணர்த்தி (20) முடியும் இத்திருவெம்பாவையை நாளும் ஓதிவரல் நன்று. மார்கழித் திங்களிலாதல் ஓதித் திருவருட் செல்வம் வளரப் பெறுதல் உயிர்க்கு உடம்புவாய்த்ததற்கு உறுதியாகும். உய்வினை நாடாதிருப்பது ஊனம் அன்றோ? 'உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே' என்று வேண்டியருளினார் திருமணக் கோலப்பெரு மாள். 'ஏழைபங்காளனையே பாடு' என்ற திருவருட் கட்டளையை எவரும் மீறல் ஆகாது.

திருச்சிற்றம்பலம்

31. ஓர் எண்ணுப் பெயர்

பண்டையநாளில், செந்தமிழலே யிருந்த எண்ணுப் பெயர்கள் பல, இற்றை நாளில் குறியுந் தெரியாது, மறையும் வண்ணம் வழக்காறற்ற நிலையை யெய்தின. எய்தவே அவ்வெண்ணுப் பெயர்கள் அமைய இயற்றிய செய்யுட்களுள் அவற்றின் பொருள் செவ்விதின் அறிய இயலாமல் வழுப்படக் கொள்ளலாயிற்று.

பரிபாடலின் இரண்டாவது பாட்டில் வரும்

நெய்தலுங் குவளையும் ஆம்பலுஞ் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை 13.15

என்னும் மூலத்தையும், 'நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமும் என எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய காலவீட்டம் கழிந்தபின்' என்னும் உரையையயும் நோக்கின், நெய்தல், குவளை, ஆம்பல் என்னும் எண்ணுப் பெயர்கள் முன்னிருந்து வழங்கியவுண்மை புலனாம். சங்கம் கமலம் என்பவை 'சங்கநிதி' 'பதுமநிதி' எனப் பிற்றைய நூலினுங் குறிக்கப்பட்டன. 'வெள்ளம்' என்னும் எண்ணுப் பெயர், இன்றைய உள்ளமும் அறிவதே.

தொல்காப்பியர், புள்ளிமயங்கியலுள் 98

ஐ அம் பல் என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்

என்பதில், தாமரை (கமலம்) என ஐகார வீற்றிலும், வெள்ளம் என 'அம்' ஈற்றிலும் ஆம்பல் எனப் 'பல்' ஈற்றிலும் முடியும் எண்ணுப் பெயர்களைக் குறித்துள்ளார். அதனுரைகள் அவற்றை வெளிப்படுத்தின. அவை தாமரை முதலிய பொருள்களை யுணர்த்தும் பெயர்களாதலே, அன்றி எண்களை யுணர்த்தும் பெயர்களாதலையுங் குறிக்க, 'அல் பெயரெண்' என்றார். அஃதாவது (பொருட்) பெயரல்லாத எண்ணுப் பெயர் என்பதாம். ஆகவே, அவையும் அன்னோரன்ன பிறவும் எண்களைக் குறித்து வழங்கியபழந் தமிழ்ப் பெயர்கள் என்பதுறுதி-யாயிற்று. ஆயினும், நம் தீவினைப்பயனாக இந்நாளில், அத்தகைய செந்தமிழ்ப் பெயர்கள் எண் குறித்து வழங்கலின்றி, ஆயிரம் என்பதன்

மேற்பட்ட எண்களைக் குறிக்க வேற்று மொழியிலிரவல் வாங்கிக் கொள்ளல் நேர்ந்தது. இந்நேர்ச்சி நன்றோ, தீதோ யாதாயினும் ஆகுக. இவ்விரவல் படுத்தும்பாட்டை நோக்குமின் செந்தமிழ்ச் சான்றோரே!

அம் என முடியும் எண்ணுப் பெயர்களுள், 'தோழம்' என்பதும் ஒன்றாகும். அது கல்வெட்டு ஒன்றனுள் இருக்கின்றது என நண்பரொருவர் சொல்லினார். யாம் குறித்த ஈரிடத்தையும் அவர் குறித்துக்கொண்டு சென்றார். 'திங்கள் சில கடந்தும் எழுதினாரல்லர். பிறர் எவரேனும் அறிந்து எழுதலாம் என்றெண்ணி, இதில் குறிக்கின்றோம்.

மாணிக்கவாசகப் பெருமானார், காழிவேந்தர், மொழி வேந்தர், நாவலர்வேந்தர் மூவர்க்கும் மிக முற்பட்ட காலத்தவர் என்பது அறிஞர் பலர் கருத்து. அவர் அருளிய திருவம்பாவை (கO). இவ் வெண்ணுப்பெயரை இனி துணர்த்துகின்றது.

சிவபெருமான் தொண்டரையுடையவன், அவர்க்கு உள்ள தொண்டர் தம் தொகையோ ஒரு தோழம். அவரனைவரையும் வேதமுதலியனவும் விண்ணவரும் மண்ணவரும் ஓதத் தொடங்கி ஓதிவரின், அவ்வோதலுக்கு எப்பொழுதும் முடிவு எய்தாதாம். அவ்வோதலினளவிற் குட்படாத பெருமையைக் குறிக்கும் எண்ணே தோழம் என்பது. 'உலவா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தினைச் சிவ பெருமானுக்கேற்றிக் கூறினும், இவ் வெண்ணுப் பெயர் வேறு பெயராகாது.

பரிபாடற்றிரட்டு என்ற தலைப்பின் கீழ் வானாரெழிலி என்ற தொடக்கத்துப் பாட்டில் எழுபதாவது அடியில் "ஒரு தோழம் காலம்" என்றும் வருவதறிக.

'பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்' எனத் திருவடியும், 'போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே' எனத் திருமுடியும் உணர்த்து முகத்தான் பரப் பிரமத்தைக் குறித்தருளினார். அது உயிர்கட்கு அருளக் கொள்ளுஞ் சதாசிவத் திருமேனியைப் பேதை- யொருபாற்றிருமேனி யொன்றல்லன்' என்றருளினார். அவ்வருள் பெற்ற தொண்டர் அளவிலர் என்னப் பல்கிய புகழை உணர்த்த, 'வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும் ஓத உலவா ஒரு தோழந் தொண்டருளன்' என்றருளினார். இங்கு தோழன் என்று ஆண்பாற்

பெயராக அமைய எல்லாப் பதிப்பும் பெற்ற வினை எதனால் விளைந்தது? பழைய வழக்கு வீழ்ந்ததனாலன்றோ? தவறிய இடனெல்லாம் பொருள் கொள்ளப் புலவர்க்குத் திறம் குறைவின்றியுள தெனினும், உண்மையை உணர்ந்துரைக்கும் ஏற்றம் ஆண்டுத் தோன்றுமோ?

திருஞான சம்பந்தப் பெருமான், தமக்குப் பாலை அளித்தருளிய திருப்புறவத்திறைவன் நஞ்சுண்ட வரலாற்றை நினைந்தருளினார். அந்நஞ்சு எவரும் உண்ணறற்கரியது. உண்டாலும் கண்டத்தில் அடக்குதல் அதனினும் அரியது. ஆண்டு அடக்கினும் விடுக்கினும் சாவாதொழிதல் அரிது. அவ்வருமைச் செயலைச் செய்து ஏந்திய வெற்றிக்கொடி, விடைக்கொடி. அக்கொடி அன்னதானக் கொடியுமாயிற்று. அன்னமோ? அன்று. அமுதம். அமுதுண்டார் எவர்? தேவர். அவர் எத்துணைவர்? உண்டு எங்கு வாழ்ந்து விளங்குகின்றனர்? விடையை எதிர்நோக்குவோர்,

உண்ணற் கரிய நஞ்சை உண்டு ஒரு தோழந்தேவர்
விண்ணிற் பொலிய அமுதம் அளித்த விடைசேர்
கொடியண்ணல்

என்று வருந் திருவடிகளை வணங்கியுய்யலாம்.

இங்குத் தேவர் எண்ணைக் குறிக்கும் பெயர் 'தோழம்' என்பது வெள்ளிடைமலையன்றோ! இனியேனும், திருவாசகத்தைப் படிக்கும் அன்பர் ஒரு தோழன்றொண்டருளன் என்னும் பிழையைத் தீர்க்க முயல்க. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'. 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்னும் இரண்டும் இங்கு நோக்கத்தக்கன.

திருச்சிற்றம்பலம்

32. கொக்கிறகு

திருவாசகத்திலே திருத்தெள்ளேணத்தின் முடிவில்,

குலம்பாடிக் கொக்கிறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

என்னும் திருப்பாடலிற்குறித்த 'கொக்கிறகு' என்பதற்கு இத்தருமையாதீன வெளியீட்டில், 'கொக்கு வடிவமான வசுரனைக் கொன்று இறைவன் சூடிய இறகு' என்று குறிப்புரை காணப்படுகிறது. இதனை நோக்கிய அன்பர் ஒருவர் கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த போழ்து, இது புகழ்மெய்பெற்ற திரு.கா.சு. பிள்ளையின் உரையைப் பார்த்தெழுதிய பொருந்தாவுரை என்றார். அதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்று கேட்டேன் நான். அதனால் அவர் 'கொக்கிறகு என்றது கொக்கினது இறகு அன்று; இச்சோ ணாட்டில் கொக்கு மந்தாரை' என்னும் பூவைக் குறித்து வழங்குவது; அவ்வழக்கம் இன்றும் உண்டு என்றார். எனக்கு அப்போது ஒரு நடுக்கம் உண்டாயிற்று ஏன்? திருமுறையின் குறிப்புரையுள், கொக்குருவம் உள்ள அசுரனது இறகு என்று எழுதிவிட்டேனே என்று உள்ளம் உலைந்தது. அதனை அவர்க்குச் சொல்லாமல் மலர் என்னும் பொருள் கொள்வது நன்று என்று மட்டும் இசைந்து நின்றேன். அது குறித்து மறுநாள் நினைந்து, அதன் உண்மையைத் துணிந்து, இதனை எழுதலானேன். இது பலர்க்கு அதன் பொருளைத் துணியுமாறு செய்ய உதவும் என்பது என் எண்ணம். நாலாந்திருமுறைக்கு எழுதிய குறிப்புரையில்,

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணத்தோடு
அக்கணிந்த அம்மானை நான்கண்ட தாரூரே 188

என்றதில் உள்ளதற்குக் 'கொக்கு' என்னும் பொருளையே குறிக்கொண்டுரைத்தேன். அது தவறு அன்று என்று துணிந்தேன். அந்த அன்பர் சொல்லியபொருளும் அன்றி இப்பொருளும் அதற்கு உரியதே

என்பதைத் தக்க ஆதாரங்களுடன் தெளிந்தேன். அவர் கொண்ட கொக்கு மந்தாரையைக் குறியாத இடங்களும் உள. கொக்குருக்கொண்ட அசுரன் வரலாறும் உளது.

திருநாவுக்கரசு நாயனார் அருளியவற்றுள்,

கொக்கிறகு சென்னியுடையான் கண்டாய்
கொக்கிறகர் குளிர்மதிச் சென்னியார்
கொக்கின்றூவலும் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலைமாலை விரிசடை நக்கன்

என்னும் இடங்களிலும் பிறாண்டும் கொக்கு மந்தாரையைக் கொண்டு பொருந்தக் கூறலாம். திருவதிகையிற் பாடியருளிய சுண்ணவெண் சந்தனச் சாந்தும் என முதலுந் திருப்பதிகத்தின்

பூண்டதோர் கேழ லெயிறும் பொன்திகழ் ஆமைபுரள
நீண்டதிண் டோள்வலம் சூழ்ந்து நிலாக்கதிர்போல வெண்ணூலும்
காண்டகு புள்ளின் சிறகும் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதுமில்லை

என்ற இரண்டாவது திருப்பாடலின், புள்ளின்சிறகைக் கண்டு அஞ்சுவது யாதொன்றும் இல்லையே! இதில் உள்ள 'கட்டங்கம்' என்றதன் பொருளும் இடைப்பிறவரலாக ஈண்டுரைத்தல் நன்று. திருக்கோவையார் உரையிலே (பா.242) 'கட்டங்கம்' என்றதற்கு, 'கட்டங்கம் என்னும் படைக்கலத்தையும்' என்றும் 'கடங்கம் என்பது மழு. இது கட்டங்கம் என நின்றது' என்றுமுரைத்தவாறறிக. இத்தேவாரம் 'கட்டங்கக் கொடியும்' உண்டெனக் கூறிற்று.

'புள்ளின் சிறகு' என்று சொல்வேந்தர் அருளிய உண்மையால் 'கொக்கிறகு' மந்தாரை மலரையே உணர்த்தாது கொக்கினது இறகையும் உணர்த்தும் எனல் இனிது புலப்படும். (கச்சியப்பசிவாசாரியர்) கந்தபுராணத்தில் ஒரு பாடலும், இக்கருத்தை விளக்குகிறது.

ஏங்கி அமரர் இரிந்தோட வேதுரந்த
ஓங்கு குரண்டத் துருக்கொண்ட தானவனைத்

தீங்கு பெறத்தடிந்து சின்னமா ஓர் சிறையை
வாங்கி அணிந்த அருள் இங்கென்பால் வைத்திலையே

என்னும் (மகேந்திரகாண்டம் – சயந்தன் புலம்புறு படலம் 64) பாடலில், கொக்கிறகு சூடிய வரலாறு சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. குரண்டத்து உரு – கொக்கின் உருவம்; தானவன் – அசுரன்; கடிந்து – கொன்று; சின்னம் – அடையாளம்; சிறை – இறகு. இதனையே 'புள்ளின் சிறகு' என்றார் வாக்கின் மன்னவனார். இவ்வரலாறு உபதேசகாண்டத்திலும் நன் குணரக்கிடக்கின்றது.

குழலார் சடையார் கொக்கினிறகர் கோலநிறமத்தம்
தழலார் மேனித் தவளநீற்றர் சரிகோவணக்கீளர்
எழிலார் நாகம் புலியின் உடைமேல் இசைத்து
விடையேறிக்
கழலார் சிலம்பு புலம்பவருவார் சித்தீச்சரத்தாரே

–திருஞானசம்பந்தர்

என்பதுபோலும் இடங்களில் எவ்வாறுகொள்ளினும் பொருந்தலாம். பகாசுரவத வரலாற்றைக் குறித்த மூலத்தை ஆராயின் அறிஞர் வியப்பர். அவ்வரலாற்றுக்குறிப்புடைய இங்கு மந்தாரைக்கு வந்தாரைக் காணோம் என்பது வெள்ளிடை மலையாம். ஆதலின், 'கொக்கிறகு' என்பதற்குத் திருவாசகத்துக் குறிப்புரையுட்கண்ட பொருளிற் குற்றம் இல்லை என்பதும் சிவபுராணக் கொள்கையை தழுவிய சம்பிரதாய வழக்குகள் என்பதும் நன்கு விளங்கும். 'புள்ளின் சிறகு' என்றதால் இது குற்றம் இல்லாதே என்பது யாவரும் அறிதற்பாலதொன்று.

திருச்சிற்றம்பலம்

33. அம்மானை

அம்மானை, அம்மனை என்னும் பெரியதொரு விளையாட்டு நம்நாட்டிற் பண்டு தொட்டு நிகழ்ந்து வரும் பயிற்சியுடையது. இன்றும் சிற்றூர் மகளிரிடம் கல் முதலிய கருவியை அம்மனையாக் கொண்டு ஆடும் பழக்க முண்டு. "அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார் அம்மனையிற் பாடுந்தகை" என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அவ்விளையாட்டு இசைப்பாட்டுடன் நிகழ்வதெனல் விளங்கும். அம்மனைக் கருவி முத்தாலும் மரகதத்தாலும் நீலத்தாலும் அமைந்திருக்கும். மூன்று கொண்டு ஆடப்படும். ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறத்ததாயும் ஒரே நிறத்ததாயுமிருக்கலாம் "செம்பொனம்மனை"யுமுண்டு. குமரகுருபரர், கடற்றிரை மீனை முகந்து அம்மனை யாடுதலையுங் கவியோ வியத்திற் காட்டினார்.

கள்ளூறு கஞ்சக் கரத்தூறு கேயொளி
கலப்பச் சிவப்பூறியும்
கருணைப் பெருக்கூற வமுதூறு பார்வைக்
கடைக்கட் கறுப்பூறியும்
நள்ளூறு மறுவூ றகற்றுமுக மதியில்வெண்
ணகையூறு நிலவூறியும்
நற்றரள வம்மனையொர் சிற்குணத் தினைமூன்று
நற்குணங் கதுவல்காட்ட
உள்ளூறு களிதுளும் பக்குரவ ரிருவீரும்
உற்றிடு துவாதசாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்டர்
வுழுவலன் பென்புருகநெக்
கள்ளூர வுள்ளே கசிந்தூறு பைந்தேறல்
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே

எனக் குமரகுருபர முனிவரருளிய அங்கயற் கண்ணியம்மை பிள்ளைத்தமிழ் செய்யுளாலொரே நிறத்தம்மானை (முத்தாலானது) உண்மையறியலாம்.

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமும்
ஒண்டர ளத்திரளும்
ஒழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை
ஒருமூன் றடைவிலெடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற்செல நின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலைமேற்
பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு
பெடையோ டரசவனம்
அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமகள்
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே

என்னுந் திருப்பாடலால் மரகதம் நீலம் தரளம் என்னும் மூன்றால் அமைந்த முந்நிறத்தம்மனையுண்மை அறியலாம். இதனுள் மூன்றாவது தூது சென்றதன் பயனை வயலில் நிகழ்ந்ததாக் குறித்த செயலாற் பெறவைத்த நுட்பம் அறிஞருள்ளத்தை ஆசிரியர் திருவடியிற் சார்த்தி யின்புறுத்தும்.

இத்தகைய கருவி கொண்டாடும் அம்மானை விளையாட்டு ஒவ்வொரு கலம்பகத்துள்ளும் ஒருறுப்பாயடங்கப் பாடப் பெறுவதுண்டு. அங்ஙனம் பாடிய புலவருள் சிலரே அதனிலக் கணத்தைத் தொன் முறையறிந்து நன்கு பாடினர் பலர் வழுவினர். அப்பாடல் கலித்தாழிசையாயிருக்கும். யாப்பிலக் கணத்துள் அதனிலக்கணம் முற்றக் கூறப்பட்டிலது. முன்னோர் பாக்களினமைதி நோக்கி யுணர்தற்பாலது. பின்னோர் பலர், எல்லாம் காய்ச்சீராயிருத்தல் வேண்டும் என்று கொண்டனர். சீரேயன்றி அடியினும் நான்கடியே போதுமெனக் கொண்டாருமுளர். ஐந்தடியிற் குறையாத பாடல் பாடிக்கொண்டு ஆடுவர். ஆட்டம் முடியும் போது ஐந்ததாவதடியாக

ஒன்று பாடி முடிப்பர். ஐந்தாவதடி பாடினால் ஆட்டம் முடிந்த தென்றாம். இது சிலப்பதிகாரத்திலுள்ள வாழ்த்துக்காதையில் வரும் நான்கு பாடல்களையும் நன்கு நோக்குவார்க்கு விளங்கும். அரங்கேற்று காதை யுரை மேற்கோளாகிய 'சிந்துப் பிழுக்கை....... வரிக்கூத்தின் குலம்' என்னும் பழம் பாடலால், அம்மனையின் தொன்மை புலனாம். தொன்றும் இன்றும் மாறுபாடும் வேறுபாடும் அடைதல் உண்டன்றோ! அம்மனைப்பாட்டும், தொன்னெறி பிறழப், பின்வந்த புலவரால் இயற்றப்பட்டன.

இங்கு அறிஞர் எல்லோரும் உற்றுணரத்தக்கது, அம்மானைப் பாடல் வெண்டளை பிறழாது பாடப்பெறல் வேண்டுமென்பதாம். இரட்டைப் புலவர் பாடியதாக வழங்கப்படும் 'மூவரம்மானை' என்ற பெயர் ஆடுவோர் தொகையைக் குறிக்கும். மூவர்கூடி ஆடுவது அம்மானை விளையாட்டு. அம்மூவரும் வினாவிடையாக ஒரு பொருட் கருத்தமையப் பாடுவர். ஒருத்தி,

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை

என்று வினவினாள். மற்றொருத்தி, அவ்வடி யொற்றி,

ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் முன்றெறிந்த சோழன்காண் அம்மானை

என்று விடையிறுத்தாள். வேறொருத்தி,

சோழன் புகார் நகரம் பாடேலோ ரம்மானை

என்று பாடி ஆட்டத்தின் முற்கூற்றை முடித்தாள்.

இவ்வாறே ஏனைய மூன்று பாடல்களையும் நோக்குதல் வேண்டும். அம்மனையாட்டம் முடித்து வேறாட்டம் தொடங்குவான் எண்ணியபோது, மூன்றாமவள்,

கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

என்று ஈரடிபாடி முடித்தவாறறிக.

சிலப்பதிகாரத்துள் வரும் ஊசல்வரி வள்ளைப்பாட்டு முதலிய-வற்றாலும் வெண்டளை பிழையாது நிற்றல் குறிக் கொளத்தக்கது.

'தீங்கரும்பு', 'பாடல்சான் முத்தம்', 'சந்துரறபெய்து' என்னுந் தொடக்கங்களையுடைய மூன்று பாடலும் முறையே சோழ பாண்டிய சேரரைக் குறித்தனவாதலின், அவர் தார் மூன்றுஞ் சொல்லப்பட்டன. 'படவே' 'பாவைமார் ஆர் இரக்கும் பாடலே பாடல்' என்றிருத்தற்குரியது பிழைபட்டுளது என்பது புலனாகும்.

திருவாசகத்துள் வருந் திருவம்மானையும் சைவ எல்லப்ப நாவலரும் பாடிய கலம்பகங்களுள் வரும் அம்மானையும் வெண்டளை பிறழாமல் இனிதமைந்திருக்கும் எழிலை நோக்கியின்புறுதல் செந்தமிழ் வேட்டோர்க்கு வந்த நல் விருந்தாகும்.

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

என்னுந் திருவாசகத்தைப் பாடிக்களிக்க

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்

என்னும் அடியில் எல்லாம் காய்ச்சீராயில்லை. அவ்வாறிருத்தல் வேண்டும் என்னும் விதி எங்கு எவரால் குறிக்கப்பட்டது? பழங்காலப் பாடலமைதியை நோக்காமல் தாமே படைத்திட்டுக் கொண்ட விதியன்றோ அது?

திருவாசகத்தம்மானைக்கும் ஏனைய அம்மானைக்கும் மற்றொரு வேறுபாடும் அறியத்தக்கது. சிலப்பதிகாரத்து அம்மனையிற் கடைப்பாடல் போலத் திருவாசகத்தில் எல்லா அடிகளும் ஒரெதுகையிலமைந்த அழகு நோக்கி யுவத்தற்குரியது.

குமரகுருபர முனிவர் அருளிய மதுரைக் கலம்பகத்தும் காசிக்கலம்பகத்தும் வரும் இருபாடலும் நோக்குக.

இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகில்

அருமையுடம் பொன்றிருகூ றாவதே னம்மானை
ஆனாலுங் காயமிலை ஐயரவர்க் கம்மானை

மது கல. 14

கலைமதியின் கீற் றணிந்த காசியகி லேசர்
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்கா ணம்மானை
சிலைமதனைக் கண்ணழலற் செற்றனரே யாமாகின்
மலை மகட்குப் பாகம் வழங்குவதே னம்மானை
வழங்காரோ அப்பாலு மாலானா ரம்மானை

காசி. க. 34

இவ்விரண்டும் நிரையசைமுதலாத் தொடங்கும் பாடல். அதனால் அடிதோறும் தொடர்ந்து வெண்டனை பிழையாத வண்ணம் அமைந்திலது. அவ்வவ்வடியின் மட்டும் தளை தட்டலின்றி நின்றவாறறிக. சிலப்பதிகாரத்தில்.

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யார்
அம்மானை

என முதல்வி பாட்டில் தளை தட்டாமை காண்க. அவ்வாறே அடுத்த இருவர் பாட்டிலும் அந்நிலை காண்க. அந்நிலை

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலையனுங் காண்பரிய வித்தகனை

என்னும் அடிகளையுடைய திருவாசகத்திலும் மேற்குறித்த இரண்டு கலம்பகப் பாக்களிலும் அமைந்திலது.

திருவாசகத்தம்மானை மகளிர் பலர் ஒருங்கு சேர்ந்து பாடும் வண்ணம் அமைந்தது. மற்றவை மூவர் வினாவிடையமையப் பாடி முடிப்பதாக அமைந்தவை.

புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் தில்லைக் கலம்பகம் திருவரங்கக் கலம்பகம் முதலியவற்றுள் வரும் பாடல்கள் சிலப்பதிகாரப் பாடல் போலமைந்தவை.

திருவாமாத்தூர்க் கலம்பகம் திருவேங்கடக் கலம்பகம்

ழூவரம்மானை முதலியவற்றுள் வரும் பாடல்கள் தொன்னெறி நோக்கி யமைத்தனவாக இல்லை.

சிலப்பதிகாரத்தில் வரும் அம்மானை நான்கனுள்ளும் முடிவிற் 'பாடேலோரம்மானை' என்றுள்ளது. திருவாசகத்தில் திருவெம்பாவையுள் 'பாடேலோ ரெம்பாவாய்' என வந்துள்ளது. இவ்வீரிடத்தும் நோக்கின் பாடுஏல் ஓர் எனப் பிரித்துரைக்கும் பொருள் பொருந்தாமை விளங்கும். அது மரூஉ மொழியாகும். 'பாடுதும் வம்மெல்லாம்' பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்' என்று வருஞ் சிலம்படிகளை நோக்கின் அது பாடுதும் எல்லோரும் என்பதன் மரூஉவாதல் ஊகித்துணரப்படும். ஆட்டங்களிற் பாடும் பாட்டுக்களிற் பெரும்பாலும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை அமைந்திருத்தல் அறிதற்பாலது.

இந்நாளில் எண்சீராசிரிய விருத்தமே பெரிதும் பாடுகின்றனர். சிறிது அழுகைப் பாட்டு. அவரெல்லாரும் பழம் பாடல் வகையை உணர்ந்து அவ்வகைப் பாடல்பாடி உலகை உவகையுறச் செய்க.

திருச்சிற்றம்பலம்

34. திருவாசகம் – திருப்பள்ளியெழுச்சி

இரண்டாவது திருப்பாட்டு

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யருணிதி தரவரு மானந்த மலையே
யலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே

இத் திருப்பாட்டின் பொருள் நன்கு விளங்கவில்லையென்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். திருவாசக வுரைகள் இதன் பொருளைச் சிறிதும் தெளிவாக்கமாட்டா தனவாயின. ஆளுடைய அடிகள் திருவுள்ளத்தை அறிந்தெழுதியன அல்ல அவை. இதிற் குறிக்குங் கதிரோன் றோற்றம் உலகிற்புறத்தே நிகழுஞ் சூரியோதயமன்று. கூர்ந்து நோக்கின் அது புலப்படும். கீழ்த்திசையில் அருணோதயமும் இருளைப் போக்கிய சூரியோதயமும் நிகழ்ந்தவற்றை 'அருணன் இந்திரன்றிசை யணுகினன் இருள்போயகன்றது' என்ற பகுதி உணர்த்தும். அதையடுத்து, உயிர்களிடத்தே, இறைவன் புரியுந் திருவருணிகழ்ச்சி உருவகப்படுத்தப் பெற்றுளது. இறைவனது திருமுகத்திலே திருவுள்ளத்திற்றோன்றிய கருணை வெளிப்படுகின்றது. அவ்வெளிப்பாடு ஒருங்கே முழுதும் உண்டாயிற்றிலது. சிறிது சிறிதாக எழுகின்றது. அக்கருணை யெழுச்சியும் அக்கருணை புலப்படற்கிடனாகிய திருக்கண் மலர்ச்சியும் ஒத்து நிகழ்கின்றன. உதயகிரியிற் சூரியன், முகத்திற் கருணை. சூரியன் எழ எழத்தாமரை மலரும். உதயகிரி போன்றது இறைவனது திருமுகம். அக்கிரியின் விளங்குஞ் சூரியன் போன்றது அத் திருமுகத்தின் விளக்குங் கருணை. சூரியனெழ மலருந் தாமரை போன்றது, கருணை எழ மலருங்கண். மலர் விரியவூதும் வண்டு போன்றது. உயிர் உணரவுணர்த்துந் திருவருள். இந் நிகழ்ச்சியையே 'உதயம்......முரல்வன' என்னும் பகுதி உணர்த்துகின்றது.

உயிர்கள் திருவருள் உணர்த்தினாலன்றி உணர மாட்டாதன. அவ்வருள் உணர்த்த உயிர் உணர்தலையே 'நயனக் கடிமலர் மலர மற்று அண்ணல் அங்கண்ணாம் திரணிரை அறுபதம் முரல்வன' என்று குறித்தருளினார்.

நயனமலர் மலரக் கண்ணா மறுபதம் முரல்வன என்றதால், உயிர் உணர அருள் உணர்த்தும் என்னுஞ் சித்தாந்தம் குறிக்கப்பட்டது.

வண்டுகள் வாய்வைத்தூத மலர்கள் அலர்தலியல்பு. 'புதலும் வரிவண்டூத வாய் நெகிழ்ந்தனவே' (குறுந் 260), 'காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது வண்டு வாய் திறக்கும்பொழுது' (குறுந் 265), 'பொய்கை யாம் பல் அணிநிறக் கொழுமுகை வண்டு வாய் திறக்குந் தண்டுறையூரன்' (குறுந் 370), 'வண்டு வாய் திறப்ப விண்ட பிடவம்' (நற் 238) என்னுந் தொன்னூற் பகுதிகள் அதை உணர்த்தும். 'மல்லிகையே வெண் சங்கர வண்டூத' (நளவெண்பா 99) என்ற பின்னூற் சான்றுங் காண்க. 'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட' என்னும் அருணூற் பிரமாணமும் அறிக.

அவ்வாறே உயிர்களின் நயனக் கடிமலர் மலர அண்ணலங் கண்ணாம் அறுபதங்கள் முரல்கின்றன. சிவ சத்தியின் கூறுகளின் பன்மை நோக்கி முரல்வன என்றுரைத் தருளினார். அண்ணல்கண் என்றது பற்றி நயனம் உயிரென்பது தானே பெறப்படும். முகத்தை உதயகிரியாக உருவகித்தமையால், அம்முகத்தில் விளங்கும் பெருங் கருணையைச் சூரியனாக வுருவகித் தருளினார். அச்சூரியன் தன் மலைக்கண் உள்ள மலர்களோடு வேற்றிடத்து மலர்களையும் அலர்த்துதலின், பொதுவாக 'நயனக் கடி மலர் மலர' என்றருளினார். இறைவன் (தனது பெருங் கருணைகொண்டு) கண்ணைத் திறந்து பார்த்ததால் இப்பேறு கிடைத்தது என்னும் உலகமொழியும் இங்குக் கருதத்தக்கது.

'இவை ஓர்' என்றது, அணுகுதல், போய் அகலுதல், எழ எழ மலர்தல், முரலல் என்னுந் தொழினிகழ்ச்சிகளை ஓர்வாய் என்றவாறு.

கண்ணாம் அறுபதம். திரண்ட நிரையாகிய அறுபதம் என்க. 'இவையோர்' என்றது இரண்டன்றொகை. சிவ பெருமானே, ஆநந்தமலையே, அலைகடலே நின் - உதயகிரியாகிய, முகத்தின்

கருணை (யாகிய சூரியன்) எழ எழ நயனக் கடிமலர் மலர அண்ணலங் கண்ணாம் அறுபதம் முரல்வன. இவையோர், பள்ளி யெழுந்தருளாய் என்று முடிக்க, அண்ணல் என்றதைக் கண்ணிற்குரிய அடையாக் கோடலே தக்கது அண்ணலங்கண் என்று திருவருட் பெருமையை விளக்கி நின்றதால், அண்ணல் என்றது சிவபெருமானையும் கண்ணென்றது அவனது சத்தியையுங் குறித்ததாகக் கொண்டு ஆறன்றொகை எனலுமாம் புளியங்கோடு என்பது போல,

திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே என்றது தமது திரோதான சுத்திக்கு அவனே காரணனாயிருந்தமை குறித்தது.

அருணிதி தரவரும் ஆனந்தமலையே என்றது இருபொருட்டு. மகாநிதி கிடைத்தால் மலையையும் விலைக்குப் பெறலாம். ஆதலின், அருளாகிய நிதி ஆனந்த மலையைத் தரவல்லது. ஆனந்தமலை அருணிதியால் வரத்தக்கது. தருவது அருணிதி. வருவது ஆனந்தமலை. நிதிதர மலை வரும் என்று ஒரு பொருளும் கொள்ளலாம். வகரம் சிகரத்தை அருளி, யகரத்தை வாழ்விக்கும் என்னும் இவ்வுண்மையை 'வாசியருளியவை வாழ்விக்கும்' (திருவருட் பயன் அஅ) என்ற சிவாகமத்தாலறிக.

அருணிதி - வகரம் ஆநந்தமலை - சிகரம் அருணிதி தந்த ஆநந்தமலையைப் பெற்ற மாணிக்கவாசகர் யகரம். அவர் சிகரமாகி வாழ்தலே அவ்வகரத்தின் வாழ்வித்தற்றொழிற் பயன்.

மலையிலிருக்கும் மணி முதலிய நிதிகளை அம்மலை அருவியாகற்றான் தரலால், அருணிதியைத் தரவரும் ஆநந்தமலை யெனலும் ஆம். 'அருணிதி என்பது எழுவாயாக நிற்பதே சிறந்தது.

பேரா - ஓழியாப் - பிரிவில்லா - மறவா - நினையா - அளவிலா மாளா இன்பமா கடலுக்கு ஒப்புவேறின்மையின், தர முணர்ந்த பெரிதாமொன்றனை ஒப்புரைப்பாராய், 'அலை கடலே' என்றருளினார். சிவாநந்தா நுபவத்தின் தொடக்கமும் திரோதான சுத்தியின் முடிவும் உடனிகழ்ச்சியாதலின், இதனைத் திருப்பள்ளியெழுச்சியாகக் கொண்டு 'பள்ளி யெழுந்தருளாய்' என்றருளினர்.

நயனக் கடிமலர் மலர்தல் என்று, உயிர் சிவபுண்ணியத்தையும் மலபரி பாகத்தையும் சத்திநிபாதத்தையும் இருவினையொப்பையும்

மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும்படி முறையான் எய்துதலைக் குறித்தருளினார். கண்ணாம் அறுபதமுரலுதல் என்று, சிவசத்தி திரோதான சுத்திக்குரிய சிவ புண்ணியத்துடன்கூடி நின்றூட்டுதலையும், மலத்தைப் பக்குவப் படுத்துதலையும், அதன் பொருட்டு உயிரின் கண் தான் பதிதலையும் (வீழ்ச்சியையும்), இருவினையொப்பாக்குதலையும் அம்முறையானடைவதை யுணர்த்தி -யருளினார்.

ஊரும் பேரும் உருவுமில்லாதான் திருப்பெருந்துறை, சிவபெருமான், சதாசிவ வுருவம் என அம்மூன்றும் கொண்ட கருணையையும் அதனால், தமக்கு வந்த லாபத்தையும், அப்பேற்றைத் தந்த துணையையும் இதிற் கூறிய தறிக.

திருச்சிற்றம்பலம்

35. பேதம் இல்லதோர் கற்பு

இத்தொடர் திருக்கழுக் குன்றத்தில் எழுந்தருளிய மாணிக்கவாசகப் பெருமானார் திருவாய் மலர்ந்த திருப் பதிகத்தில் ஆறாவது திருவாசகத்தில் உள்ளது. அவர்க்கு முதலில் திருப்பெருந்துறையில் உபதேசித்தருளிய குருநாதரை திருவெண்காட்டிலும் இத்திருக்கழுக்குன்றத்திலும் கண்டு வழிபட்ட உண்மை திருவாசகத்திலே அறியலாகின்றது. வேறு சிவ தலங்களுள்ளும் அக்காட்சி பெற்றதுண்டு என்பர். எனினும்,

விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்

என்றது குருந்தமர நிழற் கீழ் எழுந்தருளிய உண்மையைத் தெரித்த வண்ணம் ஆண்டெல்லாம் காணப்பட்டிலது.

உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்

என்ற வித்தக வேடம் ஞானரூபம் எனப் பொருள் தரும். அதையும் கொள்ளல் பொருந்தும். பொருந்துமேனும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர்க்குக் காட்சி கொடுத்ததாற் 'காட்சி கொடுத்த நாயகன்' என்று திருப் பெயர் பெற்ற வரலாறு உண்டு. திருவுத்தர புராணம் 8 - 16

தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்

என்றதில், கோ(குரு)வார் கோலம் என்று கொள்ளலும் தகும்.

கழுமலமதனிற் காட்சி கொடுத்தும்

என்றதும்

பூவணமதனிற் பொலிந்திருந்தருளித்
தூவணமேனி காட்டிய தொன்மையும்

என்றதும் பிறவும் குருதரிசனம் எனக்கோடல் இயையுமோ? மொக்கணியிற் சொக்கதாகக் காட்டியமை வேலம் புத்தூரிற் கோலம் பொலிவும் காட்டியமை முதலியவெல்லாம் வெவ்வேறாதல் காண்க.

திருக்கழுக்குன்றத்தில் அருளிய திருப்பதிகத் தலைப்பே 'குருதரிசனம்' என்றுள்ளது. இச்சிறப்புற்ற தலம் வேறு திருவாசகத்திற் காண்டலில்லை. நம் ஆசாரியப்பிரபு இத்தலத்தில் எழுந்தருளி-னாராயினும், திருப்பதிகத் தொடக்கத்திலேயே, 'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்' என அண்மை விளி செய்து, 'உன் நாமங்கள் பேசுவார்க்கு இணக்கிலாத தோரின்பமே வரும். துன்பமே துடைத்து, உணக்கிலாததோர் வித்து, மேல் விளையாமல் என் வினையொத்த பின் வந்து கணக்கிலாத் திருக்கோலம் கழுக்குன்றிலே நீ காட்டினாய்' என்றருளினார். அடைந்தது திருக்கழுக்குன்றத்தை, நினைந்தது திருப்பெருந்துறையை அதன் காரணம் ஆங்குக் கிடைத்த குருதரிசனப்பேறு ஈங்கும் எய்திதேயாகும். ஆகவே பாடத் தொடங்கும் போழ்தே திருப்பெருந்துறைப் பெருமானைப் போற்றினார். அதனாற்றான், நம் முன்னோர் இத் திருப்பதிகத்தின் உண்மை நிலையை நன்குணர்ந்து தலைப்பில் 'குருதரிசனம்' என்றிட்டனர். இதிற் 1. பேரின்பப்பேறும் 2. பெருந்துன்பத் துடைப்பும் 3. வறுத்த விதையைப் போலக் கெட்டுப் பற்றற வொழியும் பான்மையில், இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் எய்தும்போதே குருவரவுண்டாகும் உண்மையும் குறிக்கப்பட்டன. இங்குக் கடவுள் காட்டிய திருக்கோலம் கணக்கில்லாதது காணவொன்றாதது – காண்டற்கு அரியது காட்டிய தற்கு ஏது ஆட்கொள்ளல், கலங்கிய கலக்கம் விலங்கி யொழிதல், இறைவனை ஓதல் எனக் குறிக்கப்பட்டன.

திருக்கோலம் காட்டிய காலத்திலே அடியார் பலர் இருந்தனர். அதனை 'அடியார்முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்றதால் அறிக.

'இயக்கிமார் அறுபத்து நால்வரை எண்குணம் செய்த ஈசன்' என்றதன் பொருள் விளங்கிற்றிலது என்று 1897இல் வெளிவந்த திருவாசகவுரை அறிவிக்கின்றது. அதில் கோல மேனிவராகமே' என்றதன் பொருள் 'அழகானது மேல் (நிவர்) ஓங்கிய ஆகமே, திருவுருவம் உடையவனே' என்றும் 'அழகிய திருவுருவத்தையுடைய மலையே' என்றும் உள்ளது. தாயாய்ப் பால்கொடுத்த வரலாறு திருவிளையாடற்புராணத்தில் உள்ளதால், பன்றிக் குட்டிகளுக்குக். கோலமேனிவராகமாய் வந்ததைக் கருத்துட் கொண்டுரைத்தல் தக்கது.

அதைப் போலவே இயக்கிமார் அறுபத்து நால்வரையெண்குணஞ் செய்த வரலாறு அத்தலத்திற்கே உரியதாதல் வேண்டும் என்பதில்லை. அதைத் திருவுத்தரகோசமங்கைப் புராணத்தில் உள்ளதென்று குறிக்கிறது. அடையாற்றுப் பதிப்பு (பக்கம் 819) அதில் எம்மாற் காண முடியவில்லை. அவ்வுரையிலே 'பேதமில்ல தொர் கற்பு' என்பதற்கும் பேதம் அற்றதாகிய ஒரு கல்வி', 'வேறு படுதல் இல்லாத ஒப்பற்ற கல்வி' என்று பொருள் எழுதப் பட்டது.

இத் தொடர்ப் பொருள் மிகச் சிறந்த ஒன்று. இதனை நன்கு உணர்வதும் சைவ சித்தாந்தம் அறிந்தார் கடனுள் ஒன்றாகும். நான்காவது திருப்பாடலுக்கும் உண்மைப் பொருளை உணர்தல் பயன் விளைப்பதாகும்.

'பேதம் இல்லாதவண்ணம் ரிஷிபத்திநிகளைப் பரம சிவனிடத்து வைத்த அன்பே கற்பு என்னும்படி அவர்களாற் கொண்ட புருடன் ஏவல் கற்பைப் பொய்யெனக் காட்டி ஆண்ட திருப்பெந்துறைஞானவாரியே' என்று (அடையாற்று வெளியீடு) அறிவிக்கின்றது. இதில் 'ஏவல்' என்றது குறித்துத் தெளிவுண்டாகாது. புருடனே அவள் கற்பு, அவர் கற்பு என ஏட்டில் இருந்திருக்கலாம்.

இத் திருப்பதிகத்தின் கருத்துணர்த்தும் அகவற் செய்யுட் சொற்றொடர்.

காட்சிப்பத் தாகுந் திருக்கழுக்குன்றம்
மாட்சிமை தருசற் குருதரிசனமாம்

என்பது.

அக் குருதரிசனப்பயன் பேதமில்லதொர் கற்பு அளித்தமையாகும். பெருந்துறைப் பெருவெள்ளம் முன்னரே. மாணிக்கவாசகருக்கு ஆங்கு அளித்த அப் 'பேதம் இல்லதொர் கற்பு' ஈங்கு நினைக்கவும் போற்றவும் பெற்றது. திருவாசகத்திலே இவ்வுண்மை வேறு சிற்சில இடத்தில் உணர்த்தப்பட்டுள்ளது.

மாறிலாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர் கொள்தாளிணை
வேறிலாப் பதப் பரிசு பெற்றநின்
மெய்மையன்பர் உன் மெய்மை மேவினார்

என்னுந் திருவாசகத்தில், தாளிணை வேறு இல்லாப் பரிசு பெற்ற அன்பர் நின் மெய்மை மேவினார் என்றதறிக.

'பேதமிலாப் பெருமையன்' (484) 'பேசினேன் ஓர் பேதம் இன்மை' (82) என்னும் இடங்களிலும் இது குறிக்கப்பட்டது. படினும், அவை-யெல்லாம் அத்துவிதக் கலப்பையுணர்த்து வனவே. அவையெல்லாம்,

தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆநந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால் 397

என்பது போலப் 'பேதமில்லதொர் கற்பு' நிலையை விளக்க மாட்டா. சிவாநுபவம் உடையார்க்கே அவற்றால் எளிதின் விளக்கம் உண்டாகும். இதனை இங்கு விளக்கப்பெறுதல் போல 'மலையே உன்னைத் தந்தனை' (30) என்னும் இடத்தில் பெறலாமோ?

சிவமும் உயிரும் அத்துவிதக்கலப்பால், உயிரெனத்தனியாய், நில்லாது, சிவமாகியிருப்பதே வேறிலாதது. 'வேறின்மை' என்னும் அருணூல்கள். சிலர் 'வேறன்மை', என்றும் குறிப்பர்.

'ஆன்மசொரூபம் மறைந்து சிவசொரூபமாய்ச் சிவனென நிற்பர்' என்றும் முன்னோர் மொழியையும், 'வான் பொருளாகி எங்கும் நீ இருப்ப வந்து என்னைக்கொடுத்து நீயா காதேன்' என்ற தாயுமானவர் அருளுரையயும் ஈண்டுக் கருதி, இத்திருவாசகப் பொருளை இனிது உரைக்க.

திருச்சிற்றம்பலம்

36. இதய பாசுரம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன் றில்லை
யார்உன்னை அறியகிற் பாரே.

இத்திருவாசகத்தை அறியாதார் சைவருள் ஒருவரும் இரார். இதன் பொருளறிவார் சிலரே. இக்கட்டுரையுட் புலப்படுத்தும் பொருள் நம் சைவ சந்தானாசாரியர் பரம் பரையில் வழங்கிவரும் உண்மைப் பொருள். இதனை மறுப்போர் அவ்வாசிரியர் வழிவரும் நெறியை மறுத்த பெரும் பாவப்படுகுழியில் விழுந்தெழாது வருந்துவோரேயாவர். பலர் பலவாறு பொருளளெழுதித் தாமும் அறியாது பிறரையும் அறியாமைக் கடலுள் அழுத்தினர்.

இதனைத் திருவாசகத்தின் 'இதய பாசுரம்' என்று கூறிப் பலபடப் பொருளுரைத்தமை பழைய 'சித்தாந்தம்' இதழ்களை நோக்குவார் அறிதல் கூடும்.

இதற்குத் தாண்டவராய சுவாமிகள் எழுதி அருளிய உரையே ஏனைய உரைகளினும் மேலானது. அதன் பெருமையை இதில் விரித்தெழுதல் இயலாது. அவ்வுரையிலே சிவஞான சித்தியார் கருத்தைப் பொருத்திக் காட்டியது மிக்க பொருத்த முடையது. அவர் உரையை மேற்போக்கில் அறிவோர் சிறிதும் நலம் உறார். இத்திருப்பதிகத்திற்கு அகத்தியர் சூத்திரம் ஆசறுக்கும் அநுபோக லக்ஷணம் என்றது. அஃது இப்பதிகம் முழுவதும் உள்ளுறையாயமைந்திருக்கும் உண்மையை உணர்தல் வேண்டும்.

முதற் திருவாசகத்திலே, 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே' என்றுள்ள அநுபவம் முடிந்த முடிபாயது. சேக்கிழார் நாயனார், கண்ணப்ப நாயனார் புராணத்திலே (102)

முன்பு செய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பம் ஆன
அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத் தெழுபெரு வேட்கையோடும்

பெ.பு.751

'ஐயர் நீள்நிலைமலையை யேறிநேர்படச் செல்லும் போதில் எம்மனோர் பொருட்டாக அருளிய (பெரிய புராணச்) செய்யுளிலும் காரைக்காலம்மையார் புராணத்திலே, 'இறவாத இன்ப அன்பு வேண்டிப் -பின் வேண்டுகின்றார்' என முதலுஞ் செய்யுளிலும் இவ்வநுபவமே குறிக்கப் பெற்றமை காண்க. மாணிக்கவாசகர் 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே அன்பு' என்றார். சேக்கிழார் நாயனார், அவ்வீரிடத்தும் 'முடிவிலா இன்பம் ஆன அன்பு' 'இறவாத இன்ப அன்பு' என்றார். இம்மூன்றும் இடத்தால் வேறுபடும். அநுபவத்தால் ஒன்றே. அவ்வின்பவன்பு ஈறிலாதது, முடிவிலாதது, இறவாதது எனச் சொல்லால் வேறுபட்டுப் பொருளால் ஒன்றுபட்டிருத்தல் எளிதில் உணரலாவதே. இதனைத் திருவருட்பயன், (80)

இன்பில் இனிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்
அன்பின் நிலையே அது.

என்று உறுதியாக்கி யுணர்த்திற்று. 'அன்பே சிவம்' என்னும் திருமந்திரப் பொருளை இங்கு இவ்வண்ணம் உணர்தலே உண்மை யுணர்வாகும்.

உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை
உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போற் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தின் ஞானவா ரமுதம் உண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்

2926

என்னும் பெரியபுராணப் பாடலில் முதலடி அன்பையும் இரண்டாவதடி இன்பையும் உணர்த்துவது அறிக. இதில் 'விருப்பம்' என்பது 'விருப்பும்' என்றும் 'அமுதம்' என்பது 'அமுதும்' என்றும் சில பதிப்பில் இருப்பது பிழையாகும். அவற்றைத் திருத்திக் கொள்வது தக்கது.

சிவஞான சித்தியாரில், 'பொறுப்பரிய பேரன்பு' என்று அன்பையும் 'எங்குமிலாப் போகம்' என்று இன்பையும் சுட்டிப், 'பொறுப்பரிய பேரன்பையருளி அதன் வழியே புகுந்திடுவன் எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே' என இன்ப அன்பு எய்தும் நெறியை உணர்த்தி, அது பெற நாமிருத்தற்குரிய நிலையையும் ' குறித்தடியில் நின்று என்றது முதலாக 'நினைந்திருக்க' என்பது முடிவாக உள்ள பகுதியில் உபதேசித் தருளினார் ஆசிரியர் அருணந்திதேவ நாயனார். இத்திரு இன்பு, சிவம் என்னும் மூன்றும் ஒன்றே அன்றி வேறல்ல. பிறவிப் பெரும்பிணியை அவிழ்த்தறுத்தொழிக்கும் மருந்தாகிய சிவம் பெத்தத்திலும் முத்தியிலும் உயிர்க்குயிராய் உணர்வுக்கு உணர்வாய் உடன் நின்று உணர்த்தியும் உணர்ந்தும் வரும் மஹோபகாரத்தை மறவாமல் இடையறவின்றி நினைக்குங்கால் அன்பின் நிலையே அதுவாய்ப் பேரின்பப் பெருஞ்செல்வமே தன்றிரு மேனியும் தானுமாய்விளங்கும் அம்மெய்ப் பெரும்பொருள்' ஓயாதேயுள்குவார் உள்ளிருக்கும் உள்ளது.' அதுதான், 'உன்னும் உளது ஐயம் இலது உணர்வாய் ஓவாது மன்னுபவந்தீர்க்கும் பதிமுது நிலை', அது நம்முள்ளே உயிர்ப்பாய்ப் புறத்தே போந்து மீண்டும் நம் முள்ளே புகுந்து நிற்கும் இயல்பினது. அவ்வாறு நம் உள்ளத்தே நின்றதெனினும், நம் உயிர்ப்புள்ளே வருவதெனினும், நம்மை விட்டு ஓரடியும் அப்பால் அகன்று சென்று நீங்காத தெனினும் நாம் காணத் தன்னைக் காட்டி நின்றிலது. அதனால் அப்பர் சுவாமிகள்,

> **என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்கு**
> **என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே**

என்றும்

> **உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்**
> **கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனம் காணுமாறே**

என்றும் அருளினார். இவற்றை உள்ளத்திற் கொண்டு தான் 'யார்

உன்னை அறிய கிற்பாரே' என்னுந் திருவாசகத்தை ஒருவாறுணர்தல் வேண்டும். இதுவரையில், இத்திருவாசகத்தின் முடிவிலுள்ள தொடர்க்கே விளக்கம் சிறிது எழுதலாயிற்று. இனி, மூன்றாவதடிக்கு மட்டும் முற்குறித்த குருபரம்பரைப் பொருள் கூறி முடிக்கின்றாம். முன்னீரடிக்கும் நாலாவதடியின் முற்பகுதிக்கும் பொருள் விளக்கம் ஈண்டு வேண்டா. அப்பொருளில் எல்லாரும் வேறுபடாமல் ஒன்றே உரைப்பர்.

1. பதி, 2. பசு, 3. பாசம், 4. பதி ஞானம், 5. பசு ஞானம், 6.பாச ஞானம் எனப்படும். ஆறும் முன்னர்க் கொள்ளப்படும், அவ்வாறனுள் முப்பொருளும் அதனதன் ஞானமும் ஆதல் காண்க. அவற்றுள், பசுஞானத்தையும் பாசஞானத்தையும் விட்டு நாலாக் கொள்க. பின்னர்ப் பாசத்தையும் நீக்குக. பசுஞானம், பாசம், பாசஞானம் மூன்றும் போக இருப்பன பதி, பதிஞானம், பசு என்னும் மூன்றே. அம்மூன்றனுள், 1.ஞாதுரு (அறிவான்) பசு. 2. ஞானம் (அறிவு) பதிஞானம் 3. ஞேயம் (அறியப் படும் பொருள்) பதி ஆகும். அவற்றுள்ளும் பதிஞானத்தை நீக்கிப் 'பசுபதி' என்று இரண்டாக்கி, அவ்விரண்டனுள்ளும் பசு (தாள்) பதி (தலை)யுள் அடங்கி நின்று ஒன்றாயிற்று. அகவே ஆன்மா மும்மலமும் வாசனையோடு நீங்கிச் செம்மலர் நோன்றாளின் நிழலிடங்கித் தாடலைபோல் அத்துவிதக் கலப்பற்ற சுத்தாத்துவித சைவ சித்தாந்த முத்தி முடிவை இத்திருவாசகத்திலே, 'சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்' என்று உணர்த்தி யருளினார் மாணிக்கவாசகப் பெருமகனார். இதுவே இதன் உண்மைப் பொருளாதலை, நம் ஆசாரியர்களுள் ஒருவர் ஆகிய உமாபதிதேவ நாயனார் தாம் அருளிய நூல்களுள் ஒன்றாய சங்கற்ப நிராகரணத்தின் முடிவிலே,

பதிபசு பாசம் முதிர் அறி வுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாப் பின்னர்
இருபொருள் நீத்துமற் றொருநால் வகையையும்
ஈனம்இல் ஞாதுரு ஞானம் ஞேயம்என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி என்று அவற்று
இரண்டாய் இரண்டும் ஒன்றின் ஒன்றாகத்
திரண்டு ஆம் பயன்எனும் திருவருள் தெளியின்,

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
என்று இறையியற்கை இயம்புதல் தகுமே
ஒன்றாம் என்றால் அன்றியும் உவப்பும்
இன்றாம் என்றால் என்பயன் இயம்புக
என்ற எனை வினவும் யாவும் விளங்க
வென்றிகொள் கருத்தில் வேண்டினை ஆயின்
நதிக்கரை ஆன்எனக் கொதித்து அலமந்து
வெண்ணெயம் பதிதிகழ் மெய்கண் டவன்அருள்
உண்ணிலை யுடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசத் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடும் அன்றே

திருச்சிற்றம்பலம்

37. வேண்டாமையாய விழுச்செல்வம்

மாணிக்கவாசகர் அழியாத வீட்டின்பத்தை அவர் அடைந்தவாறே நாமும் அடைய வேண்டும் திருவுள்ளத்தினார் ஆதலின் நமக்கு அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் அனைத்தும் அருளுபதேசங்களே ஆகும். ஆதலால், அவற்றை ஓதியுணரும் போதெல்லாம் நமக்கு அப்பெருமானார் உபதேசித்தருள்வதாகவே அகத்தில் உறுதியாகக் கொண்டு, அவற்றின் பொருளையே ஆழ்ந்துணர்தல் வேண்டும். திருமுறைகளை ஓதும் போதெல்லாம் இவ்வண்ணம் இருந்து ஓதியுணர்தல் வேண்டும். இது பொது. திருவாசகத்தைச் சிறப்பாக ஓதியுணர்வோர் பலர் உளர். அவர்க்கும் மேற்குறித்த வண்ணம் ஓதுங்கடப்பாடு உண்டு.

ஒருநாள் நாம் அறிந்த அளவு இசையுடன் சில திருவாசகத்தைப் பிறருங் கேட்குமாறு சிறிது ஓசைமிகப் பாடிக் கொண்டிருந்தோம். அவற்றுள் ஒன்று,

வேண்டும் நின்கழற்கண் அன்பு
பொய்மைதீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயினேனை
ஆவ என்றருளு நீ
பூண்டு கொண்டடியனேனும்
போற்றி போற்றி என்றும் என்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின் வணங்கவே

என்பது எம்மையுருக்கிற்று. சிறிதுநேரம் கழிந்தபின், இதன் பொருளில் அறிவு ஆழ்ந்தது. ஆழவே நினைப்பில் இருந்த வேறு திருவாசகம் பல தொடர்ந்து தோன்றிப் பாடநின்றன.

பாடவேண்டும்நான் போற்றி, நின்னையே
பாடிநைந்து நைந்து உருகி நெக்குநெக்கு
ஆடவேண்டும்நான் போற்றி, அம்பலத்து
ஆடும்நின்கழற் போது நாயினேன்

கூடவேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கு எனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான் போற்றி, வீடுதந்
தருளுபோற்றி நின்மெய்யர் மெய்யனே.

இதிலும் மேலைத் திருவாசகத்திலும் 'அருளு' முன்னிலை வேண்டற் பொருளில் வந்தவினை. இந்தவினை நொந்தவர் வினை வெந்தழியச் செய்யும் அருள்வினை. இதிலுள்ள 'நான்' எல்லாம் அகந்தையைக் கடந்தனவாய் அடிமையைக் கடவாத சிறப்பின. 'நானும் கிடந்தலந் தெய்த் தோழிந்தேன்' என்பது காண்க

வேண்டும் வேண்டும் மெய்யடியார்
உள்ளே விரும்பிஎனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
தொண்டனேற்கும் உண்டாங்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே.

இதிலே 'மிக்க' அன்பே மேவுதல் தொண்டனேற்கும் உண்டாங் கொல்?' என்ற வினாவில் பெருமையை நோக்குதல் நன்று. அத்தகைய அன்பே அன்றி வேறு ஒன்றும் வேண்டாத நியைில்தான் எழும் சிவன்பால் வேண்டும் பக்குவம் உறல் வேண்டும்.

பாருருவாய பிறப்பற வேண்டும்,
பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே
செங்கமல மலர்போலும்
ஆருருவாய என் ஆரமுதேயுன்
அடியவர்தொகை நடுவே
ஓருருவாயநின் திருவருள்காட்டி
என்னையும் உய்யக்கொண்டருளே,

இதிற்செய்யுளியல் ஆராய்தல் வேண்டா, செய்பொருளே குறிக்கொளற்பாலது.

அறவே பெற்றார் நின்அன்பர்
அந்தம்இன்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேராஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவில்லா
மாளா இன்ப மாகடலே,

இதிலே, இன்பமாக்கடல் பெறவே மெய்யன்பு வேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும். அவ்வின்பம் பெயராதது, ஒழியாதது, பிரிவில்லாதது, மறக்கப்படாதது, நினைக்கப்படாதது, நம்மை மறவாததும் நினையாததுமாகும். அதுவே நம்மைப்பிரியாத மெய்ப்பொருள். அதனாற்றான் (பிரியான்) பிரான் என்கின்றோம். இடைவிடாதுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே, யான் உனைத் -தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே, என்றவற்றில் 'இடைவிடாது தொடர்ந்து' சிவமும் உயிரும் பிரியாதிருப்பது விளங்கும்.

இனி எதிர்மறையினும் மணிவாசக சிவம் அருளியவாறு காணலாம்

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப்பு சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே.

என்றதிலே 'புறம்போகேன்' எனத் தம்மையும் 'புறம்போகல் ஒட்டேன்'

எனச் சிவனையும் குறித்துக் கூறியருளிய உண்மையால், இடைவிடாது தொடர்ந்து மறவாநினையா மாட்சியை நன்கு தெளியலாம்.

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும்
கூத்தா உன்குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

(கன்று + ஆ = கற்றா) இதில் வேண்டத்தகாதனவும் வேண்டத்தக்கதும் உணர்த்திய தறிக. உற்றாரையும் கற்றாரையும் ஊரையும் பேரையும் வேண்டுதல் அப்பொருளை வேண்டிய குற்றமாம். உருக வேண்டுதலே அழியாப் பொருளாகிய பேரின்பத்தை வேண்டிய குணமாகும்.

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாதுஅருள்செய்தாய்
யானும் அதுவேவேண்டின் அல்லால்
வேண்டும்பரிசு ஒன்றுஉண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பு அன்றே.

வேண்டுவது ஒன்றும் எனக்கு இல்லை. உண்மையில் யான் வேண்டுவதே இதில் இல்லை. நீயே என்னுள் இருந்து வேண்டு-கின்றாய். வேண்டுவ - விரும்புவன, எல்லாம் உன் விருப்பமே அல்லாது எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. எனக்கு, ஒன்றும் வேண்டாது மிக்கஅன்பே மேவுதல் வேண்டும் என்று முன்வேண்டினேன். இப்போது அதுவும் உன் விருப்பே யாகும். என்விருப்பம் அன்று என்று தெரிவித்தருளினார் மணிவாசகர்.

மருளன்மனத்தோர் உன் மத்தன்வருமால் என்று
இங்கு எனைக்கண்டார்
வெருளாவண்ணம் மெய்யன்பை உடையாய்
பெறநாள் வேண்டுமே

என்றது முன்னிருந்த நிலை. இப்போது அன்பும் வேண்டேன். வேண்டினால் என் செயல் ஆகின்றது. என் செய லாவது யாது (ஒன்றும்) இல்லை. எல்லாம் நின் செயலே, அதுவும் உன்றன் விருப்பு.

... ... உன்றன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ பரமாநந்தப் பழங்கடல்
சேர்ந்து
ஆவியாக்கை யான்எனதுஎன்று யாதும் இன்றி அறுதலே

என்று வேண்டுவதும் எனதன்று.

நஞ்செயலற்று இந்த நாம் அற்றபின் நாதன்
தன்செயல் தானே என்றுந்தீபற
தன்னையே தந்தான் என்றுந்தீபற.

நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே
என்னதோஇங்கு அதிகாரம்

காயத்திடுவாய் நின்னுடைய
கழற்கீழ்வைப்பாய் கண்ணுதலே

நான் ஏதும் அறியாதே என்னுள்வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நிற்கும் நின்னினும் அந்நியமாக நான் நில்லேன். அநந்நியமாக இருக்கும் காரணத்தால் உள்ளுந் தொழிலே எனக்கு இல்லை. உன்னையே அநந்நியமாகப் பொருந்தியிருந்தலால், உள்ளேன் பிற தெய்வம். அங்ஙனம் உள்ளாமைக்குத் தக்கபடி என்னை வாழ்வித்-தருளினாய். எப்படி என்றால், பிறதெய்வத்தை உள்ளாமை நிலைபெறத் தக்க சாதனம் ஆக குடிகெட்டாலும் இந்திரபோகம், பிரமன் வாழ்க்கை, விட்டுனு வைபவம் ஒன்றும் கொள்ளாக் குணமே உடையேன். கெட்டகுடியை வாழ்வித்துக் கொள்ள வேண்டிக் கூடாரைக்கூடி

மானங்கெட்ட ஜீவநம் செய்யலாகாது. உன் அடியாரோடு கூடுதலும் இருக்கலாயிற்று என்று திடமாகத் தெரிந்தால், அந்நரகத்துறைவை இகழேன். அதுவும் ஒரு சாதனம். இகழாமை மூன்றாவது சாதனம். அம் மூன்று சாதனம் சிவமேயாயிருக்கும் சுத்தாத்வைத சித்தாந்த முத்திக்குச் சிறந்தன ஆகும்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொடல்லால் நரகம்புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாதெங்கள்
உத்தமனே.

இதில், கெட்ட குடியைத் திருத்த நல்ல வாழ்வைக் கொள்ள வேண்டிச் சிவனடி மறவா வாழ்வை விட்டுப் புரந்தரன் வாழ்வும் நான்முகன் வாழ்வும் மாயோன் வாழ்வும் கொள்வேனல்லேன். நரகத்தில் வீழ்த்தினாலும் திருவருட் செயலாயின், அங்கும் எள்ளாமல் நின்னடியாரிணக்கமேயன்றிப் பிறரோடும் இணங்கேன், என்றும் பிறதெய்வம் உள்ளேன். உன்னையே அநந்நியமாகக் கூடியிருப்பேன்.

திருச்சிற்றம்பலம்

38. தொன்னெறி

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறி செய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ

எல்லாவுயிர்களும் இன்பத்தை விரும்புகின்றன. துன்பத்தை விரும்பும் உயிர் ஒன்றேனும் இல்லையோ என்பார் உளரேல், அவரை நோக்கி, நீர் துன்பத்தை விரும்புதல் உண்டோ என்று வினாவுதல் வேண்டும். சாதலை வேண்டுவாரிலர், அறியாமையை விழைவாரிலர் என்பன முதலாகப் பல கூறலாம். இன்பத்தை வேண்டுவோர் இலர் என யாவரும் கூறலொன்றாது. ஏன்? ஒருவன், வள்ளலிடம் போய் இரக்கும் பொருளைக் கொடுக்க முடியாதபொழுது, வள்ளற்குச் சாதலே இன்பமாகத் தோன்றுவதால், அவ்வின்பம் பெறவே அவனும் விரும்புகின்றான. இவ்வுண்மை,

சாதலின் இன்னாத தில்லை, இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை

என்னும் திருக்குறளால் தோன்றும். அதுவும் இனிது என்றமையால், இன்பத்தையே விரும்பியதாதல் பொய்க்காது.

அறியாமையைப் பல பொருள்களில் வேண்டிப் பெற்றனர் பெரியோர். கொடுக்கமுடியாத பொழுது சாதலை வேண்டியின்புற்ற சிறப்பும் கொடுக்க வல்லராய பொழுது இன்னார்க்கு, இன்னது, இவ்வளவு, இப்பொழுது என்னும் எவ்வரையறையுமில்லாது கொடுக்கும் அறியாமையை வேண்டியபுகழும் பாக்களிலிடம் பெற்றுள்ளன. அதைக் 'கொடைமடம்' என்றனர். கொடைமடம் இன்பந்தாராது துன்பந் தருமாயின் அதை விரும்புவார் எவர்? ஒருவரும் இரார்.

இறைவன் நஞ்சுண்டதும் உயிர்களை வாழ்வித்தருளும் இன்பத்தின் பொருட்டே என்பது, 'மஞ்சைப் போழ்ந்த மதியஞ் சூடும் வானோர் பெருமானார் நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப் பொருள் போலும்' என்று அருளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருவடிகளை வணங்குவோர்தாம் அறிவர். அவர் குறித்த நன்மை ஆண்டவனுக்கோ? அடியார்க்கோ? அடியார்க்கே. நன்மை (சிவம்) நன்மை அடைதல் இல்லை.

இவ்வுண்மைகளை நோக்கின், உயிர்களெல்லாம் துன்பத்தை நாடாமல் இன்பத்தையே நாடுதலும் துன்பத்தை நாடும்போதும் இன்பமே குறிக்கோளாதலும் எளிதின் பெறப்படும். படவே இன்பமே நாடும் உயிர்க்கு இன்பம் எது? அஃது எத்தகையது? எவ்வளவினது? எங்கு உள்ளது? எதனால் வந்தெய்துவது? எவ்வாறு நேர்வது? எள இன்னோரன்ன பல வினாக்கள் எழுதல் வேண்டும்.

உலக இன்பம் பின்னர்த் துன்பத்திற் கேதுவானது. உலகின் நீங்கி உயிர் தனியாய் நின்றால் 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்' என்றவுண்மைப்படி, உலகின் நீங்கித் தனியே நின்ற உயிர்க்கு இன்பம் உண்டாவ தென்றே வைத்துக் கொளினும், அது சிறந்தது ஆகாது. அது துகளறு போதத்திற் கூறியவாறு, சகல தரிசனத்திற்கும் ஞான தரிசனத்திற்கும் இடை நின்ற ஐவகை நிலையாமேயன்றிச் சிறந்த இன்பநிலை யன்று. உயிர் உலகின் நீங்கி இறைவன் அருளைப் பெற்றுத் துய்க்கும் இன்பமே அழியாப் பேரின்பம். உயிர்கள் ஒரு தன்மையனவாயில்லாமையால் அவை விரும்பும் இன்பமும் அழியாப் பேரின்பமாக இராமல், குறைவும் கூட்டமும் ஆகிய இன்பமாயிருக்கின்றது. இருப்பினும், உயிர்தான் ஆண்டவனடிமைத் திறத்தை நன்கு கடைப்பிடித்ததாகும். ஆகவே எல்லாவுயிர்க்கும் இன்பத்தில் விருப்பாயினும், பேரின்ப விருப்பங் கொண்டவுயிரே நல்லுயிர் எனப் போற்றப்பெறும்.

நாத்திகரும் இன்பத்தை விரும்புமாற்றால், அறியாமலே கடவுளை விரும்புகின்றனர். தமது விருப்பத்தையே இல்லை யென்னும் பேதைமை நாத்திகர்க்கே உரியது.

எல்லாச் சமயத்திலும் அவரவர் தெய்வத்தை 'இன்பம்' என்னாதார் அரியர். நம் சைவ சமயத்தில், ஆசாரியர்களும் மற்றைய அடியவர்களும் தம் வழிபாட்டினும் வாழ்த்தினும் போற்றிலும் இறைவனை இன்பம் என்று குறித்து வணங்கினர். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே' என்ற தறிக. அவ்வணக்கமே, உடம்பைப் பெற்றுவாழும் உயிர்க்குப் பயன். ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொள நினையும்

நாம் நம் உடலில் வைக்கப்பட்டுள்ள தலையைச் சிவன் கழலே வணங்கவும், வாயை அவன் புகழே வாழ்த்தவும். உள்ளத்தை அவனடியவர் இனத்தையே இணங்கவும், அடியா ரல்லாதாரொடும் இணங்காது பிறவற்றைப் பேசாது வணாங்காது பாதுகாக்கவும் வேண்டும். இவ்வாறு காத்தால், 'எங்கும் இல்லாததோர் இன்பம் நம் பாலதாகும்.'

ஆயினும், அப்பேரின்பத்தை எவ்யுகத்திலும் எந்நாட்டிலும் அடைந்த நுபவித்தார் பலரோ சிலரோ எனலாம். அவ்வையந்தீர 'பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந் துறந்தோர் துறப்போர் தொகை' என்னுந் திருவருட் பயனைப் போற்றுக.

வடநாட்டில், தென்னாட்டுச் சைவநெறிமுறையை அறிந்து வீடுபெற்றார் உளரோ? இலரோ? எனலாம். வடநாட்டுச் சைவமுறையை அறிந்து அவ்வாறு வீடுபெறத் தென்னாட்டவர்க்கு வேண்டா என்பர் இந்நாட்டுப் பற்றுடையோர் சிலர். 'அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்னும் நம்பியாரூரர் திருவடிச் சான்று கொண்டு அதை நிறுவுதல் நன்று.

இத்தென்னாட்டுச் சான்றோர்க்கெல்லாம் தனித்தலை வராய் விளங்கும் நால்வரும் மற்றைப் பெரியோரும் வடநாட்டுச் சைவமுறையை போற்றலும் தூற்றலும் செய்தா ரல்லர். நம் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற தோடமையாது, 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றதால், நாமும் அபேதமே கொள்ளற்குரியோம். திருவாசகத்தால், சிவன் தென்னாடுடையவன் என்பதும், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதும் தெளிவாதலொடு உடையதாந் தொழிற்குத் தென்னாடும் இறைமைக்கு எந்நாடும் உரிய நிலையையும் நன்கு தெளிதல் வேண்டும். இறைமை எந்நாட்டிற்கும் பொது, உடைமை தென்னாட்டிற்கே சிறப்பு. இச்சிறப்பிற்குரிய தென்னாடு, சிலயாண்டுகளாகத் திருமுறைத் திரு-விழாக்களைச் செய்து வரினும், இன்னும் பல்வேறுவகையில், தன்னையுடைய சிவனைத் தொன்னெறி பிறழாதவாறு வழிபட்டுய்யும் அரும்பெரும்பேறு எய்துதல் வேண்டும்.

தொன்னெறி பிறழ்ந்த குற்றமே இப்பொழுது சிவனை வழிபட்டுய்யும் அளவிலாப் பெரும்பேற்றைத் தென்னாடு இழந்து நிற்றற்குக் காரணம். சிவன் கோயில்களையும் சைவ

மடாலயங்களையும், சிவாச்சாரியர்களையும், மடாதி பதிகளையும் அந்நெறி வழாதவண்ணம் போற்றிவந்தனர், பழைய தென்னாட்டுச் சைவ நன்மக்கள். இற்றைய மக்கள் அந்நெறியின் உயர்வு உண்மையும் உரிமையும் அதனைக் காக்கும் கடமையும் அறியாமையேயன்றி, அறிந்தே தீங்கு செய்கின்றனர். இந்நாடு என்றும் இன்பம் பெற்று நன்கு விளங்கவேண்டின், சிவாலயங்களையும் மடாலயங்களையும் உயரிய நிலையில் வைத்துப் போற்றுதல் வேண்டும். மழை பெய்யாது கெடுக்கத் தொடங்கிய நாளையும், அந்நாளில் நடந்த சிவத்துரோக கிருத்தியத்தையும், அதைச் செய்வித்த வேற்றுச் சமயத்தாரையும் சிறிது நினைந்துபார்த்தல் வேண்டும். சிவனை வழிபட்டுச் சிவமாகிய பெரியோர் பலரும், தொன்னெறி வழாதிருக்க வேண்டி அரும்பெரும் பாடுபட்டனர். அந்நெறியை அவ்வாறே வழுவாமற் காத்துவந்தனர். அது நன்கு கைவந்தும், நெறிகுறைந்ததென்றோ தெரிந்தில தென்றோ வருந்தி வேண்டினர். மாணிக்கவாசகரும், 'உனை வந்திப்பதோர் நெறியறியேன், நின்னையே அறியேன்' 'நின்னையே அறியும் அறிவறியேன்' என்று கவன்றது அறிக அதன் காரணம் யாது?

'குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப் பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியன்...... தில்லையாண்டான்' என்ற ஒன்றேயன்றி வேறில்லை. நெறியிலாரினத்தைப் பிறிவிலார்க்குத் திருவருளில்லை என்பது, அவர்க்கு அச்சுறுத்தி வந்தது. நமக்கோ நெறியின்மையும் வருத்தந்தந்திலது. குறியும் நெறியும் குணமும் உடையாரினத்தைப் பிறியா மனத்தாரைப் பிறியாப் பெற்றியன் சிவன் என்பதில் நம்பிக்கை உண்மையாக வாய்க்கப்பெற்ற சைவன் எவனும் தொன்னெறியை அறிய - அடைய - புகழ முயலாமலிரான். முயலாது போனாலும் இகழான். நெறியறிந்தால் இந்நாளிற் கோயில்களையும் மடாலயங்களையும் பொருள்நிலையொன்றே நோக்கி ஆட்சி வயப்படுத்தும் தீங்கு நேராது. கோயில்கட்கும் மடங்கட்கும் அன்பர்கள் உதவிய பொருள்களிற் கொண்ட பகுதிகளைப் போர்க்குப் பயன்படுத்திய தீங்கே இக்கொடிய பஞ்சத்திற்கு முதற் காரணமாகும். ஏனைய துணைநிமித்த காரணங்கள் அறிஞர்க்கு விளங்காமலிரா.

மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையிற் கண்டது அரிய நரகில் வீழ்வோரைச் சிந்தை தெளிவித்துச் சிவமாக்கி ஆண்ட அந்தமிலா ஆனந்தத்தை. இந்நாளில் அங்குச் சென்று தரிசிப்பார்க்கு அந்நெறி-

யில்லாமையால், அவ்வாநந்தம் ஒருதுளியும் புலனாகவில்லை. அவருக்கு நடராஜப்பெருமான் தித்திக்குஞ் சிவபதமாயிருந்தார். இவர்கட்குப் பஞ்சாமிர்தந்தான் தித்திக்கும். யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்று, அவ் யான் எனது என்(னும்) உரை(யை) மாய்த்துச் கோதில் அமுதானானைப் பத்திமையும் பரிசுமிலாப் பசுக்கள் பாசமறப் பணிந்து பரமுத்தி எய்தாமல், அதிகாரஞ் செலுத்தி அரு நரகுக்காளாகின்றன. இப்பாவிகளுக்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி யாக்கை இரண்டையும் முறையே 'யான்' என்றும் 'எனது' என்றும் செறுக்குறுதல் யாதும் இன்றி அறுதல்? மாணிக்கவாசகரைத் திருநாவுக்கரசர் 'குடமுழநந்தீசனை வாசகனாகக் கொண்டார்' என்றருளினார். அது வாய்மையாதலை 'நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து' தொன்னெறி வழுவியவர்க்கு அந்நன்னெறி திறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்ற பொல்லாமையைப் 'மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமே' செய்யும் திருவருள் நெறியைப் போற்றும் சிவாலயங்களையும் மடாலயங்களையும், பண்டையமுறையில் பாதுகாத்துப் பயன்பெற நன்முயற்சியடைவர் மக்கள்.

மக்கள் விரும்புவது இன்பத்தை. வெறுப்பது அவ்வின் பந்தரும் நெறியை. இம்முரண்பட்ட செயல் விலங்கிற்கு மில்லையே! மக்கட்கு உண்டாகலாமோ?

மாணிக்கவாசகர்க்குச் சிவபெருமான் 'மழக்கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்' என்னும்படி, 'கண்ணுறக் கண்டு கொண்டுகளித்த'ற்கு நேர்பட்டு நின்றனன். அதுவே இருள்கடிந்து வெளியே எழுகின்ற ஞாயிறே போன்று, உள்ளத்து எழுகின்ற ஞாயிறுபோன்று நின்றநிலை. இந்நிலை அருள்நிலை. இது மருள் நிலையுடைய மாக்களுக்கு விளங்காது. உரையும் உணர்வும் இறந்து நின்று உணர்ந்தால்தான் விளங்கும். அவ்வாறு விளக்கம்பெற, திருவருள் நெறிக்கு ஒத்து நில்லாது மாறி நின்று மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழியை அடைத்து விடவேண்டும். அவ்வழியை அடைக்க மறைவழி யொழுக வேண்டும். மறைவழி என்பது வேதமார்க்கம். ஆகமமார்க்கமும் இதிலடங்கும். திருவருள்நிலை உயிர்க்கு வேதாகமப்பொருள் வடிவாகத்தான் எய்துகின்றது. ஆலயங்கள் அப்பொருளைப் படமா நின்று காட்டுகின்றன. மடங்கள் அவற்றைக்

கற்பித்தொழுகித் தெளிவிக்கின்றன. அப்பன் கழல்களேத்திச் சிறந்தினிதிருக்கும் அறிவினரே இதனை இசைவர். பூசித்துக்காட்டுமிடம் கோயில். பூசிக்கக் காட்டு வது மடம். பாச வேரறுக்கும் பழம் பொருட்குப் பூசனை போல் உகப்பது வேறில்லை. மொட்டறா மலர்பறித்து இறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார்க்குப் பரகதி கொடுத்து அருள்செய்யும் உண்மையைக் கோயிலும் மடமும் அன்றி வேறெதுவும் காட்டாது. அவ் வுண்மைக்கென்றே தோன்றியதால்தான், கோயில்களிற் சிறப்பொடு பூசனையும் மடங்களிற் குருபூசையும் தொன்னெறியை விளக்கி வருகின்றன. அருள் நிலையை அறிந்து, அருளைப்பெற்றுப் பேரின்ப வாழ்வு நிகழ்த்தவேண்டின் - இம்மையில் சிறு துன்பமும் நேராது, முழுநலத்தோடும் வாழவிரும்பின், சிவாலயங்களும் மடங்களுமாகிய அருள் நிலைகளை மக்கள் யாவரும் காக்க முற்பட்டு வருக. வாராவிடின், காப்பவரை ஊக்குக கெடுப்பவரைத் தடுக்க. ஒன்றுஞ் செய்யாதோர்க்கு இன்பம் எய்த வழியில்லை. ஏன்? அது நெறியன்று ; நெறியல்லா நெறியே; அந்நெறிசென்றார் முத்தி நெறியறியாத மூர்க்கரேயாவர்.

சிறு நெறிகளைத் தவிர்ந்து, திருவருளே சேரும் வண்ணம் பத்திநெறி நின்று, பழவினைகளைப் பாற்றி, சித்த மலம் அற்று, சிவமாகி, அழியா இன்பம் எய்துவதற்குத் திருவெண்ணீறணியுஞ் சைவத் தூய்நெறியே உய்யுநெறி.

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆநந்தக் கூத்தன் அருள்பெறில்தாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம்

திருச்சிற்றம்பலம்

39. என்னதோ இங்கு அதிகாரம்?

திருப்பெருந்துறையில் சில நாள் தங்கி வழிபாடு செய்யும் பேறு ஒருசமயம் அடியேனுக்குக் கிடைத்தது. அங்கு ஒருவர் திருவாசகத்தினின்றும் பல திருப்பாடல்களை ஆவி யோடாக்கை புரை புரை கனியப் புகுந்து நின்றுருக்கவுருகிப் பாடிப் போற்றிக்கொண்டு 'நான்' என்பது தோன்றாதவகையில் வழிபட்டிருந்தார். அவர் புலவருமல்லர், செல்வருமல்லர். சிறந்த சைவவேளாண் குடியிற் பிறந்தவர் என்பது மட்டும் நினைவிலிருக்கின்றது. அவரது வழிபாடு செயல் முற்றியபின், அவரை அணுகினேன். என்னோடு மிக்க அன்புடைமை தோன்ற உளம் குளிரப்பேசினார். நான் அவரை இன்னுஞ் சில திருவாசகப்பாக்களைப் பாடி என்னைப் பரவசப்படுத்த வேண்டிக்கொண்டேன். கொண்டதும் இதுவுந் திருவருள் தூண்டியதே என்று சொல்லிவிட்டு, என்னைச் சத்திய பத்தன் என்று நம்பிய பாவனை புலப்படுத்திப் பாடத் தொடங்கினார். அப்பொழுது கம்பராமாயணத்திலும் வில்லிபாரதத்திலும் மிக்க பயிற்சியுடைய ஒருவர் வந்தார். அவர்க்கும் தமக்கும் உள்ள நட்பை எனக்குச் சொல்லினார். இருவரும் சில பேசிவிட்டு, என் விருப்பத்தை நிறைவுறுத்த எண்ணி,

உடையானே நின்றனை யுள்கி
யுள்ளம் உருகும் பெறுங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக்கண்டிங் கூர்நாயின்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே,

என்னுந் திருப்பாட்டை மோகன ராகத்தில் மிக்க இனிமை தோற்றிப் பாடினார். இப்போது பாடியதற்கும் இறைவன் திருமுன் பாடியதற்கும் வேறுபாடிருந்தது. எனக்கு ஒரு கருத்தும் அவ்வேறுபாட்டால் உதித்தது. ஆனால், அதை வெளியிட விருப்பின்றி அடக்கிக் கொண்டேன்.

பின்னர், அப்பேரன்பர் எவ்வாறோ என் கருத்தை அறிந்தவராய்,

உலவாக் காலந் தவம் எய்தி
உறுப்பும் வெறுத்திங்குனைக் காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
என்கொண் டெழுகேன் எம்மானே

என்று இனிது பாடினார். இவ்விரண்டாலும் 'உள்ளம் உருகும் பெருங்காதல்', 'அலவாநிற்கும் அன்பு' என்பவை அடியேனிடத்தில் இருப்பனவாகக் குறிப்பதே அவர் நோக்கம்.

நான், இத்தகைய நோக்கங்களை விட்டு, இறைவன் திருவடிப் பற்றன்றி வேறுயாதும் பற்றாத நிலையில் தங்கள் திருவுள்ளத்தை வைத்துக்கொண்டு பாடுதல் நன்று என்று தூண்டினேன். உடனே, பக்குவம் மிக்கவராதலின், உள்ளுருக்கம் விரைவில் எய்தினார். எனக்குக்கதை ஒன்று சொல்வதுபோல் சில சொல்லத் தொடங்கினார். (அது இது – சொற்பொருளிற் கருத்தூன்றுக.)

மாணிக்கவாசகப் பெருமான், உற்றாரையும், ஊர் பேர் முதலிய-வற்றையும், கற்றாரையும், கற்பனவற்றையும், வேண்டாதவராய், ஓடும் கவந்தியுமே உறவு என்று கொண்டு, சிவன் கழலே தேடும் பொருள் எனத் தெளிந்தவர். அதனால் ஐம்புலனாய சேற்றில் அழுந்தாத சிந்தையர். ஊற்றுமணலைப் போல நெக்கு நெக்கு உள்ளே உருகியோல மிட்டுப் போற்றி நிற்பவர். இவ்வாறு போற்றும் இயல்புடைய இவர்க்கு இறைவன் தானே வந்து தாட்டாமரை காட்டித் தன் கருணைத்தேன் காட்டி ஆட்கொள்வான் என்ற முழுவுறுதியோடும் இருந்துவிட்டார்.

ஒருநாள், அடியவர் எல்லார்க்கும் மூலபண்டாரத்தைத் திறந்து, கடலே போன்ற ஆனந்தத்தைத் தந்தான் இறைவன். கண்டவ-ரெல்லாரும் அவ்வானந்தத்தைக் கவர்ந் துண்ணக் கண்டார். ஆண்டவன், அடியார் எல்லாரையும் அழியாத ஆனந்தவெள்ளத்தில் அழுத்தி, கழியாத கருணையைக் காட்டி, ஒழியாத வினையை ஒழித்துப் பழியான பழ மலத்தைப் பற்றறுத்து, ஆளுகின்ற பாக்கியத்தைப்

பார்த்துப் பெருங் களிப்படைந்தாலும், 'எந்நாட்களித்து எந்நாள் இறு மாக்கேன்' என்று இருக்கும் தமக்கும் அதிற் பங்கில்லையே என்று கருதி, அத் 'திருப்பெருந்துறையிறை சீர் கற்றாங் கவன் கழல் பேணினரொடும் கூடு' தற்கு விரைந்தோடி, யுற்று, திருமுன் நின்று,

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

என்று தங்கருத்தைத் தெரிவித்தார். அதுகேட்ட இறைவன், உனக்கு என்ன வேண்டும்? நீ என்ன குறையுடையாய்? உன்குறை யாதென்று உணர்த்து. அது நிறைவாகும் என்றான். என்றதும் மாணிக்கவாசகர் 'திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே,' 'அருணிதிதரவரும் ஆனந்த மலையே' நமக்கு அம்பலக்கூத்தன் இரங்குவான் என்று ஏமாந்-திருந்தேன். அரைசே பொன்னம்பலத்தாடும் அமுதே என்று உன் அருள் 'இரைதேர்கொக்கு' ஒத்து இரவுபகல் ஏசற்று இருந்தேன். கரைசேரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்து உன்னடியேன்பால் பிரைசேர் பாலின் நெய்போலப் பேசாதிருத்தல் முறையோ? நினது பழவடியார் திரளானது திருவடிவெளியிற் குழுமிக் கெழுமுதலைத் தந்திருக்கின்றது. உன் திருவருள் எனக்கு இரங்குமோ என்று அழுவதன்றி வேறு என்ன செய்வேன்? அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார். ஆர்? 'ஞானச்சுடரே நான் ஓர் துணை காணேன்' 'உன்றன் கருணையினால், பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவியை யான் என்பதும், ஆக்கையை எனது என்பதும் ஆகிய பற்று யாதும் இல்லாமல் அறுதல் பாவியேற்கும் உண்டாகுமோ?' அவ்விருவகைப்பற்றும் இருந்த குறி தெரியாமல் முற்றும் 'அறவே : பெற்றார் நின் அன்பா; அந்தம் இன்றி அகம்நெகவும், புறமே கிடந்து புலை நாயேன் புலம்புகின்றேன், உடையானே! பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்பமாகடலே! மெய்யன்பு பெறவே வேண்டும்' என்று குறையிரந்தருளினார்.

இவ்வாறு சொல்லி முடித்து, சிறிதளவு வாளா இருந்து, கண்ணீர் வெளிவந்து உள்ளன்பைக் காட்ட, பின்வருவதைப் பாடினார் அவர்.

கடலே யனைய ஆனந்தம்
கண்டா ரெல்லாம் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்
கிருத்தல் அழகோ ? அடியேன்,
உடையாய்! நீயே அருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்.

என்று பாடி விம்மி விம்மி யழுது மெய்ம்மறந்து இருந்தார் மாணிக்கவாசகர். அப்பொழுது, திருப்பெருந்துறையான் விருப்பொடும் அசரீரியாக நின்று யாதோ ஒன்று கூறி யருளினான் போலும். (எப்படியோ உன்னை மறந்து விட்டேன என்று சொல்லியிருப்பாரென்று எண்ணலாம். அதையறிவார் யார்? உடனே அம்மெய்யன்பர்) மாணிக்கவாசகர் சிவபெருமானை நோக்கி, 'சோதி! சுடரார் அருளால் இருள் நீங்க இனித்தான் துணியாயே' என்றருளினார் என்று கூறினார்.

அவ்வாறு கூறக்கேட்ட திணியார் மூங்கில் (போலும் மிக்க வுறுதியுடைய) சிந்தையேன் அம்மெய்த் தொண்டர் பாற் சேர்ந்து நின்று, சிந்தனையைத் திருத்தியாண்ட சிவலோகாநாதனைத் தரிசித்து, உடையாளொடு கலந்து உள்ளுருகிப் பெருகும் உள்ளத்தால் ஆடி ஆடிப்பாடிப்பாடி அடியாரொடு கூடிக்கூடித் தலையார வணங்கி, வாயாரப் போற்றி, அதுவே ஆநந்தமாக அருளுங்காலந்தான் அடியேனுக்குக் கூடுவது எந்நாளோ? அமுதே! அருமாமணி முத்தே! தூண்டா விளக்கின் சுடரனையாய்! தொண்ட னேற்கும் உண்டாமோ? ஏழைபங்கா! என்கோவே! பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ? பிறையைத் தலைமேல் வைத்துப் பெருங்கருணை புரிந்த பெருமானே! குன்றே யனைய குற்றங்களாயினும் அவை குணமாம் என்றே நீ கொண்டால் உனக்கு என்ன கெட்டுப் போய்விடும்? உடை யானே! நீ அடியேனைப் பணிகொள்ளாவிட்டாலும் விடுக. என்னை இப்பிறப்பில் புகுத்தி ஒறுத்தலே போதும். அவ்வொறுத்தலே போதும் என்றதால், அம்மட்டில் ஒறுத்துக் கொண்டே இருத்தல் நன்றோ?

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே
வைத்திட் டிருக்கும் அது அன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கதிகாரம் ?
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

என்று தொழுதுருகினேன்.

உருகியிருக்கும்பொழுதே, பெருந்துறையிலுறையும் பெம்மான் எனைத்தான் புகுந்து, எனது என்பின் புரையுருக்கி ஆண்டு, மனத்தான் கண்ணின் அகத்தான் மறு மாற்றத்திடையான் ஆகியும் வானோர்களும் அறியதாததோர் வளம் ஈந்தனன் ஆகியும் நிச்சம் என நெஞ்சில் மன்னி, யானாகி நின்றான்.

வாழ்க பெருந்துறை வாழ்க மணிமொழி
வாழ்க அதுபாடும் வாய்.

திருச்சிற்றம்பலம்

40. உலப்பிலா ஆனந்தம்

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே.

இத்திருப்பாடல், திருவாசகத்துட் பிடித்த பத்து என்னுந் தலைப்பின்கீழ், ஒன்பதாவதாயுளது. குழைத்த பத்தாலான்ம நிவேதனமும், உயிருண்ணிப் பத்தாற் சிவாநந்த மேலீடும், அச்சப் பத்தா லானந்த முறுதலும் திருப்பாண்டிப் பதிகத்தாற் சிவாநந்த விளைவும் உணர்த்தியருளிய மாணிக்கவாசகப் பெருமானார், இப்பிடித்த பத்தால் முத்திக் கலப்புரைத் தருள்கின்றார். அருளுங்கால், இம்முத்திக் கலப்புக்கு ஏதுக்களை எண்ணி அவற்றைப் பாராட்டும் முறையில் ஆண்டவன் திருவருட் பேற்றைச் சிறப்பித்தருளினார். முதற்பாட்டில், குடி முழுதும் ஆட்கொண்ட பெருங்கருணையையும், அடுத்த பாட்டில், தம்மை 'முழுப்புழுக் குரம்பையிற்கிடந்து கடைபடா வண்ணங் காத்தாண்ட கடலேயனைய கருணை'யையும், பின், அம்மையப்பர் தம் சிவபதத்தை அளித்த செல்வத்தையும், மேல், தாம் பெற்ற புகழ்ச்சியைக் கடந்த போகத்தையும், மற்று, தம் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியையும், அதன்மேல், தம் மனக்கோயிலுட் பொருந்தி, அளவிலா ஆனந்தம் அருளிப் பிறவிவேரறுத்த காட்சியையும், அதைச் சார்ந்து தாம் பற்றுமாறருளப் பற்றிச் செய்த பூசனையையுகந்து பூங்கழல் காட்டிய பழம்பொருள் விளக்கத்தையும், அதனையொட்டி, தம் பத்தியாற் சிக்கெனப் பிடித்த திறத்தையும், கீழ், தாம் புக்கவிடமெல்லாம்புக்கு, பெயர்ந்தவிடமெல்லாம் பெயர்ந்து உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற வள்ளன்மையையும், முடிவில், தொடக்கெலா மறுத்த சோதி மயமான இன்பத்தையும் தெளிவுறுத்தியருளினார்.

இத்திருப்பாட்டின் பொருளைப் பலர் எழுதி வெளியிட்டனர். அவருரையெல்லாம் திருவாசகத் திருவுள்ளக்கிடையிலும் திருவாசக உண்மையிலும் உள்ள மெய்ப்பொருளை நோக்கியெழுதப்பட்டன-வல்ல. அறிவுசான்ற மு.ரா. கந்தசாமிக் கவிராயரும் எழுதுவதில் இளைக்காத சான்றோர் நெல்லையப்பப் பிள்ளையும் எழுதிய உரைகள் கற்றுணரத் தக்கன. இவ்விரண்டனுள் முன்னது பதசாரங்கூறும் முறையிலிலக்கியச் சுவை பயக்கும். பின்னது சாத்திர நெறியைச் சார எழுதப்பட்டது. கவிராயர் தம் உரை முடிவில் 'இன்னும் இதன் பொருளருமைப் பெருக்கத்தை வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்றவரெழுதியதால், இதனுரையெழுத வல்லார் தரைமிசையரோ? வேறெதன் மிசையரோ? அடியேனுக்கு நாடோறும் எப்போதும் நாவினுக் கருங்கலமாத் திகழும் இத்திருப்பாடற்குத் திருவருள் உண்ணின்று தூண்டுமளவு விளக்கம் எழுத விழைகின்றேன். விழைதலும் என் செயலன்று. பிடித்த பத்து – 'முத்திக் கலப்புரைத்தல்.' 'மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது.' 'மிக்க பிறவித் துயரெல்லாம் ஒழித்து விபுத்துவம் இங்கு அளித்தலாலே பிக்கறச் சிக்கெனப் பிடித்தேன். நின்னை என்று துணிவு செப்பல்' என்னும் தலைப்பின் விளக்கங்களை (இப்பதிகத்தின் உட்பொருளை) அறிதல்வேண்டும்.

கருத்துரை

சிவபெருமான் தாயினும் சால இனிய பேரருளாளன். அவ்வருளாகியவுள்ளொளியை வெளியொளியாகிய உயிர்க்குப் பெருக்குவோன். அது பெருகுந்தோறும் சிவபெருமானாகிய ஆனந்தம் உலப்பிலாது பெருகும். அவ்வானந்தத்துள்ளாழ்ந்த உயிர்ப்புறத்தே அஃது இடைவிடாது, அருளுருவாய்த் திரிந்து திகழும். அதைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தவுயிரை அது விட்டகலாது.

பொருள்

சிவபெருமானே, பாலை நினைந்து ஊட்டுகின்றதாயினும் மிக்க அன்புற்று, பாவியான என்னுடைய ஊனை உருக்கி, – உயிரின், உள்ளே – அருளாகிய ஒளியைப் பெருக்கி, அழிவில்லாத இன்பமாகிய தேனைச்

சொரிந்து - யான் செல்லுமிடந்தொறும், புறம் புறம் - போந்து, திரிந்த செல்வமே, யான் உன்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன். இனி நீ எங்கு எழுந்தருள்வது?

விளக்கம்

1. சிவபெருமான் உயிர்க்குப் பால் நினைந்து ஊட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துதவும் அளியன்.

2. பாவிக்கும் இன்னருள்புரியும் புண்ணியன்.

3. அப் 'போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன்' உயிர்களின் (அ) ஊனினை யுருக்கி (ஆ) அவற்றின் உள்ளொளி பெருக்கி, (இ) உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறந்திரியும் செல்வமாவான். மாணிக்க வாசகர்க்கு அவ்வாறு செல்வமானவன்.

4. அம்முதல்வனை மாணிக்கவாசகப் பெருமானார் தம்மின் நீங்கி, எங்கும் புலப்படாத வண்ணம், தொடர்ந்து சிக்கெனப் பிடித்தருளினார். இம்முறையே இவற்றை விரித்துக் கூறுவாம்.

திருச்சிற்றம்பலம்

41. ஆனந்தமாய தேன்

1. நம் தாய் உடலெடுத்த முறைக்குரியவள். உடலோ ஒன்றல்ல, பல. அவற்றுள் எப்பிறவிக்குரியவளோ? பிறவி மலச்சார்பால் வருவது. வரவே அப்பிறவியால் வருந்தாய் மலத்தாய்-அமலத்தாயாகாள். மலமகலாத உயிர்கட்கு அம் மலத்தாய் அவ்வப்பிறவி தோறும் வெவ்வேறாவாள். மலம் அகன்ற எல்லா நல்லுயிர்க்கும் அமலத்தாய் ஒருத்தியேயாய் வேறுபடாள். அவளை அகில ஜகன்மாதா என்பதன் கருத்தும் அதுவே. அத்தகைய அருட்டாயன்பினளவுக்கு இத்தகைய மருட்டாயன் பினளவு ஈடாகாது. அதனால், அருட்டாய் சாலப் பரிந்தூட்டுவாள் என்பது தெளிவுறும். மருட்டாய் மறந்து மறந்து நினைந்து நினைந்தூட்டுவாள். அருட்டாய் நினைப்பும் மறப்புமின்றி என்றும் ஒரு பெற்றித் தாயூட்டுவாள். மருட்டாயூட்டுவது அஞ்ஞானத்தைத் தரும். ஊனைப்பெருக்கும். அருட்டாயூட்டுவது மெய்ஞ்ஞானத்தைத் தரும். ஊனையுருக்கும். மருட்டாயின்பால் உள்ளிருளைப் பெருக்கும். அருட்டாயின்பால் உள்ளொளியைப் பெருக்கும். மருட்டாய்க்குத் தன்குழவியென்றும் அயற்குழவியென்றும் வேற்றுமையுண்டு. அருட்டாய்க்கு வேற்றுக் குழவிகளே யின்மையால் அப்பேதத்திற்கும் இடமில்லை. புண்ணியக்குழவி பாவக்குழவி என்றுள்ள வேற்று -மையுமில்லை. பாவிக்கும் பூரணகிருபை புரிவாள். புரியவே, அருட்டாயின் தண்ணளி நன்கு புரியும். 'தாயழியாக் கருவிலிருந் தமுதூட்டுந்தாய்' என்ற சைவப் புலவர் கருத்துணர்க.

2. எல்லா உயிர்களும் இறைவனுக்கு மக்கள். அம்மக்களுள் புண்ணியர்களைக் காத்துப் பாவிகளை நீத்துப் பக்ஷ பாதங் காட்டுதல் பெற்றோர்க்குத் தக்கதாமோ? குற்றஞ் செய்த மக்களைத் தண்டித்தலும் திருத்துதலும் கூடும். அவர்களைத் தள்ளி அப்பாலோட அகற்றிவிடுதல் அன்பிற்கு ஏற்றதன்றே! புண்ணியஞ் செய்த மக்களைக் காக்கலாம். பாவஞ் செய்த மக்களை நீக்கலாமோ?

அறமலி இதஞ் செய்வோருக்கு அநுக்கிரகத்தைச் செய்யலாம். மறமலி அகிதம் செய்தால் நிக்கிரகத்தை வைக்கலாம். அவர்களைத் தள்ளலாகாதே! நிக்கிரகங்களும் ஈன்றோர் நேசத்தால் செய்வனவே. அந்த வகையில் அவர்களுக்குண்டான குற்றங்களைத் தீர்த்து, இனிச்

செய்யாவாறு அச்சந் தோன்றச் செய்து, இந்த வகையில், புண்ணியஞ் செய்க என்பதன்றோ முறைமை? இவ்வாறு செய்வதுதான் அருட்டாயின் செயல். இதனால் அருட்டாயான இறை செயல் அருளேயாதல் விளங்கும்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம் சொல்லாற்றின்
வந்திடா விடின் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்றும்

சித்.சுப.106

இம்முறையில் நீங்கரும் பாவஞ் செய்த மக்களையும், அப்பாவங்களைப் போக்கிக் காத்து ஆட்கொள்ளுதல் அருட்டாய்க்கு இயல்பு.

தாயைப் புணர்ந்து தந்தையைக் கொன்று தன்னையும் அகதியனாக்கிக் கொண்ட மாபாதகனுக்கும் மதுரைக் கடவுள் ஆகிய அருட்டாய் திருவருள் புரிந்த உண்மையை இங்கு எண்ணுக.

அடுபழி அஞ்சா நீசர் ஆயினும் நினைக்கின் அச்சம்
படுபழி எஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும்
விடுவதை யின்றிவேறு களைகணும் இன்றி வீயக்
கடவனைக் காப்ப தன்றோ காப்பு என்றான் கருணைமூர்த்தி

திருவிளையாடற்புராணம். 26,35,40

அன்னையைப் புணர்ந்து தாதை குரவனாம் அந்தணாளன்
றன்னையுங் கொன்ற பாவந் தனித்துவீ டளித்த

தாய்க்குப் பாவஞ்செய்த மக்களைத் தள்ளுந்தன்மை ஏது? அதனால், 'பாவியேற்கும் உண்டாமோ பரமாநந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவியாக்கை யான் எனது என்று யாதும் இன்றியறுதலே' என்றருளிய மாணிக்கவாசகரது ஊனினை யுருக்கியது அருட்டாய்க்கு இயல்பாயதே.

3. உருக்கத்தைப் பற்றிய எம் கட்டுரை 'ஞானசம்பந்தம்' மலர். 1.இதழ் 3 - 5ல் பார்க்க.

(அ) 'ஊன்றழை குரம்பைதோறும் நாய்உடலகத்தே குரம்பை கொண்டு இன்றேன் பாய்த்தி நிரம்பிய அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ துள்ளங்கொண்டு ஓர் உருச் செய்தாங்கு எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்' என்றருளிய மணிவாசகத்தை நோக்கின், குரம்பைதொறும் அதிற் குரம்பை கொண்டு, உருக்கித் தேன் பெருக்கிய உண்மை இனிது விளங்கும். ஊனுருக்கம் ஒளிப்பெருக்கத்திற்கு ஏதுவாதல் 'இரந்திரந்துருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே' என்றதால் விளங்கும்.

(ஆ) 'உள்ளொளி' என்றதால் வெளியொளி என்ற ஒன்று இருப்பது வெளியாயிற்று. அஃது எது? வெளியும் உள்ளும் இங்கு எதைக் குறித்துக் கொள்ளப்படுகின்றன. உடம்பைக் குறித்து, அதற்கு வெளியுமுள்ளும் என்று கொள்ளவே ஈங்குப் பொருந்தும். உள்ளொளி என்றது பிறிதினியைபு நீக்கிய விசேடங்கொண்டது.

ஒளிக்கும் ஒளியாயிருப்ப தொன்றதனைத்தான் உள்ளொளி என்றார். 'அடியேனுள்ளத்துள் ஒளிர்கின்ற வொளியே' என்று முன்னர்க் குறித்தருளிய அடிகள் கருத்தை எண்ணுக. உள்ளம், 'செவ்விய விந்து நாதஞ் சித்தமோடுள்ளமாகும்' (சிவஞான சித்தியார், சூ.4, அதி. 1, திருவிருத்தம். 2) என்புழிப் போல உயிரையுணர்த்திற்று. உயிரும் ஈண்டுக்கட்டு நீங்கிய தூய ஆன்மாவேயாகும். ஆகவே 'உள்ளொளி' என்றது ஆன்மாவாகிய ஒளிக்குள் ஒளியான திருவருளைக் குறிப்பதென்க. 'சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி' என்றதும் அச்சோதியையே என்க. 'சோதியாய்' என்ற சேக்கிழார் பெருமான் அச்சோதியினும் வேறாக நின்றதொன்றே அவ்வாறாயிற்று என்றுணர்த்தி யருளுதல் அறிக. அதைத்தான், 'இடர்கெடுத் தென்னை ஆண்டு கொண்டு என்னுள் இருட்பிழம்பு அற எறிந்து எழுந்த சுடர்மணி விளக்கின், உள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதி' என்று திருமாளிகைத்தேவர் அருட்பெருமாளிகை யுளடங்கி யுணர்ந்துணர்த்தி யருள்கின்றார். இதிலும், சோதியுட் சோதியாகிய சிவம் விளங்கும் இடமான உள்ளொளியையும் அச்சத்தி விளங்கும் இடமான சுத்தாத்துமாவாகிய வெளி யொளியையும் தோற்றியதுணர்க. சுடர்மணி விளக்கு என்பது உவமை. உயிரொளியை நோக்கின் அருளொளி சோதியுட் சோதியாம். அருளொளியை நோக்கின் சிவம் சோதியுட் சோதியாம். ஆகவே தூய, நல் சோதியுள் என்னும் விசேடணங்கள் 'சோதி' என்னும் தன்னோரிலாத

தனக்கே உரியவாயின. இங்கு 'உணர்வொளிபோற் பிறிவரிய அத்துவிதக் கலவி' 'அன்றளவி உள்ளொளி யொடாவியிடை யடங்கி இன்றளவும் நின்றதிருள்' 'ஞானவொளியே ஒளியா ஒளி' என்பவற்றை அறிந்து, உள்ளொளியைப் புலப்படக் காண்க. இவ்வாறு காணாதார் 'உள்ளொளி'யைப் பற்றியெழுதிய கட்டுரைகளையும் நூல்களையும் மெய்யெனக் கொண்டு பிழைபட்ட உணர்ச்சியை உலகம் எய்தாதிருக்க.

ஒளி நெறியாகிய பிரசாத யோக முணர்வார் உள்ளொளி விளங்கப் பெற்றவர். அவ் யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம். இவ்வுள்ளொளியைக் காண்டல் சைவரல்லார்க்கு என்றும் இயலாது. 'அந்தகருக்கு இரவி இருளாகும். ஈசன் அருட் கண்ணில்லார்க்கு ஒளியாயே இருளாம்' (சித்தியார், 317). ஆதலாற்றான், தாயுமானார், 'பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா' முத்திதருந் தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே' வந்து, 'பன்முத்திரைச் சமயம் பாழ்படக், கல்லாலடி வாழ் சின் முத்திரையரசைச் சேர்'ந்து, அத் 'தூய அறிவான சுகரூப சோதி தன்பால் தீயிலிரும் பென்னத் திகழு'ங்கள் என்றருளினார்.

இதுகாறும் எழுதியவற்றான் 'உள்ளொளி பெருக்கி' என்றதன் கருத்தாவது, ஊனுருக்கம் பெற்ற சுத்த ஆத்துமாவிற்கு அஃது உருக உருகப் பெருக்கி திகழுந் திருவருளைத் தருதல் என்றுணர்க. (திருவிளையாடல். வாதவூரடிகளுக் குபதேசித்த படலம், 48)

(இ) 'உலப்பிலா ஆநந்தமாய தேனினைச் சொரிந்து' என்றதன் பொருள் விளங்க. அச்சிவபெருமானே 'ஒரு மூர்த்தி கொடு குறுகி' உணர்த்தி யருளல் வேண்டும். அடியேனுள்ளே உணர்வாய் நின்ற அந்த ஞானக் கூத்தன், குருடரையும் ஊமரையும் முடவரையும் பற்றிய பேய் அவர்பாலில்லா வற்றைத் தோற்றாதவாறு போல அடியேன் பாலில்லாததைத் தோற்ற மாட்டான். கற்ற கலையால் உற்றறிவதும் அன்று அது, 'நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார் போலே கருவி நன்னூற் போதம்' 'சின்னஞ் சிறியார்கள் செய்த மணற் சோற்றை யொக்கும் மன்னுங் கலைஞான மார்க்கம்' 'வாசக ஞானத்தால் வருமோ சுகம்?' 'வாக்கும் மனமும் மௌனமுற'ப் பரமசிவத்தை நோக்கும் மௌனம் இந்த நூலறிவில் உண்டாமோ? மெய்யறிவின்பத்தைத் திருவருள் கொடுத்துத் தெளியும் ஆற்றல், குருவருள் போற்றிக் கூறுவேன் சிறிது.

திருவருளும் பரமசிவமும் வஸ்து பேதமாகாதன. உள்ளொளி பெருகப் பெருக உலப்பிலா ஆனந்தம் ஊற்றெடுத்துப் பெருகும். அவ்வுள்ளொளியைக் கண்டாரெல்லாருங் கடலே யனைய ஆனந்த போகந் துய்ப்பர். அதைக் காணாதாரே இவ்வுலகில் இடரே பெருக்கி ஏசற்றிருக்கின்றனர். அவ் வுள்ளொளியைப் பெற்றே, அதுபெற மெய்யன்புற்றே, பேராத - ஒழியாத - பிரிவில்லாத - மறவாத - நினையாத அளவில்லாத - மாளாத இன்பமா கடலைப் பெறல் இயலும். அன்பில்லார் உருக்கம் எய்தார். அன்புருக்கம் எய்தார் அருளெய்தார். அருளெய்தார் ஆனந்தம் எய்தார். 'சின்மயாநந்தம்' என்னும் தொடர்ப் பொருளுணர்வார்க்கு இது தெற்றென விளங்கும். சேக்கிழார் பெருமானார், 'நிலைப்பட்ட மெய்யுணர்வு' 'திண்ணியவுணர்வு' 'உரனூறு திருக்கூத்து' 'அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே யான அம்பலமும் தம் உள்நிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒரு பெருந்தனிக் கூத்தும்' 'உணர்வு நேர்பெற வருஞ்சிவபோகத்தை' 'வவ்விய மெய்யுணர்வின்கண் வரும் ஆனந்தக்கூத்தை' என்று விளங்க வுணர்த்தி யருளியவற்றை யுய்த்துணர்தல் சிவ தீக்கை பெற்ற சைவர்க்குற்ற கடனாகும். அப்பெருமானார், 'காஞ்சிவாய்ப் பேரூர் குறுகிய' சுந்தரமூர்த்தி நாயனார்க்கு 'நித்தனார் தில்லை மன்றுணின்-றாடல் நீடிய கோலம் நேர் காட்டக், கைத்தலங் குவித்துக் கண்கள் ஆனந்தக் கலுழிநீர் பொழிதரக் காண்டலும் தொழுது வீழ்ந்து உடன் எழுந்து கரையில்(லாத) அன்பு என்பினை உருக்கப்பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்கத் தாண்டவம் புரியுந் தம்பிரானாரைத் தலைப்படக் கிடைத்தபின், சைவ ஆண்டகையாருக்கு அடுத்த அந்நிலைமை விளைவை யார் அளவறிந்து உரைப்பார்? என்று வியந்து போற்றிய இடத்தை நாமும் போற்றியுய்க. 'ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கி யுலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து' என்பதற்கு ஈதொன்றே தக்க நல்விளக்க மெனலாம். 'அன்பினாலடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக' 'ஆவியோ டாக்கை புரை புரை கனியப் புகுந்து நின்றுருக்கி' என்று முன்னும் அருளிய துணர்ந்து, உலப்பிலா ஆனந்தம் உள்ளொளியைப் பெருக்கும் வகையில் ஆவியையும் அதற்கிடனாய புன்புலால் யாக்கையையும் உருக்கும் முழுப் பேருண்மையை அநுபவிக்க முயல்க. அம்முயற்சிக்குத் திருவருட்டுணையே நாடுக.

நாடித்தில்லை முதலிய சிவத்தலஞ் சேர்க. சிவகங்கை முதலியவற்றுள் தோய்க. திருக்கூத்தனைத் தொழுக. தொழுதால் 'ஓங்கி உளத்து ஒளிவளர உலப்பிலா அன்பருளி வாங்கி வினைமலம் அறுத்து வான் கருணை தந்தா'ள்வான்.

'ஆனந்தமாய தேன்' என்றது 'தினைத்தனையுள்ள தோர் பூவினிற்றேன்' போன்று சிறுமையும் அழிவும் பின்பு துயர் விளைக்குமியல்பு முடையதன்று. நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் (திரிகரண கிருத்தியம் நிகழுந்தொறும்) எப்பொழுதும் (கரணங் கடந்து சுத்தாவத்தை எய்திய பொழுதும்) எல்லா எலும்பும் உள்ளே நெக்குருகச் செய்வது. அதைத் திரிகூட ராசப்பக் கவிராயர் என்னும் நல்லிசைப் புலவர், 'ஈயறியாப் பூந்தேனே' என்றழைத்தார். உள்ளொளி பெருக்கி ஆநந்தஞ் சொரிந்து புறம் புறந்திரிந்த செல்வம் என்பதைச் சிவஞான பாடியத்துப் பதினொன்றாஞ் சூத்திரவுரைக்கண் அருள் விளக்கத்திற்கும் ஆநந்த விளக்கத்திற்கும் வேறுபாடு கூறுமாற்றால் விளக்குதலுணர்ந்துய்க.

'அவனையகன் றெங்கின்றாம் ஆங்கவனாம் எங்கும் இவனை யொழிந் துண்டாதல் இல்' என்றவாறு புறம் புறந்திரிதல் அணைந்-தோர்க்கே விளங்குவ தன்றி என் போன்றோர்க்கு எங்ஙனம் விளங்கும்? 'உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சி' எய்துங் காலத்தன்றோ அது விளங்கும்?'

4. 'அற்பனென்னுள்ளத் தளவிலா வுன்னைத் தந்த பொன்னம்பலத்தாடீ' என்புழிப் போல 'யான்' என்னுஞ் சொல்லும் 'உனை' என்னுஞ் சொல்லும் வேறுபாடு தோற்றி, சிக்கெனப் பிடித்ததன் அருமையையும் இமையவர்க்கு அளவறுப் பதற்கரியவன் அடிவர்க்கு எளியனாகும் சௌலப்பியத்தையும் உணர்த்தி, "யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்" என்றதை நிரூபித்து, "கண்ணகத்தே நின்றுகளிதருதே" னாதலைக் காட்டி, புவனியிற் பிறந்து நாள் அவமே போக்காதவாறு நம்மைத் தூண்டி, சித்த மெனுந்திண் கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த திறம் அறிவித்து மும்மலப் பழவல்வினைக்குள் அழுந்தாதவாறு நாம் உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓம்காரத்துட் பொருளொடு கலத்தலை இந்நிலத்தலை விளக்கியருளினார்.

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாப்போற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கும் அருட்கண்ணீர் சோர்ம்நெஞ் சுருக்கும்
ஒளிக்குள் ஆநந்தத் தமுதூறும் உள்ளத்தே

-திருமந்திரம்

இலக்கணக் குறிப்பு

முடிபு :- நினைந்து ஊட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து, உருக்கி, பெருக்கி, சொரிந்து, திரிந்த செல்வமே, சிவபெருமானே, தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், இனி நீ எங்கெழுந்தருளுவது? நீ என்னும் முன்னிலையை அமைந்தவாறே கூட்டிப்பொருள் கொள்ளல் பொருந்தாது. செல்வமே சிவபெருமானே என்னும் விளியை முற்கூறி அதைப் பிற் கூறலே தக்கது.

திருச்சிற்றம்பலம்

42. அளவிலா இன்பமா கடல்

இன்பச்செல்வம்

பானினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

உலகிலே பெற்றவனைத் தந்தை என்றும் பெற்றவளைத் தாய் என்றும் வழங்குதல் மரபு. எல்லாவுலகையும் படைத்தும் காத்தும் அழித்தும் உயிர்க்கு பெருநலம் அளிக்கும் மெய்ப் பெரும் பொருளைத் தந்தை தாய் என அழைத்துப் போற்றி உள்ளன்பைப் புலப்படுத்து, அருளை வளர்க்கும் உண்மை அருள்நூல் அனைத்துள்ளும் அறிகின்றோம்.

தாதாய் மூவேழுலகுக்குந்தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே

தாயாய் முலையைத் தருவானே தாரா
தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்காயே
தாயே யென்றுன்றாள டைந்தேன்
தயா நீ யென்பால் இல்லையே

என்பவை முதலிய திருவாசகம் பரம்பொருளைத் தாய் தந்தையாகக் கொண்டு அழைத்தல் பலரும் அறிந்ததே.

மக்கட்பிறப்பு முதலியவற்றுள் அமைந்த தாய்க்கும் கடவுளைப் பெற்றவராகக் கொண்டு போற்றியவற்றால் வழுத்தும் தாய்க்கும் வேறுபாடு கூறுதல் நாம் அறிந்துள்ளோம்.

உலகில் தாய் தான் பெற்ற மகவைப் பாராட்டிச் சீராட்டித் தாலாட்டுதல் முதலிய அன்பு நிகழ்ச்சியையும், கொன்றொழித்தல் முதலிய வன்பு துன்புகளையும் அறியார் இரார், 'நல்ல தாய் தந்தையேவநான் இது செய்யப் பெற்றேன்' எனக்கூறி இன்புற்ற பிள்ளையும், 'படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்குடரிலே நெடுங்காலங் கிடந்தேன்' என வருந்திய (மன்னவன்) மகனும் நினைவில் எழுவர்.

தான் பெற்ற பிள்ளைக்குப் பசி தோன்றிற்று என்று நினைந்து பாலூட்டும் அன்புருவத்தாய் சான்ற பரிவுடையாள் என ஐயுறாது போற்றப் பெறுவாள். அவளது பரிவு ஓர் அளவுட்பட்டதே. திருவருளாகிய தாய், உயிர் எல்லாவற்றிற்கும் அறியாமையும் சிற்றறிவும் தீர்த்துப் பேரறிவு கொடுத்துத் தானாக்கிப் பேரின்பத்தில் இடையறாது திளைக்கச் செய்யும் பரிவு அளவுட்படாத பெருமையுள்ளது. அதனால், 'சிவபெருமானே நீ பால் நினைந்தூட்டுந்தாயினும் சாலப் பரிந்து திரிந்த செல்வம்' என்றருளினார் அடிகள்.

புண்ணியம் - அறம், பாவம் - மறம், செய்து அவ்விரு வினையின் பயனாகிய இன்பதுன்பத்தை அடையும் உயிர்கள் அவ்விருள்சேர் இருவினையும் சேராது, பொருள் சேர் முடிவு நிலையைப் பெறாமல் இறந்தும் பிறந்தும் துன்பப் பெருக்கும் இன்பத்துளியும் எய்துகின்றன. பிறப்புக்கு, இருவினையும் ஏதுவேயாயினும் பாவத்துருவாகியது உடல் எனல் பெரியோர் மரபு, 'புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம் என்ன நின்றியங்கும் இருவினைக் கூட்டைக் கல்லினும் வலிதாக் கருதினை' இருவினைப் பெட்டகம் என்று பழித்த பட்டினத்து அடிகள்,

பாவச்சரக்கொடு பவக்கடல் புக்குக் காமக்கனலிற்
காற்று எடுத்து
அலைப்பக் கெடுவழிக் கரைசேர் கொடுமரக்கலம்

எனவும் இழித்துப் பாடியருளினார். 'புண்ணியனைப் பூசித்த புண்ணியம்' உண்மை நிலையைச் சேர்கின்றது. பாவியேன் என்று சொல்லிக்

குறைபடுவதும் புண்ணியத்தேன் என்று சொல்லிக் குறைபடுவதும் நியாயம். இருவினையுள் பாவத்தை மட்டும் வெறுப்பது இயல்பு. மெய்யுணர்வுடையோர்க்கு இருவினையினும் வெறுப்புத் தோன்றும், விருப்பு வெறுப்பு இரண்டும் அற்ற காலத்து அதுவும் இல்லை. மெய்ஞ்ஞானியரும் உடலெடுத்த பாவத்தை நினைந்து வருந்துவர். அவ்வருத்தம் அவர்க்கேயன்றி, நன்னெறி நாட்டம் உள்ள யாவர்க்கும் நன்மை பயக்கும்.

செழுக்கம லத்திரள் அனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத்தடி யாருடன் போயினர் பாவியேன் யான்

என்று தம்மைப் பாவியேன் எனச் சொல்லி வருந்துவதற்கு என்ன காரணம்?

'புழுக்கணுடைப் புன்குரம்பை' எய்தியதே காரணம். அதனை எய்தியதற்கு என்ன காரணம்? 'பொல்லாக் கல்விஞானம் இலா அழுக்கு மனம்' காரணம். இக்கருத்திலே 'பாவியேனுடைய வூன்' எனப்பட்டது. 'பாவியேற்கும் உண்டாமோ ....யாதும் இன்றி அறுதலே' என்றதும் அறிக. ஊனையுருக்குதல் என்றால், வெண்ணெயை நெருப்பில் உருக்குவது போன்றது அன்று. இவ்வுண்மை புலப்படுவது அரிது.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்

என்றதில் நன்கு ஆராயவேண்டுவது இது. ஆக்கையுருக்கம் ஆவியுருக்கம் இரண்டும் இதிற் கூறப்பட்டன. உருக்கத்தின் முன்னர் ஆனந்தமாய்க் கசிதல் அறிவிக்கப்பட்டது.

'ஆவியோ டாக்கை புரைபுரை கனியப் புகுந்து, நின்றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே' என்று திருவாசகத்திலும் அவ்விரண்டும் சொல்லிய தறிக, 'புரைபுரை கனிய' என்றதும் 'கனியப்புகுந்து நின்று உருக்கி' என்றதும் நினைக்கற்பாலன,

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்து என்
என்பெலாம் உருக்கி யெளியையாய்ஆண்ட
ஈசனே மாசிலா மணியே

இதில் நம் உள்ளம் நிலைத்தல் வேண்டும். யாக்கை உருகி விட்டால் அது கோயிலாதல் கூடுமோ? என்பெலாம் உருக்கிவிடும் நோய் ஒன்றுண்டு. அதுபோலும் உருக்கமோ இதிற் கூறப்பட்டது? யாக்கையுருக்கம் வெண்ணெயுருக்கம் போல்வதாயின்,

விடல்இல் அடியார் உடல் இலமே மன்னும்
உத்தரகோச மங்கைக்குஅரசே

வினையேன் மனத்தே ஊறும் மட்டே (-தேனே),

சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்

என் மனத்திடை மன்னிய மன்னே

என்றவை பொருந்துமோ?

'தந்தது உன்னை, கொண்டது என்னை' என்றுணர்த்தியதே உண்மையுருக்கம் ஆகும்.

திருஞானசம்பந்தர் 'உள்ளம் உருகில் உடனாவார்' என அருளினார். அவ்வுருக்கமே நம்மையாளும் முன்னோர் உணர்த்திய உண்மையுருக்கம். அத்தகைய உருக்கமே பேரின்பம் பெறும் உபாயம், உய்ய வந்த தேவநாயனார் அருளிய 'திருவுந்தியார்' எனப் பெயரிய உயரிய அருள் நூலில், அத்திருமுறைத் தொடர் மொழியைக் கொண்டு,

உள்ளம் உருகில் உடன்ஆவர் அல்லது
தெள்ள அரியர்என் றுந்தீபற
சிற்பரச் செல்வர் என் றுந்தீபற

என்று உபதேசித் தருளினார். இதில் உள்ளது உருக்கம். 'யான்' என்னும் செருக்கும் 'எனது' என்னுஞ் செருக்கும் அற்றுத் தற்போதம் இன்றிச் சிவபோதமாயிருந்து தெளியின், சிற்பரவியோமம் - பரஞானவெளி ஆகிய திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புக் கூத்துக் காட்சியுறுத்தல் எளிது. 'உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்' 'கிடந்த கிழவியைக் கிள்ளியெழுப்பி உடந்தையுடனே நின்று உண்மை-யுணர்ந்தார்' அவரே, பாவியேற்கும் உண்டாமோ பரமாநந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவி யாக்கை யான் எனது என்று யாதும் இன்றி அறுதலே என்றதுணர்க.

'என்புள்ளுருக்கி இருவினையை ஈடழித்துத் துன்பங்களைந்து துவந்துவங்கள் இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முதலிய (இரட்டைகள்) தூய்மை செய்து முன்புள்ளவற்றை முழுதறிய உள்புகுந்த அன்பு' என்பதும் மெய்யானவுருக்கத்தை விளக்கும்.

இக்கருத்திலே 'பாவியேனுடைய வூனினையுருக்கி' என்றதை உணர்தல் வேண்டும். சிலருரை இவ்வுண்மை யுணர்ந்தெழுதப் பட்டிலது.

உயிர்களும் அறிவுடையவை. திருவருளும் உணர்வே யாயிருப்பது, அத்திருவருளையே தன்னுரு - சொரூபம், ஆக உடைய சிவமும் சித்து- எல்லா வுணர்வுமாயிருப்பது, சத்து-என்றும் உள்ளது. ஆனந்தம் - பேரின்பம், சச்சிதானந்தம் என்னும் வடசொற்றொடரைத் தமிழர் 'மெய்யுணர்வின்பம்' என்று வழங்கினர். உயிரறிவும் ஓர் ஒளியே. அந்நிலை பக்குவான் மாக்களுக்கே உண்டு. அம்மணி விளக்கின், உள்ளொளியே திருவருள். அத்திருவருளைத் தன்னுருவாக் கொண்டது சிவம். அது திருவருளொளிக்குள் விளங்கும் முடிவாய பேரொளி. இவ்வுண்மையை உணர்தல் பேரின்ப வாழ்வைத் தரும். இவ்வுணர்வே மெய்யுணர்வு. சிவஞானம் பரஞானம் எனப்படும். 'உரையாட வுள்ளொளியாட' 'உரைமாண்டவுள்ளொளியுத்தமன் வந்து உள்ளம் புகல்' 'ஓங்கி உளத்தொளிவளர வுலப்பிலா அன்பு அருளி' (திருவாசகம்) 'இடர் கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள் இருட்பிழம்பு அற எறிந்து எழுந்த சுடர்மணிவிளக்கின் உள்ளொளி விளங்குந் தூய நற்சோதியுட் சோதி' (திருவிசைப்பா.2) இதில், சுடர்மணி விளக்கு என்றது உவமம். 'ரத்நதீபம்' போல என்பது பொருள். அதைப் போல உள்ளொளியாக விளங்குவது திருவருளொளி. அதனையே 'தூர்யநற்சோதி' என்றார். அச்சோதியுட் சோதியே சிவம். 'பருவம் சேர் உயிர்க்குத் துங்க அரன் ஞானக்கண் கொடுத்து அருளினாலே சோதிக்குட் சோதியாத் தோன்றிடுவன்.' என்று (சிவஞானசித்தி) தமிழ்ச் சிவாகமம் கூறிற்று. உள்ளொளி பெருக்கல் ஆவது சிவஞானத்தை உயிர்க்கு நிறைவுறச் செய்தல். அது பெருகினால் அன்றிப் பேரின்பம் இல்லை. உள்ளொளியாகிய திருவருள் ஞானம் பெருக்குந்தோறும் ஆநந்தாநுபவம் (ஆன்மலாபம்) உலப்பில்லாமல் எய்தும். உலப்பிலா ஆநந்தம் என்றது நன்கு விளங்க வேண்டின்,

அறவே பெற்றார் நின்னன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவில்லா
மாளா இன்பமாகடலே

என்ற திருவாசகத்தை வாயாரப்பாடி நாவாரவோதிச் சித்தமாரத் திருவடியே நினைந்துள்கித் தலையாரக் கும்பிட்டுக் கையாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்து சிவாநுபவத்தில் திளைக்கும் பெரும் பயனை இடைவிடாது குறிக்கொண்டு பயிலல் வேண்டும். எத்தனையோ பிறவிகளிற் பழகியபழக்கம் தவிர இத்திருவருட்பழக்கம் இடைவிடா-திருப்பதே பிறப்பையும் இறப்பையும் கடந்து பேரின்ப வாழ்வாய நெறியாகும். அதனின் வேறாக உழப்புவதிற் பயன் ஒன்றும் இல்லை. 'உலப்பிலா ஆநந்தக் கண்ணீர்' 'உலப்பிலா அன்பு' என்பனவும் இங்கு நோக்கத்தக்கன.

தேன் என்று சிவனை குறிப்பது பெருவழக்கு. நாம் கொள்ளுந் தேன் வண்டு முதலியவற்றின் எச்சிற்றேன். அதைச் சிவபெருமானுக்கு ஒப்பாக மொழிவது தகாது எனப் பாவலர் கருதினர். திருக்குற்றாலத் தலபுராணம் 'ஈ-அறியாப் பூந்தேன்' என அழைத்தது. திருநாவுக்கரசு நாயனார் உரை 'கருதுவார் இதயத்துக் கமலத்து ஊறுந்தேனவன் காண்' இத்திருவாசகமும் 'உலப்பிலா ஆநந்தம் ஆயதேன்' என்றது. வெறுந்தேனாகச் சொல்லவில்லை.

சொரிதல் பெருமழையின் செயல். அம்மழை நீர் பெருகும் அளவிற் சொரிதலைப் போலத் திருக்கோயில் வழிபாட்டிற் பூச்சொரிதல் உண்டு. மலையாளத்து வழக்கும் காண்க. திருநாவுக்கரசு நாயனார்,

சொரிவிப்பார் மழை, சூழ்கதிர்த் திங்களை
விரிவிப்பார் வெயிற்பட்ட விளங்கொளி
எரிவிப்பார் தணிப்பார் எப்பொருளையும்
பிரிவிப்பார் அவர்பேரெயிலாளரே 5.16.3

என்றருளினார். இதில் மழை, திங்கள், ஞாயிறு மூன்றும் உள்ள-வாற்றைச் சிலப்பதிகார மங்கலவாழ்த்து மூன்றோடும் ஒருங்கு நோக்குக. உலப்பிலா ஆநந்தம் ஆய தேனினைச் சொரிந்து என்றதன் கருத்து, சொரியச் சொரிய உலப்பிலாதது இப்பேரின்பத் தேன் என்பதாம்.

புறம்புறம் திரிதல்:- பால் நினைந்தூட்டுந்தாய் அப் பாலுண்ணும் குழந்தையின் பின் சென்று அதற்கு யாதும் ஊறுண்டாகாதவாறு காப்பாள். அருட்டாய் யாதும் ஆநந்தம் நுகர்விக்கும் போது பிள்ளைகள் ஆய நம் புறத்தே தானும் திரிந்து நம்மைக் காப்பதை ஞானம் பெற்றால் அறியலாம். வாகீசரும், 'நம்பனே நான்முகத்தாய்' என முதலும் திருநேரிசையில், என்றும் 'பின்பினே' திரிந்து, (4.62.2) அருள் செயாய் நாயேன் பேர்த்து இனிப் பிறவாவண்ணம் அருள்செயாய் என்றருளிய தறிக. புறம்புறம் திரிதல் பின்பினே திரிதல் இரண்டும் ஒரு பொருளன.

செல்வம்:- செல்லாமை (வறுமை)க்கு உடன்பாடு, செல்வாய செல்வம், 'நிலையுடைய பெருஞ்செல்வம். நீடுலகிற் பெறலாமே' (சம்பந்தர்), அருட்செல்வம் செல்வத்துட்செல்வம். சிவம் - மங்கலம். தூய்மை, நலம் பேரின்பக் காரணம் (சிவஞானமுனிவர்). பெருமான் - பெருமகன் (மகாதேவன் என்றும் வடமொழிப் பெயர்ப் பொருள்). யான் என்றது உயிரது சிறுமையும் உன்னை என்றது சிவனது பெருமையும் தோற்றும். தொடர்ந்து - இடையறாப் பேரன்புடன் இடைவிடாது நினைத்து, சிக்கெனப் பிடித்தல் - அதுவே தானாயிருந்து, நீங்குந் தீங்கு அகலத் தூங்கும் ஒருமை (அத்துவித) நிலை. எங்கு எழுந்தருளுவது - ஒழிவறநிறைந்து அசைவற நிற்கும் நிலைக்கு வேறாய் ஓரிடமும் இல்லை. பிரிவறப் பிடித்துக் கொண்டுள்ளேன் என்றவாறு (விரிக்கிற் பெருகும்).

திருச்சிற்றம்பலம்

43. திருவாசகம் – சில பாட பேதங்கள்

'சித்தாந்தம்' (மலர். 41 இதழ்.7) 'தலையெழுத்து' ஒரு வெளியீடு புதியதாகத் 'திருவாசகம்' அச்சிடப்படும் என்று தெரிவித்தது. அதுதான் இக்கட்டுரையெழுதத் தூண்டிற்று.

திருவாசகம் பல ஏடுகளை வைத்து நோக்கி வெளியிட்டதாய்க் கிடைத்த பதிப்பு ஒன்றே. அது (மர்ரே கம்பெனி ஸ்ரீராஜம் அவர்கள் முயற்சியால்) புலவர் பலர் ஆராய்ந்து வெளியிட்டதாகும். நூலைத் திருத்த ஏடு ஒன்றே துணையாகாது. ஏடும் துணை. புலவர் பாடும் துணை. ஏட்டின் செம்மையும் புலமைச் செம்மையும் துணை.

கம்பராமாயணத்தைப் பற்பல ஏடுகளை வைத்து நற்புலவர் பலர் ஆய்ந்து வெளியிட்டனர். அப்பதிப்பிலும் உண்மைப்பாடம் கிடைக்கப் பெறாத இடங்கள் உள்ளன. பெரும் புலவர் திரு.கி.வா.சகநாத ஐயர் அவர்கள், சுந்தரகாண்டத்திலே காட்சிப் படலத்திலே பா. 63-ல் ஒரு திருத்தம் காட்டிப் புலவர் ஒருவர் வருத்தம் உறச் செய்தார்கள்.

விரிமறைக் குலங்கிழித் தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனன்
உருநிறத் தொருதனிக் கொண்ட லூழியான்
இருநிறத் துற்றவேற் கியைந்த காந்தத்தை

என்பது அச்செய்யுள். இஃது ஹநுமான் சீதையைக் கண்டதைக் குறித்த இடம். அதன் ஈற்றடியில் இரு நிறத்துற்ற வேற்கு இயந்த காந்தத்தை என்றிருத்தல் வேண்டும். கம்பர் வாக்கு அதுவே எனத் தடையில்லை. எழுத்துப்பிழையாக 'வேற்கு' என்பது வெற்கு எனக் கொள்ளக்கிடந்தது. கிடைத்த ஏடுகளுள் இச்சொல் 'வேற்கு' என்றே இருந்ததென்று பாட வேறுபாடு தோற்றும் பகுதியில் 244 ஆவது பக்கம் அறிவிக்கின்றது. உரைக் குறிப்பில், 'எற்கு – ஒளிக்கு' என்று எழுதினார் புலவர். அவர்க்கு உண்மைப்பாடம் உணர்த்த ஓர் ஏடும் துணையாயிற்றிலது. கம்பர் கருத்து 'இருநிறத்து உற்ற வேற்கு இயைந்த காந்தத்தைக் கண்டனன்' என்பதேயாகும். அதை மறுக்கக் கம்பராலும் இயலாது. நிறம் – மார்பு, அம்மார்பு, உரு நிறத்து ஒரு தனிக்கொண்டல் ஊழியான் (இராமன்) மார்பு. காந்தம் என்றது சீதையை. கண்டது 'அரக்கியர் குழுவில்'. 'வேல்'

என்றது இராமனது நெஞ்சிலுள்ள வருத்தம். சீதையைக் காணாதும் பெரிதும் வளர்ந்து பெருகிய வருத்தம். கம்பர் கையடைப்படலத்தே, 'மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தால்' எனக்காட்டியவுவமம் இங்குக்கருதுதல் போதாது. மீட்சிப் படலத்தே (118)

அன்று கேகயன் மகள் கொண்ட வரம் என்னும் அயில்வேல்
இன்று காறுமென் னிதயத்தி னிடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கல திப்பொழு தகன்றதுன் குலப்பூண்
மன்ற லாகமாங் காந்தமா மணியின்று வாங்க

என்னும் தொடர்பைக் கருதித் தெளிவுறத்தக்கது.

இதுபோல எம் ஆராய்ச்சியுள் கிடைத்தனவும் உள. அவற்றுள் ஒன்று இக்காட்சிப் படலத்திலேயே காட்டுதும்; இவ்வேலோடு தொடர்புடையதாதலின்,

மாண்டு போயினன் எருவைகட் கரசன்மற் றவரோ
டாண்டை யென்னிலை உரைப்பவர் இல்லைஇப் பிறப்பிற்
காண்ட லோஅரி தென்றென்று விம்முறும் கலங்கும்
மீண்டு மீண்டுபுக் கெரிநுழைந் தாலென மெலிவாள்

சீதை என்றது அச்செய்யுள். அதில் (ஈற்றடியில்) எரிமீண்டும் மீண்டும் புக்கு நுழைந்தாலென மெலிவாள் என்றுள்ளது. எரி எதிற்புக்கு நுழைந்தது என்பது அதிற் புலப்படவில்லை. புகுதல் நுழைதல் இரண்டும் ஈண்டு வேண்டாதன. அவற்றுள் ஒன்றே அமையும். 'மீண்டும் புக்கு' என்ற பாடம் ஏழேட்டிலும் 'மீண்டும் புக்கு' என்ற பாடம் நாற்பத்து மூன்றேட்டிலும் காணப்படுகின்றன. ஐம்பது கிடைத்தும் உண்மை கிடைத்திலது. எரி மீண்டும் மீண்டும் நுழைந்தாலெனவும் எதில் நுழைந்தாலெனவும் ஆய்தல் வேண்டும். புண்ணில் எரி நுழைந்-தாலென வேண்டும். புண்+கு= புட்கு என்றமைத்தார் கம்பர். 'புட்கு' என்ற பாடம் ஏட்டிற் கிடைக்காமையாலே உண்மைப் பாடம் என்று கொள்ளப்படா தொழிமோ? முற்குறித்த 'மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தால்' என்ற உவமையை ஈண்டு மீண்டும் கருதுவது நன்று.

இதுவரை எழுதியவாற்றால் ஏட்டை நம்பிப் பாட்டைக் கெடுத்தல், திருத்தல் முதலியன கூடா என்பது புலப்படும்.

திருவாசகத்திலே செத்திலாப்பத்திலே பா.2. அடி. 2

ப.வற்றியாரும் பு.மற்றுயாரும்

'வற்றி என்பதற்கு விளக்கம் இல்லை. மற்று என்னும் போது அண்டவாணரும் வானுலகத்தவரும் அல்லாத ஏனையோரும் என்று பொருளாகும்' என்றுளது. (சித்தாந்தம் இதழ். பக்கம் :195) இது முற்குறித்த ஐயர் பதிப்பில் உள்ள பாடம். சித்தாந்தத்திற் குறித்த பாடபேதங்களுள் பெரும்பாலான தாண்டவராய சுவாமிகள் உரை வெளியீட்டில் உள்ளன. வற்றி என்பதற்கு விளக்கம் இல்லை என்பது யார்க்கு? புகழுடல் எய்திய புலவர் நா.மு. வேங்கடசாமி நாட்டார் தமக்கு விளக்கம் உற்றே இதற்கு உரை எழுதினார். அரைகுறையாகத் தமிழ்கற்றார்க்கும் இது விளங்குவதே. 'பிறரும்' என்று முன் உள்ளதால், பின் மற்று யாரும் என நிற்கலாமோ? சிவஞான சித்தியாருள் (சூ.6. செ.3) 'யாவும் எல்லாம்' என்றுள்ளது போலப் பிழை ஆகாதோ?

'சீருடைக்கழலே' என்பதைச் 'சீருடைக்கடலே' என்று ஏட்டைக் காட்டிப் பாட்டைத் திருத்திச் சிவாநுபூதிச் செல்வத்தை அழிக்கலாமா? 'சீருடைக்கழலே' என்று சிவத்தை அழைக்கலாம் என்னும் உண்மையை அறிய எத்தனைபிறவி எடுக்க வேண்டும்? சுந்தரர் அருளிய திருமுல்லைவாயிற்றிருப் பதிகத்தின் முதலில்

திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாதுறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்

என்னுந் திருப்பாடற்பகுதியில் உள்ள கழல்கள் எனப்படும் பொருள் யாது? அச்சீருடைக் கழல் வேறு இச்சீருடைக் கழல் வேறு என்று சைவ சித்தாந்தச் செம்பொருளை அனுபவித்துணர்ந்தோர் கொள்ளார். திருநாவுக்கரசர் அருளிய திருவடித் தலத்திருப்பதிகத்தை யுணராதார் யாதும் கூறலாம். ஆங்குச் சிவனுக்கு வேறுசிவனடிக்கு வேறு என்று கொள்வது அறிவாமோ?

திருக்களிற்றுப்படியார் உரையில் (பக்கம் 3) 'யான் நின்று' என்று பிரித்திருக்க வேண்டும். அங்கு 'யான் இன்று' என்றுள்ளது. என்னறிவிலார் அறிக என்றாதல் 'என்னறிவினார் அறிக' என்றாதல் இருக்க வேண்டும் இடத்தில் என்னறிதல் ஆர் அறிக என்றிருக்கின்றது. (பா.14) உரையில் 'நாதம் முதலாகப் பிருதிவியீறாக' என்றிருக்க வேண்டும். 'நாதம்' ஆண்டில்லை. 16ஆவது பாட்டுரையில் 'வியன் உலகினார்' என்ற பாடத்திற்குரை யிருப்பதையறியாது உலகிலார் என்று கொண்டிருக்கின்றார் பதித்தவர். 'இதில்' என்றதற்கு 'அதில்' என்றுளது. காருண்யமுதல் காருண்ய முறுதல் இரண்டற்கும் வேறுபாட-றியவில்லை. (பக்.11) எண்ணிட்டு என்பது என்றிட்டு என்றிருக்கின்றது. (பக். 38) 58ஆவது திருவெண்பாவிற் 'என்று' எனுமவையெல்லாம் 'அன்று' என்றாயின. இதனினும் (அறியாமையை அறிவிக்குஞ் சான்று) வேறு வேண்டா. அப்பாடலுக்கும் உரைக்கும் முரணாதலை உணராமையும் உண்மைப் பாடங் காணாமையும் பதித்தவர்க்கே உரியன. அந்நியம் அநந்நிய பேதம் அறியாமை (பக்கம் 5, 22, 25, 86, 87). அநந்நிய வைக்கியம் என்றதை அந்நியவைக்கியம் எனின், அந்நியம் ஐக்கியம் ஆமோ? ஐக்கியம் அந்நியமாமோ?

தத்துவப்பிரகாசம் என்னும் நூலில் உள்ள குற்றங்களுக்கு அளவேயில்லை. சொற்களைப் பிரிக்கவும் தெரியாதவர் பதிக்கலாமோ? பதித்தால் உள்ளது உள்ளவாறே அன்றோ பிரித்தல் வேண்டும்! வடமொழியில் வல்லார் என 'மார்ச்சனமும் அருடணமும்' எனப்பிரித்தது பொருந்துமோ? (முன்னுரை பக்கம்.37 நூற்பக்கம் : 101-2) அகமர்ஷணம் அகம் அர்ஷணம் எனப் பிரித்துப் பொருள் கோடற்பாலதோ? பக்கம் இரண்டிலே 'பரை ஈன்றும்' 'உரை ஈன்றும்' என்பது பிழை. தமிழிற் 'காண்கவும்' என்று ஒரு சொல்லாட்சி உண்டு என்று புதிதாகக் கணடோம்.

இவ்வாறு தமிழ்நூற் பதிப்புக்கும் தமக்கும் ஓர் உயரிய தொடர்புடைய ஒருவர் திருவாசகத்திற் பாடபேதம் கண்டு இதுவே சிறந்தது ஈதென்னலாம். முக்கூடற்பள்ளு, திருவானைக்காவுலா, அம்பிகாபதி கோவை முதலிய பதிப்புக்களில் இவரது புலமைத்திறம் அதிவிசித்திரமாய்த் தோன்றுதலைக் காட்ட ஈது போதாது.

திருச்சிற்றம்பலம்

44. இரும்புண்ட நீர்

சைவத்திருவாளர் (திருமந்திரமணி, துடிசைகிழார்) அ. சிதம்பர முதலியாரவர்கள் சில திங்களின் முன்னர்ப் பணித்தவாறு இதனை எழுதவிழைந்தேம்.

'இரும்புண்டநீர்' என்ற தொடர் செவிப்பட்டதும் நீரை யுண்ணு-தற்குரியது காய்ந்த இரும்பு என்னும் நினைவு தோன்றுமாதலின், 'காய்ந்த' என்னும் அடை வேண்டாததாயிற்று. இதனை உவமம் ஆக்கிய முன்னோர் எப்பொருளின் நோக்கத் தராயிருந்தனர் என்பதே இதனால் அறியற்பாலது.

புறப்பாட்டில் (21),

'கானப்பேரெயில், கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய, இரும்புணீரினு மீட்டற்கரிது' என்றுளது. அதனுரை, 'கானப்பேரென்னும்' அரண், வலிய கையையுடைய கொல்லனாற் செந்தீயின்கண்ணே மாட்டப்பட்ட இரும்புண்டநீரினும் மீட்டற்கரிது' என்பது. இதனால், மீட்டற் கருமை எனப் பிறவினைப் பொருளில் இவ்வுவமங்கொள்ள நின்றமை அறியலாம். கம்பராமாயணத்தில், (சடாயு. 104)

வரும்புண்டரம் வாளியின் மார்புருவிப்
பெரும்புண்டிற வாவகை பேருதிநீ
இரும்புண்டநீர் மீள்கினும் என்னுழையிற்
கரும்புண்டசொல் மீள்கிலள் காணுதியால்

என்னுஞ் சிந்தடி விருத்தத்தில், 'சீதையைக் கவர்ந்த இராவணன், காய்ந்த இரும்பு உண்டநீர் மீள்வதில்லை. அது மீள்வது என்றாலும் யான் கவர்ந்த சீதை என்கண் நின்றும் மீளாள் என்ற செய்தி காணப்படுகின்றது. இது தன்வினைப் பொருளில் அமைந்துளதேனும், முன்னது போலவே, இரும்புண்டநீர் மீட்டற்கரிது. அஃது ஒருகால் மீட்டற்கெளிதாய் விடினும், யான்கொண்ட சீதை மீட்டற்கரியவே என்று கொள்ள நிற்றல் காண்க. இரண்டனுள்ளும் மீட்டற்கருமையே கூறப்படினும், முன்னதில் அஃறிணையாய கானப்பேரெயில் தானாக மீளாதாகலின், பிற -வினையாலும், பின்னதில் உயர்திணையாகிய சீதை தானே மீள்வதற்கியலுமாதலின் தன்வினையாலும் உணர்த்தலாயிற்று

'நீரினும்' 'மீள்கினும்' என்னும் உம்மை, உவமம் மீளுதல் கூடினும் உவமேயம் மீளாமையை உறுதிப்படுத்து மியல்புற்று மீடற்கரிய இரும்புண்டநீர்க்கு அவ்வருமையிற் றளர்ச்சியும் மீடற்குரிய உவமேயத்திற்கு அவ்வருமையாக்க வளர்ச்சியும் எளிமை நீக்கமும் கொள்ளச் செய்தலறிக.

இரும்பனன்றுண்டநீரும் போதருங்
கொள்க என்றன்
அரும்பிணி பாவமெல்லாம்
அகன்றன என்னைவிட்டுச்
அரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டென்
கண்ணிணை களிக்குமாறே

என்னுந் திருக்குறுந்தாண்டகத்து (13) விருத்தத்தில், 'இரும்பானது பழுக்கக் காய்ந்து குடித்த ஜலமும் வெளியிலே கலந்துவிடும். இதை உறுதியாக எண்ணுமின். ஏன்எனில், என்னாற் செய்யப்பட்டதும் அநுபவித்தே தீரவேண்டுவதுமான பல வகைப்பட்ட பாவங்களெல்லாம் என்னைவிட்டுப் போயின. திருவரங்களை இடைவிடாது தரிசித்து என்னிரு கண்களுங் களிக்கும்படி, என் அரும்பிணி பாவமெல்லாம் என்னைவிட்டு அகன்றன என்றால், இரும்புண்டநீர் போதரச் சொல்ல வேணுமோ? என் பாவத்தைப் போக்கின அகடிதகட நாஸாமர்த்யத்தாலே இரும்புண்ட ஜலமும் புறப்படும் என்று கொள்க" என்றுள்ளதாக அதனுரை விளக்குகின்றது. இதில், ஆழ்வார் சாதுரிய வசனமாக மீட்டற்கரிய என்பாவங்களை என்கணின்றும் அரங்கநாதன் மீட்டருளினான். இரும்புண்ட நீர் மீளுதல், சொல்லாதே பெறப்படும் என்பதறிக. அறியவே இவ்வாழ்வாரும் மீட்சியருமைப் பொருளிலேதான் இவ்வுவமத்தை ஆண்டாரெனல் வெளிப்படும். முறையே இரும்பையும் நீரையும் தமக்கும் தமது பாவத்திற்கும் ஒப்பாக்கிய இவரே இவ்வுவமத்தை வேறு கருத்திலாண்டமை பின் குறிக்கப்படும்.

காலமறை தேசமறை கன்மறைபோற் காண்பாரும்
பாலுணும்புள் ளிப்பிமீன் பக்கிதீக் - காலும்

இரும்பினீர் மின்னலிலே யேற்றபணம் பார்ப்பார்
தரும்பொருளைக் கொள்ளுவார் தாம்

ஒழிவிலொடுக்கம் சத்திநிபாதத்.14

என்பதனுரையாளர். 'இரும்புதான் ஏற்கும் நீர் மாத்திரம் எடுத்துக் கொண்டு அதனை மீளவிடாதிருத்தல் போலத் தமக்குவேண்டிய உபதேச மொழிகளை ஏற்றுக்கொண்டு மீளவிடாதிருத்தலின் 'இரும்பினீர்' என்று கூறினார்' என வரைந்துள்ளார். இதில், காய்ந்த இரும்பு நீரை ஏற்றுலும் மீளவிடாமையும்பற்றி உவமமாயிற்று.

கனலிரும் புண்ட நீரின் விடாது
மனவயி னடக்கி மறைந்தன னொழுகித்
தன்குறை முடிதுணை பெருங்கதை 3.25:71-3

என்பதில், நெருப்பிற் காய்ச்சிய இரும்பு உண்ட நீர் வெளிப்படாதது போல எடுத்த வினை முடித்திடும்வரை மனத்திலடக்கிய மறை வெளிப்படாதிருத்தல் வேண்டுமெனல் காண்க. இங்கு உட்கொள்ளல் வெளிப்படாமை பற்றிய வுவமமாயிற்று. ஆயினும், முன்னவற்றொடு இவ்விரண்டனிடை வேற்றுமை சிறிதுண்டு. மீட்டற்கருமை, ஏற்று மீளவிடாமை, குறித்த காலம் வரை வெளிப்படாதுட் கோடல் என்னும் மூன்றும் ஒன்றாகாமல் வேறுபடுதலறிக.

இரும்பனன் றுண்ட நீர்போல்
        எம்பெருமானுக் கென்றன்
அரும்பெற லன்பு புக்கிட்
        டடிமைபூண் டுய்ந்து போனேன்
வரும்புயல் வண்ண னாரை
        மருவியென் மனத்து வைத்துக்
கரும்பினின் சாறு போலப்
        பருகினேற் கினிய வாறே

என்னுந் திருக்குறுந்தாண்டகத்து (5) விருத்தம், 'இரும்பானது காய்ந்து, அக்காய்ச்ச லடங்கும்படி குடித்த ஜலம் போலே வகுத்த சேஷியான ஸர்வேஸ்வரன் விஷயத்திலே என்னால் பெறுதற்கரிய அன்பை, அவன் விஷயத்திலே வைத்து அடிமையிலே அந்வயித்து உஜ்ஜீவித்தேன். அன்றியும், ஆஸ்ரிதரிருந்த இடத்தே தேடி வருகிற மழைக் காலத்து மேகம்

போன்ற திருநிறத்தை யுடையவனைக்கிட்டி, என் மனத்திலே பொருந்தவைத்து, கரும்பினுடைய இனிய சாறுபோல அநுபவிக்கப் பெற்ற எனக்கு இனிதாயிருந்தபடி என்றான். கரும்பின் இன்சாறு போலப்பருகினேற்கு விழுங்குகை போய்ப் பருகலாம்படியாயிற்று. ஆழ்வாருடனே கலக்கக் கலக்கப் பருகலாம்படி ஒரு நீரானான்' என்னும் பொருள் பயத்தலறிக. இதில், எம்பெருமானுக்கு அடிமை பூண்ட திறத்தில் இரும்புண்டநீர் உவமமாயிற்று. அருளாண்டவனுக்கு இரும்பும் அன்படியர்க்கு நீரும் ஒப்பாதலறிக. மீளா அடிமைக்குமாம்.

பிள்ளைப் பெருமாளையங்கார், திருவேங்கடத் தந்தாதியில்,

நெடு வேங்கடத்தான்,

ஈரவிரும்புண்ட ரீகப்பொற் பாதங்கள் என்னுயிரைத்
தீர விரும்புண்ட நீராக்கு மாறுள்ளஞ் சேர்ந்தனவே

என்றதில், இவ்வுவமத்தை ஆண்டுள்ளார். திருவேங்கடத்திறைவன் திருவடிகளையும் தம் உயிரையும் இரும்பிற்கும் நீர்க்கும் உவமேய-மாக்கினார். ஒன்றின் ஒன்று இலயித்தல் பற்றிய உவமம் இது. அவனேதானேயாம் சைவசித்தாந்த முத்தி நெறியாகிய அத்துவிதத்தின் வேறான ஒன்றினொன்றிலயமா யொற்றுமைப் படுதலைச் சிவஞானபாடியத்தில், எடுத்துக் காட்டி அத்துவிதத்தின் வேறாத-லுணர்த்தினார்.

திருவாய்மொழி (க0.ப.க0.தி.ரு.) யருளிய நம்மாழ்வாரும் இவ்வுவமையை ஆண்டுள்ளார். ஆண்டு உரையாசிரியர் இரு பொருள் கொண்டு விளக்கினர். அவற்றையும் ஈண்டு உணர்தல் வேண்டுவதே.

போரவிட் டிட்டென்னை நீபுறம்
போக்கலுற்றாற் பிள்ளையான்
ஆரைக்கொண் டெத்தையந் தோஎன
தென்பதென்? யானென்பதென்?
தீர விரும்புண்ட நீரது
போல என்னாருயிரை
ஆரப்பருக எனக்
காராவமு தானாயே

(அ) 'அக்நி ஸந்தப்தமான இரும்பு நீரை நிஸ்ஸேஷமாகப் புஜிக்குமாபோலே என் ஆத்ம வஸ்துவைச் சமய புஜிக்கைக்காக எனக்கு உன்னுடைய நிரதிசய போக்யதையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய்.'

(ஆ) 'காய்ந்த இரும்பு அக்காய்ச்சல் தீர நீரைப் பருகுமா போலே என்னுடைய ஸந்தாபமெல்லாம் தீரும்படி எனக்குப் பண்டு நிர திசயை போக்யமானவனே.' (ஒன்பதினாயிரப்படி)

(க) 'தன் காய்ச்சல் தீரும்படி இரும்பானது உண்ட நீர் போலே என் ஆத்மாவின் விடாயெல்லாம் தீரப் பரிபூர்ணமாகப் பருகுகைக்கு எனக்கு த்ருஷ்ணை தொடாத அம்ருதமானாயே.'

(உ) 'இரும்புண்ட நீர்போல் என் ஆத்மாவை முற்றப் பருகினான் என்கிறபடியே நீ பூரணமாகப் பாகம் பண்ணுகைக்கு உறுப்பாக உன் போக்யதையை எனக்கு பிரகாசிப்பித்தாய்'. (பன்னீராயிரப்படி)

'அக்நி சந்தப்தமான இரும்புதாபந் தீரும்படி நீரைப் பருகினாற் போலே உன்னைப் பிரிந்த என்னுடைய சந்தாபமெல்லாம் தீரும்படி உன்னைப் பருக எனக்கு ஆரா அமுதானாய். இனிக்குறையும் நீயே செய்தருளாய்' (ஆறாயிரப்படி)

'காட்டவொண்ணாதாற் போலக்காட்டி அகப்படுத்தினாய்.' (இருபத்து நாலாயிரப்படி)

இவ்வுரையனைத்தும் பெரும்பாலும் ஒன்றனையொன்று விளக்குதலன்றித் தம்முள் வேறுபடுவனவல்ல. இவற்றால் நீர் உயிர்க்கொப்பாயும், பெருமானுக் கொப்பாயும் கூறப்பட்டிருத்தல் காணலாம். இரும்பு நீரைத் தன் காய்ச்சல் தீரப்பருகுதல் பெருமான் உயிரை முற்றப்பருகி அகப்படுத்தற்கும் ஒப்பாக் கொள்ளப்பட்டது. பெருமான் உயிரைப் பாகம் பண்ணுதலாவது தனது போக்யதையை அதற்குப் பிரகாசிப்பித்தல் என்று முன்னுரைத்தமை காண்க.

இறைவனை உயிர் பருகுதல் பற்றிய சாதுரிய வசனம் சைவ வைணவம் இரண்டனுள்ளும் உண்டெனினும் கருத்து வேறுபடுதலை அவ்வச் சமயாநுசாரிகளே அறிவார்கள். சொல்லொருமை பற்றி மயங்குதல் கூடாது. திருமங்கையாழ்வார் விழுங்குகை போய்ப் பருகலாயிற்றென்ற நயமும் ஈண்டு நினைக்கத்தக்கது.

'பார்த்த பார்வையா லிருப்புண்ட நீலெனப் பருகுந்தீர்த்தன்'

திருவிளையாடற் வாதவூரடிகளுக்கு, (47) என்பதில் குருவை இரும்பாயும் சீடனை நீராயும் குறித்ததறிக. ஈங்கும் மீளாமையே கொள்ள நிற்றல் காண்க.

திருவரங்கக் கலம்பகம் - 95

அரும்புண்டரீகத் தடியிணைக்கென் னெஞ்சம்
இரும்புண்ட நீராவ தென்றோ - விரும்பி
அறந்திருந்துங் கோயி லரங்கா வுனைநான்
மறந்திருந்தும் மேற்பிறவாமல்

என்பதறிக

திருமூல நாயனார், 'இரும்பிடை நீர்' என்னும் உவமத்தையமைத் துரைத்த திருமந்திரத்தின் முன்னும் பின்னுமுள்ள திருப்பாடல்களை நோக்கிப் பொருள் கோடல் தக்கது. அவர் தம்மை நீராயும் தம்மை யுள்வாங்கிய பரம்பரத்தை இரும்பாயுங் குறித்தமை தெளிவாகும். போத பூரணவெளியில் ஏதமற நிற்கும் ஆன்மாவின் சுத்த ஞானம் நண்ணித் தேசுறும் அதனான் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து நேசமோ டுயர் பரத்து நிற்பது (ஆகிய) ஞான நிட்டை"(சிவப். 84) என்றதும் அந்நிலையே. அங்குப் பரஞானம் தன்னுள்அடங்கிய ஆன்மாவை அடக்கிக் கோடலையே இரும்பிடைய நீரென உள்வாங்கியதாகக் கூறினார். அது ஞானயோகத்துக் குவமை. சுத்தாத்துவிதத்துக் குவமையன்று. துரியாதீத நிலையை அடுத்த திருமந்திரத்துள் 'உயிரும் பரமும் சிவமும்........ துரியமேல் விழுங்கும்' என்றதறிக. அதன் பின்னும், 'பரமுடன் நந்தமையுண்டு மெய்ஞ்ஞான நேயாந்தத்தே நந்தியிருந்தனன் நாம் அறியோமே' என்ற முடிவையுணர்க. இதனால், திருமூலர் தம்மை நீராயும் தம்மை விழுங்கிய திருவருளை இரும்பாயும் குறித்தருளினார் என்பது பெற்றாம். இதனைத் 'தூய அறிவுக்கறிவாய கண்டமாம் நீங்காச் செறிவுக்குள் நில்லாமற் சென்று'ழல்வாரறிதலரிது. ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுமலத் திருப்பதிகத்தின் முதற்றிருப்பாட்டில், 'ஏதிலென் மனத்துக் கோரிரும்புண்ட நீரை, எண்வகை யொருவனை, எங்கள் பிரானைக், காதில் வெள்குழையனைக் கடல் கொள மிதந்த கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே' என்றுரைத் தருளினார். இதில், தம் மனத்தை இரும்பாயும் கடவுளை நீராயும் குறித்தருளினார். அருளவே,

இரும்புண்டநீர் அவ்விரும்பினின்றும் மீளாதவாறு போலத் தம் திருவுள்ளங் கொண்ட சிவபெருமான் அத்திருவுள்ளத்தினின்றும் மீளான் என்றவாறாயிற்று. ஆகவே, அக்குருநாதர் தம் திருப்பாட்டில்,

நோக்குவேன் உன்னையே நல்லன நோக்காமைக்
காக்கின்றார் கண்டுகொண்டார் ஐவர் காக்கிலும்

வாக்கென்னு மாலை கொண்டுனை ....
ஆர்க்கின்றேன் பரவையுண் மண்தளியம்மானே

வைத்தனன் தனக்கே தலையும் என்னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
யுய்த்தனன் தனக்கே திருவடிக்கடிமை

உன்னையல்லால் இனி யாரை நினைக்கேன்

வாள்கொளி புத்தூர் மாணிக்கத்தை மறந்து
என் நினைக்கேன்

நள்ளாறனை மறந்து என் நினைக்கேன்

நினைப்பவர் மனம் நீங்கலில்லான்

விரும்பி நின்பாதமே நினைந்தேன் வினைகளும்
விண்டன

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம்
பாவித்தேன்

நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின் நினையப் பணித்தாய் சலம் ஒழிந்தேன்

என்றுரைத்தவற்றை நோக்கி மீளாதவாற்றைத் தெளிதலினது. அன்றியும்,

நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்திருந்த
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளியுறையும்
எந்தாய் உன்னையல் லால்இனி ஏத்தமாட்டேனே

என்றும்,

மையார் கண்டத்தினாய் மதமாவுரி போர்த்தவனே
பொய்யா தென்னுயிருட் புகுந்தாய் இன்னம்
போந்தறியாய்
கையா ராடரவா கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்னமுதே எனக்கார்துணை நீயலதே

என்றும் பாடியருளிய வுண்மையை உணர்தல் நன்று.

இவ்வாறே திருநாவுக்கரசு நயானாரும்,

என்மனமே ஒன்றிப் புக்கனன்போந்த கவடில்லையே

போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி

போகா தென்னுள்ளத் திருந்தாய் போற்றி

நீங்காதென்னுள்ளத் திருந்தாய் போற்றி

குழைவார் சிந்தை புக்கிருந்து போகாத புனிதன்

என்றருளினார். இடமும் இடப்பொருளும் (ஸ்தாநமும் ஸ்தாநியும்) ஒன்றாய் வேறாகா நிலையைக் குறிக்கும் வண்ணம் ஆதேயமான சிவனை ஆதாரமான சிந்தையாக் கூறினார்கள் ஆளுடைய நம்பிகள்.

'இரும்புண்டநீர்' என்னும் உவமம் மீட்டலருமை, மீளாமை, இலயம், ஏற்றுக்கொண்டு வெளிவிடாமை, உண்ணுதல், உட்புகுந்து வெளியேகாமை, உள்வாங்கல், காட்டியகப்படுத்தல் என்னும் வினை பற்றியது; அவ்வினை பலவும் நீர் இரும்பினுட் புகுதல், இரும்பினீங்கி மீளாமை என்றிரண்டாய். மீளாமை என்னும் ஒன்றாகும். ஆகவே மீளாமைக்கே அவ்வுவமம் தொன்று தொட்டுக் கொள்ளப்பட்டு வருகின்றது எனக்குறித்தலே இக்கட்டுரையின் பொருள்.

திருச்சிற்றம்பலம்

45. திருமந்திரம்

திருமுறை பன்னிரண்டனுள் திருமந்திரமும் பதினொன்றாந் திருமுறையும் எண்ணற்ற பிழைகளுடன் இருக்கின்றன. அவற்றைத் திருத்தஞ்செய்து நல்ல பதிப்பாக வெளியிடுதல் சைவர்க்குள்ள தலையான கடமைகளுள் தலையானது. 'சித்தாந்தம்' ஆசிரியரும், சிவபக்தி முதலியவற்றில் சாலச் சிறந்தவரும், என்பால் மெய்யன்பும் நட்பும் உடைய வருமாகிய திரு. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள், நேற்று வேளூரில், திருமந்திரங்களில் உள்ள பாடபேதங்களைக் குறித்துத் தொடர்பாகக் கட்டுரை எழுதிவரும் வண்ணம் தூண்டினார்கள். அவ்வாறே செய்ய இசைந்து முதலில் இதனை எழுதினேன். அறிஞருலகம் இதனது உண்மையை உணர்ந்து ஆவன செய்க.

இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புகள் பற்பலவாகும். அவற்றுள் பாடபேதங்கள் மிகக்கொண்டு விளங்குவது சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பு. அப்பதிப்புள்ளும் ஒன்று அத்தகையது. திரு. மு.அருணாசலம் எம்.ஏ. அவர்கள் புகழுடல் பெற்ற ம.பா. அவர்களது விருப்பத்திற்கு இசைந்து, பல ஏடுகளை ஒருங்குவைத்து நோக்கச் செய்த ஆராய்ச்சி வெளியீடு அது. அதை மட்டும் வைத்துக் கொண்டு நல்லறிவாளர் பலர் ஒருங்குகூடித் தக்கபாடம் இவை என வரையறுத்து ஒழுங்கான பதிப்பொன்றை வெளியிடல் இன்றியமையாதது

அதற்கு இக்கட்டுரை ஒரு தூண்டுதல் ஆகும் என்று கருதித் துணிந்தெழுதுகின்றேன்.

திருமந்திரத்தில் இன்றைய பாடபேதங்களின் நிலைமையை அறியச் சிற்சில எடுத்துக்காட்டுகளால் விளக்குவதே இம் முதற் கட்டுரை.

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே

என்றதில் அங்கே என்றது, 'அங்கி' என்றிருந்து கெட்டது. அங்கி-நெருப்பு. மூலாக்கினியைக் குறிப்பது அது.

'குருநிந்தை' என்னும் தலைப்பில் மூன்றாவது பாடலாக,

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே 532

என்று உளது. இதில், குருவைப் பத்தினி பத்தர் என்று சொல்லுதல் பொருந்துமோ? பத்தினி பத்தர் என்றால் பொருள் என்ன, பெண்டாட்டி தொண்டர் என்னும் பொருளினும் வேறு பொருள் உண்டோ? பெண்டாட்டி தொண்டர் சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்க்கு எய்தும் கேடுகளைச் சொல்லவோ இப்பாடல் தோன்றியது? குரு லட்சணங்களுள் பத்தினி பத்தியும் அடங்குமோ? ஒரு சிறிதும் ஆராயாமலேயே இது குற்றம் என்று துணிதல் சிற்றறிவினார்க்கும் இயலும் அன்றோ? இப்பாடத்தைக் கொண்டுள்ள பதிப்புக்களும் குறிப்புரை முதலியனவும் ஏனைய இடங்களில் எப்படி இருக்கும் என்று கருதியுணர்தல் எளிதன்றோ?

'சத்தினி பாதர்கள்' தத்துவ ஞானிகள் என்று இருந்து இந்நிலையை அடைந்துளது இது. மோனை நயம் முதலியனவும் இதன் உண்மையை நிலைநாட்டும்.

பா. 1923, பக்கம் 756-இல் 'ஆண் பெண் கலக்கும் காலத்திலும் விந்து வெளிப்படாமல் போகம் செய்வது தான் சிவயோகம்' என்று உரையெழுதினார் ஒருவர். அதைக் கழகப் பதிப்பிற் காணலாம். இது சிவயோகம் ஆயின், இதைப் பெறவேண்டி மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கல் ஏன்? தோத்திரம் ஏன்? சாத்திரம் ஏன்? கோயில் ஏன்? மடம் ஏன்? குரு ஏன்? சீடர் ஏன்? பத்தினியும் அவள் பக்தனும் ஆதலே போதாதோ? இப்போகம் நாய் நரி முதலியவற்றிற்கும் உண்டா? இல்லையா? இது சிவயோகம் ஆகுமோ?

'மிகையில்லை' (1804) என்றது 'வினையில்லை' என்று மாறிற்று. 'ஆசற்ற சற்குரு அப்பரமாமே' (1574) என்றதில் 'அம்பலம் ஆமே' என்று உளது. 'அப்பரம்' என்றதே அங்கு இருத்தற்குரியது. அதற்குக் கண்ணிற்கண்ட குருவே காணாத சிவம் என்னும் பொருள் ஆகும். 'சிவகதியேகதி, மற்றுமுள்ள எல்லாம் பவகதி' (536) என்பதில் 'பகவதி' வந்து காட்சி தருவது சைவர்செய்த நற்கதி போலும்.

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல்
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம்தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவாநந்தம் சாயுச் சியமே 1512

என்பதில் மூன்றாவதடியில், 'அன்றி' என்று இருந்தது. அது 'தன்னை' எனக் கெட்டது. அக்கேடு சிவத்தைச் சாராமல் நீங்குதல் சைவம் என்று பொருள் பயக்கும் கேட்டுக்குக் காரணம் ஆயிற்று. சிவச்சார்பு இல்லாதது சைவம் ஆமோ 'சிவம் அன்றி' என்னும் பாடல் உண்டு என்று அப்பதிப்பே காட்டுகின்றது. 'சைவம் பசுபாசம் சாராது நீவுதல்' என்று பிறிதொரு பாடமும் உள்ளது.

திருச்சிற்றம்பலம்

46. ஒரு பாட்டின் உண்மையுரை

சைவ சித்தாந்தம் பதி, பசு,பாசம் மூன்றும் என்றும் உண்டு என்ற கொள்கையது. திருவாசகத்துள் 'மூலமாகிய மும்மலம், 'மலங்கள் ஐந்து' என்றபடி பாசம் மூன்றும் ஐந்து மாகப் பிரித்துக் கூறுதல் ஆகம நியமனம். பசுக்கள் எண்ணில் அடங்காதவை. அவை பாசத்தாற் கட்டுண்டமையாலே பசு எனப்படும். 'பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை -யடைய முத்தி' என்றது தமிழ்ச் சிவாகமம் (சிவ ஞானசித்தியார்).

பாசத்தை விடுதல் வீடு. பதியினையடைதல் பேறு. இரண்டும் (வீடும் பேறும்) இயைந்தே வடசொல்லால் 'முத்தி லாபம்' எனப்படும். முக்தி - வீடு, லாபம் - பேறு. உயிர்கள் பசுத்துவம் (மலத்தோடு கூடிய தன்மை) நீங்கல் ஒரு பகுதி. பதியையடையுஞ் சிவத்துவம் ஓங்கல் ஒரு பகுதி. இருபகுதியும் ஒன்றாதலே அம் முத்திலாபம், மோட்சலாபம். நோய் நீக்கம் பலம் எய்தல் இரண்டும் சேர்ந்ததே நலம். நோய் நீங்கல் மட்டும் நலமாகாது. வன்மையுறாமல் உடம்பில் உயிர் இருந்தால் என்னோ பயன் ?

பாசத்தின் பிரிவு முற்குறித்த மூன்றும் ஐந்தும் ஆம். அவை 1. ஆணவமூலமலம், 2. திரோதாயி, 3. மாயை, 4. கன்மம், 5. மாமாயைத் திரட்சி (மாயேயம்).

1. மோகம்மிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலவாணவம் ஒன்று

2. (முயங்கி நின்று பாகம்மிக உதவு) திரோதாயி ஒன்று.

3. (பகர்) மாயை ஒன்று.

4. (படர்) கன்மம் ஒன்று.

5. (தேகம் உறுகரணமொடு புவன போகச்செயல் ஆரும்)
மாமாயைத் திரட்சி ஒன்று.

என்று ஆக மலம் ஐந்து என்பர். ஐந்தும் மாறாது அருள் என்பது அரிது என்பர் அறிந்துளோரே. என்னும் சிவப் பிரகாசத் திருவிருத்தம் (32) மலம் ஐந்தனுடைய பெயரைச் சிறிது விளக்கத்தோடு கூறியவாறு உணர்க.

'கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும் என்றது மேற்குறித்த தமிழ்ச் சிவாகமம், எனவே கன்மம் எனப்படுவது மூலகன்மம் காமியகன்மம் என இருவகைப்படும்' எனல் வெளிப்படும்.

சிவப்பிரகாசம் சிந்தனையுரையிலே (24)

மூலமலத்தின் காரியமாய் மூன்று மலத்திற்கும் முன்னையதாய் மூன்று மலம் மூன்று அவத்தையென்று நின்று செய்யும் இருவினையையே ஈண்டு முன்னைவினை எனக் கூறியது என்று அறிக. இது தொண்டர் சீர்பரவுவார் ஆகியஅருண்மொழித் தேவர், கண்ணப்ப நாயனார் புராணத்திலே (154)

முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும் அற
அன்புபிழம்பாய்த் திரிவார் அவர்கருத்தின் அளவிளரோ

என்றருளினார்.

இதிலே 1. யாக்கையின் பரிசும்

2. வினையிரண்டும்

3. மலமூன்றும் என மூவேறு ஆக ஆறு கூறிய வாறுணர்க. உணரின் இருவினை வேறு மும்மலம் வேறு என்பது தெளிவுறும். அது தெளிந்தார்க்கு அச் சேக்கிழார் பெருமகனார். திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே (129)

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய்யஞ்செழுத்து, அரசை, இக்கடல்
ஒருகல் மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ

எனப் பாடியருளியது ஒரு சிறிதும் ஐயுற இடம் கொடாது.

இப்பாடலுள் 'அஞ்செழுத்து' என்றது வினைமுதல் (எழுவாய்). வினை (1) 'ஏறிட அருளல் (2) ஏற்றிடல்.' இவ்விரண்டு வினைக்கும் முதல் (கர்த்தா) ஆகிய அஞ்செழுத்து, மாக்களை ஏறிட அருளும் பெருமையுடையது. அம் மாக்கள் எங்கு ஏற? கரையில் ஏற. எங்கு

நின்றும் ஏற? கடலினின்றும் ஏற. அக்கடலில் மாக்கள் சேர்ந்தது எப்படி? கடலில் வீழ்கின்றனர். ஏன் கல்லொடு சேர்த்துக் கயிற்றால் கட்டப்படுதனால், மக்கள் என்னாது மாக்கள் என்றது ஏன்? 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்றது தொல்காப்பியம். 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றதும் அதுவே 'கடலில் வீழ் மாக்கள்' அறிவிற் குறைந்தவரோயாவர். கடலில் வீழ்வதும் கரையேறாமையும் அறிவாமோ? தாம் வீழ்ந்த கடலினின்று கரையேறுவது இயலுமானால், ஏறிடல் கூடும். இயலாதேல் வீழ்ந்த கடலில் ஆழ்ந்து வருந்துவதேயன்றி வேறுஎன்ன செய்யமுடியும்? அம் மாக்கள் கட்டப்பட்டதற்குக் கருவியும் ஒன்று அன்று இரண்டு. மாக்கள் இரண்டாலே மூன்றொடு கட்டுற்று வீழ்ந்த கடல் உவர்க்கடல் அன்று. பவ (பிறவிக்) கடல். பரிமேலழகர் பத்தாவது குறளுரைக்கண், 'காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவிப் பெருங்கடல் என்றார்'. எனத் திருவள்ளுவரது திருவாய் மொழியொன்றன் உட்கிடையை விளக்கினார். அதனால், அக்கடல் பிறவிக்கடல் என்பதும் அது பெருங்கடல் என்பதும் யாவர்க்கும் நன்கு தெரியும். இப் பிறவிப் பெருங்கடலை நீந்துதல் இன்றியமையாதது. அந்நீத்தம்உற வேண்டின் இறைவனடி சேர்தல் வேண்டும். சேர்தல் இடைவிடாது நினைத்தல். (3. உரை) இறைவன் பொருள் சேர்புகழைப் புரிதலும் வேண்டும். உள்ளம் உரை உடல் ஆகிய முப்பொறி (திரிகரணத்து)க்கும் ஒருமை நிகழ்ச்சி இருப்பின் அன்றிப் பயன் எய்தாது உயிர். மலர்மிசையேகினான் மாணடி சேர்தல் உள்ளத்து நிகழ்ச்சியாயது. இடைவிடாது நினைத்தல் அது. இறைவன் பொருள் சேர்புகழைப் புரிதல் உரைநிகழ்ச்சி. புரிதல் – எப்பொழுதுஞ் சொல்லுதல் (5. உரை) பொறிவாயில் ஐந்து அவித்தான்பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல் உடலது நிகழ்ச்சியுமாம். ஆதலால், 'இறைவனை, நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலும் செய்தார் வீடுபெறுவர்' என்றது அவரது விளக்கவுரை.

கடலில் வீழ்கின்ற மாக்கள், கரையேறாது தொடர்ச்சியாய் வருந்துதற்குக் காரணம் கல்லொடு கட்டப்பட்டிருத்தலேயாகும். அக்கட்டுப்பாட்டிற்கு ஒரு கருவி யாயது கயிறு. கயிற்றைப் பாசம் என்பர் வடசொல்லர். பிறவிக்கடலில் வீழும் மாக்களைக் கட்டுங்கயிறு இருவினை. அக்கயிற்றாற் சேர்த்துக் கட்டப்படுங்கல் மூன்றும் மும்மலம். மும்மலக் கல்லொடு சேர்த்து இருவினைக் கயிற்றாற் கட்டப்பட்ட

உயிர்கள் மக்களின் வேறாய மாக்கள். அவர்கள் அறத்தின் சார்புற்று, இறைவன் பொருள்சேர் புகழைப் புரிந்தனர். திருவைந்தெழுத்தை ஓதினர். ஓதியதால், இருவினைக்கட்டு அவிழ்ந்தது. அவ்விருவினைச் சார்பு அறியாமையால் உண்டாயிற்று. அறியாமை உள்ளிருள். அவ்விருள் புறத்திருளினும் கொடியது. புறத்திருள் பிறபொருளைக் காட்டாது. தன்னுருவத்தைக் காட்டும். அகத்திருள் உயிரையும் உயிருக்குயிராய உணர்வையும் காட்டாது. தன்னையும் காட்டாது. அக்கொடிய இருள்தான் இருவினைக்கு முதல். அதனால்தான் திருவள்ளுவர், 'இருள்சேர் இருவினை' என்றார். இறைவனது பொருள்சேர்புகழ் திருவைந்தெழுத்தை இடைவிடாது எப்பொழுதுஞ் சொல்லும் அறம் உற்றார் மாட்டு இருள்சேரிரு வினையுஞ் சாராதொழியும், அவ்விருவினைக் கயிறு அறுந்தகன்றது. அவ்வகற்சி மும்மலக் கல்லும் 'விட்டொழிதற்கு ஏதுவாயிற்று. கல்லும் கட்டும் ஒழியவே மாக்கள் கரையேறினர். 'அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப் புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்குமூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடில்' வேறு என்றும் இருவினைப் பாசத்தால் மும்மலக்கல்லின் ஆர்த்தலின் காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவிக்கடல் வேறு என்றும் அறிஞர் கருதார்.

'திருவஞ்செழுத்து', 'வேறு', 'அருள்' வேறு அல்ல. 'அஞ்செழுத்தருள் நிலை' என்னும் தொடரே அதனை உணர்த்தும். 'ஆதியும் அந்தமும் இலா அரும்பெருஞ் சோதி' வேறு அன்று. 'அந்தம் ஆதிகள் இலாத அஞ்செழுத்தருள்' வேறன்று. அஞ்செழுத்து, இரும்புதருமனத்ரையும் ஈர்த்து, ஈர்த்து, எலும்பையும் உருக்கிக் கரும்புதரு சுவையை ஒப் பெனக்கருதி ஒருவாறு களிக்கச்செய்யும் அளவில்லாத பேரின்பம் விளைக்கும் ஆற்றல் உடையது. அத்திருவைந்தெழுத்து என்புள் உருக்கி, இருவினையை ஈடழித்துத் துன்பம் களைவதும் மட்டும் அன்று. துவந்துவங்கள் தூய்மைசெய்யும் பேராற்றல் அஞ்செழுத்துக்கு அன்றி மற்று எதற்கும் இல்லை. முன்புள்ளவற்றை முழுதும் அழிக்கும் வன்மை அதற்கே உண்டு. அதனைச் சேக்கிழார் அருளியவாறு உணர்தல் வேண்டும்.

அஞ்செழுத்து அருளும்; ஏறிட அருளும்; மாக்கள் ஏறிட அருளும்; வீழ்மாக்கள், கடலில் வீழ்மாக்கள், பவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட அருளும், (காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி) வருபவக்கடல்.

ஆர்த்தலின் பவக்கடலில் வீழ்கின்றனர் மாக்கள். எவற்றொடு ஆர்த்தலின்? கல்லொடு ஆர்த்தலின். என்னகல்? மலக்கல். எத்தனை மலம்? மும்மலம். மும்மலக்கல்லும் ஒருகல்லோ முக்கல்லோ? மலத்தைக் கல்லாக வுருவகம்செய்ததால் மலம் மூன்றும் கல்மூன்றாயின. ஒரு கல்லாயின் ஒருகயிறு போதும். இரு கயிறு வேண்டா. மலக்கல் மூன்றாயவற்றால் வினைக்கயிறு இரண்டு வேண்டும். இத்திறத்தில் அமைந்த வாக்கியம் இது:- இருவினையாய பாசத்தால் (கயிற்றால்) மூன்றுமலக் கல்லொடு சேர்ந்து ஆர்த்தலின் (கட்டப்பட்ட) தால், வருபவம் (பிறவி) ஆகிய கடலில் விழும். மாக்கள் (ஆன்மாக்கள்) (பேரின்பக்) கரையில் ஏறிட அருளும் மெய்ம்மையுள்ள திருமந்திரம் அஞ்செழுத்து. இதுவரையில் அஞ்செழுத்தின் இயல்பாய நிகரிலாப்பெருமை உணர்த்தப் பட்டது, இனிச் செயற்கையாய் நிகழ்ந்த சிறப்பு உணர்த்தப்படுகிறது. அது.

'அரசை இக்கடல் ஒருகடல் ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?' என்பது. இதனில் 'அரசு' என்றது செயப்படு பொருள். அதனை ஐயெனப்பெயரிய வேற்றுமைக் கிளவியாலறியலாம். அஞ்செழுத்து எழுவாய். அரசு செயற்படுபொருள். ஏற்றிடல் தொழிற் பெயர்ப் பயனிலை. அப்பயனிலையை இரண்டனுருபுவிரித்து, ஏற்றிடலை எனச் செயப்படுபொருளாக்கி உரைக்க வேண்டுமோ என்னும் வினாப் பயனிலையொடு முடித்தல் கிளவியாக்கம் அறிந்தோர் கடனாகும் அஃதறியாது தம் அறியாமை தோன்றக் கிளவிப் பிழை, தோற்றலாமோ? அஞ்செழுத்தரசு என்று தொகைப் பெயராகக் கொண்டால், பாட்டின் உண்மைப் பொருளை உணர்ந்ததாமோ? 'இருவினைப் பாசம்' என்றதால் ஒருகயிறு என்றும் 'மும்மலக்கல்' என்றதால் 'ஒருகல்' என்றும். 'பவக்கடல்' என்றதால் 'இக்கடல்' என்றும், 'மாக்கள் ஏறிட' என இயல் புணரச் சொல்லியதால், செயற்கையுணர்த்தி, 'ஏற்றிடல்' என்றும் கேட்டோரும் கற்றோரும் கருதவைத்த சேக்கிழாரது செந்தமிழ்ச் செய்யுட்டிறத்தை அளவிட நம் ஆசாரியர் உமா பதி சிவனார்க்கு எளிது அல்லது எத்தேவர்க்கும் அரிதேயாம்.

இரண்டு கயிறு கொண்டு மூன்று கல்லோடு சேர்த்துக் கட்டிப் போகவிடப் பிறவிக்கடலில் வீழ்மாக்களைப் பேரின்பக் கரையிற் சேர ஏறச்செய்யவல்ல திருவைந்தெழுத்து, நம் அப்பர் திருநாவுக்கரசரை இ(வ்வுவர்)க் கடலில், வெறுங்கயிறு கொண்டு கட்டிப் போகவிட்ட ஒரு

கல்லின்மேல் மிதக்கச் செய்து கரையேற்றுதலைச் சொல்ல வேண்டுமோ? மூன்று மடங்கு வன்மைமிக்க அஞ்செழுத்து, ஒருமடங்கும் அளவுறாத ஒன்றில் வன்மைமிக்க அஞ்செழுத்து, ஒருமடங்கும் அளவுறாத ஒன்றில் வன்மையுடையது எனின், அத்திருமந்திரத்துக்கு என்ன பெருமை புதியதாகக் கூடலாகும்?

'இருவினைப் பாசமும் - நல்வினை என்ற கயிறும். மலக்கல் ஆணவமலம் என்ற கல்லும், அருளும் - துணை அருளும்' என்று 'அரும்பதவிசேட ஆராய்ச்சிக் குறிப்புரை' எழுதியது பொருந்துமோ?

'அஞ்செழுத்தரசு என்று சேக்கிழார் வாகீசப் பெருந்தகையை அறிமுகப்படுத்துகிறார்' என்றெழுதியதுந் தகுமோ!

அரசை அஞ்செழுத்து ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? இவ்வாறுள்ளதில், அஞ்செழுத்தரசு எனக் கொண்டது சிறிதும் தகாது.

பக்தபஞ்சாட்சரம் என்பது இங்கு வேண்டுவதன்று. ஞானசம்பந்தர், நாவுக்கரசு, சுந்தரமூர்த்தி, மணிவாசகர் என்பவற்றை ஒற்று நீக்கி ஐந்தெழுத்து எனக் கொண்டு பக்தபஞ் சாட்சரம் என்பர். அஞ்செழுத்தரசு என்று பிழைபடக் கொண்டதும் அதுபக்தபஞ்சாக்ஷரம் ஆகும் என்பதும் பொருந்துமோ?

திருச்சிற்றம்பலம்

47. சைவ நெறியியல்பு

சைவம் சிவசம்பந்தம். 'சைவம் சிவத்தோடு சம்பந்தம் ஆவது.' நெறி-வழி, மார்க்கம் சமயம். இயல்பு தன்மை, சுவ பாவம் (தன்னியல்பு), சைவ சமயத்தின் தன்மையே சைவ நெறியியல்பு எனப்படும். இவ்வியல்பை நன்குணர்பவரே சைவத்திற் பற்றுடையவராய்ச் சிவ வழிபாட்டைத் தவறாமற்செய்து பேரின்பம் பெற்றுய்வர்.

1. செய்வான் : நல்வினை தீவினைகளைச்செய்யும் உயிர் உண்டு. அதுவே தான் செய்யும் வினைக்கு முதல் ஆகும். 'செய்வோர் இன்றிச் செய்வினை இல்லை, என்றது மெய் கண்டதேவ நாயனார் திருவாக்கு. உள்ளதாகிய உலகம் செய்வோனையுடைது. உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இல்லை. அதனால் உள்ளதாகிய உலகத்திற்குச் செய்வினையாகிய முத்தொழிலும் செய்வோன் ஒருவன் இன்றி நிகழா. உலகம் அசேதனம். அதற்குப் படைப்பு முதலிய முத்தொழில்களும் தாமே நடவா. அம்முத்தொழில்களையும் செய்யும் ஒருவன் வேண்டும்.

செயல் செய்வான் ஒருவன் வேண்டும்
செயற்படும் அசேதனத்தால்

நிலம்புனல் அனல்கால் காண நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலந்தரும் ஒருவர் இங்குப் பண்ணிட வேண்டா என்னின்
இலங்கிய தோற்றம் நிற்றல் ஈறிவை இசைத லாலே
நலங்கிளர் தோற்றம் நாசம் தனக்கிலா நாதன் வேண்டும்!

மட்குடம் காரியம், மண் காரணம். மண் தானே குடமாகாது. குடம் தானே மண்ணினின்று அமையாது. காரணமான மண்ணைக்கொண்டு காரியமான குடத்தை அமைக்க ஒருவன் வேண்டும். காரணம் பஞ்சு. காரியம் நூல். பஞ்சினை நூலாக்க ஒருவன் ஒருத்தி வேண்டும், பழங்காலத்தில் ஒருத்தி. இக்காலத்தில் இருபாலாரும் நூல் நூற்பர்.

உள்ள காரணத்தில் உண்டாம் காரியம் உதிக்கும் மண்ணில்
இல்லதாம் படம் கடாதி எழில்தரும் இயற்று வானால்

காரிய காரணங்கள் நூல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின் மண், திரிகை பண்ணுமவன் முதல், துணை, நிமித்தம்
தேரின்மண், மாயை யாகத் திரிகை தன் சக்தி ஆக
ஆரியன் குலால னாய்தின் றாக்குவன் அகிலம் எல்லாம்

'செய்வான்' என்று ஒருமையிற் குறிக்கப்பட்டவன் கடவுளும் ஆவன்; ஜீவனுமாவன். நல்வினை தீவனையென்னும் இரு வினையைச் செய்வான் ஜீவன். படைப்பு முதலிய மூவினையைச் (ஐந்தொழில்) செய்வான் கடவுள். இவ்வாறு 'செய்வான்' என்றது இருதிறத்தினும் சேரும். ஆயினும் 'சேர்ப்பான்' என்று கடவுளைத் தனியாக வேறு கூறுவதால், இங்குச் 'செய்வான்' என்றதற்கு ஜீவனையே பொருளாகக் கொள்ளல் வேண்டும்.

2. செய்வினை: வினை உயிரால் செய்யப்படுவதும் கடவுளால் செய்யப்படுவதும் என்று இருதிறப்படும். 'இருள்சேர் இருவினையும்' உயிரை முதலாக உடையன. மூவினையும் (முத்தொழிலும் ஐந்தொழிலுமாகச் சொல்லப்படுவன) கடவுளை முதலாக உடையன. அதனால் 'செய்வினை'யின் திறம் இரண்டாதல் புலப்படும். படவே, 'செய்வானும்' இருதிறம் உற்றமை முற்கூறப்பட்டது உண்மையாதல் காண்க. (மாபாடியம், சமாசப் பதிப்பு, பக்கம் 149 - 153 - வினையுண்மை).

இன்பமும் துன்பமும் உயிர்க்குண்டாகின்றன. அவை காரியம். அக்காரியத்திற்குக் காரணம் உண்டு. அக்காரணமே வினை. முதல்வன் உயிர்களில் வேற்றுமையின்றி நிற்பினும் உயிர்கள்செய்யும் இருவினையின் பயனான இன்பத் துன்பங்கள் உயிரைமட்டும் சாரும், இறைவனைச் சாரா. 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்றவாறு, இறைவனது புகழ் சொன்னாரிடத்தும் சாராத அவை இறைவனைச் சாராமை குறித்துக் கேட்பானேன்? ஐந்தொழில் (செய்யும் இறை) முதல், இருவினை (செய்யும் உயிர்) முதனுட் சிலரை வாழ்வித்தும் சிலரைத் தாழ்வித்தும் சிலரைத் துறக்கத்துய்த்தும் சிலரை நரகத்துய்த்தும் சிலரை உயர்ந்த இனத்திற் பிறப்பித்தும் சிலரை இழிந்த இனத்திற் பிறப்பித்தும் சிலருக்கு ஆயுளை நீட்டிப்பித்தும் சிலர்க்குக் குறைப் பித்தும் நடத்துவது ஏன்?

இவ்வாறு ஐந்தொழில் செய்வான் எல்லாவுயிர்களையும் ஒப்ப நோக்காமைக்கு, உயிர்கள் செய்யும் வினையே ஏதுவாம். 'முதல்வன் செய்திக்கு வினையும் துணைக் காரணமேயாம். அஃதில்லையாயின் எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்குதலும் பெருங்கருணையும் உடைய முதல்வன் இன்பத் துன்பம் முதலியவற்றைக் கூட்டுதல் பொருந்தாதாய் முடியும்!

'அவ்வவர் குணங் குற்றம் கண்டு அவ்வவற்றிற்கேற்ப அருளும் தண்டமும் செய்யும் வேந்தனுக்குஅதுபற்றிச் சுதந்திரமுடைமைக்கு இழுக்கில்லாதவாறும், வேட்டுவனாதலை விரும்பும் புழுவிற்கும் அவ்வேண்டும் உருவினைக் கொடுத்தல் பற்றி வேட்டுவனுக்கு அத்தொழிற்கணுளதாகிய சுதந்திரம் உடைமைக்கு இழுக்கில்லாதவாறும் போல வினைவழி நடாத்துதல் பற்றி முதல்வன் சுதந்திரத்திற்குச் சிறிதும் இழுக்கின்மை உணர்க.

'குயவன் வனைதற்குத் தன்னுடைமையாகிய திகிரி முதலிய துணைக் காரணங்களை வேண்டினும், பிறர் ஏவல் வழி நின்று வனையவேண்டாமை பற்றிச் சுதந்திரம் உடையவன் எனப்படும். ஈண்டும் அவ்வாறே கொள்க'.

'காரியங்கள் எல்லாம் ஒருங்கே தோன்றாது அடைவே தோன்றுதற்குக் காரணம். வினையே அன்றிப் பிறிதின்மையானும் வினையுண்மை துணியப்படும்'.

வினைஈட்டப்படுங்கால் மந்திரம் முதலிய ஆறு அத்து வாக்களிடமாக முறையே மனம் வாக்கு காயம் எனும் மூன்றான் ஈட்டப்பட்டுத் தூலகன்மமாய் ஆகாமியம் எனப்படும்.

பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவத்திடமாக மாயையிற் கிடந்து, சாதி, ஆயுள், போகம் எனும் மூன்றற்கும் ஏதுவாகிய முறையே, சனகம், தாரகம், போக்கியம் என மூவகைத்தாய் அபூர்வம், சஞ்சிதம், புண்ணிய பாவம் எனப் பரியாயப் பெயர் பெறும்.

அது பின்னர்ப் பயன்படுங்கால், ஆதி தைவிகம், ஆதியான்மிகம், ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பல திறப்படும். பட்டுப் பிராரத்தம் எனப்படும்.

3. வினைப்பயன்: இருவினைக்குத் தக்கப்பன் இன்பத் துன்பங்கள். மூவகை மாயையுள்ளும் வினையுண்டு. அது மூவகையாய்ச் சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் எனப்படும். அவற்றின் பயனும் அத்திறத்தாற் பேதம் உறும். சுத்த மாயையிற் சுத்த கன்மம் சுத்தமான பலனைத் தரும். உயிர் முதல் செய்யும் இருவினைக்குப் பயனான இன்பத் துன்பமும் இறைமுதல் செய்யும் மூவினைக்குப் பயனான அறிவுவளர்ச்சியாம் பக்குவமும் அவ்வவ் வினைப்பயனாகும். அவ்வவ்வுயிர்க்குத் தாம் செய்த வினையின் பயன் அவ்விறைவன் அருளால் எய்தும். அசுத்தம், மிச்சிரம், சுத்தம் என்னும் வேறுபாடுபற்றி, 1. உலகமும், 2. வைதிகமும், 3. அத்தியான் மிகமும், 4. அதிமார்க்கமும், 5. மாந்திரமும் என வினைகள் ஐவகைப்படும். அவை முறையே ஒன்றற்கு ஒன்று ஏற்றமாய் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளின் அடங்கி, அசுத்தம், மிச்சிரம், சுத்தமாய போகங்களைப் பயப்பிக்கும்.

4. சேர்ப்பான் : தடை : புண்ணிய பாவம் என்னும் இருகூற்றுச் சஞ்சிதவினையே தன்பயனாகிய இன்பத் துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையும் தோற்றுவிக்கும்; அவ்வின்பத் துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாது ; சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றை அநுபவிக்கும். முன்வினையை ஈண்டு அநுபவித்து ஒழிந்தால் மேலைக்கு வினை உண்டாகும் வகையாங்ஙனம்?

விடை: முன்செய்தவினை அநுபவித்ததற்கு ஏதுவான முறைமை-யிலே மேலைக்கு வினை உளதாம்.

தடை : அற்றேல், அவ்வினையே பயனாகவரும் என அமையும். முதல்வன் எற்றுக்கு?

விடை : உழவர் செய்யுந் தொழிற்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பது அன்றி அத்தொழில் தானே விளைவிக்க மாட்டாது. அதுபோல, உணவும் வித்துமாய்த் தொன்றுதொட்டு வரும் அவ் வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன் - சேர்ப்பன். அவ்வாறு அன்றி வினை தானே உயிர்கட்குப் பயனாய்வந்து பொருந்த மாட்டாது.

காந்தமும் பசாசமும் தனித்தனி இருப்பின், பசாசத்தை (இரும்பினை)க் காந்தம் வலித்துக் கொள்ளாது. ஒருவன் எடுத்து

நேரொக்கப் பிடித்தவழியே காந்தம் இரும்பினை வலித்துக் கொள்ளும். அவ்வினைப் பயன்களைப் பிறழாமல் நுகர்விப்பவன் முதல்வன். ஆன்மாக்கள் அவ்வினைகளைச் செய்வன. அவற்றைச் செய்தற்கு நிலைக்களம் உடம்பு. அவ்வுடம்பின்கண் பொருந்தி அவற்றது பயனை அநுபவிப்பன. முதல்வன் வினைப்பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கச் சேர்த்திலனேல், உயிர்கள் அவற்றது பயனை அநுபவிக்க மாட்டா. அதனால் 'சேர்ப்பான்' முதல்வன். சேர்க்கப் பெறுவன உயிர்கள். சேர்க்கப்படுவன வினைப்பயன்கள் என்னுந்திறம் உணரப்படும்.

இச் சைவநெறி யியல்பைச் சேக்கிழார் பெருமான், சாக்கிய நாயனார் புராணத்தில் மிக்க தெளிவுற விளக்கியருளிய திறம் யாவரும் உணரற்பாலது. அதனையே உமா பதி தேவ நாயனாரும் திருவருட்பயனில் ஒரு திருக்குறளில் அடக்கி யுணர்த்தியருளினார். இரண்டனையும் ஒரு சேர நோக்கி யுணர்தல் சைவர்க்கு நல்ல ஞானத் தெளிவை ஆக்கும்.

செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
வுய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே யுணர்ந்தறிந்தார்.

சாக்கிய நாயனார் புராணம்

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன் என்றுணர் 53

1. புண்ணிய பாவங்களைப் பண்ணும் புருடன்
2. அப்புருடனாற் செய்யப்படும் வினைகள்
3. அவ்வினைகளின் பயனான இன்பத் துன்பங்கள்
4. அவற்றைக் கூட்டி ஊட்டும் இறைவன்

இந்நான்கு திறத்தினை உடையனாக உன்னை அறிக. நீ கதிசேர்தற்பொருட்டு.

48. திருநெறிய தமிழ்

'திருநெறிய தமிழ்' என்னும் தொடர், சைவத் திரு முறைகளுள் முதலாவது திருப்பதிகத்தின் முடிவில் நின்று, அப்பதிகத்தை மட்டுஞ் சுட்டி, எல்லாத் திருமுறைகட்கும் பொதுப்பெயராய் விளங்குகின்றது. 'சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக' என்ற தொடரில் இத்தமிழைக் கருதாமல், வேறுள்ள தமிழ் நூல்களைப் பொருளாகக் கருதுவதில் எத்துணைப் பொருத்தம் உண்டோ? அறிகிலேம்யாம். இத் 'திருநெறிய தமிழ்' என்பதில் மூன்று சொற்கள் இருக்கின்றன. அம் மூன்றனையும் தனித்தனி கொண்டு சிறு விளக்கம் புரிவதே இக்கட்டுரையின் உட்கோளாகும். ஆகவே முதற்சொல் ஆகிய 'திரு' என்பதைப் பற்றி முதலிற் கருதுவோம்.

திரு

திரு என்பது நல்வினை, திருமகள், செல்வம், அழகு, முதலிய பல பொருள்களைப் பயப்பது. அப்பொருள் அனைத்தும் முழுமை அடையும் இடம் யாது? அதுவே பெருந்திரு அதன்மேலும் ஒன்றுண்டு என்னாதது எது; அதுவே தலைமைத் திரு. அதுதான் சிவம். அதனை உணர்வதே வீடுபேறு. வீடுபேறு என்பதில் வீடு உயிர்கட்குக் கட்டுவிடுதல். பேறு சிவத்தைப் பெறுதல், வீடுபேறு என்பது உம்மைத்தொகை. ஈண்டு இரண்டன் றொகையாகக் கொள்ளுதல் சிறவாது. வீடு பாசநீக்கம், பேறு சிவப்பேறு. வீடும் பேறும் தனித்தனி வழாங்கப்படுதலையும் நோக்குதல் வேண்டும். ஆன்மலாபம் என்னுங்கால், வழங்கப்படுதலையும் உயிரது பேறு எனத் தனியே செயப்படு பொருளின்றி நிற்றலறிக. 'ஞானசம்பந்தன் சொல் விரும்புவார் வினை வீடே' என்று 'வீடு' தனித்து நின்று தன் பொருளைப் பயத்தல் காண்க. 'வீடுபெற நில்' என்றது போல்வன கொண்டு, வீடுபேறு என்பதற்கு வீட்டைப் பெறுதல் என்றே யாண்டும் பொருளுரைத்தல் வேண்டுமோ? இப்பொருளும் உரைத்தல் கூடும் அன்றோ

திரு' என்னும் சொல்லால் சிவபிரானையும், அவனது அருளையும், அவ்வருளால் உயிர்கள் அடையும் இன்ப நிறைவையும் குறித்து வருவதைச் சைவ நூல்களிற் காணலாம்'

'திருவே என் செல்வமே தேனே' வானோர் செழுஞ் சுடரே...... ஆவடுதண்டுறையுறையும் அமரரேறே, 'திருவொளி காணிய

பேதுறுகின்ற திசைமுகன்' சிவமே பெருந்திரு. சிவாநுபவம் என்னும் மூன்றும் அம்முப்பொருளையும் முறையே குறித்தல் காண்க.

அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித் தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ

எனச் சிவபெருமானையும். 'திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத் திருவொடும் அகலாதே அருந்துணைவனாய் ஆண்டு கொண்டருளிய அற்புதம் அறியேனே' எனத் திருவருளையும், 'தென்னன் வார்கழலே நினைந்து அடியோம் திருவைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்று பேரின்பத்தையும் ஆளுடையஅடிகள் அருளிய திறம் அறிதற்பாலது.

திரு என்னும் அடைகொண்ட பிறவற்றைப் போலக் கொள்ளாது. திருவாகிய அடி, திருவடி, திருவாகிய அருள். திருவருள் எனக்கொள்வதே உண்மையுணர்ச்சிக்கு ஒத்தது, 'திருவலகு' என்னும் இடத்தில் திருவாகிய அலகு எனக் கொள்ளல் ஒவ்வாது. திருவாரூர் திருச்சிற்றம்பலம் முதலியவை இரண்டும் ஏற்கும். ஆளுடைய நம்பிகள் 'செப்பரிய அயனொடுமால் சிந்தித்தும் தெரிவாய அப் பெரிய திரு என்று அருளியது கொண்டே, 'திருநெறி' என்பதற்குச் சிவநெறி, அருள்நெறி, பேரின்பநெறி; எனப் பொருள் உரைக்கலாம். அம்மூன்றும் அவ்விருவராலும் தெரிவரிய பெருந்திரு வேயாகும், ஆதலின், 'திருநெறி' என்பது ஆறன்றொகையாய்த்திருவினதுநெறி எனப்பொருள் தந்து, சிவநெறி, அருள்நெறி, பேரின்பநெறி என்னும் மூன்றிற்கும் பொதுவாயிற்று.

நெறி

நெறி என்பது வழி, ஒழுக்கம், நீதி என்ற பொருள் தரும். உயிர்கள் துன்பம் நீங்கி, அழியாத இன்பம் பெறச் செல்லும் வழியும், அவ்வழியில் ஒழுகும் ஒழுக்கமும், அவ்வொழுக்கத்தின் அகலாத நீதியும் 'நெறி' எனப்பட்டன. இம்மூன்றும் பற்றிய நெறியே மார்க்கம், சமயம், மதம் எனப்படும்.

சமயம் அளவிலாதன. சைவசித்தாந்த சமயத்தை ஒரு நடுதறியாக் கொண்டு அதுநின்ற இடத்திற்கு அதைப்பெரிதும் சிறிதும் ஒத்த

பிறசமயங்களை ஆராய்ந்தால், நடுதறிக்கு நாற்புறத்தும் சூழ்ந்து நிற்பன அகச்சமயங்கள். அவற்றை அடுத்து நில்லாது புறத்தே பரந்தன புறச்சமயங்கள். அவற்றின் புறத்தவை புறப்புறச் சமயங்கள், அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எல்லாம் சைவசித்தாந்தக் கொள்கையை நடுவாக்கொண்டு பாகுபாடு செய்யப்பட்டமையால், அதனை நடுதறிஎன்றேம். நடுதறியாகவே கருதுவது கூடாது. கன்றாப்பூர் நடுதறியாகக் கருதுவது நன்று அந்நால்வகையும் அவ்வாறு வகைப்படும்.

அச்சமயங்களுள் அகச்சமயம் ஆறும் 1. இறைவன், 2. உயிர்கள், 3. ஆணவம், 4. சுத்தமாயை, 5. அசுத்த மாயை, 6. வினை என்னும் ஆறு பொருளுங் கொண்ட சைவங்கள். அச்சைவங்களுக்கு வேறாய், மேலாய், முடிவாய் நிற்பதே சித்தாந்த சைவம். 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம்குறியது' என்றதுணர்க; இவை சமயங்களுள் வேதாகமங்களைக் கொண்டன, இவை கொள்ளாதன என்று இருவகையாக கருதிப் பகுத்துக் கொள்ளாத-வற்றைத் தள்ளிக், கொண்டவற்றைக் கொண்டு, அவற்றை ஆராய்தல் வேண்டும், ஆராய்வோர்க்கு அச்சமய நெறியின் வேதநெறி, ஆகமநெறி, இரண்டும் விளங்கும். விளங்கவே, சித்தாந்த சைவத்திற்கு வேதநெறி பொதுவும் ஆகமமும் அறுவகைச் சைவத்திற்கும் பொதுவாதலால், பொதுவாகுமே அன்றிச் சிறப்பாகாது எனலாம். ஆயினும், அச்சைவங்கட்கு மேலாய் நிற்பது பற்றிச், சைவநெறி என்ற தனிச்சிறப்பு விளங்கச் சுட்டப்பெறுதலால், அச்சிறப்பு இனிதுபுலனாகும். 'வேதநெறி தழைத்தோங்க' என்றது பொது நெறிகள் உலகில் அழியாது விளங்குதற் பொருட்டு 'மிகுசைவத்துறை விளங்க' என்றது அறுவகைச் சைவத்துறைகளும் அவற்றின் மிக்க சித்தாந்த சைவத்துறையும் விளங்குதற்பொருட்டு 'பூதபரம்பரை பொலிய' என்றதில் விலக்கு இல்லை. 'அன்பே சிவம்' என்னும் உண்மை அவற்றிற்கு உரியது.

நெறி என்று ஒன்று இருப்பின், அந்நெறியே நடந்து - ஒழுகி, அடையத்தக்க நடையும் துறையும் இருத்தல் வேண்டும். வேதநெறிக்குத் தக்க வேதத்துறையும் சைவநெறிக்குச் தக்க சைவத்துறையும் உள்ளன. நெறியில் நடக்கும் நடை (பெத்தத்தில் மல நடை) முத்தியில் அருள்நடை. அந்நெறி துறைகளுள்ளே சித்தாந்த சைவர் அருள்நடைக்கு வேதநெறி பொதுநெறியாயும் ஆகமநெறி சிறப்பு நெறியாயும் அமைந்தன.

அமைந்தவற்றுள் சிறப்பு நெறியில் ஒழுகிப்பெறும் துறையே 'மிகுசைவத்துறை' எனப்பட்டது. அத்துறையிற் கொண்டு சேர்க்கும் நெறியே 'திருநெறி' எனலாயிற்று, அதுவே எல்லாச் சமயநெறிகட்கும் 'முன்நெறி'யும் மேலாம் நன்நெறியும் 'சென்னெறி'யும் ஆகும் (திருமுறை 7 - 525). இத்திருநெறி, சரியை, கிரியை, யோகம் - ஒளிநெறி, ஞானம் - அருநெறி, என நால்வகையாய்ப் பயன் தருகின்றது. அந்நான்கிற்கும் திருநெறி என்று பெயராயினும், சிறப்பாக ஞான - அருள், நெறியையே 'திருநெறி' என்பது சைவசம்பிரதாயம். சரியை கிரியை இரண்டும் சிவதன்மநெறி யோகம் ஒளி நெறி, ஞானம் ஆகிய அருணெறி. திருநெறி என்று அந்நான்கினையும் மூன்றாக் கொண்டருளினர் முன்னோர். அதனை 'நல்ல சிவதன்மத்தால்' என்ற திருக்களிற்றுப்படி யாராலறிக. திருநெறி அருணெறியைக் குறிக்கும் உண்மையை 'திருநெறி அருளே கண்ணாச் செல் நெறி' (ஞானபூஜாகரணம் 6) என்றருளிய உமாபதி தேவநாயனார் திருவாக்கால் அறியலாம். 'அவனருளே கண்ணாகக் காண்'பதும் 'அவனருளாலே அவன் தாள் வணங்'குவதும் அத்திருநெறி யொழுக்கமே ஆகும். 'தூநெறி' என்றதும் அதுவே. 'துறந்தார்க்குத்-தூநெறி நின்றான்' என்றருளினார் ஆளுடை அரசர். நெறியும் அறிவும் செறிவும் நீதியும்' சீலம்.... நோன்பு.... செறிவு.... அறிவு' திருமுறைத் தொடர்களை நோக்கின், திருநெறியே 'அறிவு' எனக் குறிக்கப்பட்டது புலப்படும், இனி அத்திருநெறியை உணர்த்தும் தமிழ் எது என்று நோக்குவாம்.

திருநெறிய தமிழ்

திருநெறிய தமிழ் எனபதற்கு திருநெறியினையுடைய தமிழ், திருநெறியின் தமிழ் எனறு இருவகையாகப் பொருள் உரைக்கலாம். முன்னது பெயரெச்சம், பின்னது ஆறன் தொகை.

ஈண்டுத் தமிழ் என்றது சைவத் திருமுறையிலுள்ள திருப்பதிகத்னை. ஞானசம்பந்தன் தமிழ் பத்தும் கொண்டு... இசைபாடவல்லார் குளிர்வானத் துயர்வாரே' 'தமிழ் ஞான சம்பந்தன் துளங்கில் தமிழ் பரவித் தொழும் அடியார்' பந்தன குன்றாத் தமிழ் சொல்லக் குறைவின்றி நிறை புகழே' 'ஞானசம்பந்தன் செந்தமிழ் வல்லார்..... சிவனடி நண்ணுவர்' 'தமிழ் மாலைகளால் நாம் படிமக்கலஞ் செய்து தொழுதும் மடநெஞ்சமே' 'நாவலர் கோன்.... அணி ஆரூரன்

உரைத்தன நற்றமிழின் மிகுமாலை.... கற்றுவல்லார்.... முழுதாள்பவரே' 'ஆரூரன் சொன்ன பாவணத்தமிழ்' 'ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினோடைந்து' 'பொய்யாத் தமிழ்' நாவலூர்க் கோன் நலத்தமிழைப் பாட வல்ல பரமன் அடியார்க்கு அடிமை வழுவா.... தொண்டன் ஆரூரன் ஆட்படுமாறு சொல்லிப்பாடவல்லார்' 'ஊரன் உரைத்த உறு தமிழ் பத்தும் வல்லார் வினை போய்ப்.... பரமன் அடி கூடுவரே' 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' 'நாவலூரன் சொன்ன ஏழிசையின் றமிழ்' 'திருமிழலையிருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்' 'வண்டமிழ் வல்லவர்கள் ஏழிசை யேழ் நரம்பின் ஓசையை ஆரூர் புக்கு..... நான் என்று கொல் எய்துவதே. 'குறையாத் தமிழ்' 'பாவின் தமிழ் வல்லார்' 'செந்தமிழ்த் திறம் வல்லாரோ 'செங்கண் அரவம் முன்கையில் ஆடவே' வனப்பகையப்பன் உரைத்த வண்டமிழ்களே' என்று மூவர் திருவாக்கினும் திருப்பதிகங்களைத் தமிழ் என்று சுட்டிய வுண்மை திருமுறையிற் பரக்கக் காணலாம். எனவே, 'திருநெறிய தமிழ்' என்னுந் தொடர்க்குப் பொருள், சிவ நெறியினுடைய தமிழ்கள் என்பதே தேற்றம்.

அத் தமிழ் வளர்ச்சிக்குத் தக்க வழிவகைகளை உணர்ந்து தொண்டு புரிபவரே. சைவத்தை வளர்க்கும் சான்றோராவார். அவ்வாறு தில்லையிலே தேவாரங் கண்ட சிவலோகத்திலே, செங்கழுநீர்ப் பிள்ளையார் திருவீதியிலே, ஒரு.சி.ப. தேவாரப் பாடசாலை என்னும் திருவருளகத்தைப் பெரும் பொருட் செலவில், உயரிய நிலையில், விளங்கச்செய்து, முறையே நடராசப் பெருமானையும் இராம-லிங்கேசனையும் ஆசிரியப் பெருந்தகையாக அமர்த்தி, ஐம்பது யாண்டுகளாய் பற்பல ஓதுவார் மூர்த்திகளைத் தோற்றுவித்துத் தமிழ் நாடெங்கும் செலுத்தி செந்தமிழ் - குறையாத்தமிழ் - பொய்யாத் தமிழ் - திருநெறிய தமிழ் பரப்பிவரப் பேரருட் தொண்டு புரிந்து வரும் பெருவள்ளல் - சைவத்திருவாளர் சி.ப.பழநியப்ப முதலியார் அவர்கள் பரம்பரை கச்சித் திருவேகம்பன் திருவருளால் எல்லா நலங்களும் வளங்களும் பெருகப்பெற்று. நீடூழி வாழ்க. வள்ளல் சைவத்திரு. சி. சின்னையா முதலியார் அவர்கள் குலம் செழித்து வாழ்க. அவர்கள் திருத்தொண்டு தழைத்து வளர்ந்து வாழ்க. அவர்கள் என்றும் இன்பம் பெருகி விளங்கி வாழ்க.

திருநெறிய தமிழ் வாழ்க

49. வைத்த பொருள்

சைவ சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் வளர்த்த சைவ சித்தாந்தம் தமிழர்க்குத் தொன்மையுடைமையாகிய சிவம் எனப்பெறும் இயல்பு. பழந்தமிழ் மக்கள் சிவத்தை இயல்பு என்று குறித்து வழிபட்டுப் பேரின்ப வாழ்வுற்றனர். அதுவே அவர்க்கு வைத்த பொருளாகும்.

'இயல்பு' என்றது குறித்து எழுதப்புகின் ஆயிரம் பக்கத் தினும் மிகும். திருவருள் துணை செயின் எழுதுதும். ஈண்டுச் சிறிதெழுதி அமைகுதும். இயறல் தன்வினை, இயற்றல் பிறவினை, இயலல் இயலுதல், இயற்கை. அல்லாத யாவும் செயல், செய்தல், செயற்கை -யாகும். சைவ சித்தாந்தத்திற் கொண்ட சிவம், ஏனைய சமயத்தவராற் சிறிதும் உணரப்படாமல், மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி - என்ன பாவந்திரித(ர்)வரே' என்னுந் திருவாசகத்தால் அவர் இகழப்பட்டனர். இயற்கையுணர்வு என்னுந் தமிழ்ப் பொருளை அநாதிபோதம் என்றனர் வட சொல்லர். ஆதிபோதம் செயற்கைத்து. அநாதிபோதம் இயற்கைத்து.

ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்

என்ற திருக்குறட் பொருளை பரிமேலழகர், 'ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினைஒருவன் நீக்கும் ஆயின் அந் நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைக் கொடுக்கும்' என்றுரைத்தருளினார்.

அவாவும் இயல்பு; அவாவினை நீத்ததன் பயனாம் இயல்பு; அவ்வியல்பு இரண்டனுள் அவா நிரம்பாத இயல்பு; அஃதாவது 'தாமே அன்றித்தம் பயனும் நிலையாத' இயல்பு. அவ்வவா காரணம், அவாவினால் வருந்துன்பத்துள் துன்பம் காரியம். காரணத்தைக் காரியத்தினும் வேறாகக் கூறாது, ஒன்றாக உபசரித்து, 'அவாவென்னுந் துன்பத்துள் துன்பம்' என்றும் அவ்வவாக் கெட்டவர்க்கு மனம் தடுமாறாது நிரம்பி நிற்றலால் 'ஈண்டும், இன்பம் இடையறாது' என்றும் முதற்குறளிற் கூறினார் ஆசிரியர் திருவள்ளுவர். 'வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல்' என்றும், அவை வேண்டாதன ஆதற்குக்

காரணம் தாமும்தம் பயனும் நிலையாமை என்றும் குறித்தார் பரிமேமலழகர்.

'அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின் (அவா வினை) நீத்தலே தக்கது என்பது கருத்து. களிப்புக்கவற்சிகளும் பிறப்புப்பிணி மூப்பு எனப்படும் மெய்யின்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப் பேராவியற்கை என்று கூறினார். அவ்வீட்டின்பம் அவா நீத்த வழிப் பெறுதல் ஒருதலை ஆதலின் 'அந்நிலையே தரும்' என்றார். இப்பேரா வியற்கையே உயிர்க்கு அழியா இருப்பு. வைத்த பொருள். வைச்ச பொருள், வைச்சிருப்பு, இப்பேரா வியற்கை, திருநாவுக்கரசு நாயனார், திருநாகேச்சுரத் திருத்தாண்டகத் திருப்பதிகத்துள் (3) 'இயல்' என்றுள்ளதினும் அறியப்படும். உயிர்கட்கு வைச்ச பொருள் ஆகும் என்று உபதேசித்தருள்வது (மேற்கூறிய வைத்த பொருளை மறவாமைக்கு, அடியாக வைத்த பொருள் ஆகிய) திருவைந்தெழுத்தே. அவ்வைந்தெழுத்தருள் அவர் அவர் பக்குவத்திற்குத் தக்கவாறு நிற்கும் வகையிற் பலவாகும். பரியநிலையில் நமச்சிவாய எனப்படும். நுண்ணிய நிலையில், சிவாயநம எனப்படும். நுண்மை வளர் நிலையில் சிவாய, வாசி, எனப்படும். அவற்றைக் குரு உபதேசத்தினால் பெறுதல் தெளிவுண்டாக்கும்.

வைச்ச பொருள் நமக்காகும் என்றெண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன் அணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி உந்தியின்மேல் அசைத்த
கச்சின் அழகுகண்டால் பின்னைக்கண் கொண்டுகாண்ப
தென்னே

என்ற திருநேரிசையில், பருநிலை யஞ்செழுத்து உபதேசிக் கலாயிற்று.

வைத்த பொருள்நமக்கு ஆம்என்று
சொல்லிமனத் தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாயநம
என்றிரு (இரு)க்கின் அல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார்
அவர்பாதிரிப் புலியூர்

அத்த னருள் பெறலாமோ?
அறிவிலாப் பேதை நெஞ்சே

என்னும் நெஞ்சக் கழற்றி (நெஞ்ச றிவுறூஉ, நெஞ்சிற்குக் கழறுதல், நெஞ்சைக் கழற்றுதல்)யில் நுண்ணஞ் செழுத்தருளை உபதேசித்தருளினார். இவற்றின் பொருளைத் தருமையாதீன வெளியீட்டில் எம் உரையில் நோக்கின் விளங்கப் பெறலாம்.

வஞ்ச முடன்ஒருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்

திருவருட்பயன் 66

என்றதன் (நிரம்ப வழகிய தேசிகர்) உரையையும் நோக்கி யுணர்தல், நன்றாகும். 'வைத்த நிதி – சேமித்த பொருள்' 'ஞேயம்' ஒருவன் – கேடின்றி நிரம்பி நிற்கும் ஞானசக்தி. ஞானத்தை அடையாமல் சிவத்தைப் பெறல் அரிது.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, அல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவர்?

வைத்த நிதி குறித்துத் திருவைந்தெழுந்து நிலையினும் வைத்து அருட்பெரியோர் எழுதியருளினர். அவற்றையும் அறிதலைச் சைவர் தலையாய கடனாகக் கொள்ளல் வேண்டும். பதினான்கு அருணூலுள், நெஞ்சுவிடு தூதும் ஒன்று. அவற்றின் பெயர் கூறும்:

உந்தி களிறே யுயர்போதம் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம் - வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று

என்ற வெண்பாவிற் 'பாசமிலா நெஞ்சு விடு' எனப் புகழ்ந்துள்ளது அவ்வருணூல். பாசமில்லாத நெஞ்சு நம் ஆசரியர் உமாபதிதேவ நாயனார் (திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானமும் பவத்தை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானமும் அபரம் பரம்) இரண்டு ஞானமும் நிறைந்த நெஞ்சு. அத்தகுதியுடையராய் நின்று அதனையோதும் ஆன்றோர் நெஞ்சும் ஆம்.

அந்நெஞ்சு வீட்டில், (92 - 94) 1. நாடரிய அஞ்செழுத்தின் உள்ளீடறிவித்தலும் 2. அஞ்செழுத்தை நெஞ்சுள் அழுத்துதலும் 3. நேய (ஞேய) மயமாக்கலும் 4. அஞ்செழுத்தை யுச்சரிக்குங் கேண்மையை யுணர்த்தலும் 5.அஞ்செழுத்துள் வைத்திருக்கும் அந்த வழியும் கூறப்பட்டன.

'நெஞ்விடு தூது'க்குச் சில உரையே கிடைத்தன. அவற்றுள் உரை வேற்றுமையும் உண்டு. இங்குக் குறித்த பகுதிக்கு மூன்றாவதுரையும் உளது. அது கொடிப்பாட்டின் உரையிற் காணப்படுவது. அதனை எழுதுதும்.

பஞ்சாட்சரம் உச்சரிக்கிற முறைமையிலே 1. தூல பஞ்சாட்சரம் 2.சூக்கும பஞ்சாக்கரம் 3. அதிசூக்கும பஞ்சாட்சரம் 4. சூக்குமா சூக்கும பஞ்சாக்கரம் என்று உச்சரிக்கிற முறைமை நாலுவிதம் உண்டு.

அந்த முறைமையில் உச்சரித்து, அந்த பஞ்சாட்சரத்தினுடைய (இயல்பு) சுபாவம் (சொரூபம்) அறிந்து இதிலே..... ஊன நடனமாகிய நகர மகாரத்திலே சென்று செனன மரணத்திலே போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச் சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு வகாரமாகிய ஞானம் தானாக நிற்கவே சிகாரமாகிய ஞேயத்திலே யகாரத்தை அழுத்துவிக்கும். எப்படி என்னில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தினிடையிலே அழுந்தவே அத்தன்மை உண்டாக்கும். அதற்குதாரணம் :- நெஞ்சுவிடு தூதிலே, 'அஞ்செழுத்தை உச்சரிக்குங் கேண்மை யுணர்த்திய பின் உச்சரிப்பை வைச்சிருக்கும் அந்த வழிகாட்டி' என்றும், சிவப்பிரகாசத்திலே, திருவெழுத்தைந்தில் (என முதனும்) பாடத்திலும், திருவருட் பயனில், ஊன நடனம் 'ஆசினவா' எனத் தொடங்கும் குறள்களினும் வரும் ஏதுக்களைக் கண்டு கொள்க.

கடா :- பஞ்சாட்சரத்தை உச்சரித்தல் போதாதோ? அதன் மேலே சக்தி சிவாத்மிகம் ஆகிய (வாசி) எழுத்தினிடத்திலே நிற்றலும் வேண்டுமோ? அப்படி உச்சரித்தும் நின்றும் தான் மோட்சம் அடைய வேண்டுமோ?

விடை :- பஞ்சாட்சரத்தை உச்சரித்ததனாலே அஞ்ஞானம் நீங்கி ஞானம் பிரகாசிக்கும். உதாரணம் :- சிவஞானபோதச் சூரணையில்,

பஞ்சாட்சரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது. இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை ஆன்மா நோக்கிற்றை நோக்கிநிற்கும். வேம்பு தின்ற புழுவை கருப்பஞ்சாற்றிலே விட்டாலும் மீளமீள அவ்வேம்பையே (முன்னைப் பழக்கமானதையே நோக்கிற்றையே) நோக்கி நிற்குமதுபோல ஆன்மாவும் நோக்கிற்றையே, நோக்கி நிற்கும். இந் நிலையை நீக்குதற்குப் பஞ்சாட்சரத்தை உச்சரிக்க வேண்டும்.

பஞ்சாட்சரத்தினுடைய சுபாவம் இயல்பு- சொரூபம் 1. சிகாரம் -சிவம் 2. வகாரம்- சக்தி 3. யகாரம் - ஆன்மபோதம், ஜீவபோதம், தற்போதம் 4. நகாரம் -திரோதம் 5. மகாரம் - மலம், ஆக இந்த முறைமையே சுபாவம்.

இந்தப் பஞ்சாக்ஷரஉச்சரிப்பிலே விளங்கின ஞானத்திலே நகாரம் திரோதமென்றும், மகாரம் ஆணவமலம் என்றும் யகாரம் ஆன்ம போதம் என்றும் ஆகிய மூன்று எழுத்தும் நீங்கிய ஞான (வகார)மேயாய் அந்த ஞானத்தினாலே சிகார வகாரத் தினிடையிலே நின்று அழுத்துகின்றது வைச்சிருப்பு உதாரணம்:- திருவருட்பயனில் (89) 'அருளினால் வாசியிடை நிற்கை வழக்கு' என்பது கண்டுகொள்க.

இப்படி ஞானத்திலே அழுந்துகிறோம் என்கின்றதையும் விடல் வேண்டும். விடவே சிவன் தானே இவனைக் கவர்ந்து (கிருஹித்துக்) கொண்டு, இவன் செயலெல்லாம் தன் செயலாகியும். இவனும் தானாகியும் நிற்பன். செய்வோனும் சிவனாய் விடுவன்.

நஞ்செயல் அற்றுஇந்த நாம் அற்றபின் நாதன்
றன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தான்என் றுந்தீபற

ஆக மூன்று வகையையும் கண்டுகொள்க. அம்மூன்று வகையும் ஆவன:-

1. ஞானத்திலே அழுந்துகின்றோம் என்கின்றதையும் விடுதல்.

2. இவனைச் சிவன் தானே கிருஹித்துக்கொண்டு இவன் செயலெல்லாம் தன்செயலாக நிற்றல்.

3. இவனும் தான்(சிவம்) ஆகவே நிற்றல்.

1. நாம் அறுதல் கர்த்தா ஆகாமல் (அகர்த்தாவாய்) நிற்றல். வினைமுதல் ஆகாமை.

2. நம் செயலறுதல் போக்தா ஆகாமல் (வினை நுகர்ச்சியிலனாய்) நிற்றல்.

1. நம் செயலற்றுநாதன் செயலாதல் இறைபணி நிற்றல், தான் பணி நீத்தல்.

2. நாம் அற்று நாதன் ஆதல், ஏகனாதல், அமலனாதல், குருவருள் கிடைப்புழி, அவ்வருட்குருவுக்கு உயிர், உடல், பொருள் மூன்றும் கொடுத்தல் நிகழும். இக்கொடை சிவனுக்கில்லை குருவுக்கே உரியது.

'வைச்சிருப்பு' பெயர் - வைத்திருப்பு, வைத்த இருப்பு.

1. 'ஆகம் முதல் நீங்கி அருளிற் கலந்து'

2. 'ஆகம் உயிர் பொருள் கொண்டு அன்றே அருள் அளித்துச் சோகம் எனப் பாவிக்கச் சொன்னார்.'

3. 'விள்ளாத உள்ளம்' (உயிர்) முதலாக உற்றதெல்லாம் வாங்க அருள்வெள்ள மயல் அளித்து மேவினான்.

4. 'என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும் அன்றே என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ?'

இவ்வாறு உயிர், உடல் பொருள் (வினை) மூன்றும் கொடுத்தலே நஞ்செயலறுதலும் ஆகும். உயிர்க்கொடை நாமறல் ஆகும். உடற்கொடையும் பொருட் (வினை) கொடையும் நஞ்செயலறல் ஆகும்.

ஞான பூஜை புரிவோர் பல திறத்தர். ஞானபூஜையும் பல திறம். அவற்றுட் சில திறத்தில் 1. நீ கற்பித்த தொழில் இது (பூஜை) 2. நீ கண்ட பண்டம் கொய்யும் பூமலராதி. 3. நின்குலவு பூஜை செய் என்றால் என் செய்வேன் ?

1. இட்டபணி - செயல் 2. உருவம் - உடல் 3. செல்வம் சிவபூஜாபலன் நீ கொள்க என்று எல்லாம் சிவார்ப்பணமாகச் செய்தலையும் கருதுக. இங்கே 'நாம்' உண்டோ? நஞ்செயல் தாம் உளவோ?

வைச்சிருப்பு என்னுந் தொடர்க்கு இக்கொடிப்பாட்டுரை யாசிரியர், வைத்து இருப்பு, வைத்த இருப்பு என்று பொருள் கொண்டுரைத்தமை நோக்கற்பாலது.

திருவைந்தெழுத்துள் பதி, பசு, பாசம், என முப்பொருளும் வைத்திருக்கும் உண்மை எல்லாரும் அறிந்ததாகும். நெஞ்சுவிடு-தூதுரையில் (நாகலிங்க முனிவர் பதிப்பில், பக்கம் 757) அஞ்செழுத்தின் உள்ளீடு பதி பசு பாசம் என்றுரைத்தார். சமாசப் பதிப்பில், சிவம் சக்தி, ஆன்மா, திரோதம், மலம் என்றுள்ளது. உண்டெனினும் பதி (சிவ) பசு(ய) பாசம்(நம) என்று கோடல்தான் மரபு. அம் முப்பொருளுடன் மூன்று ஞானத்தையும் கூட்டி ஆறாகக் கோடல்வேண்டும். அப்படிக்கொள் வழி, 1. பதி 2. பதிஞானம் 3. பசு 4. பசுஞானம் 5. பாசம் 6. பாசஞானம் என்னும் ஆறுமே அவை.

சங்கற்ப நிராகணத்தின் முடிவிலே நம் பெருமானார்.

பதிபசு பாசம் முதிர் அறிவுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாது (கூறி) என்றதுணர்க

அவ்வாறனுள், 'பின்னர் இருபொருள் நீத்து (பாசத்தையும் பாசஞானத்தையும் நீக்கி) மற்றுப் பசுஞானம், பசு, சிவஞானம், சிவம் ஆகிய ஒரு நால்வகையும்' ஞாதுரு, ஞானம், ஞேயம் என்று இசைய மூன்றாகும். பசுஞானம் உடைமை. பசு உடையான் (உடையது) உடையானையும் உடைமையையும் அபேதமாகக் கொண்டு அப்பசுவைஞாதுரு (ஞாதா) ஆகக் கூறினார். அஃதாவது ஆன்மா ஞாதுரு. சக்தி ஞானம். சிவம்ஞேயம். அறிபவன் (ஞாதா, ஞாதுரு) அறிவு (ஞானம்) அறியப்படுபொருள் (ஞேயம்) என்னும் திரிபுடியாகும். காண்பான் காட்சி காணப்படும் பொருள் எனல் பிரசித்தம். திருக்களிற்றுப்படியார் 27. வினாவெண்பா 11. இரண்டும் ஈண்டுணர்க.

அம்மூன்றும் பதி பசு இரண்டாகும். பசு ஞானம் பசுவின்கண் அடங்கி மூன்றானது முன் அறிந்ததே. பதி ஞானம் பதிக்கண் அடங்கியும், பசு பதிஞானத்துள் அடங்கியும் பசுபதி என இரண்டாயின. இரண்டனுள் பசு பதியின் அடங்கிப் பதியாய சிவம் ஒன்றே திரண்டு ஆம் பயன். இதைத் திருவருட்பயன் என்பர்.

... ... மற்றொருநால் வகையும்
ஈனம்இல் ஞாதுரு ஞானம் ஞேயம் என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி என்றவற்று
இரண்டாய் இரண்டும் ஒன்றின் ஒன்றாகத்
திரண்டு ஆம்பயன் எனுந் திருவருள்

என்றதுணர்க.

அத்திருவருவருளைத் தெளியின் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் என்று இறையியற்கை இயம்புதல் தகுமே'

இங்குச் சிவம், இறை, இயற்கை, இயல்பு, ஸ்வபாவம் நல்லியல்பு, ஸகஜம், ஸகஜ நிஷ்டை எல்லாம் ஒரு பொருளன. இவ்வுண்மை உண்மை ஞானம் உடையோர்க்கே தெளிவாகும்.

ந,ம,ய (ஆன்மபோதம்) எல்லாம் போக, மிச்சமாக வைச்ச இருப்பு வாசி இரண்டுமே. சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து போயவையும், அவை போக ஒன்றாயதும் அது மிகு பஞ்சாக்கரமான சிகாரமே யாதலும் அதுவே மிச்சமாக வைச்ச இருப்பு ஆதலும் உணர்தல் முறையாகும். ஆகவே ஆன்மாக்களுக்கு வைத்த பொருளும், (வைச்ச பொருளும், வைச்சிருப்பும் பெயர் வேறுபாடின்றி ஒன்றேயாதல்) உணரப்படும்.

வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி, எண்ணி நமச்சிவாய; சிவாயநம என்று மனத்து அடைத்துச், சித்தம் ஒருக்கி, இருந்து பிறப் பிறப்பச்சம் ஒழிந்து, அத்தன் அருள் பெற்றுப், பேரின்ப வாழ்வுறுவோம் நெஞ்சம் அறிவில்லாமை அறுக.

அடுத்து 'அஞ்செழுத் தருணிலை'யை எழுதுவம்.

திருச்சிற்றம்பலம்

50. தமிழ்ப் போற்றி

தமிழ் அருச்சனை

தமிழ் வழிபாடு தோன்றிய காலம் முதலாகக் கடவுளைப் போற்றும் பழக்கம் உண்மையால், அதனை மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ எவர்க்கும் எண்ணம் உண்டாகாது.

தமிழில் வடமொழி கலப்பதற்கு முற்பட்ட காலத்திலே தோன்றிய (தமிழ்ப் போற்றி)யிலும் 'வடமொழி யருச்சனை' எவ்வாற்றாலும் மேம்பட்டதாகாது.

தமிழ்ப் போற்றியின் தொன்மையை உணர ஒரு சான்றே போதும். மலையாளர் மொழி, தமிழின் வழிமொழிகளுள் ஒன்று என்பது யாவரும் இசைந்ததே.

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என மனோன்மணீயம், பெ.சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியதாலும் அது பலர்க்கும் தெரியும். அம் மலையாளத்திலே 'போற்றி' 'போற்றிகள்' 'போற்றிமார்' 'போத்திமார்' 'போத்திகள்' 'போத்தி' என்னும் வழக்கு இன்றும் உண்டு. அதனால், தமிழ்ப் போற்றியின் தொன்மை நன்கு புலப்படும்.

சேரமான் பெருமான் (கழறிற்றறிவார்) நாயனார் அந்நாட்டரசர். அவர் அருளிய திருக்கயிலாய ஞானவுலாவிலே

... ...மேலை
இமையோர் பெருமானே போற்றி எழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி - எமை ஆளும்
தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி - தூயசீர்ச்
சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி

பொங்கரவா பொன்னங் கழல்போற்றி - அங்கொருநாள்
ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி - தூய
மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி - நிலைபோற்றி
போற்றிஎனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம்பெருக 50 - 56

என்று போற்றிய வாய்மையைக் காணலாம்.

இதிலே போற்றலும் பூமாரி சொரிதலும், அதன் பயனாகப் புலன் கலங்கலும், நாற்றிசையும் எங்கும் நலம் பெருகலும் உணர்த்தப்பட்டன. படவே, 'வடமொழி யருச்சனை' தான் திருவருளை (சாந்நித்தியம்)த் தரும் என்னும் பிறர் கொள்கையை இசைவார் யார்? வைணவத்தில 'நித்தி யாநுசந்தாநம்' சைவத்திலே 'சிவபூசைத் திரட்டு' இரண்டும் தமிழ் வழிபாட்டுக்குரியன. எவ்வெம் மொழியினரும் அவ்வம் மொழியில் வழிபடும் இயல்பை மறுப்பவர் அறிஞர் ஆவரோ? வடமொழியே வழிபாட்டுக்குரியது எனின், உலகில் வெவ்வேறு மொழியில் நிகழும் வழிபாடெல்லாம் பயன் கொடாதன என்று தானே கருதப்படும். படின் அது பொருந்துமோ? 'வடமொழி யருச்சனை' தமிழகத்திற் புகுந்த காலத்தின் முன்னும் பின்னும் தமிழ்ப் போற்றி நிகழ்ச்சிக்குப் பயன் இல்லை யெனின், இவ்வளவிற்குத் திருக்கோயில்கள் வளர்ந்திருக்குமோ? தமிழ் மக்கள் பயனில்லாதன செய்யும் முயற்சியில் ஈடுபாடு அடைவார்களோ? கடவுளைச் சிறப்பாகக் கொண்டிருப்பது தென்னாடே, எந்நாடும் பொதுவில் கொள்ளத்தக் கனவே யாகும்.

அருளாளர்,

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்றார். இதனால், சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாவான். ஆகியும், தென்னாடுதான் அவனைத் தனக்குரியனாக உடையது என்பது விளங்குகின்றது. விளங்கவே, தமிழ்ப் போற்றியால் பயன் இல்லை; 'வடமொழி யருச்சனை' யால் தான் பயன், திருவருள் (சாந்நித்தியம்)

எல்லாம் உண்டு என்பது தகுமோ? வேண்டுநர் வேண்டியாங்கு அவரவர் மொழியில் வழிபட்டுப் பயன் அடையும் மெய்யைப் பொய் என எவரும் துணியமாட்டார்.

வடமொழி யருச்சனையில் ஓதப்படுவன எல்லாம் அருள்பெற்ற சான்றோர் ஆக்கியன அல்ல. வேதாகம மந்திரங்களையன்றி ஏனையவற்றை அப்படிக் கொள்ளல் பெருங் குற்றமே. சிறு தெய்வங்களுக் கெல்லாம் 108, 1008 மந்திரங்கள் பிற்காலத்தார் எழுதினர். அவற்றைச் சொல்லிக் கோயிலில் மலர் வழிபாடு செய்வது கொடும் தீவினையையே விளைக்கும். பல யாண்டுகளுக்கு முன் ஒரு பிள்ளையார் கோயிலில் அருச்சகர் வடமொழி யருச்சனை செய்தார். அவருக்கு ஒரு மொழியும் தெரியாது. அருச்சகர் குடும்பத்தில் பிறந்து விட்டார், அப்பிறப்பே அன்றி வேறு ஒரு சிறப்பு மில்லை. அவர் 'சூர்ப்ப கர்ணாய நம!' 'லம்போ தராய நம!' 'உமாங்கமலஜாய நம!' என்பவை முதலியவற்றை ஒலிக்கும் முறையும் தெரியாமல் சொல்லி மலர் தூவினார். அப்பொழுது பக்கத்திலிருந்த புலவர் அவரைச் சில கேள்விகள் கேட்டார், அப்போது அருச்சகர் இஞ்சி தின்ற குரங்கானார். வழிபாடு முடிந்ததும் நாங்கள் எங்கள் இருப்பிடத்தை அடைந்து உணவு கொள்ளும் வரையில் சொற்பொழிவு செய்ததிலும் கேட்பதிலும் பொழுது போக்கினோம். நாம் பேசும்போது இடையில் ஒருவர் எழுந்து அருச்சகர் சொன்ன மந்திரங்களின் பொருள் என்ன என்று கேட்டார். கேட்டவர் நல்ல அறிவுடையவர், நாம் சொன்ன பொருளைகேட்டுத் தமக்குண்டான மகிழ்ச்சியையும் அவையோர் எல்லார்க்கும் பங்கு போட்டுவிட்டார். உமா – உமாதேவி, அங்கம் – உறுப்பு, மலம் – அழுக்கு, ஜாய – பிறந்த வனுக்கு, தாயாரது உறுப்பில் உள்ள அழுக்கிற் பிறந்த பிள்ளைக்கு என்பது 'உமாங்க மல ஜாய' என்பதன் பொருள். லம்போதரன் (லம்பம் + உதரன்) தொங்கிய (பெரு) வயிற்றன். சூர்ப்ப கர்ணன் (சூர்ப்பம் – முறம், கர்ணன் – காதன்) முறக் காதன். இப்படி இழிந்துரைக்கும் பொருளுடையவை மந்திரங்களாகுமோ? அவற்றைச் சொன்னால் தெய்வம் மகிழுமா? வரம் தருமா? திருவருள் உண்டாகுமோ? அதனால் எல்லா நன்மையும் உண்டாவ தெப்படி? அப்பொருள் கடவுள் வழிபாட்டுக்கு எவ்வாறு பொருத்தம்?

நாயன்மார்களும், ஆழ்வார்களும் கடவுள் திருமுன்பாட வழிபட்ட திருப்பதிகங்கள் அக்கடவுள் உகந்து அருள் செய்த உண்மையை

இன்றும் அவற்றைப்பாடி அறிலாம், அவற்றைப் பாடுவதே 'அருச்சனை' என்று கடவுள் உறுதியுறக் கூறியதாகச் சேக்கிழார் அருளியதால் நாம் அறிந்திருக்கின்றோம். 'அர்ச்சனை பாட்டே யாகும்' என்பது அது. அப்பாட்டும் தமிழ்ச் சொற்பாட்டே, அது கேட்டவரும் தூமறை பாடும் வாயார். தூ மறை பாடும் வாய், தமிழ்ப் பாட்டைக் கேட்டது. அத்தமிழ், திருவருளை உண்டாக்காது என்கிறார் ஒருவர். அப்படியானால், திவ்வியப் பிரபந்தம் பாடுவதால் திருவருள் உண்டாகாது என்றுதானே முடிவு செய்யக் கூடும்! 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசும் கொண்டல்' இதைப் பொறுக்கவே மாட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிய திருப்பாடல்களை 'ஓதுவார்தம் தலைமேற்பயிலார்' என்று பாடியருளினார். அப்பரும், சம்பந்தரும் பாடியவற்றைப் பாடி வழிபட்டால் ஆண்டவன் பெரிதும் மகிழ்ந்து அருள் செய்வான் என்றும் அவர் அருளினார். தம் பாடல்களை ஓதுவாரைத் தொழுமின்கள் என்றும் பணித்தருளினார். இவற்றால் திருமுறைச் சிறப்பு விளங்கும். இவற்றொடு மற்றொன்றும் இங்குக் கருதத்தகும். நாயன்மார் திருவாயில் வந்தவை யெல்லாம் ஆண்டவன் அருள்மொழிகளே ('எனதுரை தனதுரை') என்னும் உண்மையை அறிஞர் அனைவரும் உணர்வர். 'சிவப்பிரகாசம்' என்னும் அருணூலின் காப்புச் செய்யுளுரை விசேடத்தில் மதுரைச் சிவப்பிரகாசர், 'ஒழுகலரிது' 'மலையினார் பருப்பதம்' என்னும் இரு திருப்பதிகத்தைக் குறித்து, "நூலே நல்வாழ்வுக்கு அகத்துணையாக நின்று அறிவிப்பதாம்'' என்று எழுதினார். இதனால் என்ன நாம் அறியக் கிடக்கின்றது? திரு-முறைகளினும் வழிபாட்டுக்கு வேறு யாதும் வேண்டுவ தில்லை (சைவர்க்கு) வைணவர் முதலோர்க்கும் அவரவர் தெய்வத் தமிழ் நூல்களே அமையும். வேற்று மொழி நூல் ஏன் ?

திருக்கோயில் வழிபாட்டிற்குப் பிறர் துணையை வேண்டாமல், அறிவும் தூய்மையும் உடைய எவரும் தாமே மலர் தூவிப் போற்றி வழிபடும் நல்ல வழக்கம் பழையபடி ஏற்படுவது மிக நல்லது; விரிவஞ்சி இதனை முடிக்கின்றோம். தூய்மையும் அன்பும் உள்ளவர் எவரும் கோயிலில் வழிபாடு பண்ணலாம். பண்டைய வழக்கம் இதுவே.

தமிழ்ப் போற்றிக்கு இக்காலத்தில் தூயரல்லாதவர் எழுதித் தருவனவற்றை மேற்கொள்ளல் ஆகாது. திருமுறைகளினும் திவ்வியப்

பிரபந்தங்களிலும் பிற சமய நூல்களிலும் உள்ளவற்றை அவரவர் கோயிலில் ஆள்வதே அருள் விளைக்கும். இதைக் கடைப்பிடித்து ஒழுகுவது இன்றியமையாதது. தமிழ்ப் போற்றிக்கு மதுரைக் கோயிலில் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா மிக்க சிறப்புள்ளது. பொதுவில் எல்லாக் கோயில்களிலும் ஆளக் கூடியன இவை :-

க) அப்பர் திருத்தாண்டகங்களுள் போற்றி என்றுள்ள ஐந்து திருப்பதிகங்கள்.

உ) திருவாசகத்தில் உள்ள போற்றிகள்

ங) வ.சு.செ. தொன்நெறியில் அமைத்துள் போற்றிகள் (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு).

அ. திருக்கயிலாய ஞானவுலாக் கண்ணி (50 - 56)

ஆ. நக்கீரர் அருளிய போற்றித் திருக்கலிவெண்பா

இ. திரு முருகாற்றுப்படை (255 - 276 - 277) (போற்றி, முறையில் அமைத்துக் கொள்க).

ஈ. கோயில் நான்மணிமாலை (பா. 20).

உ. பெருந்தேவபாணி (போற்றிகளை யமைத்துக் கொள்க).

ஊ. திருவெழு கூற்றிருக்கை (போற்றிகளை யமைத்துக் கொள்க).

எ. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை (19, 1, 12) (போற்றிகளை யமைத்துக் கொள்க).

ரு) போற்றிப் பஃறொடை

சு) திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா.

தொடர்ந்து ஓதி மலர் வழிபாடு செய்த பாவனையிற் பயன். அடைய வேண்டினும் இவையே பொருந்துவன வாகும். அகத்தியர் தேவாரத் திரட்டிற் கண்டவற்றையும் தொடர்ந்து ஓதலாம்.

பல நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே தமிழிலே வழிபட்டு வருகின்ற உண்மையை நிறுவும் சான்றாக உள்ளவை, சிவபூசைத் திரட்டு, நித்தியாது சந்தாநம் என்னும் இருசமய நூலும்

ஆகும். அவ்விரண்டும் இன்றும் ஆட்சியில் உண்டு. பலர் அவற்றைக் கொண்டே வழிபடுகின்றனர். வைணவப் பெண்டிர் பழக்கத்திலும் அவ்வழிபாடு உண்டு. 'நித்தியாது சந்தாநம்' என்பது திவ்வியப் பிரபந்த (தமிழ்)ப் பாக்களால் ஆனது. சிவபூசைத் திரட்டு" என்பது திருமுறைப் பாக்களால் ஆனது. அதுவும் இன்று பழக்கத்தில் இருக்கின்றது. தமிழர் தமிழில் வழிபடல் வேண்டும் என்பதற்கு தொன்மைச் சான்று இவற்றிலும் வேறு வேண்டா.

தமிழர் இனியேனும் பொருளறியும் நலம் வளரும் வகை கோயிலில், வீட்டில், பிற அருளகங்களில் தமிழ்ப் போற்றி செய்து மொழி வளர்ச்சியையும், அருள் வளர்ச்சியையும் எய்துவர் என்று திருவருளை நாடுகின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப் போற்றி!

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்
கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

திருச்சிற்றம்பலம்

பாடும் பணியே பணியாய்
அருள்வாய்

திருநெறிய தமிழ் மன்றம்

CENTRE FOR DIVINE TAMIL STUDIES

507, குருவருள், D.B. ரோடு, R.S. புரம்
கோவை - 641 002 **Ph.: 2551545**

குறிக்கோள்

வாழ்வை மேம்படுத்தும் சமய உணர்வை தமிழிசை மூலம் ஊக்குவித்து, திறம்பட செயல்புரிய வழிகாட்டல்.

நிறுவனர் சைவத்திரு ஸ்வர்ணா சோமசுந்தரம்

திருமுறைத் தமிழ்மணி திருமதி ஸ்வர்ணா சோமசுந்தரம், சைவ ஒழுக்கம் மிகுந்த பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்தும் புகுந்தும் நாளும் தமிழிசையில் திளைத்து அதில் தேர்ச்சியும், அனுபவமும் பெற்றவர்கள். தொண்டைமண்டல ஆதீனம் காஞ்சிபுரம், ஞானப்ரகாச ஸ்வாமிகள் (229 ம் பட்டம்) (முத்து.க) அவர்களிடம் தீக்கை பெற்று, 34 ஆண்டுகளாக ஞான பூஜை செய்து வருகிறார். குருவருளால் பெற்ற ஞானத்தை அளிப்பது தீட்சை. சமய வாழ்வில் முன்னேற்றம் அடைய விரும்புபவர்களுக்கு அம்மையார் தீட்சை செய்து வருகிறார். சைவ சித்தாந்தத்தில் அனுபவ ஞானமும், தெளிவும் பெற்று பாடுவதால் பாடலின் உட்பொருளை உணர்ந்து உருகிப் பாடுவதற்கு மற்றவர்களுக்கும் வழிவகை செய்கிறார். வெளிநாட்டவர்கள், தமிழ் அறிஞர்கள், இளைய சமுதாயத்தினர் பலரும் இவரிடம் இசையும், சாத்திர தோத்திரமும் பயின்று வருகின்றனர். குறிப்பாக மங்கையர்களும், செல்வச் சிறார்களும் தமிழிசைப் பாடல்களைப் பயின்று வாழ்வில் மேன்மை பெற்று விளங்குகிறார்கள்.

மன்றத்தின் பணிகள்

தமிழிசை பரப்புதல்

- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர்
- இறைவனால் நாவுக்கரசர் என்று அழைக்கப்பட்ட அப்பர்
- தம்பிரான் தோழராகிய சுந்தரர்
- தேனினும் இனிய தெய்வ ஒண் தீந்தமிழ் திருவாசகத்தை அருளிய மணிவாசகர்
- சந்தக் கவி மழை பொழிந்த அருணகிரிநாத ஸ்வாமிகள்
- எம்பெருமான் திருவருளில் ஆழங்கால் பட்ட ஆழ்வார்கள்
- அருள் அனுபவத்தை தரக்கூடிய பன்னிரு திருமுறைகளும், தாயுமானவர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், வள்ளலார் ஆகிய அருளாளர்கள் அருளிய தீந்தமிழ் பாடல்களை மட்டும் இம்மன்றம் பயிற்றுவித்து வருகிறது.

திருவாசகம் முற்றோதல்

ஆசகன்ற மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை மாதமொருமுறை அடியார்களுடன் புரந்தர தாஸர் மண்டபத்தில் இசையோடு முற்றோதல் வழிபாடு செய்தல்.

திருவாசகத் தேனிசை C.D.mp3 10.00 மணி நேரம் திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரமும் அவர்கள் பெயர்த்தி செல்வி V. கருணாசாகரியும் இசையுடன் பாடியுள்ளார்கள்.

ஆடல்வல்லான் திருமஞ்சனம்

ஒவ்வொரு ஆண்டும் ஆங்கிலப் புத்தாண்டு முதல் நாள் இல்லத்தில் எழுந்தருளியுள்ள ஆனந்த நடராஜர், அம்மை சிவகாமிக்கு பெரிய அளவில் அண்பர்கள் கண்டு களிக்க அபிஷேகம், ஆராதனை செய்யப்படுகிறது.

சாத்திர வகுப்பு

தமிழ்நாட்டிற்கே உரித்தான தொன்மைமிகு சமயாதீத பரம்பொருள் வணக்கத்தை கொள்கையாகக் கொண்டிருக்கும் சைவ சித்தாந்த செந்நெறியை, சாத்திர அறிவின் மூலம் தெளியலாம். சைவ சித்தாந்த நுண்பொருளை தர்க்கரீதியாக இன்றைய சமுதாயத்தினருக்கு விளங்கும்படி எளிய முறையில் வகுப்புகள் புதன் தோறும் நடைபெறுகின்றன.

தமிழ் சமயநூல்கள் வெளியீடு

தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே என்ற அப்பரின் அருள் மொழிப்படி, சைவத்தின் இரு கண்கள் பன்னிரு திருமுறைகளும், 14 சாத்திரங்களும், இவைகளை ஓதுவதால் பக்தியும் ஞானமும் மிளிரும். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவதற்கு தோத்திர சாத்திர நூல்களை வெளியிடுவது இம்மன்றத்தின் ஞான வேள்வியாகும்.

வகுப்புகள்

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால், திருநெறிய தமிழ் மன்றம், தெய்வ வழிபாட்டை பொருள் தெரிந்து எல்லோரும் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், சாத்திர, தோந்திர வகுப்பும் நடத்தி வருகின்றது.

திங்கட்கிழமை	:	திருமுறை இசை வகுப்பு
புதன் கிழமை	:	சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு
வெள்ளிக்கிழமை	:	திருப்புகழ் வகுப்பு
வகுப்பு நேரம்	:	6.00 - 7.30

உய்ய வந்த உத்தமர். ஆடிட்டர். சைவத்திரு R.சோமசுந்தரம் அவர்களின் ஆதரவோடு நடந்து வந்த வகுப்புகள், ஒலிப்பேழை வெளியீடு, நூல் வெளியீடு தற்போது அவரது மைந்தன் திரு. அரவிந்த் வெங்கடாசலம், மருமகள் திருமதி. டாக்டர் நீலா இருவரின் உயரிய ஈடுபாட்டால் தொடர்ந்து நடைபெறுவது திருவருளின் துணையே.

தந்தையைப் போலவே மைந்தனும் அடியவர்களை அழைத்துக் கொண்டு திருத்தல யாத்திரைகள் செய்து வருகிறார். முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது மெய்கண்டார் திருவுருவச்சிலையுடன் கோவையிலிருந்து நூற்றுக் கணக்கான அன்பர்களுடன் நடை பயணமாக தஞ்சாவூர் வரை சென்றது. வழியில் பலதரப்பட்ட அன்பர்கள் கலந்து பேறு பெற்றனர். தமிழ் நாட்டின் சிறந்த விருந்தோம்பல் அடியவர்களால் 15 நாளும் நடைபெற்றது.

கொற்றவன் குடி உமாபதிசிவம் ஆலயத்திற்கு திருநெறிய தமிழ் மன்ற அன்பர் சைவத்திரு. M. மாரிமுத்து அவர்களால் தோரண வாயில் கட்டி திருநெறிய தமிழால் வழிபாடு நடந்து குடமுழுக்கும் ஆயிற்று.

இசையிலும் இயலிலும் பக்தியைப் பரப்பி வரும் திருநெறிய தமிழ் மன்றத்தின் புதுவரவாக செல்வி. வெ.கருணாசாகரி, நாட்டியத்தின் மூலமாக பக்தியைப் பரப்பி வருவது, நம் தமிழ்க் கலாசாரத்தைப் பேணுவது பெருமிதத்திற்குரிய ஒன்றாகும்.

குருநாதர் ஞானப்ரகாசர் திருவருளால் ஆங்காங்கு சாத்திர தோத்திர வகுப்புக்கள் நம் மாணவர்களால் நடத்தப்படுகிறது.

ஞானப்ரகாச மரபு நீடுழி தழைக மாதோ.

⁂

கிடைக்கும் நூல்கள்

தொண்டை மண்டல ஆதீனம் 229 வது குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் எழுதிய உரை நூல்கள்.

- உண்மை விளக்கம் (விளக்கவுரை)
- சிவஞான போதம் (கருத்துரை)
- திருவருட்பயன் (விளக்கவுரை)
- சிதம்பர மும்மணிக் கோவை (விளக்கவுரை)
- சிவநெறிக் கட்டுரைகள்
- ஞான பூசாவிதி
- சிற்றம்பல நாடிகள் அருளிய
  திருச்செந்தூர் சுப்பிரமணியர் - அகவல்
  விளக்கவுரை - திருமதி ஸ்வர்ணா சோமசுந்தரம்
- குருவருட்பயன் கட்டுரைகள்
  திருமதி ஸ்வர்ணா சோமசுந்தரம்
- பாராயணத்து உரிய பாடல்கள் தொகுப்புகள்
- திருவாசகம் - மூலம் (பெரிய எழுத்துக்களில்)
- திருப்புகழ்த்திரட்டு

திருச்சிற்றம்பலம்

காஞ்சி, சீலத்திரு, ஞானப்ரகாச ஸ்வாமிகள்
சாத்திரம், சமயம், சங்க இலக்கியங்கள், இலக்கணம்,
தருக்கம், வடமொழி ஆகிய கடல்களில் முத்துக்குளித்தவர்
சிவநெறிக் கட்டுரைகள் என்ற இந்நூல் திருமுறைகளின்
உள் பொருள்களை உணர்த்தும் நூல், அனுபவமும்,
நுண்மாண் நுழை புலமும் செறிந்த நூல். வாழ்வியலில்
திருமுறை நமக்கு எவ்வாறு உதவுகிறது என்று
காட்டும் ஞானக் களஞ்சியம்.



15.2.2012 திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரம் பவள விழாவில் வெளியிடப்பட்டது

திருநெறிய தமிழ் மன்றம்
CENTRE FOR DIVINE TAMIL STUDIES
குருவருள், 507, D.B.ரோடு, R.S.புரம், கோவை 641002